# முரண்களற்ற
# திருமறை உண்மைகள்

# முரண்களற்ற
# திருமறை உண்மைகள்

**ஆசிரியர்: வில்லியம் மெக்டொனால்டு**

தமிழாக்கம்: இரா. மாணிக்கவாசகம்

மோரியா
ஊழியங்கள்

**Here is the Difference in Tamil**

**முரண்களற்ற திருமறை உண்மைகள்**

Author: William MacDonald
Translator: R. Manickavasakam

Copyright © Christian Mission to Many Lands

Publishing Year 2025 / First Edition

MM Serial No. 182

ISBN: 978-81-967 328-9-9

*Published by*
**Moriah Ministries**
Post Box No. 7193, 31/33 Water Tank Road,
MMDA Colony, Arumbakkam, Chennai - 600106
Email: <moriahministries@gmail.com>

ஆசிரியர்: வில்லியம் மெக்டொனால்டு / தமிழாக்கம்: இரா. மாணிக்கவாசகம்
மோரியா வரிசை எண் 182/ முதல் பதிப்பு 2025

பதிப்புரிமை © Christian Mission to Many Lands

வெளியீடு:

**மோரியா ஊழியங்கள்**
தபால் பெட்டி 7193, 31/33, தண்ணீர் தொட்டி சாலை,
எம்.எம்.டி.ஏ. குடியிருப்பு, அரும்பாக்கம், சென்னை 600 106

*For Book Order*
Mob.: 919962494010 / Email: moriahonlinebooks@gmail.com
Website: www.moriahministries.org

Typeset & Cover Design: Moriah Ministries

# பதிப்பகத்தார் உரை

ஒவ்வொரு கிறிஸ்தவரும் திருமறையைக் கற்கும் வேத மாணாக்கராகத் திகழ வேண்டும் என்னும் நோக்கத்துடன் திருவாளர் வில்லியம் மெக்டொனால்டு அவர்கள் இந்தத் துணை நூலை இயற்றியுள்ளார். விசுவாசிகள் திருமறையைப் படிக்கும்போது அங்கு சில பகுதிகளுக்கிடையே முரண்பாடுகள் இருப்பது போன்று எண்ணி உள் ளத்தில் குழப்பம் அடைகிறார்கள். மேலும் பொது வழக்கில் பயன்படுத்தப்படும் சில சொற்கள் திருமறையில் வேறு பொருளுடன் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய வேறுபாடுகளால் ஏற்படக்கூடிய ஐயங்களையும் குழப்பங்களையும் களைவது இந் நூலாசிரியரின் நோக்கமாகும்.

இந்நூல் ஐந்து பெரும் பகுதிகளைக் கொண்டது. அவையாவன

1. இரட்சிப்பு என்னும் தலைப்பின் கீழ் உள்ள வேறுபாடுகள்

2. கிறிஸ்தவ வாழ்க்கைப் பாடத்தில் உள்ள வேறுபாடுகள்

3. தேவனுடைய செயல்முறைகளில் உள்ள வேறுபாடுகள்

4. எதிர்கால நிகழ்ச்சிகளில் உள்ள வேறுபாடுகள்

5. திருமறையில் காணப்படும் மற்ற வேறுபாடுகள்

நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், இவற்றின் வெவ்வேறு கால நிலைகள் ஆகியவற்றைப் பகுத்து அறிவது பற்பல குழப்பங்களை நீக்கும்.

கர்த்தருடைய இரண்டாம் வருகையைக் குறித்துக் கிறிஸ்தவ உலகில் பெரும் கருத்து வேறுபாடு இருக்கிறது. அதன் வெவ்வேறு கட்டங்கள், அதாவது அவர் விசு வாசிகளை அழைத்துச் செல்லும் நோக்கத்துடன் வானில் தோன்றும் காட்சி, அவர் தமது ஆயிரமாண்டுப் புவியாட்சியை உலகத்தில் நிறுவுவதற்காக வரும் நிகழ்ச்சி, இவற்றிற்கு இடையேயுள்ள கால இடைவெளி, இன்னும் பல வேறுபாடுகள் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

கிறிஸ்தவரின் தகுநிலை மற்றும் இருப்புநிலை, தேவனோடு உள்ள உறவு மற் றும் ஐக்கியம், விசுவாசியின் இரு இயல்புகள் போன்ற பல்வேறு உண்மைகள் நாம் கர்த்தரோடு இசைந்து வாழ்வதற்குத் தேவையான அறிவையும் ஆற்றலையும் தரு கின்றன.

இந்நூலாசிரியர் ஒரு குறிப்பிட்ட தலைப்பை விவரித்துக் கூறும் பொருட்டு, அது குறித்த அனைத்து வேத பகுதிகளையும் ஆராய்ந்து எழுதுவதைத் தன் இயல்பாகக் கொண்டிருக்கிறார்.

உண்மையில் திருமறையில் முரண்பாடு எதுவுமில்லை. ஆனால் வேறுபாடுகள் உள்ளன. அந்த வேறுபாடுகளைப் பகுத்தறிந்து, சொல்லப்பட்டுள்ள ஆழ்ந்த சத்தியங்களை உய்த்துணர்வது கிறிஸ்தவர்களது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும். அதற்கு இந்நூல் சிறந்ததொரு வழிகாட்டியாக விளங்குகிறது.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

மோரியா ஊழியங்கள்

## பொருளடக்கம்


**பதிப்பகத்தார் உரை**

**பகுதி 1: இரட்சிப்பு என்னும் தலைப்பின் கீழ் உள்ள வேறுபாடுகள்.**

1. இரட்சிப்பின் மூன்று காலங்கள் 03

2. நீதிமானாக்கப்படுதலின் பண்புக் கூறுகள் 09

3. நித்திய வாழ்வின் பண்புக் கூறுகள் 15

4. பாவநிவிர்த்தி – அன்றும் இன்றும் 21

**பகுதி 2: கிறிஸ்தவ வாழ்க்கைப் பாடத்தில் உள்ள வேறுபாடுகள்**

5. தகுநிலை மற்றும் இருப்புநிலை 29

6. உறவு மற்றும் ஐக்கியம் 37

7. சட்டப்படியான மன்னிப்பு மற்றும் பெற்றோரின் மன்னிப்பு 43

8. இரண்டு இயல்புகள் 49

9. பரிசுத்தமாக்கப்படுதலின் வகைகள் 56

10. பரிசுத்த ஆவி குடியிருத்தல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல் 63

11. இரட்சிப்பு மற்றும் ஊழியம் 69

12. தனிநபர் மேன்மை மற்றும் தகுநிலை மேன்மை 75

13. அடிப்படைச் சத்தியங்கள், முக்கியமானவை மற்றும் முக்கியமற்றவை 79

**பகுதி 3: தேவனுடைய செயல்முறைகளில் உள்ள வேறுபாடுகள்**

14. காலப்பாகுபாடுகள் 89

15. திருமறையில் காணப்படும் முக்கிய உடன்படிக்கைகள் 97

16. இஸ்ரவேல், புறவினத்தார் மற்றும் திருச்சபை 105

17. நியாயப்பிரமாணமும் கிருபையும் 113

18. திருச்சபையும் அரசும் 119

**பகுதி 4: எதிர்கால நிகழ்ச்சிகளில் உள்ள வேறுபாடுகள்**

19. கிறிஸ்துவின் இரண்டு வருகைகள் 127

20. கிறிஸ்துவின் வருகையின் வளர்ச்சிப் படிவங்கள் 133

21. கர்த்தருடைய நாள், கிறிஸ்துவின் நாள், தேவனுடைய நாள் 141

22. இரட்டை நிறைவேறுதல்கள் 145

**பகுதி 5: திருமறையில் காணப்படும் மற்ற வேறுபாடுகள்**

23. ஏழு நியாயத்தீர்ப்புகள் 153

24. பாதாளம் மற்றும் நரகம் 163

25. திருமறை இரகசியங்கள் 169

26. கிறிஸ்துவின் மகிமைகளின் பண்புக்கூறுகள் 177


27. நற்செய்தி நூல்களில் காணப்படும் வேறுபாடுகள் 187

## பகுதி ஒன்று

# இரட்சிப்பு என்னும் தலைப்பின்கீழ் உள்ள வேறுபாடுகள்

# 01

# இரட்சிப்பின் மூன்று காலங்கள்



நாம் கிறிஸ்தவர்களாக மாற்றம் பெற்றபோது, நம்மில் பலரும் **ஆத்ம இரட்சிப்பு** என்னும் ஒரு வகை இரட்சிப்பைப் பற்றி மட்டுமே எண்ணியவர்களாக இருந்தோம், நாம் வேதத்தைப் படிக்கும் வேளைகளில் **இரட்சிப்பு** என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கும் எல்லா இடங்களிலும், அச்சொல் ஆத்தும இரட்சிப்பு என்னும் பொருளைத் தருவதாகவே எண்ணினோம். ஆனால் அந்தச்சொல் காணப்படும் எல்லா இடங்களிலும் அதே பொருளில் பயன்படுத்தப்படவில்லை என்பதைச் சிலகாலம் கழித்து அறிந்து கொண்டோம்.

பின்னரே இரட்சிப்பு என்னும் சொல் "விடுதலை, பாதுகாப்பு, மனம் மற்றும் உடல் நலம் போன்ற அர்த்தங்களையும் கொண்ட பொதுவான சொல் என்பதைப் புரிந்து கொண்டோம். எடுத்துக்காட்டாக, பிலிப்பியர் 1:19–இல் பவுல் தான் சிறையில் இருந்து விடுதலை அடையப்போவதை எதிர்பார்த்தவராக இச்சொல்லை பயன்படுத்துகிறார்: *"அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியும் என்று அறிவேன்."* இலகு தமிழ் மொழிபெயர்ப்பு இச்சொல்லை விடுதலை என்று மொழிபெயர்த்திருப்பது, நாம் அச்சொல்லை சரியாகப் புரிந்துகொள்ளச் செய்கிறது.

பிலிப்பியர் 2:12–இல் **இரட்சிப்பு** என்னும் சொல் முற்றிலும் மாறான பொருளைக் கொண்டுள்ளது. பிலிப்புப் பட்டணத்துச் சபையில் எழுந்த பிரச்சினைக்கான தீர்வையே அது குறிக்கிறது. அங்கு பிரச்சினை விளைவிக்கக்கூடிய ஒற்றுமையில்லாத நிலை ஏற்பட்டது (பிலிப்பியர் 2:14; 4:2). அந்தப்

பிரச்சினைக்கான தீர்வை அடைவதற்கு கிறிஸ்தவர்கள் யாவரும் கர்த்தராகிய இயேசுவைப் போலத் தாழ்மையும், அர்ப்பணிப்பும் கூடிய மனப்பான்மையை கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது பவுல் கூறியதாவது: *"ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாய் இருக்கும் பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாய் இருக்கிற இப்பொழுதும் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள்" **(பிலி.2:12).***

"உங்களுக்குத் தொல்லையூட்டும் பிரச்சினையிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியைக் கூறினேன். இப்பொழுது அதற்கான தீர்வை அடைவதற்கு பயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்படுங்கள்" என்று பவுல் கூறுவதாக இதனை வேறு சொற்களில் சொல்லலாம்.

நீருக்குள் மூழ்குவதிலிருந்து காக்கப்படுவதைக் குறிக்கும்படி **இரட்சிப்பு** என்னும் சொல் மூன்று வேத பகுதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. *"அப்பொழுது கப்பலாட்கள் கப்பலை விட்டோடிப்போக வகைதேடி, முன்னணியத்திலிருந்து நங்கூரங்களைப் போடப்போகிற பாவனையாய்ப் படவைக் கடலில் இறக்குகையில், பவுல் நூற்றுக்கு அதிபதியையும் சேவகரையும் நோக்கி: இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்கமாட்டீர்கள் என்றான்" **(அப்.27:30,31).***

**(**அப். **27:30,31–**தமிழ்த் திருமறையில் **தப்பிப் பிழைக்க** என்றே இச்சொல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது**).**

*"விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று, பயபக்தி உள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான்...." **(எபி.11:7).***

*"அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்."*

**(1** பேதுரு **3:19,20–**தமிழ்த் திருமறையில் காக்கப்பட்டார்கள் என்றே இச்சொல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது**).**

தேவன் எல்லா மனிதர்களையும் பாதுகாத்துப் பராமரித்து வருகிற காரணத்தால் அவர் மனிதர்களின் இரட்சகராகத் திகழ்கிறார்:

*"இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம், நிந்தையும் அடைகிறோம்; ஏனெனில் எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்." (1 தீமோ.4:10).*

ஆனால், இரட்சிப்பு, இரட்சிக்கப்பட்டவர் என்னும் சொற்கள் கொள்கையளவில் பாவத்திலிருந்து பெறுகிற விடுதலையைக் குறிக்கும்படி பயன்படுத்தப் பட்டிருப்பதையே நாம் அதிகமாக விரும்புகிறோம்.

இரட்சிப்பின் கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் ஆகிய மூன்று காலங்களையும் பகுத்து உணருவதற்கு நாம் கற்க வேண்டும்.

கடந்த காலம் – பாவத்தின் தண்டனையிலிருந்து நான் இரட்சிக்கப்பட்டேன்: நீதிமானாக்கப்படுதல்

நிகழ்காலம் – பாவத்தின் அதிகாரத்திலிருந்து நான் இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன்: பரிசுத்தமாக்கப்படுதல்

எதிர்காலம் – பாவத்தின் முன்னிலையில் இருந்து நான் இரட்சிக் கப்படுவேன்: மகிமை அடைதல்

**கடந்த காலம்**

பாவத்தின் தண்டனையிலிருந்து கிடைக்கும் இரட்சிப்பை முதன்மைப் படுத்திக் கூறுகிற சில வசனங்களை இங்கு காணலாம்.

*"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபே.2:8).*

*"(தேவன்) . . . நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" (2 தீமோ .1:9).*

*"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" (தீத்து 3:5).*

மேலே கூறப்பட்டுள்ள மூன்று எடுத்துக்காட்டுகளிலும் இரட்சிக்கப்பட்டீர்கள், இரட்சித்து, இரட்சித்தார் ஆகிய சொற்கள் கடந்த கால வினைச்சொற்கள்

என்பதைக் கவனியுங்கள். எனினும், பாவத்தின் தண்டனையிலிருந்து நாம் அடைந்த விடுதலையைக் குறித்துப் பேசும் வேறு வசனங்களில் இவை போன்று கடந்த கால வினைச்சொற்கள் பயன்படுத்தப்படவில்லை.

*"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்."* (அப்.4:12)

*"என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோமர் 10:9).*

ஆகவே ஒரு வசனம் கடந்த கால இரட்சிப்பைக் குறிக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கு, அந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வினைச்சொல்லின் காலத்தை அல்ல, மாறாக அதன் உட்பொருளையே கருத்திற்கொள்ள வேண்டும். பாவத்தின் ஆக்கினையிலிருந்து பெறுகின்ற என்றென்றைக்குமான விடுதலையை அவ்வசனம் கருப்பொருளாகக் கொண்டிருக்குமானால், அது இரட்சிப்பின் கடந்த காலத்தைக் குறிக்கிறது என்பதை அறிவீர்கள்.

**நிகழ்காலம்**

நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்பது உண்மையாயினும், நான் ஒவ்வொரு நாளும் இரட்சிக்கப்படுகிறேன் என்பதும் அதுபோலவே உண்மையாயிருக்கிறது. நான் நித்திய ஆக்கினையிலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். நான் தீங்கிலிருந்து இரட்சிக்கப்படுகிறேன். பாவத்தின் தண்டனையிலிருந்து நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்; நான் பாவத்தின் அதிகாரத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறேன். சிலுவையில் கிறிஸ்து செய்து முடித்த கிரியையின் மூலமாக நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். அவர் தேவனுடைய வலப்புறத்தில் எனக்காக ஜீவனுள்ளவராக ஆற்றுகிற ஊழியத்தால் நான் இரட்சிக்கப்படுகிறேன். எடுத்துக்காட்டாக ரோமர் 5:10–ஆம் வசனத்தின் உட்பொருள் இதுவே ஆகும். *"நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே."*

நிகழ்கால இரட்சிப்பும் பரிசுத்தமாக்கப்படுதலும் பெரும்பாலும் ஒன்றுதான்– பாவத்திலிருந்தும் தீட்டிலிருந்தும் தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்படுகிற செயல் முறையே இவ்வாறு கூறப்படுகிறது. இந்த இரட்சிப்பானது ஒருவரில் தொடர்ந்து நிகழ்கிற செயலாகும் என்பதை எபிரெயர் 7:25–இல் படிக்கிறோம்:

*“மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.”*

நிகழ்கால இரட்சிப்பைப் பற்றிக் கூறும் மற்றொரு வசனம்:

*“சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.” (1 கொரி. 1:18).*

**எதிர்காலம்**

இறுதியாக, இரட்சிப்பின் எதிர்கால நிலையைக் காணலாம். நாம் நமது இரட்சகரை முகமுகமாகக் காண்கிறபோது, பாவத்தின் முன்னிலையிலிருந்து இரட்சிக்கப்படுவோம். நம்முடைய சரீரங்கள் மீட்கப்பட்டு மகிமையடையும். நம்முடைய இரட்சிப்பின் நிறைவாகிய மகிமை நிறைந்த எதிர்காலத்தைக் கீழ்க்காணும் வசனங்கள் விவரிக்கின்றன.

*“நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது” (ரோமர் 13:10).*

*“பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம். தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்” (1 தெச. 5:8,9).*

*“. . . . தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாம் தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்” (எபி.9.28).*

*“கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே நீங்கள் காக்கப்பட்டிருக்கிறீர்கள்” (1 பேதுரு 1:5).*

## இரட்சிப்பின் மூன்று காலங்களும்

ஒரு வசனம் இரட்சிப்பின் எந்த வகையைச் சேர்ந்தது என்பதை அறிவதில் சிக்கல் ஏற்படுமென்றால் அது மூன்று காலங்களுக்கும் பொருத்தமாயிருக்கும் என்பதை நீங்கள் நினைவுகூர வேண்டும். இங்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன:


*". . . . அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" **(மத். 1:21)***

*"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவி யால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்" **(எபே.1:13)***

இவை போன்ற பகுதிகளில் இரட்சிப்பு என்னும் சொல் எக்காலத்தைக் குறிக்கிறது என்று தெரிவு செய்ய வேண்டியதில்லை. ஏனெனில் அவை இரட்சிப்பின் மூன்று காலங்களுக்கும் ஒரே அளவு ஆற்றலோடு பொருந்தக் கூடியவையாக இருக்கும்.

# 02

# நீதிமானாக்கப்படுதலின் பண்புக் கூறுகள்



நாம் கிருபையால், விசுவாசத்தால், இரத்தத்தால், வல்லமையால், கிரியைகளால் அல்லது தேவனால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்று புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. நீதிமானாக்கப்படுதல் என்னும் ஆய்வுப் பொருளின் பலவகைப் பண்புக்கூறுகளை இவை தனித்தனியே விவரிக்கின்றன என்பதை நாம் சரியாக அறியவில்லையெனில், இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்று நாம் கூற முற்படுவோம். ஒரு வேளை அவ்வாறு கூறாவிட்டாலும் குழப்பமடைவது நிச்சயம்

**நீதிமானாக்கப்படுதல் என்பதன் விளக்கம்**

முதலாவது, **நீதிமானாக்கப்படுதல்** என்பதன் பொருள் என்ன**?** நீதிமானாக்கு என்னும் சொல் "நீதிமான் என்று கணக்கிடு" என்றே பொருள்படும். ஒருவரை "நீதிமானாக மாற்றுதல்" என்னும் பொருளை அது தருவதில்லை. மாறாக, அவரை "நீதிமான் என்று அறிவித்தல்" என்னும் பொருளையே அது தருகிறது. உண்மையில் அது சட்ட சம்பந்தமான சொல்; அது நீதிமன்றத்தில் தோன்றியது.

நாம் நம்மில்தாமே நீதிமான்கள் அல்லர். நம்மிடத்தில் நீதி இல்லை. ஆனால் நாம் இயேசு கிறிஸ்துவைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்ளும் போது, பதிலாள் என்னும் நிலையில் கிறிஸ்து நமக்காகச் செய்த செயலின் அடிப்படையில் தேவன் நம்மை நீதிமான்களாகக்

கணக்கிடுகிறார். நம்முடைய எல்லாப் பாவங்களுக்காகவும் கிறிஸ்து கல்வாரியில் முழு நிறைவான பரிகாரத்தைச் செய்து முடித்திருப்பதால், கிறிஸ்துவுக்குள்ளான நம்மை தேவன் நீதியாக நீதிமான்கள் என்று அறிவிக்க முடியும். விசுவாசிக்கிற பாவி தேவனுடைய அனைத்து நீதியாலும் உடுத்துவிக்கப்படுகிறான். *"நாம் அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு, (பிதாவாகிய தேவன்) பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்"* (2 கொரி 5:21).

நாம் தொடக்கத்தில் குறிப்பிட்டதுபோல கிருபையால், விசுவாசத்தால், இரத்தத்தால், வல்லமையால், கிரியைகளால், தேவனால் நீதிமானாக்கப்படுதல் என்னும் நிகழ்வு நடைபெறுகிறது. இந்த ஆறு வழிகளாலும் அது எவ்வாறு நிகழும் ?

**கிருபையால் நீதிமானாக்கப்படுதல்**

முதலாவது, கிருபையால் நீதிமானாக்கப்படுதல் நடைபெறுகிறது. *"இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்"* என்று நாம் ரோமர் 3:24–இல் படிக்கிறோம். மனிதன் நீதிமானாக்கப்படுவதற்குத் தகுதியற்றவன் என்பதே இதன் பொருள். அவன் அதைத் தன் தகுதியால் பெற முடியாது; அவனால் அதைச் சம்பாதிக்கவும் முடியாது. அதை அவன் ஈவாகவே பெற முடியும். தகுதியற்ற மனிதனுக்கு, அவன் எந்த விலையையும் செலுத்தாமல், தேவன் தமது கிருபையால் அதை அவனுக்கு இலவச ஈவாகத் தருகிறார்.

**விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல்**

இரண்டாவதாக விசவாசத்தால் நீதிமானாக்கப்படுதல் நடைபெறுகிறது. "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (ரோமர் 5:1), இரட்சகர் மேல் நம்பிக்கை வைத்தல் என்னும் ஒரு குறிப்பிட்ட செயலின் மூலமாகப் பாவியான மனிதன் நீதிமானாக்கப்படுகிறான் என்பதே இதன் பொருள். நரகத்திற்கே தான் தகுதியானவன் என்பதை அறிக்கை செய்து, தன்னுடைய பாவங்களுக்கான தண்டனையை சிலுவையில் செலுத்தினவர் கர்த்தராகிய இயேசுவே என்று அவன் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுவே அந்தச் செயல்.

கல்வாரியில் கிறிஸ்து நிறைவேற்றிய மீட்பின் செயலின் அடிப்படையில் குற்றமுள்ள மனிதனிடமாய் தேவன் இறங்கி வந்து ஓர் இலவச ஈவாக நீதிமானாக்கப்படுதலை அருளுவதே கிருபையாகும். என்னுடைய நற்பண்புகளால் நீதிமானாக்கப்படுவதற்கு நான் தகுதியானவன் என்னும் எண்ணம் அல்லது என்னுடைய கிரியைகளால் அதை நான் சம்பாதிக்கிறேன் என்னும் எண்ணம் சிறிதளவும் இல்லாமல் ஒருவன் மனவருத்தத்துடன் தேவனிடமாய்ச் சென்று அவருடைய ஈவு என்று அதைப் பெற்றுக்கொள்வதே விசுவாசம் ஆகும்.

**இரத்தத்தால் நீதிமானாக்கப்படுதல்**

இரத்தத்தாலும் நீதிமானாக்கப்படுதல் நடைபெறுகிறது. *"இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே"* (ரோர் 5:9), நான் இரட்சிக்கப்படுவதற்காகக் கொடுக்கப்பட்ட விலையை இது குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. என்னுடைய பாவங்கள் ஒன்று சேர்த்து வைத்திருந்த கடனை, பாவமற்ற இரட்சகர் தமது விலையேறப்பெற்ற திருரத்தத்தைச் செலுத்தித் தீர்த்தார். நான் நீதிமானாக்கப்படுவதன் பெரிதான மதிப்பு, அதைப் பெறுவதற்காகச் செலுத்தப்பட்ட திகைப்புண்டாக்கத்தக்க விலையால் அறியப்படும்.

**வல்லமையால் நீதிமானாக்கப்படுதல்**

நாம் வல்லமையால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்று திருமறை நேரடியாகக் கூறாவிட்டாலும், அவ்வுண்மை ரோமர் 4:25–ஆம் வசனத்தில் இடம் பெற்றுள்ளது. *"அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்."* இங்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு நாம் நீதிமானாக்கப்படுகின்ற நிகழ்வு நேரடியாக தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. அது சரியானது! அவர் உயிரோடு எழாதிருந்தால் நமது விசுவாசம் விருதாவாகப் போயிருக்கும். நாம் நம்முடைய பாவங்களிலேயே இன்னும் இருப்போம் (1 கொரி. 15:17). ஆகவே, கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பிய வல்லமையோடு நாம் நீதிமான்களாக்கப்படுகின்ற நிகழ்வு பிரிக்க இயலாதபடி தொடர்பு

படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே நாம் வல்லமையால் நீதி மான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்று நம்மால் மிகச் சரியாகக் கூற முடியும்.

**கிரியைகளால் நீதிமானாக்கப்படுதல்**

நாம் கிரியைகளால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். *"மனிதன் விசு வாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயேயும் நீதிமானாக்கப்படு கிறானென்று நீங்கள் காண்கிறீர்கள்"* ***(யாக் 2:24)***, இங்கு குறிப்பிடத்தக்க முரண்பாடு இருப்பதுபோல் தோன்றுகிறது. நாம் விசுவாசத்தால் மட்டுமே நீதிமான்களாக்கப்படுகிறோம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் மிகத் திட்டவட்டமாகக் கற்பிக்கிறார். ஆனால், "அப்படியல்ல. நாம் கிரியைகளால் இரட்சிக்கப்படுகிறோம்" என்று இவ்வசனம் கூறுவதுபோல் தோன்றுகிறது. ஆனால் யாக்கோபு அவ்வாறு கூறவில்லை. நற்கிரியைகளைச் செய்வதால் நாம் முதலில் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்று அவர் கூறவில்லை. விசுவாசத்தோடு நற்கிரியைகளையும் செய்வதால் நாம் நீதி மான்களாக்கப்படுகிறோம் என்றும் அவர் கூறவில்லை. நற்கிரியைகளைச் செய்யக்கூடிய வாழ்க்கையை உண்டாக்கக்கூடிய விசுவாசமே நம்மை நீதி மான்களாக்கியிருக்கிறது என்றே அவர் கூறுகிறார்.

தன்னிடம் விசுவாசம் உள்ளது என்று கூறும் ஒருவரிடத்தில் அதை உறுதி செய்யும்படியான நற்கிரியைகள் எதுவும் இல்லையென்றால் அவரது கூற்று வீண். மக்கள் அவரை நம்பமாட்டார்கள். வார்த்தைகளை மட்டுமே கொண்ட விசுவாசம் பயனற்றது **(யாக். 2:14–17)**. மெய்யான விசுவாசம் பார்வைக்குப் புலனாவதில்லை. ஆனாலும் கிரியைகளால் அதைச் செயல்படுத்திக் காண்பிக்க முடியும் **(யாக். 2.18)**, கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்து ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டான் **(ஆதி.15:6)**, ஆனால் பல ஆண்டுகளுக்குப் பிறகு, தன்னுடைய மகன் ஈசாக்கைத் தகன பலியாக ஒப்புவிக்க முன்வந்ததன் மூலம் தன்னுடைய விசுவாசம் உண்மையானது என்று மெய்ப்பித்தான் **(ஆதி.22.9–14)**. இஸ்ரவேலின் ஒற்றர்களை ஒளிந்துகொள்ளும்படி செய்து, அவர்கள் தப்புவதற்கு வழி உண்டாக்கிக் கொடுத்த ராகாப் தனது விசு வாசத்தின் உண்மையை மெய்ப்பித்தாள் **(யாக், 2.25)**, ஆகவே நாம் கிரியைகளால் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்று கூறுகிறபோது, நாம் மெய்யாகவே விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்பதன் வெளியரங்கமான வெளிப்பாடே கிரியைகள் என்றே கூறுகிறோம்.

கிரியைகள் காரணம் அல்ல, அவை விளைவே ஆகும். அவை வேர் அல்ல; அவை கனிகளே ஆகும். அவை நம்மை நீதிமான்களாகப் பார்க்க வைக்கும்.

**தேவனால் நீதிமானாக்கப்படுதல்**

இறுதியாக, நாம் தேவனால் நீதிமான்களாக்கப்படுகிறோம். *"தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார் ? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்"* (ரோமர் **8:33**), அவரே நம்மை நீதிமான்கள் என்று அறிவிக்கிறவர்.

**கருத்துச் சுருக்கம்**

மேற்கூறியவை யாவற்றையும் ஒன்று சேர்த்துக் காண்கிறபோது, நாம் கீழ்க்காணும் வண்ணம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்று புதிய ஏற்பாடு கற்பிக்கிறது.

கிருபை – நீதிமான்களாக்கப்படுவதற்கு நாம் தகுதியற்றவர்கள் என்பதே இதன் பொருள்.

விசுவாசம் – நாம் அதைக் கர்த்தர்மேல் வைக்கும் விசுவாசத்தால் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருள்.

இரத்தம் – இரட்சகரின் மரணத்தின் மூலம் அது விலைகொடுத்து வாங்கப்பட்டது என்பதே இதன் பொருள்.

வல்லமை – இரட்சகரின் கிரியையில் தேவன் மனநிறைவு அடைந்தார் என்பதை அவரது உயிர்த்தெழுதல் மெய்ப்பிக்கிறது என்பதே இதன் பொருள்.

கிரியைகள் – நாம் விசுவாசத்தால் உண்மையாக நீதிமான்களாக்கப்பட் டிருக்கிறபோது, அதைப் பிறரிடம் வெளிப்படுத்தும்படியான நற்கிரியைகள் நம்மிடத்தில் காணப்படும் என்பதே இதன் பொருள்.

தேவன் – இயேசுவின் மேல் விசுவாசம் வைக்கிற ஒருவனை தேவனே நீதிமானாக்குகிறார் என்பதே இதன் பொருள்.

நீதிமானாக்கப்படுதலின் அனைத்து அம்சங்களும் கவிதை வடிவில் கீழே தரப்பட்டுள்ளன.

விண்ணில் ஓரிடம் பெற்றிட என்னை
அன்புடன் அழைத்தது இறைவனின் கிருபை
அண்ணலின் சித்தம் தயவாய் வெளிப்பட
கிருபை என்னை நீதிமான் ஆக்கிற்று.

குறித்த காலத்தில் சிலுவையில் மரித்தார்
செங்குருதி வெள்ளமாய்ப் பெருகியே வந்தது
பாவத்தின் கறையெலாம் மறைந்து போயிற்று
இரத்தம் என்னை நீதிமான் ஆக்கிற்று.

திருத்தந்தை அளித்த வாக்கினுக் கேற்ப
மூன்றாம் நாளில் மரித்தவர் உயிர்த்தார்
மரணத்தின் அச்சம் முழுவதும் அகன்றிட
வல்லமை என்னை நீதிமான் ஆக்கிற்று.

திருமறை உரைத்த வசனத்திற் கிணங்க
என்பாவம் நீக்கிட கிறிஸ்துயிர் நீத்தார்
தூயநல் ஆவியால் இவ்வுண்மை அறிந்தேன்
விசுவாசம் என்னை நீதிமான் ஆக்கிற்று.


கிறிஸ்துவின் பிள்ளைநான் என்பதை அறிவீர்
உள்ளத்தில் ஐயங்கள் எழுந்திடக் கூடும்
நற்பணி ஆற்றியென் விசுவாசம் காப்பேன்
கிரியை என்னை நீதிமான் ஆக்கிற்று.

கர்த்தரே எல்லாம் அவருக்கே புகழ்ச்சி
திருரத்தம் சொரிந்திட கிருபையும் பொழிந்தது
வல்லமை விசுவாசம் கிரியையில் வெளிப்பட
தேவன் என்னை நீதிமான் ஆக்கினாரே!

–ஹெலன் H. ஷா

# 03

# நித்திய வாழ்வின் பண்புக் கூறுகள்



## நித்திய வாழ்வின் சிறந்த பண்பு

முடிவில்லாத வாழ்வும் நித்திய வாழ்வும் ஒன்றல்ல. இரட்சிப்படைந்தவர்களும் இரட்சிக்கப்படாதவர்களும் யாராயிருந்தாலும் என்றும் முடிவில்லாமல் வாழ் வார்கள், ஆனால் விசுவாசிகள் மட்டுமே நித்திய வாழ்வை பெற்றிருப்பார்கள். எவ்வளவு காலம் என்பதை மட்டும் அது குறிப்பிடாமல், எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதையும் அது குறிப்பிடுகிறது. அது தேவனுடைய வாழ்வே ஆகும்; தேவனோடு ஒன்றிணைந்த நிலையைக் காட்டிலும் அது குறைவானது அல்ல; அது கர்த்தராகிய இயேசுவில் உள்ளடங்கியது. *"அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்"* **(1 யோவா. 1:2; மேலும் காண்க. 1 யோவா.5:20).**

வீழ்ச்சி அடைவதற்குமுன் அறியாமையின் நிலையில் ஆதாம் இருந்தபோது, நித்திய வாழ்வை பெற்றிருக்கவில்லை. அவன் பாவம் செய்யாமல் எவ்வளவு காலம் வாழ்ந்திருப்பானோ அதுவரை, உலகத்தில் இயல்பாக வாழ்கின்ற வாழ் வைத் தொடர்ந்து பெற்றிருப்பான். எனினும் விண்ணகத்தில் கிறிஸ்துவோடு வாழுகின்ற மகிமையின் வாழ்வைப் பெறுவதற்கான நம்பிக்கையைப் பெற் றிருக்க மாட்டான். எப்பொழுது வேண்டுமானாலும் பாவம் செய்யக்கூடிய அருவருப்பான சந்தர்ப்பம் அவனைத் தொடர்ந்து கொண்டே இருந்திருக்கும். அதன் காரணமாக அவன் சாவைச் சந்திக்கக்கூடிய நிலையிலேயே

இருந்திருப்பான். உண்மையில் அதுதான் நடந்தது. இயேசு கிறிஸ்துவை விசுவாசித்துத் தனது சொந்தக் கர்த்தரும் இரட்சகருமாக அவன் ஏற்றுக் கொள்ளாதவரை, முடிவில்லாத எல்லா ஆசீர்வாதங்களையும் உள்ளடக்கிய நித்திய வாழ்வைப் பெறவில்லை.

நித்திய வாழ்வு நிகழ்கால உடைமை பொருள் என்று சில நேரங்களிலும், அது எதிர்காலத்தில் பெறவிருக்கும் சொத்து என்று சில நேரங்களிலும் திருமறை கூறுகிறது.

**நிகழ்கால உடைமைப் பொருள்**

நிகழ்கால நன்கொடையாக விசுவாசிகள் நித்திய வாழ்வைத் தங்கள் உடைமையாகக் கொண்டிருக்கிறார்கள். அதனை ஈவாகத் தருவதாகக் கர்த்தர் வாக்களிக்கிறார் (1 யோவான் 2:25), அது அவரிடத்தில் இருக்கிறது (யோவான் 6:68; 1 யோவான் 5:10). அவரிடத்தில் வைக்கும் விசுவாசத்தாலே அது பெறப்படுகிறது. *“என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்”* (யோவான் 6:47. மேலும் காண்க. யோவான் 3:15,16,36; 5:24; 6:40; 1 தீமோ. 1.16)

அவர் கொடுக்கும் தண்ணீரைப் பருகுதல் (யோவான் 4:14), அவருடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுதல் (யோவான் 6:54), அவருக்குப் பின் செல்லுதல் (யோவான் 10:27), அவரை அறிதல் (யோவான் 17:3) ஆகிய வேறு சொற்றொடர்களும் அவரிடத்தில் விசுவாசம் வைத்தல் என்னும் பொருளையே தருகின்றன. *“மனித கொலை பாதகன் எவனோ அவனிடத்தில் நித்தியஜீவன் இல்லை”* (1 யோவான் 3:15) என்று யோவான் கூறுகிறார். விசுவாசமில்லாத அனைத்து விதமான பாவிகளையும் குறித்த வசனமே இது.

பிதாவினிடத்திலிருந்து நித்திய வாழ்வு அருளப்படுகிறது (ரோமர் 6:23:1 யோவான் 5:11).

குமாரனும் நித்திய வாழ்வைத் தருகிறார்: *“என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கின்றன. நான் அவைகளை, அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்குப்பின் செல்கின்றன. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை”* (யோவான் 10:27,28, மேலும் காண்க யோவான் 17:2).

நித்திய வாழ்வைத் தரும் நோக்கத்துடனேயே, பிதா தமக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் கிறிஸ்து பேசினார் (யோவான் 12:50)

நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள் (அப். 13:48). இது உண்மையின் ஒரு பக்கம், விசுவாசிப்பதற்கு மறுப்பவர்கள் அதன் காரணமாகத் தாங்கள் நித்திய வாழ்வைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் என்று கருதுகிறார்கள் என்பது அவ்வுண்மையின் மறு பக்கமாகும். (அப் 13:46), கிருபை ஆளுகை செலுத்துவதாலே ஜீவன் உண்டாகிறது (ரோமர் 5:21), விசுவாசிகள் யாவரும் தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தாலே தாங்கள் நித்திய ஜீவனைப் பெற்றிருப்பதை அறிய முடியும்: *"உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்"* (1 யோவான் 5:13).

நித்திய வாழ்வைப் பெற்றிருக்கிற யாவரும் நடைமுறை வாழ்க்கையில் அதற்காக ஒவ்வொரு நாளும் போராட வேண்டும்:

*"விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்"* (1 தீமோ. 6:12). *"நித்தியஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு"* (1 தீமோ. 6:19. மேலும் காண்க, யோவான் 6:27).

**எதிர்கால நம்பிக்கை**

நித்திய வாழ்வு நிகழ்கால உடைமைப் பொருள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதோடு, அது எதிர்காலத்துக்கு உரியதாகவும் கூறப்பட்டுள்ளது:

*"பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணி. . ."* (தீத்து 1:3). *"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்"* (யூதா 21).

விசுவாசிகள் யாவரும் பாவம், நோய், வருத்தம், மரணம் ஆகியவற்றிலிருந்து என்றென்றைக்குமாக விடுவிக்கப்பட்டிருக்கும் நிலையை நித்திய வாழ்வின்

நிறைவு என்று இவ்வசனங்கள் கூறுகின்றன. அதுவே மகிமையடைந்த இறுதி நிலை.

சில வேலைகளில் நித்திய ஜீவன் பெறப் போகிற சுதந்தரமாக குறிப்பிடப் பட்டுள்ளது: *"என் நாமத்தின் நிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத் தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்"* (மத் 19.29, மேலும் காண்க. மாற்கு 10:29,30; லூக்கா 18:29,30). *"தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவன் உண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத் தக்கதாக . . ."* (தீத்து 3:6).

**கிரியைகளால் ஈட்டுவது அல்ல.**

நித்திய வாழ்வு ஒரு மனிதன் பூமியில் வாழ்கிற போது நடந்து கொள்ளும் முறையின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய பரிகப் பொருள் என்று கூறுவது போலச் சில வசனங்கள் உள்ளன. மத்தேயு 25:45,46, லூக்கா 18:29,30, யோவான் 4:6,36; 12:25; ரோமர் 2:7, கலாத்தியர் 6:8 ஆகியவை இவ்வகையைச் சேர்ந்தவை எனினும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில வசனங்கள் கிருபையாக தேவன் அருளுகிற ஈவாக இரட்சிப்பு வழங்கப்படுகிறது என்றும், அதை விசுவாசத்தால் மட்டுமே பெற முடியும் என்றும், அது கிரியைகளால் பெறப்படுவதில்லை என்றும் கூறுகிற பல வசனங்களுக்கு முரண்பாடுகள் அல்ல.

அவ்வாறாயின் சிக்கலை உண்டு பண்ணுகிற இந்த வசனங்கள் என்ன பொருள் உடையவை? விண்ணில் தரப்படும் பரிசுப் பொருள்களில் வெவ்வேறான தரம் காணப்படும் என்பதையே இவை நமக்கு நினை வூட்டுகின்றன. கிறிஸ்துவின் நியாயாசனத்தில் சிலர் கிரீடங்களைப் பெறு வார்கள், சிலருக்கு இழப்பு ஏற்படும். எல்லா விசுவாசிகளும் நித்திய வாழ்வைப் பெற்றுக் கொண்டாலும், அதனை அனுபவிக்கக்கூடிய அளவில் வேறுபாடு காணப்படும் (1 கொரி. 15:41). அவரவருடைய உண்மையான ஊழியத்தாலும் (கலா 5:7–9), பரிசுத்தத்தில் அடைகிற வளர்ச்சியாலும் (ரோமர் 6:22) அது நிர்ணயிக்கப்படும்.

இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நற்கிரியைகள் ஒரு மனிதனின் நித்திய வாழ்வில் உண்டாகும் கனிகளே ஆகும். அவை அந்த நித்திய

வாழ்வை அவன் பெறுவதற்கான வழியைக் குறிப்பதில்லை. எடுத்துக்காட்டாக, *“அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்”* என்று மத்தேயு 25:46–ஆம் வசனம் கூறுகிறபோது, உபத்திரவ காலத்தில் கிறிஸ்துவின் யூத சகோதரரிடத்தில் நீதிமான்கள் நட்பு பாராட்டி தாங்கள் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறதை வெளிப்படுத்தி நித்திய வாழ்வை அனுபவிப்பார்கள் என்பதே பொருள். அவர்களுடைய நற்கிரியைகள் அவர்களது இரட்சிப்பின் சான்றுகள் ஆகும்.

யோவான் 4:36 மற்றும் 12:25–ஆகிய வசனங்கள் உண்மையுள்ள ஊழியத்திற்கான பரிசுப் பொருட்களைக் குறிக்கின்றனவேயொழிய, இரட்சிப்பிற்கான வழியைக் குறிப்பதில்லை.

*“விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான்”* (யோவான் 4:36).

*“தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக் கொள்ளுவான்”* (யோவான் 12:25).

ரோமர் 2:7–ஆம் வசனம் பெரும்பாலோருக்குச் சிக்கலாக அமைந்துள்ளது.

*“சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.”* (ரோமர் 2:7).

நித்திய வாழ்வானது நற்கிரியைகளைச் செய்வதால் கிடைக்கும் பலன் என்று இவ்வசனம் கூறுவது போலத் தோன்றுகிறது அல்லது அதைப் பெறுவதற்கு ஒருவர் நல்லவராக இருக்க வேண்டும் என்று நிபந்தனைக்கு உட்படுத்துவதாகத் தோன்றுகிறது. இவ்வகை விளக்கத்தைத் திருமறையில் தொடர்ச்சியாகக் கூறப்படும் சத்தியம் மறுத்துரைக்கிறது. மேற்கூறிய வசனத்தை திருமறையின் அடிப்படையில் இரண்டு வகைகளில் புரிந்து கொள்ளலாம். முதலாவது கருத்தளவில் சிறந்தது. அதாவது இழந்து போனவர்களை தேவன் நியாயம் தீர்ப்பதற்கான அளவுகோலாக இது அமைந்திருக்கிறது. ஒரு அவிசுவாசி தன்னுடைய சொந்த பலத்தால், நற்கிரியை செய்வதில் ஒருகுறைவும் இல்லாமல் செயல்படுவானால், அவனுக்கு நித்திய வாழ்வு அருளப்படும். ஆனால் இது நிகழாது. *“நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை”* (ரோமர் 3:12). அல்லது விசுவாசி ஒருவனே பரிசுத்த

ஆவியானவரின் வல்லமையால் இங்கு கூறப்பட்டிருக்கிற விவரங்களுக்குப் பொருத்தமானவனாகக் காணப்படுவான். அவ்வாறான எடுத்துக்காட்டில் நற்கிரியைகள் இரட்சிப்பின் விளைவுகளேயொழிய அவற்றிற்கான ஆதாரம் அல்ல.

**முடிவுரை**


புதிய பிறப்பின் மூலமாகப் பெறுகிற ஆவிக்குரிய வாழ்வே நித்திய வாழ்வு. அந்த வாழ்வு தேவனுடைய வாழ்வே ஆகும். அவரைப் போலவே நித்திய வாழ்வும் என்றென்றும் நிலைத்திருக்கும். அது இன்றைய உடைமைப் பொருளும், எதிர்கால நம்பிக்கையுமாக விளங்குகிறது. கிறிஸ்துவை உண்மையாக விசுவாசிக்கிற மனிதன், தேவனுடைய வார்த்தையின் மூலமாக தான் நித்திய வாழ்வைப் பெற்றிருப்பதை அறிய முடியும். *தேவ வசனத்தின் மூலமாகவே இரட்சிப்பின் உறுதி கிடைக்கிறது.*

சரீர மீட்பு என்னும் பெயரால் அறியப்படும் நித்திய வாழ்வின் நிறைவையே விசுவாசி எதிர்நோக்கியவனாக இருக்கிறான்.

நித்திய வாழ்வில் பெறவிருக்கிற பரிசுப் பொருட்கள் பற்றி எண்ணுகிற போது, அவை ஒரு விசுவாசியினுடைய பரிசுத்தம், ஊழியம் அல்லது நற்செயல்கள் ஆகியவற்றிற்கான பரிசுகள் என்று எண்ண முடியாது. அவனுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவின் வாழ்வு உண்டாக்கியிருக்கும் மாற்றத்தை, அவன் உண்மையான முறையில் வெளிப்படுத்திக் காட்டுவதாலேயே பரிசுகளைப் பெறுவான்.

# 04

# பாவநிவிர்த்தி – அன்றும் இன்றும்



கவர்ச்சிமிக்க திருமறைச் சொற்களில் ஒன்றான பாவநிவிர்த்தி அல்லது பாவநிவாரணம் என்னும் சொல் பல மொழிகளில் வெவ்வேறு பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல்லின் முக்கிய பொருளை, இது எந்த வசனத்தில் இடம் பெற்றுள்ளதோ அந்த வசனத்தின் பின்னணியாலேயே நிர்ணயிக்க முடியும். பயன்பாட்டின் அடிப்படையிலேயே இச்சொல்லின் பொருளை நாம் கற்கிறோம்.

ஆனால் அதை அறிவதற்கு முன், பழைய ஏற்பாட்டில் இரட்சிப்பின் வழி என்னவென்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். கர்த்தரிடத்தில் வைக்கும் விசுவாசத்தாலேயே மனிதர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். தேவன் தாமே மனிதர்களுக்கு வெளிப்பாட்டைத் தந்தார். அவர்கள் அவரை விசுவாசித்தார்கள். அவர்கள் நீதிமான்களாகக் கணக்கிடப்பட்டார்கள். நட்சத்திரங்களைப் போல கணக்கிட இயலாத அளவு எண்ணிக்கையில் ஆபிரகாம் தன் சந்ததியைப் பெறுவான் என்று தேவன் வாக்களித்தபோது, அவன் *“கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்”* (ஆதி. 15:6). பிற்காலத்தில் நடைபெறவிருந்த கிறிஸ்துவின் மீட்பின் செயலின் அடிப்படையிலேயே முற்பிதாவாகிய ஆபிரகாம் நீதி மானாக்கப்பட்டான். கிறிஸ்துவின் மீட்பின் செயலைக் குறித்துப் பெருமளவு அவன் அறிந்திருந்தான் என்று சொல்ல முடியாது. அது ஐயத்திற்குரியது; ஆனால் தேவன் அதை அறிந்திருந்தார். அந்தச் செயலின் மதிப்பு முழு வதையும் அவர் ஆபிரகாமின் கணக்கில் வரவு வைத்தார். இரட்சகர் கல்

வாரியில் சிந்திய விலையேறப்பெற்ற இரத்தத்தின் அடிப்படையில், கர்த்தர் தாமே அவனுடைய பாவங்கள் அனைத்திற்கும் சட்டப்படியான மன்னிப்பை அருளினார். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் கர்த்தரிடத்தில் வைக்கும் விசுவாசத்தினாலும், அவருடைய பதிலாள் பலிச்செயலின் அடிப்படையிலும் இரட்சிப்பு உண்டாகிறது. அப்பொழுது நித்திய உறவு நிறுவப்படுகிறது.

இருந்தபோதிலும், இஸ்ரவேலன் ஒருவன் தனது மனமாற்றத்திற்குப் பிறகு செய்த பாவங்கள், அவன் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தை முறித்து விட்டன. மேலும் அவை அவனைத் தீட்டுப்படுத்தின. இவையுமல்லாமல் ஒருவன் சவத்தைத் தொடுவது போன்ற சில குறிப்பிட்ட செயல்களால், அவை பாவமில்லாதவையாக இருப்பினும், அவன் சடங்குகளின் அடிப்படையில் தீட்டுள்ளவனானான். இவை யாவும் ஆசரிப்புக் கூடாரத்தில் அல்லது தேவாலயத்தில் அவன் ஆராதனை செய்வதைத் தடை செய்தன. இதுபோன்ற தருணங்களில் அவனுக்குப் பாவநிவிர்த்தி தேவைப்பட்டது. இப்பொழுது இந்தப் பொருள் பற்றி ஆய்வு செய்வோம்.

### பழைய ஏற்பாட்டில் பாவநிவிர்த்தி என்பதன் பொருள்

பழைய ஏற்பாட்டில் ‘‘மூடுதல்’’ என்று பொருள்படும் ஓர் எபிரெயச் சொல்லே பாவநிவிர்த்தி[1] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நோவா பேழையை உண்டாக்கியபோது, அதன் உள்ளும் புறமும் கீல்பூசும்படி தேவன் அவனிடம் கூறினார். ‘‘பாவநிவிர்த்தி செய்’’ என்பதன் வேர்ச்சொல் கீல்பூசு என்று பொருள்படும். கிறிஸ்துவின் கல்வாரிச் செயலின் மூலமாகப் பாவமானது முழுவதுமாகவும் நிறைவாகவும் முடிவாகவும் நிவிர்த்தி செய்யப்படுவதற்கு முன், பழைய ஏற்பாட்டுப் பாவ நிவிர்த்தி மூடும் செயலையே செய்தது.

சில இடங்களில் பாவநிவிர்த்தி என்னும் சொல் தவறைச் சரிசெய்தல், பரிசுத்தப்படுத்துதல், தண்டனையிலிருந்து விலக்களித்தல், பிரதிஷ்டை செய்தல் என்னும் கருத்தைக் கொண்டிருக்கிறது.

பொதுவாக இந்தச் சொல் மனிதர்களையோ, ஆசாரியர்களையோ இஸ்ரவேல் இனத்தையோ தொடர்புபடுத்திப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அவர்களுடைய பாவங்களுக்குப் பாவ நிவிர்த்தி செய்து, அவர்களுக்கு முழு மனநிறைவு அளித்தாக எங்கும் சொல்லப்படவில்லை. பழைய ஏற்பாட்டுப் பலிகள் எந்தவொரு பாவத்தையும் ஒருக்காலும் நீக்கவில்லை என்று எபிரெயர் மடல் ஆசிரியர் மிகத் தெளிவாகக் கூறுகிறார். பாவத்தை நீக்குதலே பாவ நிவிர்த்தியின் முதன்மையான பொருள் என்போமானால், பலிகள் யாவும்

தோல்வியடைந்துவிட்டன என்றே சொல்ல வேண்டும். *“அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே”* என்று எபிரெயர் **10:4** கூறுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் பாவ நிவிர்த்தி நாளில் பாவங்கள் நினைவுகூரப்பட்டன **(எபி. 10:3).** ஆகவே, பலிமுறையானது தேவ மக்களுக்குத் தங்கள் பாவங்கள் நீங்கின என்பதற்கான சுத்த மனச்சாட்சியை ஒருபோதும் தரவில்லை. *“பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக் கப்பட்ட பின்பு, இன்னும் பாவங்கள் உண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத் தப்படுமல்லவா?”* **(எபி.10:2).**

சிலவேளைகளில் பலிபீடம், பரிசுத்த ஸ்தலம், மகாபரிசுத்த ஸ்தலம், ஆசரிப்புக் கூடாரம் மற்றும் தேவாலயம் போன்ற உயிரற்ற பொருட்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யப்பட்டது. உயிரற்றவை பாவம் செய்ய இயலாது. எனவே, பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காகவோ, பாவங்களை நீக்குவதற்காகவோ பாவநிவிர்த்தி செய்யப்படவில்லை என்பது நிச்சயம். தெய்வீகப் பணி செய்வ தற்குத் தகுதியாக்கும் நோக்கத்துடன் பலிபீடம் பிரதிஷ்டை (பாவநிவிர்த்தி) செய்யப்பட்டது. ஏனெனில் அது சடங்குகளுக்குரிய தூய்மையைப் பெற்றிருந் தது. சில குறிப்பிட்ட பொருட்கள் ஏன் தகுதியற்றவையாக இருக்கின்றன. ஏன் அவற்றிற்கு பாவ நிவிர்த்தி செய்ய வேண்டும் என்று கூறுவதற்குத் தகுதியான விளக்கம் அளிக்க முடியாது.

மனிதர்களுடைய பாவ நிவிர்த்தியில் சடங்குகளின் அடிப்படையிலான சுத்திகரிப்பு செய்யப்பட்டது. ஒரு விசுவாசியான யூதன் பாவம் செய்த போது, அவன் பலிமிருகத்தைக் கொண்டு வர வேண்டும். அவன் அவ்வாறு கொண்டு வந்தபோது, மெய்யாகவே அவன் தன் பாவத்தை அறிக்கை செய்தான் என்பதே அதன் பொருள். அவன் பாவத்தை அறிக்கை செய்தவுடன் அது அவனுக்கு மன்னிக்கப்பட்டது. அவன் செலுத்திய மிருகத்தின் பலியின் மூலமாக அவன் பாவமன்னிப்பைப் பெறவில்லை. மாறாக, கிறிஸ்துவின் பலியின் மூலமாகவே அதை அவன் பெற்றான். பழைய ஏற்பாட்டுப் பலி கிறிஸ்துவின் பலிக்கு வெறுமனே மாதிரியேயாகும். அவன் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்த அத்தருணத்திலேயே அவனுடைய பாவத்திற்கான நித்திய தண்டனை நீக்கப்பட்டுவிட்டது. அவன் தன் பாவத்தை அறிக்கை செய்த செயல் அவன் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தைப் புதுப்பித்தது. அவன் கொண்டு வந்த பலி, யெகோவாவை மீண்டும் ஆராதிப்பதற்கும் அவருக்குப்

பணிபுரிவதற்குமான வெளியரங்கமான சடங்குகளுக்குரிய தகுதியை அளித்தது. ஏற்கனவே அவனுக்கும் தேவனுக்கும் இடையே உடன்படிக்கை உறவு இருந்தது. ஆனால் அவன் இப்பொழுது சடங்குகளுக்குரிய தூய்மையைப் பெற்றிருக்கிறான். லேவிய முறையிலான பலிகள் சரீர சுத்தி உண்டாக்கக்கூடிய பரிசுத்தமாகுதலை உண்டு பண்ணின.[2] அதாவது அவை வெளியரங்கமான சுத்திகரிப்புக்கான சடங்கைச் செய்தன. கிறிஸ்துவினுடைய சிலுவை பலியே ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிக்கும் செயலைச் செய்யும்.

**இந்த விதிக்கான ஒரு விலக்கு**

பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் பாவ நிவிர்த்தி என்னும் சொல் பாவத்தை நீக்குதல் என்னும் பொருளைத் தெளிவாகத் தருகிறது: "*மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின் மேலும் உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது*" (தானி. 9:24).

இவ்வசனத்தில் அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும் என்னும் சொற்றொடர் தமிழ் வேதத்தில் மிகச் சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (காண்க. NASB, NIV மொழிபெயர்ப்புகள்). ஆனால் KJV, NKJV மொழிபெயர்ப்புகள் நிவிர்த்தி என்னும் சொல்லுக்குப் பதிலாக ஒப்புரவு அல்லது நல்லிணக்கம் என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளது. கிறிஸ்துவின் சிலுவைச் செயல், பாவங்களை மூடுகின்றன என்னும் பொருளையே தரும்படி அச்சொல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியானது கர்த்தராகிய இயேசுவின் இரண்டாம் வருகையை எதிர் நோக்கியதாக இருக்கிறது. அப்பொழுது அவருடைய மக்களாகிய இஸ்ரவேலரின் அக்கிரமம் இறுதியாகத் தீர்க்கப்படும். உண்மையில் அதற்குத் தேவையான பலி கல்வாரியில் செலுத்தப்பட்டது. ஆனால் இஸ்ரவேல் முழுவதுமாக அதனுடைய பலனை, அவர்கள் குத்தினவரை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரேபேறானவனுக்காகப் புலம்புகிறது போல அவருக்காகப் புலம்பும் வரை, அனுபவிக்க மாட்டார்கள் (காண்க. சக. 12:10; யோவான் 19:37). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாவ நிவிர்த்தி எதை மூடியதோ, அதைக் கிறிஸ்து தமது சிலுவையில் முழுவதுமாக மற்றும் முடிவுமாகத் தீர்த்து வைத்தார்.

## பாவநிவிர்த்தி என்னும் சொல் பெற்றுக்கொண்ட பொருள்

**பாவநிவிர்த்தி** என்னும் சொல் புதிய ஏற்பாட்டுச் சொல் அல்ல. பழைய ஏற்பாட்டில் பாவநிவிர்த்தி என்ன கருத்தைக் கொண்டிருந்ததோ அந்தப் பொருளில் அச்சொல் புதிய ஏற்பாட்டில் இடம் பெறவில்லை. மனிதர்களுக்கு அல்லது உயிரற்ற பொருட்களுக்கு மூடுதல் கொடுக்கப்பட்டதாக எந்தவொரு குறிப்பும் அங்கு இல்லை (ரோமர் 5:11–இல் இச்சொல் இடம் பெற்றுள்ளது. எனினும் தமிழ்த் திருமறையில் இச்சொல் ஒப்புரவாகுதல் என்று சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது).

இக்காலத்தில், பாவநிவிர்த்தி என்னும் சொல் கூடுதலாக ஒரு பொருளைப் பெற்றிருக்கிறது. கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய வற்றின் மூலமாகப் பாவங்களுக்கு நிறைவான நிவிர்த்தி செய்யப்பட்டுள்ளது என்னும் பொருளிலேயே கிறிஸ்துவினால் உண்டான பாவநிவிர்த்தி என்னும் சொற்றொடரைப் பயன்படுத்துகிறோம். பாவநிவிர்த்தி செய்யவல்ல அவருடைய இரத்தத்தால் நம்முடைய பாவங்கள் அனைத்தும் என்றென்றைக்குமாக நம்மைவிட்டு அகற்றப்பட்டுவிட்டன என்று நம்முடைய பிரசங்கங்களில் பேசு கிறோம், பாடல்கள் பாடுகிறோம். நம்முடைய பேச்சு மொழியில் மட்டுமே இச் சொல் இந்தப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் இந்தச் சொல் பொதுவாக என்ன பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதோ அதற்கும், நமது பேச்சுமொழிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

பாவநிவிர்த்தி என்னும் சொல் என்ன பொருளில் திருமறையில் பயன் படுத்தப்பட்டுள்ளது, இக்காலத்தில் நமது பேச்சு மொழியில் கூடுதலாக அது என்ன பொருளைப் பெற்றிருக்கிறது என்று நாம் பிரித்து அறிவோமானால் குழப்பங்கள் மற்றும் தவறான புரிதல்கள் ஆகியவற்றிலிருந்து காக்கப்படுவோம். கிறிஸ்துவின் சிலுவைச் செயல் முற்றிலும் நிறைவானது, முடிவானது, உள்ளான மனிதனில் செயல்படுவது என்னும் பொருளோடு கிறிஸ்துவின் பாவநிவிர்த்தி என்னும் சொற்றொடரைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால் பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு இடம் தவிர பாவநிவிர்த்தி என்னும் சொல் குறைவான பயனை உண்டுபண்ணியதும் மீண்டும் மீண்டும் செய்யப்பட்டதும், வெளிப்புறத் தூய்மையைக் கொடுத்ததுமான பலியையே குறிக்கிறது.

## ஆயிரமாண்டு இறையாட்சிக் காலப் பாவநிவிர்த்தி

கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தில் செய்யப்படும் பணி களோடுள்ள தொடர்பில் எசேக்கியேல் இச்சொல்லைப் பயன்படுத்தியிருக் கிறார்.[5] எதிர்கால இறையரசை எதிர்நோக்கியவராக எசேக்கியேல் பலிபீடம்,

இஸ்ரவேல் வீடாகிய மக்கள், தேவாலயம் ஆகியவற்றிற்கான பாவநிவிர்த்தி செய்யப்படுதலைக் குறித்துப் பேசுகிறார். இது சிலருக்கு இடறலை ஏற் படுத்துகிறது. *“இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என் றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்”* (எபி.10:12), *“இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே”* (எபி.10:18) ஆகிய வசனங்களுக்கும் எசேக்கியேல் கூறியவற்றிற்கும் முரண்பாடு இருப்பதாகத் தோன்றுகிறது.

பாவநிவிர்த்தி என்னும் சொல்லுக்கு நாம் முதன் முதலில் இருந்த அர்த்தத்தைக் கொடுக்காமல், தற்போதைய அகராதி கொடுக்கின்ற பொருளை எடுத்துக்கொள்வதால் ஏற்படுகின்ற பிரச்சினையே இது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் செலுத்தப்பட்ட பலிகள் பாவங்களால் ஏற்பட்ட குற்றவுணர்வு. தண்டனை ஆகியவை நீங்குவதற்கு எந்த அளவு செயல்பட்டனவோ, அதைக் காட்டிலும் மேலாக ஆயிரமாண்டு ஆட்சிக் கால பலிகள் செயல்படும் என்பதற்கான எவ்விதக் குறிப்பும் இல்லை. அவை வெறுமனே தேவாலயச் சடங்குகளாகவே காணப்படும். அந்நாட்களில் மீட்கப்பட்ட இஸ்ரவேலர், கிறிஸ்துவின் சிலுவைச் செயலில் வெளிப்பட்ட முழுமையான நிறைவை எண்ணி, தாங்கள் செய்கிற சடங்குகள் வெறுமையானவை என்பதைப் புரிந்து கொள்வார்கள். மேலும் அவர்கள் கிறிஸ்துவே நிஜமானவர் என்றும் சடங்குகள் யாவும் நிழலானவை என்றும் புரிந்துகொள்வார்கள். பழைய ஏற்பாட்டுப் பலிகள் யாவும் எவ்விதமாக வரவிருந்த கிறிஸ்துவின் கல்வாரி நிகழ்ச்சியை எதிர்நோக்கியவையாக இருந்தனவோ, அதுபோலவே ஆயிரமாண்டு ஆட்சிக் கால பலிகள் கிறிஸ்துவின் பலியைப் பின்னோக்கிப் பார்க்கும்; இன்றைய நாட்களில் கர்த்தருடைய பந்தி அதையே செய்கிறது. ஆயிரமாண்டு ஆட்சிக் கால பலிகள் நினைவுகூருதலின் செயல்களாகவே விளங்கும்.

**அடிக்குறிப்புகள்**

1. Kaphar என்னும் எபிரெய வினைச்சொல், அதன் ஆங்கில மொழிபெயர்ப்பாகிய Cover என்னும் சொல்லோடு தற்செயலாக ஓசையில் ஏறத்தாழ இசைவாக விளங்குகிறது. அதன் பெயர்ச்சொல் Yam Kippur என்னும் சொல்லாகத் தற்போது யூத விடுமுறை நாளைக் குறிக்கப் பயன்படு கிறது. எழுத்தின்படி அதன் பொருள் “மூடுதல் நாள்” என்பதே ஆகும்.

2. எபிரெயர் 9:13 3. எபிரெயர் 9:14

4. Katarllage என்னும் வழக்கில் உள்ள கிரேக்கச் சொல் ‘ஒப்புரவாகுதல்’ என்று பொருள்படும்.


5. எசேக்கியேல் 43:20,26; 45:15,17,20.

# பகுதி இரண்டு

## கிறிஸ்தவ வாழ்க்கைப் பாடத்தில் உள்ள வேறுபாடுகள்

# 05

# தகுநிலை மற்றும் இருப்புநிலை



புதிய ஏற்பாட்டை விளங்கிக்கொள்வதற்கான மிகச் சிறந்த திறவு கோல் விசுவாசியின் தகுநிலை மற்றும் அவனுடைய இருப்புநிலை (நடை முறை வாழ்க்கை நிலை) ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை அறி வதே ஆகும். இந்த வேறுபாட்டை நீங்கள் காணத்தவறுவீர்களானால், திருமறைப் பகுதிகள் பல குழப்பத்தை உண்டுபண்ணக் கூடியவையாகவும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகவும் காணப்படுவது நிச்சயம்.

சுருங்கக் கூறுவோமெனில், கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு விசுவாசி இருக்கும் நிலையே அவனுடைய தகுநிலையாகும். அதாவது, கிறிஸ்துவுக்குள் அவன் யாராக இருக்கிறான் என்பதே அது. இருப்பு நிலை என்பது அவன் தன்னில் தானே யாராக இருக்கிறான் என்பதே ஆகும். அவன் தன்னில்தானே யாராக இருக்கிறானோ, அதுபோலவே நடந்துகொள்கிறான். இதை இன் னும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால், அவன் எவ்வாறு இருக்க வேண்டுமோ அந்த நிலையையே அது குறிக்கிறது. முதலாவது கோட்பாட்டோடு தொடர்புடையது, இரண்டாவது கடமையோடு தொடர்புடையது. முதலாவது உண்மை, இரண்டாவது அனுபவம் முதலாவது ஒன்றிணைதல், இரண்டாவது ஐக்கியம்.

ஒரு விசுவாசி கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் நிலைக்கும், அவன் தன்னில்தானே இருக்கும் நிலைக்கும் வேறுபாடு இருக்கிறது. கிறிஸ்து

வுக்குள்ளாக இருக்கும் மனிதன் தேவனுடைய முன்னிலையில் நிற்பதற்கான முழுநிறைவான நிலையைக் கிருபையே அளித்திருக்கிறது. அவன் பிரிய மானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறான் (எபே.1:6). மேலும் அவன் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமுள்ளவனாயிருக்கிறான் (கொலோ. 2:10). அவனு டைய பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டன; மேலும் அவன் தேவனுடைய எல்லா நீதியாலும் அணிவிக்கப்பட்டிருக்கிறான் (2 கொரி. 5:21). அவன் கீழ்க் கண்ட பாடலைப் பாடுவதற்குத் தயங்க வேண்டியதில்லை:

திருத்தந்தை அருகினில் நெருங்கிநான் செல்கின்றேன்
இதினினும் அருகினில் செல்வதற்கு இயலாது.
இறைமைந்தன் அவருடன் இருப்பதைப் போலவே
கிறிஸ்துவுக்குள் அடியேனும் இருக்கின்றேன்.
திருத்தந்தை பாராட்டும் அன்பிற்கு அளவில்லை
இதனினும் கூடுதல் எங்குமே இல்லை
மைந்தர் மேல் பாராட்டும் அவரன்பை
அடியேனும் பெற்றுளம் மகிழ்கின்றேன் – கேடஸ்பி பேஜட்

விசுவாசியின் நடைமுறை வாழ்க்கையோ வேறுவிதமாக இருக்கிறது. பரி பூரணம் என்னும் நிலையிலிருந்து அது வெகுதொலைவில் இருப்பது ஏமாற்றம் அளிக்கிறது. பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் அதில் மாற்றம் ஏற்படுகிறது. சிலவேளைகளில் விசுவாசியின் ஆவிக்குரிய நிலை மலையுச்சியைப் போல உயர்வாக இருக்கிறது. மற்ற நேரங்களில் பள்ளத்தாக்கு போலத் தோல்வி யடைந்து காணப்படுகிறது.

நம்முடைய நடைமுறை வாழ்க்கை நமது தகுநிலைக்கு ஏற்றாற்போல உயர் வாகக் காணப்பட வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாகும். நமக்காக மரணமடைந்த இயேசுவின் மேல் நாம் கொண்டிருக்கும் அன்பின் காரணமாக, நம்முடைய அனுதின வாழ்க்கை கிறிஸ்துவுக்கு ஒப்பாக வளர்ச்சி அடையும் பொருட்டு தடையின்றி முன்னேறிச் செல்ல வேண்டும். “பெத்லகேம் என்னும் சிற்றூரே” என்னும் இனிய கிறிஸ்துமஸ் குழுப்பாடலை இயற்றிய பிலிப்ஸ் புரூக் கிறிஸ்தவத்தைப் பற்றி கூறியதாவது: “இது நமது கடமை இல்லை என்று சொல்லக்கூடிய எந்த உண்மையும் கிறிஸ்தவத்திற்குத் தெரியாது.” இப்புவி வாழ்வின்போது நாம் முழுநிறைவை அடைய முடியாது என்பது உண்மைதான்; நாம் மரணம் அடையும்வரை அல்லது இரட்சகரின் வருகை வரை அது நிகழப் போவதில்லை; நம்முடைய தகுநிலை எதுவோ அதற்கு ஒப்பாக நமது நடை முறை வாழ்க்கை அதிகம் அதிகமாக மாற்றம் அடைய வேண்டும்.

நாம் நமது இரட்சகரைக் காணும் தருணத்தில், நாம் தாமாகவே அவரைப் போலாவோம் (1 யோவான் 3:2). இந்த மறுரூப மாற்றம் தெய்வீக வல்லமையால் நிகழும். அதற்கு நம்முடைய பங்கு எதுவும் தேவையில்லை. ஆனால் இவ்வுலக வாழ்வின்போதே கர்த்தராகிய இயேசுவைப்போல அவருடைய மக்கள் வளர்ச்சி அடைவார்கள் என்றால் அது தேவனுக்கு அதிக புகழ்ச்சியைக் கொண்டு வரும்; கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்த உண்மைக்கு அது மிகச் சிறந்த "விளம்பரமாக" விளங்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

**தகுநிலையையும் இருப்பு நிலையையும் வேறுபடுத்திக் காட்டுதல்**

ஒரு குறிப்பிட்ட திருமறைப் பகுதி தகுநிலையைப் பற்றிப் பேசுகிறதா அல்லது நடைமுறை வாழ்க்கையைப் பற்றிப் பேசுகிறதா என்பதை எவ்வாறு அறிய முடியும்? "கிறிஸ்துவுக்குள்", "பிரியமானவருக்குள்", "அவருக்குள்" என்னும் சொற்களைக் கவனியுங்கள். இத்தகைய சொற்களைக் காணும்போது, நூலாசிரியர் பெரும்பாலும் நமது தகுநிலையைப் பற்றியே பேசுகிறார் என்று நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம் (காண்க. எபே. 1:3–14). நாம் என்ன செய்ய வேண்டும் அல்லது நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று வசனம் கூறுமானால் அது நமது நடைமுறை வாழ்க்கையைக் குறித்துப் பேசுகிறது. இதுவே அதை அறிவதற்கான சிறந்த வழி.

முதலாவது தகுநிலை, அதற்குப் பிறகே நடைமுறை வாழ்க்கை. இந்த வரிசை முறையையே பெரும்பாலும் புதிய ஏற்பாட்டில் நாம் காண்கிறோம். நிருபங்கள் பல இந்த வரிசை முறையிலேயே அமைந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக, எபேசியர் மடலில் முதல் மூன்று அதிகாரங்கள் நாம் கிறிஸ்துவுக்குள் யாராக இருக்கிறோம் என்பதையே விவரிக்கின்றன. முதல் மூன்று அதிகாரங்களில் நாம் கிறிஸ்துவுக்குள் உன்னதத்தில் இருப்பவர்களாகக் காண்கிறோம். கடைசி மூன்று அதிகாரங்களில் நமது இல்லங்களிலும் வேலையிடங்களிலும் நாம் எதிர்கொள்கிற பிரச்சனைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

**வேறுபாடுகளை விவரிக்கும் எடுத்துக்காட்டுகள்**

நாம் புதிய ஏற்பாட்டைப் படிக்கிறபோது இந்த வேறுபாட்டை அறிந்திருப்பது எவ்வளவு நல்லது என்பதைக் காணலாம். தகுநிலைக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்கிக் கூறும் ஏழு எளிய எடுத்துக்காட்டுகள் இங்கு தரப்பட்டுள்ளன.

**எடுத்துக்காட்டு 1**

| தகுநிலை | இருப்புநிலை |
|---|---|
| *ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிற வர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தி யிருக்கிறார் (எபி. 10:14)* | *ஆகையால், பரலோகத்திலிருக் கிற உங்கள் பிதா பூரண சற்குணரா யிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் (மத். 5:48).* |

எல்லா விசுவாசிகளும் பூரணராயிருக்கிறார்கள் என்று முதல் வசனம் கூறுகிறது. இரண்டாவது வசனம் எல்லா விசுவாசிகளும் பூரணராக வேண்டும் என்று கூறுகிறது. முதலாவது வசனம் நம்முடைய தகுநிலையைப் பற்றிப் பேசுகிறது, இரண்டாவது வசனம் நமது நடைமுறை வாழ்க்கையைப் பற்றிப் பேசுகிறது என்று நாம் உணரத் தவறுவோமானால், திருமறை இரண்டு விதமாகப் பேசுகிறது என்று தோன்றும்.

**எடுத்துக்காட்டு –2**

| தகுநிலை | இருப்பு நிலை |
|---|---|
| *பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? (ரோமர் 6:2)* | *அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாக.... எண்ணிக்கொள்ளுங்கள் (ரோமர் 6:11).* |

நீங்கள் பாவத்திற்கு மரித்தவர்களாவீர்கள் – கிருபையே உங்களை இந்தத் தகுநிலையில் வைத்திருக்கிறது. இப்பொழுது ஒவ்வொரு நாளும் பாவத்திற்கு மரணமடைய வேண்டும். உங்களது நடைமுறை வாழ்க்கை இவ்விதமாகவே விளங்க வேண்டும்.

### எடுத்துக்காட்டு –3

| தகுநிலை | இருப்பு நிலை |
|---|---|
| *அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் (யோவான் 1:12)* | *ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள் (எபே. 5:1)* |

ஒரு மனிதன் மறுபடியும் பிறந்தவுடன் தேவனுடைய பிள்ளையாகிறான். அது முதல் அவன் பிரியமான பிள்ளையாக தேவனைப் பின்பற்ற வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் யாவரும் குடும்பத்தின் சாயலை அணிந்திருக்க வேண்டும். அதாவது, தேவ பக்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

### எடுத்துக்காட்டு 4

| தகுநிலை | இருப்புநிலை |
|---|---|
| *நம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (1 கொரி. 1:9).* | *நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாக நடவுங்கள் (எபே. 4:1).* |

நாம் ஓர் அற்புதமான ஐக்கியத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் பெற்றிருக்கிற சிலாக்கியம் பொறுப்பைக் கொண்டது. நம்முடைய அழைப்புக்கு ஏற்றபடி நாம் நடக்க வேண்டும்.

### எடுத்துக்காட்டு –5

| தகுநிலை | இருப்புநிலை |
|---|---|
| *ரோமாபுரியிலுள்ள தேவப் பிரியரும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய (ரோமர் 1:2).* | *பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கேற்றபடி ஏற்றுக்கொள்ளுங்கள் (ரோமர் 16:1).* |

பவுல் ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்களைப் "பரிசுத்தவான்கள்" என்று குறிப்பிடுகிறார்; அவர்கள் "பிரித்தெடுக்கப்பட்டவர்கள்". அவர் இரட்சிக்கப்பட்டவர்களானால் பரிசுத்தவான்களே ஆவார்கள். ஆனால் பரிசுத்தவான்கள் பரிசுத்தமாக நடக்க வேண்டும். ரோமர் **16:1**–இல் குறிப்பிட்டுள்ளபடி அதில் நடைமுறைப் பங்கையும் நிறைவேற்ற வேண்டும்.

### எடுத்துக்காட்டு 6

| தகுநிலை | இருப்புநிலை |
|---|---|
| *கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் எபே. 2:8).* | *அதிக பயத்தோடும் நடுக்கத் தோடும் உங்கள் இரட்சிப்பு நிறை வேறப் பிரயாசப்படுங்கள் (பிலி. 2:12).* |

நம்முடைய தகுநிலை தேவனிடத்திலிருந்து பெறுகிற ஈவு. அதற்காக நாம் நன்றியை வெளிப்படுத்துகிற வாழ்க்கை முறையே இருப்பு நிலை ஆகும். எப்பொழுதுமே முதலாவது வருவது தகுநிலை. அதன் பிறகு இருப்பு நிலை. நாம் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்கிறதாலே கிறிஸ்தவர்களாக வாழ்கிறதில்லை. நாம் கிறிஸ்தவர்களாக மாற்றம் அடைந்ததாலேயே கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்கிறோம்.

### எடுத்துக்காட்டு 7

| தகுநிலை | இருப்புநிலை |
|---|---|
| *அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலை கொண்டிருக்கிறோம் (ரோமர் 5:2).* | *அன்றியும், நானும் உங்கள் செய்தி களை அறிந்து மனத்தேறுதல் அடையும்படிக்குச் சீக்கிரமாய்த் தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாமென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் நம்பியிருக்கிறேன் (பிலி. 2:19).* |

நாம் கிருபையில் நிலைநிற்பதற்கான தகுதியைக் கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய தகுநிலையால் பெற்றிருக்கிறோம். விசுவாசிகளாக நாம் வாழ்கிற அனுதின வாழ்க்கையின் நடத்தையே நம்முடைய இருப்பு நிலை.

## எடுத்துக்காட்டு –8

இந்தக் கடைசி எடுத்துக்காட்டுக்காக கொலோசெயர் 3:1–5 பகுதியைக் காணலாம். இங்கு பவுல் தகுநிலையையும் இருப்பு நிலையையும் பற்றி மாறி மாறிப் பேசுவதைச் சுட்டிக் காட்டுகிறோம்.

| தகுநிலை | இருப்புநிலை |
|---|---|
| கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள் (வச. 1).<br>பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் (வச. 2).<br>ஆகையால்.... இவைகளை உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள் (வச. 5). | *நீங்கள் கிறிஸ்துவுடனே எழுந்ததுண்டானால்..... (வச. 1).*<br><br>*ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது (வச. 3).* |

“நீங்கள் மரித்தீர்கள், இப்பொழுது மரித்தவர்களாகவே இருங்கள். நீங்கள் உயிர்த்தெழுந்தீர்கள், இப்பொழுது உயிர்த்தெழுந்த வாழ்க்கை வாழுங்கள்.” மொத்தத்தில் பவுல் இவ்விதமாகவே கூறுகிறார். நாம் கிறிஸ்துவுக்குள் என்ன நிலையில் இருக்கிறோம் என்று ஒருபுறமும், நம்மில் நாமே எவ்விதமாக வாழ வேண்டும் என்று மற்றொரு புறமும் அப்போஸ்தலன் பேசுகிறார் என்பதை உணரும் வரை இந்தப் பகுதியைப் புரிந்துகொள்வதற்கு இயலாது.

### எனது வாழ்க்கையில் ஓர் எடுத்துக்காட்டு

முடிவாக என்னுடைய வாழ்க்கையில் கடினமான நாட்களில் தகுநிலைக்கும், இருப்பு நிலைக்கும் உள்ள வேறுபாடு எவ்விதமாக உதவி செய்தது என்பதைச் சொல்ல விழைகிறேன். நான் இரட்சிப்படைந்த பிறகு, பலர் தங்களுடைய சாட்சியாக 2 கொரிந்தியர் 5:17–ஆம் வசனத்தை மேற்கோள் காட்டுவதை அவ்வப்போது கேட்டிருக்கிறேன். *“இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.”*

அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் அற்புதமான முறையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கூறுவார்கள் “எவ்விதமாகப் பழையவைகள் ஒழிந்து போயின. எவ்விதமாக எல்லாம் புதிதாயின.” அங்கு அமர்ந்திருந்த நான் இவ்விதமாகச் சிந்திப்பதுண்டு. என்னுடைய வாழ்க்கையில் “பழையவை எல்லாம் ஒழிந்து


போயின. எல்லாம் புதிதாயின" என்று சொல்ல விரும்புகிறேன். ஆனால் உண்மையில் அவ்வாறு நடக்கவில்லையே. முந்தின பழக்க வழக்கங்கள் சில இன்னும் என்னிடம் இருக்கின்றன. சில கெட்ட சிந்தனைகள், கோபத்தை வெளிப்படுத்தும் செயல், நான் மனந்திரும்புவதற்கு முன் அணிந்திருந்த சில சவ ஆடைகள் ஆகியவை என் இரட்சிப்பைக் குறித்து ஐயம் ஏற்படுத்தியதுண்டு.

பின்னர் ஒருநாள் கிறிஸ்துவுக்குள் என்னும் சொல்லைக் கவனித்தேன். அப்பொழுது என்னுடைய இருதயம் மகிழ்ச்சியால் துள்ளிற்று. அந்த வசனம் எனது தகுநிலையைக் குறித்துப் பேசுகிறது என்பதைப் புரிந்துகொண்டேன். அது எனது இருப்பு நிலையைப் பற்றியதல்ல. மெய்யாகவே கிறிஸ்துவுக்குள் அவையாவும் உண்மையே. அவருக்குள் பழையவை யாவும் ஒழிந்து போயின. ஆக்கினைத் தீர்ப்பு, சாத்தானின் ஆளுகை, மரண பயம், இன்னும் பல அவருக்குள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின. மன்னிப்பு, ஏற்கப்படுதல், நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், இன்னும் பல ஆசீர்வாதங்கள். அன்று முதல் அந்த வசனம் என்னைப் பயமுறுத்துவதில்லை. அதில் பிரியமாயிருக்கிறேன். நான் கிறிஸ்துவுக்குள் என்ன நிலையில் இருக்கிறேன் என்பது பற்றிய அறிவு, என் வாழ்க்கையின் கர்த்தராக இயேசு விளங்கவும், அவருக்காக நான் வாழும்படியும் என்னை உற்சாகப்படுத்துகிறது.

**கேள்வி:** தகுநிலை மற்றும் இருப்பு நிலை ஆகிய இரண்டும் இடம் பெற்றுள்ள வசனங்கள் 1 கொரிந்தியர் 5:7, எபேசியர் 5:8; 1 பேதுரு 2:9. அவற்றை உங்களால் பிரித்து அறிய முடிகிறதா?

# 06

# உறவு மற்றும் ஐக்கியம்



தகுநிலை மற்றும் இருப்பு நிலை பற்றிய முந்தின பாடத்தைப் போன்றதே இது. ஆனாலும் இதனைத் தனியொரு அதிகாரமாகக் கற்பிக்க வேண்டிய அளவிற்கு இந்த வேறுபாடு இன்றியமையாததாக விளங்குகிறது.

**தேவனோடு கொண்டிருக்கும் உறவு**

ஒரு மனிதன் மறுபடியும் பிறந்தவுடன், ஒரு புதிய உறவு உண்டாகிறது. அவன் அத்தருணத்திலேயே தேவனுடைய பிள்ளையாகிறான்.

*“அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்”* (யோவான் 1:12).

*“பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்“* (1 யோவான் 3:2).

இப்பொழுது ஒரு பிறப்பைக் குறித்த தீர்மானமான செய்தி இங்கு கூறப்பட்டுள்ளது! நீங்கள் அதைக் குறித்து எப்போதாவது எண்ணிப் பார்த்ததுண்டா? ஒரு பிறப்பு நிகழ்ந்த பிறகு, அது என்றென்றைக்குமாக

நிலைத்திருக்கிறது. நீங்கள் பின்னோக்கிச் சென்று அதை இல்லாததாக மாற்ற முடியாது. ஓர் உறவு உருவாகிவிட்டது; அதை மாற்ற முடியாது. ஓர் எடுத்துக்காட்டைக் காண்போம். ஜோன்ஸ் தம்பதிகளுக்கு மகன் இப்பொழுது பிறந்திருக்கிறான். என்ன நடந்தாலும் அந்தக் குழந்தை அந்தத் தம்பதிகளின் மகன்தான். அவர்களும் எப்போதும் அவனுடைய பெற்றோர்கள்தான். அவன் வளர்ந்து பெரியவனாகிறபோது அவனுடைய கேடுற்ற வாழ்க்கையால் அந்தக் குடும்பத்திற்கு இழுக்கையும், பெற்றோருக்குக் கவலையையும் ஏற்படுத்துகிறான் என வைத்துக் கொள்வோம். அப்பொழுதும் திரு. ஜோன்ஸ் அவனுடைய தகப்பன்தான், அந்தத் தம்பதிகள் அவனுடைய பெற்றோர்களே ஆவார்கள்.

இந்த எடுத்துக்காட்டை ஒரு விசுவாசிக்குப் பொருத்திப் பாருங்கள். புதிய பிறப்பின் மூலமாக தேவனும் பிதாவுமானவரோடு ஒரு புதிய உறவு ஏற்பட்டிருக்கிறது.

*“ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துவின் மூலமாய் தேவனுடைய சுதந்தரனுமாயிருக்கிறாய்” (கலா.4:7).*

இது முறிக்கமுடியாத உறவு. ஒருமுறை மகனாக அல்லது மகளாகப் பிறந்த பிள்ளை, எப்பொழுதும் மகனாக அல்லது மகளாகவே இருக்க முடியும்.

### தேவனோடு கொண்டிருக்கும் ஐக்கியம்

ஆனால் இந்த உண்மைக்கு வேறு ஒரு பக்கம் இருக்கிறது. அதுதான் ஐக்கியம். *கொய்னோனியா* (Koinonia) என்னும் மிகவும் தெரிந்த கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பே *ஐக்கியம்*. இச்சொல் பொதுவான முறையில் பொருள்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்று பொருள்படும். உறவை ஒன்றிணைதல் என்போமானால், ஐக்கியத்தை தோழமை என்று சொல்ல வேண்டும். உறவு முறிக்க முடியாத சங்கிலி என்றால், ஐக்கியமானது மிக எளிதாக முறிந்து போகக்கூடிய மெல்லிய நூல் ஆகும்.

தேவனோடுள்ள ஐக்கியத்தை முறிப்பது பாவமே ஆகும். *“இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?”* **(ஆமோஸ் 3:3).** தமது பிள்ளைகள் பாவம் செய்கிறபோது தேவனால் அவர்களோடு ஐக்கியத்தோடு நடக்க முடியாது. *“தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை”* **(1 யோவான் 1:5).** பொல்லாப்பைத் தங்களுடைய

வாழ்க்கையில் மறைத்து வைக்கிறவர்களோடு தேவனால் தோழமை கொண் டிருக்க முடியாது.

ஐக்கியம் முறிவடையும்போது விசுவாசி தனது மகிழ்ச்சியையும், பாடலையும் ஊழியம் செய்வதற்கான ஆற்றலையும் சாட்சியையும், பயனுள்ள ஜெப வாழ்க்கையையும் இழந்து போகிறான்.

பாவத்தை அறிக்கை செய்யாமலும், அதை விட்டுவிடாமலும் இருக்கும் வரை ஐக்கியம் முறிவடைந்த நிலையிலேயே தொடரும். ஐக்கியம் முறிவடைந்த நிலை மிகவும் ஆபத்தானது. எடுத்துக்காட்டாக, கர்த்தரோடு தொடர்பற்ற நிலையில் இருக்கும் விசுவாசி ஒரு முடிவு எடுக்கிறபோது, அது அவனுடைய எஞ்சிய வாழ்க்கை முழுவதையும் சீரழித்துவிடக்கூடும். பின்வாங்கிப்போன எத்தனை விசுவாசிகள் விசுவாசமற்றவரைத் திருமணம் செய்து பின்னர் கர்த்தருக்குப் பயனற்றபடி வாழ்ந்து தங்கள் வாழ்க்கையையே அழித்துப் போட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆத்துமாக்கள் இரட்சிப்படைந்தன. ஆனால் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை இழந்து போனார்கள்.

முறிந்துபோன ஐக்கியம் வாழ்க்கையில் தேவனுடைய சிட்சையை அல்லது ஒழுங்கு நடவடிக்கையைக் கொண்டு வருகிறது. விசுவாசி பாவத்திற்கான நித்திய தண்டனையிலிருந்து விடுதலை பெற்றிருக்கிறான். ஆனால் அவனு டைய பாவத்தின் விளைவுகளிலிருந்து அவனுக்கு விடுதலை இல்லை. கொரிந்தியரில் சிலர் நோய்வாய்ப்பட்டிருந்ததன் காரணம் என்ன? ஏனென்றால் அவர்கள் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்யாமலும், தங்களைச் சரி செய்யாமலும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றதால் இவ்வாறு நடந்தது **(1 கொரி. 11:29–32).** அவர்களில் சிலர் மரித்தும் போனார்கள். அவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான மீட்பைப் பெற்றிருந்ததால் பரலோகத்திற்குள் செல்வதற்கான தகுதியைப் பெற்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் தொடர்ந்து பூமியில் வாழ்வதற்கான மற்றும் சாட்சியாக விளங்குவதற்கான தகுதியை இழந்து போனார்கள்.

முறிந்துபோன ஐக்கியம் கிறிஸ்துவின் நியாயாசனத்தில் பரிசுப் பொருட் களைப் பெறக்கூடாதபடி அவற்றை இழக்கச் செய்து விடுகிறது **(1 கொரி. 3:15).** தேவனோடு ஐக்கியம் இல்லாமல் வாழ்கிற காலம் என்றென்றைக்குமாக இழந்துபோன காலமாக விளங்குகிறது.

நாம் தேவனோடு கொண்டிருக்கிற உறவு முறிவடையாதபடி நிலை பேறானது என்னும் உண்மையில் நாம் களிகூருகிறோம். அதே நேரத்தில்

நமது திருத்தந்தையோடு நமக்கிருக்கிற ஐக்கியத்தை முறிவடையச் செய்யும் பாவம் ஏதேனும் நம்மைத் தாக்கக் கூடுமோ என்று நாம் பெருமளவு பயப்பட வேண்டும். உண்மையில், நாம் கர்த்தரோடு அற்புதமான உறவைப் பெறும்படி செய்த கிருபையைப் பற்றிய உண்மை, அவரோடு தடையற்ற ஐக்கியத்தைத் தொடர்ந்து பெற்றிருப்பதற்கு ஊக்கமளிக்கும் செயலைச் செய்ய வேண்டும். கிருபையானது பாவம் செய்வதற்குத் தூண்டுவதில்லை. அது பாவத்திற்கு மிக வலிய எதிர்வினையாகச் செயல்புரிகிறது.

### திருமறை எடுத்துக்காட்டுகள்

பழைய ஏற்பாட்டில், தன் பாவத்தால் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தை இழந்துபோன பரிசுத்தவானுக்குத் தாவீது மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறான். கர்த்தரிடத்தில் அவன் செய்த அறிக்கையையும் சீர்பொருந்தியதையும் பற்றி 32 மற்றும் 51 – ஆகிய சங்கீதங்களில் நாம் படிக்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் தனது பின்வாங்கிய நிலையிலிருந்து திரும்பி வந்த மனிதனுக்கு, கெட்ட குமாரனை ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம் (லூக்கா 15:11–24). ஆனால் அந்தக் கதை பொதுவாக ஒரு பாவி மனந்திரும்புகிற நிகழ்ச்சியைக் கூறுவதாகவே விவரிக்கப்படுகிறது. அந்த மகன் வழி தப்பி, கலகம் செய்து ஐக்கியத்தை இழந்துபோனான். ஆனாலும் அவன் தொலைவிலிருந்த வேறு நாட்டுக்குச் சென்றிருந்தபோதிலும் தன் தகப்பனுக்கு மகனாகவே இருந்தான். அவன் திரும்பி வந்து, தனது பாவ அறிக்கையை தனக்குள்ளாகச் சொன்னபோது அவனுடைய ஐக்கியம் புதுப்பிக்கப்பட்டது. அவனுடைய தகப்பன் ஓடிச்சென்று மகனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனுக்கு முத்தமிட்டான்.

*"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்"* என்று 1 யோவான் 2:1–ஆம் வசனத்தில் நாம் படிக்கிறோம். தேவனுடைய குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளுக்கே இது எழுதப்பட்டது. பிள்ளைகள் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற சொல் (teknia) புதிதாகப் பிறந்த பிள்ளைகளைக் குறிக்கும். தம்முடைய பிள்ளைகள் பாவம் செய்யக்கூடாது என்பது தேவன் நிர்ணயித்திருக்கும் தரம். ஆனால் நாம் பாவம் செய்கிறோம். பாவம் செய்கிற எவனுக்கும் தேவன் ஓர் உபகாரத்தைச்

செய்திருக்கிறார். "பிதாவினிடத்தில் பரிந்து பேசுவதற்கு நமக்கு ஒரு வழக்குரைஞர் இருக்கிறார்" என்பதைக் கவனியுங்கள். நாம் பாவம் செய்தபோதிலும், இன்னும் அவர் நம்முடைய பிதாவாகவே இருக்கிறார். இது எவ்வாறு இருக்கக்கூடும்**?** ஏனென்றால் நாம் பெற்றிருக்கிற உறவு ஒருபோதும் முறிக்கப்பட இயலாத கட்டாக விளங்குகிறது. நாம் பாவம் செய்கிறபோது என்ன நிகழ்கிறது**?**" "நீதிபரராகிய இயேசு கிறிஸ்து என்னும் வழக்குரைஞர் நமக்காகப் பிதாவினிடத்தில் இருக்கிறார்." அவர் நம்முடைய வாழ்க்கையில் உடனடியாக ஒரு செயலை செய்கிறார். நாம் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து, அவற்றை விட்டுவிட விரும்பக்கூடிய ஓர் இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறார். இவ்வாறாக நாம் மீண்டும் பிதாவுடன் ஐக்கியத்தை அனுபவிக்கும் நிலையைப் பெறுகிறோம்.

நான் உறவுக்கும் ஐக்கியத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் காண்கிறபோது, திருமறை வசனங்களை நான் புரிந்துகொள்வதற்கு அது உதவி செய்கிறது. மேலும் நான் கிறிஸ்துவுக்குள்ளாகப் பெற்றிருக்கிற நித்திய பாதுகாப்பைப் பாராட்டுவதற்கு என்னை ஊக்குவிக்கிறது. மேலும் என்னிடத்தில் இவ்வளவு அன்பாக இருக்கிற என்னுடைய பிதாவுடன் ஐக்கியத்தோடு வாழ்வதற்கு அது என்னை உற்சாகப்படுத்துகிறது.

# 07

# சட்டப்படியான மன்னிப்பு மற்றும் பெற்றோரின் மன்னிப்பு



தேவனுடைய திருமறையில் இரண்டு விதமான மன்னிப்புகள் காணப்படுகின்றன. நாம் திருமறையைக் கவனத்துடன் கற்கும் மாணாக் கர்களாக விரும்பினால், அவற்றை வேறுபடுத்திக் காண்பதற்கு அறிய வேண்டும். அவற்றை நாம் சட்டப்படியான மன்னிப்பு என்றும் பெற்றோரின் மன்னிப்பு என்றும் பெயரிட்டு அழைப்போம் (திருமறையில் இப்பெயர்கள் பயன்படுத்தப்படவில்லை).

**வரையறைகள்**

இதனை எளிமையாகக் கூற வேண்டுமெனில், ஒரு நீதிபதி அளிக்கும் மன்னிப்பே சட்டப்படியான மன்னிப்பாகும். மேலும் ஒரு தகப்பன் அளிக்கும் மன்னிப்பு பெற்றோரின் மன்னிப்பு எனப்படும். முதலாவது சொற்றொடர் நீதிமன்றத்தில் பயன்படும் சொற்றொடராகும். இரண்டாவது வீட்டில் வழக்கில் உள்ள சொற்றொடர் ஆகும்.

**சட்டப்படியான மன்னிப்பு**

முதலாவது நாம் நீதிமன்றத்துக்குச் செல்வோம். தேவன் தாமே நீதிபதி. பாவமுள்ள மனிதன் விசாரிக்கப்படுகிறான். மனிதன் பாவம் செய்கிற குற்றவாளி. அதற்கான தண்டனை நித்திய மரணம். ஆனால் கர்த்தராகிய இயேசு தோன்றி “மனிதனுடைய பாவங்களுக்கு உரிய தண்டனையை நான் செலுத்துகிறேன். அவனுக்குப் பதிலாளாக நான் மரணமடைகிறேன்” என்று அறிவிக்கிறார்.

இதைத்தான் இரட்சகர் கல்வாரி சிலுவையில் செய்தார். இப்பொழுது நீதிபதி பாவியான மனிதனிடம், "நீ என்னுடைய குமாரனைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்வாயென்றால், நான் உன்னை மன்னிக்கிறேன்" என்று அறிவிக்கிறார். இரட்சகர் மேல் அந்த மனிதன் விசுவாசம் வைத்தவுடன், அவன் தன் எல்லாப் பாவங்களுக்கும் மன்னிப்பு பெறுகிறான். அவனுடைய எல்லாப் பாவங்களுக்குமான தண்டனையைக் கிறிஸ்து செலுத்தித் தீர்த்து விட்டதால், அவன் அதற்கான தண்டனையை நரகத்தில் செலுத்த வேண்டியதில்லை. மன்னிக்கப்பட்ட பாவி இப்பொழுது தேவனோடு புதியதோர் உறவுக்குள் புகுகிறான்; இனிமேல் தேவன் அவனுடைய நீதிபதி அல்ல; அவர் இப்பொழுது அவனுடைய பிதா ஆவார்.

**பெற்றோரின் மன்னிப்பு**

பெற்றோரின் மன்னிப்பைக் குறித்த ஓர் எடுத்துக்காட்டைக் காண இப்பொழுது நாம் வீட்டிற்குச் செல்லுவோம். தேவன் பிதாவாகவும் விசுவாசி பிள்ளையாகவும் இருக்கிறார்கள். அந்தப் பிள்ளை தன்னைக் காத்துக்கொள்ள கருத்தற்றவனாக ஒரு பாவத்தைச் செய்கிறான். அப்பொழுது என்ன நடக்கிறது? அந்தப் பாவத்திற்காக தேவன் அந்தப் பிள்ளைக்கு மரண தண்டனை அளிக்கிறாரா? இல்லை! ஏனென்றால் தேவன் இனிமேல் நீதிபதி இல்லை. மாறாக அவரே தந்தை! என்ன நடக்கிறது? அந்தக் குடும்பத்தில் ஐக்கியம் முறிந்து போகிறது. அங்கு மகிழ்ச்சியின் சூழ்நிலை இல்லாமல் போகிறது. அந்தப் பிள்ளை தன்னுடைய இரட்சிப்பை இழந்து போவதில்லை, மாறாக அவன் தன் இரட்சிப்பின் மகிழ்ச்சியை இழந்துபோகிறான். வெகுவிரைவில், அவன் மீண்டும் ஐக்கியத்தைப் பெறுவதற்காகத் திட்டமிடப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையைச் சந்திக்கக் கூடும். அந்தப் பிள்ளை தன் பாவத்தை அறிக்கையிட்டவுடன் பெற்றோரின் மன்னிப்பைப் பெறுகிறான்.

ஒருவன் மனந்திரும்புகிறபோது என்றென்றைக்குமான சட்டப்படியான மன்னிப்பு ஒரே ஒரு முறை நிகழ்கிறது; ஒரு விசுவாசி பாவம் செய்து அறிக்கையிட்டு அதை விட்டுவிடுகிற ஒவ்வொரு முறையும் பெற்றோரின் மன்னிப்பு தரப்படுகிறது. இதைத்தான் யோவான் 13:8–10 இல் இயேசு கற்பித்தார். நம்முடைய பாவங்களுக்கான தண்டனையிலிருந்து விடுதலை பெறுவதற்கென்று ஒரே ஒரு முறைதான் முழுக வேண்டும், ஆனால் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் பெற்றோரின் மன்னிப்பைப் பெறுவதற்கு பல கழுவுதல்கள் தேவைப்படுகின்றன.

## இருவகை மன்னிப்புகளும் வேறுபடுத்திக் காட்டப்படுதல்

இருவகை மன்னிப்புகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைக் கீழ்க் கண்டவாறு பட்டியலிட்டுக் காட்டலாம்.

| | சட்டப்படியான மன்னிப்பு | பெற்றோரின் மன்னிப்பு |
|---|---|---|
| மனிதனின் தகுநிலை | பாவி (ரோமர் 3:23) | பிள்ளை (1 யோவான் 3:2) |
| தேவனோடுள்ள உறவு | நீதிபதி (சங்கீதம் 96:13) | பிதா (கலா. 4:6) |
| பாவத்தின் விளைவு | நித்திய மரணம் (ரோமர் 6:23) | முறிந்த ஐக்கியம் (1 யோவான் 1:6) |
| கிறிஸ்துவின் பங்கு | இரட்சகர் (1 தீமோ. 1:15) | பிரதான ஆசாரியர் மற்றும் வழக்குரைஞர் (எபி. 4:14–16; 1யோவான் 2:1) |
| அந்த மனிதனின் தேவை | இரட்சிப்பு (அப். 16:30) | இரட்சிப்பின் மகிழ்ச்சி (சங். 51:12) |
| மன்னிப்புக்கான வழி | விசுவாசம் (அப். 16:31) | பாவ அறிக்கை (1 யோவான் 1:9) |
| மன்னிப்பின் வகை | சட்டப்படியானது (ரோமர் 8:1) | பெற்றோரின் மன்னிப்பு (லூக்கா 15:21,22) |
| தவிர்க்கப்படும் விளைவு | நரகம் (யோவான்5:24) | சிட்சை (1 கொரி. 11:31,32) கிறிஸ்துவின் நியாயாசனத்தில் பரிசுகளை இழத்தல் (1 கொரி. 3:15) |
| நல்விளைவு | புதிய உறவு (யோவான் 1:12) | ஐக்கியம் புதுப்பிக்கப்படுதல் (சங். 32:5) |
| நிகழ்வெண்ணிக்கை | ஒரேஒருமுறை(மறுபிறப்பிற்கான ஒரே முழுகுதல் (யோவான் 13:10) | பல தடவைகள் (பல கழுவுதல்கள்) (யோவான் 13:8) |

### சட்டப்படியான மன்னிப்பு பற்றிய திருமறைப் பகுதிகள்

இதுமுதல், கிறிஸ்துவின் மீட்பின் செயலால் என்றென்றைக்குமாக ஒரே ஒருமுறை அருளப்படுகின்ற மன்னிப்பைப் பற்றிய வசனங்களைப் படிக்கிறபோது, அவை சட்டப்படியான மன்னிப்பைக் குறித்தவை என்று அறிவோம்.

*"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது"* (எபே. 1:7).

*"ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்"* (எபே. 4:32).

*"உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்தார்."* (கொலோ. 2:13).

**பெற்றோரின் மன்னிப்பு பற்றிய திருமறைப் பகுதிகள்**

இருந்தபோதிலும் திருமறை வசனங்களில் வேறு சில, பெற்றோரின் மன்னிப்பை விளக்கிக் கூறுகின்றன.

*"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்"* (மத்.6:14,15).

*"மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலைபண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள்"* (லூக்கா 6:37).

*"நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்"* (மாற்கு 11:25).

மேற்காணும் இந்த மூன்று வசனங்களில் தேவன் "பிதா" என்று குறிப்பிட்டு அழைக்கப்படுகிறார்; இங்கு பிதாவின் மன்னிப்பே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாம் மற்றவர்களை மன்னிப்பதற்கு விருப்பம் கொண்டிருப்பதைச் சார்ந்தே நமக்கு மன்னிப்பு கிடைக்கிறது என்பதையும் கவனியுங்கள். சட்டப்படியான மன்னிப்பைப் பற்றி இது உண்மையல்ல; நித்திய இரட்சிப்பைப் பெறுவதற்கு நாம் பிறரை மன்னிப்பதற்கு விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகக் கூறப்படவில்லை. ஆனால் பெற்றோரின் மன்னிப்பைப்


பொறுத்தவரை அது உண்மையாகும். நாம் ஒருவரையொருவர் மன்னிக்காவிட்டால் நமது பிதா நம்மை மன்னிக்கமாட்டார்.

மத்தேயு 18:23–35 ஆகிய வசனங்களில் ஓர் அரசன் தனது அடிமை ஒருவனுக்கு 10000 தாலந்துகள் (மிகப் பெரிய தொகை) மன்னித்த கதையை இயேசு கூறினார். ஆனால் அந்த அடிமை தனது உடன் அடிமைக்கு 100 வெள்ளிப் பணத்தை (அவ்வளவு பெரிய தொகை அல்ல) மன்னிக்கவில்லை. எனவே அந்த அரசன் கடுங்கோபமடைந்து, தான் மன்னித்த அடிமையை அவன் தனது கடனைத் தீர்க்கும் வரை சிறையில் அடைக்கும்படி காவலருக்குக் கட்டளையிட்டான். *"நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்"* என்று கூறி இயேசு தமது உவமையை முடித்தார் (வச.35). மீண்டும் இங்கு பெற்றோரின் மன்னிப்பைப் பற்றிய செய்தியே கூறப்பட்டுள்ளது. பிறரை மன்னிப்பதற்கு விருப்பமற்ற மனநிலையே பாவம் என்று கூறப்பட்டுள்ளது. நாம் அந்தப் பாவத்தை அறிக்கையிட்டு விட்டுவிடாதிருந்தால் தேவன் நமக்குப் பெற்றோரின் மன்னிப்பைத் தர மாட்டார்.

வேதபாடம் நம்மிடத்தில் உண்டாக்கும் மெய்சிலிர்க்கும் அனுபவங்களில், இத்தகைய வேறுபாடுகளை நாம் கண்டு அவற்றை அனுதின வேத வாசிப்பில் பொருத்திப்பார்க்கும் செயல் ஒன்றாகும். இது முதல் மன்னிப்பைப் பற்றிய பொருளை நீங்கள் திருமறையில் காண்கிறபோதெல்லாம், "ஆம், இது சட்டப்படியான மன்னிப்பைக் குறித்துப் பேசுகிறது" என்று உங்களால் கூற முடியும். அல்லது "இந்த வசனம் திருத்தந்தை அவருடைய பிள்ளையை மன்னிக்கிற நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது" என்று கூறுவீர்கள். இதை மட்டும் நினைவுகூருங்கள். ஒரு பாவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்கும் போது சட்டப்படியான மன்னிப்பைப் பெறுகிறான். ஒரு விசுவாசி தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்கிறபோது தந்தையின் அல்லது பெற்றோரின் மன்னிப்பைப் பெறுகிறான்.

# 08

# இரண்டு இயல்புகள்



**வே**தத்தில் விசுவாசியின் இருவகை இயல்புகளுக்கு இடையேயுள்ள வேறுபாட்டைக் காட்டிலும் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புடையது வேறு எதுவும் இருக்க முடியாது. இந்த உண்மையை அறியாத கிறிஸ்தவன் குற்றவுணர்வு, சந்தேகம், ஊக்கம் கெடுதல் ஆகியவற்றால் மனமுடைந்து போகக்கூடும் என்பது நிச்சயம். ஆகவே, ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இரண்டு இயல்புகள் உள்ளன, ஒன்று முந்தினது மற்றது புதியது என்னும் உண்மையையும் மற்றும் அவற்றின் வெவ்வேறு பண்புகள் ஆகியவை பற்றியும் அவன் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

**முந்தின இயல்பு**

இரட்சிக்கப்பட்டவர், இரட்சிக்கப்படாதவர் யாராயிருந்தாலும் பழைய அல்லது முந்தின இயல்பு உடையவராக இருக்கிறார். அதை அவர் ஆதாமிடத்திலிருந்து சுதந்தரமாகப் பெற்றிருக்கிறார். அதை அவர் தன் வாழ்நாள் முழுவதும் கொண்டிருக்கிறார். இதனை நாம் ஆதாமின் இயல்பு, முந்தின மனிதன் அல்லது மாம்சம் என்று அழைக்கலாம். தாவீது இதனை, *“இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்”* என்னும் சொற்களில் குறிப்பிட்டான் (சங். 51:5). *“அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, (என் மாம்சத்தில்) நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்”* என்று பவுல் இதைக் குறித்து எழுதினார் (ரோமர்

**7:18).** அதில் நாம் ஏதொரு நன்மையையும் தேடக்கூடாது. அங்கு எந்த நன்மையும் இல்லாதது கண்டு ஏமாற்றம் அடையவும் கூடாது. திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பாவத்தையும் செய்வதற்கான ஆற்றல் உள்ளவராக நாம் ஒவ்வொருவரும் இருக்கிறோம் என்னும் உண்மை நாம் கருத்தோடு சிந்திக்க வேண்டியதாகும். விசுவாசிகளின் எதிரிகளில் ஆதாமின் இயல்பு ஒன்று; மற்றவை இந்த உலகமும் பிசாசுமே ஆகும். முந்தின இயல்பு நமக்கு உள்ளாக இருக்கும் எதிரியாகும். அதனை ஐந்தாம் படை என்றோ தேசதுரோகி என்றோ அழைக்கலாம். அது படிப்பினை இல்லாதவற்றையும் தூய்மையற்றதையும் எண்ணுவதில் மகிழ்ச்சி கொள்கிறது. இயல்பாகவே அது தேவனுக்கு எதிராகச் செயல்புரிவதற்குக் காரணமாயிருக்கிறது. தேவனுக்கு எதிரான பகையை அது மறைத்து வைக்கிறது. அது தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறது. அதனால் தேவனுக்குப் பிரியமாயிருக்க முடியாது. அதன் காரணமாக மனிதர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாகத் தவறை ஏற்றுக்கொள்வதற்கு விரும்புகிறார்கள்.

ஆதாமின் இயல்பு குணப்படுத்த இயலாதபடி பொல்லாததாக இருக்கிறது. ஒரு சில ஆண்டுகளாகப் பரிசுத்தமாக வாழ்ந்தாலும் முந்தின இயல்பு எவ்வளவேனும் சிறந்ததாக மாறுவதில்லை. அதை முன்னேற்றம் அடையச் செய்வதோ சீர்திருத்துவதோ கர்த்தருடைய வேலை அல்ல. அவர் அதனைக் கல்வாரி சிலுவையில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். *"தேவன் தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" (ரோமர் 8:3). "நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்"* (ரோமர் **6:6).** இப்பொழுது ஆதாமின் இயல்பு மரண மடைந்துவிட்டதாகக் கணக்கிடும்படி ஒவ்வொரு விசுவாசிக்கும் அறிவுறுத்துகிறார். அதாவது, இறந்துபோன மனிதன் எவ்வாறு பதிற்செயல் செய்ய முடியாதோ அதுபோல நாம் அதனுடன் நடந்துகொள்ள வேண்டும்.

ஏதோவொரு செயலைச் செய்யக்கூடாது என்று ஒரு மனிதனைத் தடைசெய்யும்போது, அவனுடைய முந்தின இயல்பு அதை உடனே செய்ய விரும்புகிறது. இந்த விசித்திரமானதைப் பவுல் விவரிக்கிறார்: *"இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே. பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே. முன்னே*

*நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர் கொண்டது, நான் மரித்தவனானேன்''* (ரோமர் 7:7–9).

பவுல் தன்னுடைய முதுகில் கட்டப்பட்ட செத்த சடலத்துக்கு முந்தின இயல்பை ஒப்பிடுகிறார். அழுகி நாற்றமெடுக்கிற சடலமாகவே அது காட்சி தருகிறது. அது அவரைச் செல்லுமிடமெங்கும் பின்தொடருகிறது. மனவேதனையோடு அவரைக் கதறச் செய்கிறது. *''நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?''* (ரோமர் 7:24).

நாம் ஆதாமுக்குள் யாராக இருக்கிறோமோ அதுதான் முந்தின இயல்பு. நாம் செய்த பாவங்களுக்காகக் கிறிஸ்து மரித்தபடியே அந்த இயல்புக்காகவும் மரித்தார். நாம் இதுவரை செய்த ஏதொரு இழிந்த பாவத்தையும்விட நமது முந்தின இயல்பு இழிவானது. அதற்காகக் கர்த்தர் மரணமடைந்தார் என்னும் உண்மை நமக்கு ஆறுதலளிக்கிறது.

பலவேளைகளில் அவிசுவாசிகள் தயவுள்ளவர்களாகவும், இரக்கம் பாராட்டுகிறவர்களாகவும், அன்பு செலுத்துகிறவர்களாகவும், தாராள மனப்பான்மையுள்ளவர்களாகவும் செயல்படுகிறார்கள் என்னும் உண்மையை மறுக்க முடியாது. இதற்கான காரணங்களைப் பல கோணங்களில் விளக்கிக் கூற முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு தாய் தன் குழந்தை மேல் கொண்டிருக்கும் அன்பைப் போல இது இயற்கையான உந்துணர்வாக இருக்கக்கூடும். இது சடிதியில் ஏற்படுகிறது. உள்ளுணர்ச்சியாகவோ, கற்றுக்கொண்ட பண்பாகவோ இருக்கலாம். இது கிறிஸ்தவத்தின் தாக்கத்தால் ஏற்பட்டதாக இருக்கலாம்; கிறிஸ்தவம் உலகத்திற்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறதே. ஒரு வேளை இரட்சிப்பைச் சம்பாதிக்க வேண்டும் அல்லது அதற்குத் தகுதிபெற்றவராய் விளங்க வேண்டும் என்னும் நோக்கத்தால் உண்டானதாக இருக்கலாம். ஆதாரம் எதுவாயினும், ஒன்று நிச்சயம். இரட்சிக்கப்படாத மனிதன் முதன் முதலாக உண்மையாகச் செய்கிற நற்செயல் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைப்பதே ஆகும் (யோவான் 6:39).

**புதிய இயல்பு**

ஒரு மனிதன் மறுபடியும் பிறக்கிறபோது, அவன் புதிய தெய்வீக இயல்பைப் பெறுகிறான் (2 பேதுரு 1:4). அதுவே கிறிஸ்துவின் வாழ்வு. அந்த இயல்பு தேவனால் பிறந்ததாகையால், அதனால் பாவம் செய்ய இயலாது (1 யோவான் 3:9).

அந்த இயல்பு நல்லது, எது நல்லதோ அதை மட்டுமே அதனால் செய்ய இயலும். அதனை நாம் கிறிஸ்தவ இயல்பு அல்லது புதிய மனிதன் என்று அழைக்கலாம்.

எது பரிசுத்தமோ, தூய்மையோ அதையே அது உண்ணுகிறது. தேவ வசனத்துக்கு அது வாஞ்சையுடன் பதிற்செயல் புரிகிறது. கர்த்தருடைய பிரமாணத்தில் அது பிரியப்படுகிறது. அவருடைய கட்டளைகள் அதற்குப் பாரமாயிருப்பதில்லை. அவற்றையே அந்தப் புதிய இயல்பு செய்வதற்கு விரும்புகிறது. ஒரு தாய் தன் குழந்தையை நன்கு கவனித்துக்கொள்ள வேண்டும் என்று கட்டளையிடுவதற்கு அந்தக் கட்டளைகள் ஒப்பாயிருக்கின்றன. அதைத்தானே அவள் செய்வதற்கு விரும்புகிறாள்.

நோவா பேழையிலிருந்து வெளியில் அனுப்பிய காக்கைக்கும் புறாவுக்கும் ஒப்பாக இரண்டு இயல்புகளும் உள்ளன. அந்தக் காக்கை திரும்பவும் பேழைக்கு வரவில்லை; வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த பிணங்களின் அழுகிய மாம்சத்தை உண்பதில் அது மனநிறைவு பெற்றது. புதிய இயல்புக்குப் பிரதிநிதியாக விளங்குகிற புறா, தான் தங்குவதற்கும் உண்பதற்கும் தூய்மையான இடம் கிடைக்கும் வரை பேழைக்குத் திரும்பி வந்தது.

*"மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்"* (யோவான் 3:6). கர்த்தராகிய இயேசுவின் இந்தச் சொற்கள் எவ்வளவு உண்மையாயிருக்கின்றன.

**போராட்டம் தொடருகிறது**

புதிதாக மனந்திரும்பிய விசுவாசி ஒருவன் தன்னுடைய இரண்டு இயல்புகளை வண்ணப்பொழிவுடன் விளக்கினான். "என்னுடைய இருதயத்திலிருந்து பாவம் எடுத்து எறியப்பட்டுவிட்டது, ஆனால் என்னுடைய பாட்டனார் இன்னும் என் எலும்புகளில் இருக்கிறார்."

ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டவுடன், இரு இயல்புகளும் ஒன்றோடொன்று சண்டையிடத் தொடங்குகின்றன. இது வியப்பளிப்பதில்லை. ஒன்றுக்கொன்று முற்றிலும் எதிரான இரண்டு இயல்புகளும் ஒரே இடத்தில் எப்படி சமாதானத்துடன் குடியிருக்க முடியும். அந்தச் சண்டையானது ரெபெக்காளின் கர்ப்பத்தில் இரண்டு குழந்தைகளும் போராடிக் கொண்டிருந்த நிகழ்வில் படவுருவில் விவரிக்கப்பட்டுள்ளது (ஆதி. 25:22,23). "எல்லாம் நலமானால்

எனக்கு ஏன் இப்படி நடக்கிறது?" என்று அவள் வினவினாள். பவுல் இதனை உயிருள்ள சித்திரமாக வரைந்து தருகிறார் (ரோமர் 7:14–15).

*"மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன். எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன். இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே. ஆதலால் நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்யவேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. ஆனபடியால் நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன். உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக்கொள்ளுகிறது. நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்"* (ரோமர் 7:14–25).

மாம்சத்திற்கும் பரிசுத்த ஆவிக்கும் இடையிலான போராட்டம் கலாத்தியர் 5:17–இல் சித்திரிக்கப்பட்டுள்ளது. இது மேலே சொல்லப்பட்டிருக்கிற போராட்டத்திற்கு இணையானதல்ல, ஆனாலும் அதோடு தொடர்புடையது: *"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது."*

ஒரு விசுவாசி தான் இருமனநோய் கொண்டவன் என்று நினைப்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. ரெபெக்காளைப் போல, அவன் தனக்குள்ளாக நடைபெறுகிற போாராட்டம் என்னவென்று மனக்குழப்பம் அடைவதில் வியப்பில்லை. கர்த்தரை விசுவாசித்தவுடன் இந்தப் போராட்டம் நின்று போயிருக்க வேண்டும் என்று அவன் எண்ணினான். அதில் தவறில்லை. ஆனால் இப்பொழுது மிகவும் கடுமையான வேறொரு போராட்டம் தனக்குள் தொடங்கியிருப்பதைக் காண்கிறான். அதனால் அவனுக்குத் திகைப்பு மேலிடுகிறது. அவன் தான் பெற்ற இரட்சிப்பைக் குறித்து சந்தேகிக்கிறான்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும், எவ்வளவு பெரிய பரிசுத்தவானாக இருந்தாலும், அவனிடத்தில் இந்தப் பேராட்டம் உண்டென்று அறிந்திருக்க வேண்டும் (1 கொரி. 10:13). மேலும் இந்தப் போராட்டம் மரணம் வரை அல்லது சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி வரை தொடரும்., இந்தப் போராட்டம் அவன் இரட்சிக்கப்படவில்லை என்பதற்கான சான்று அல்ல. மாறாக அவன் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என்பதற்கான சான்றாகவே இருக்கக்கூடும்.

**எந்த இயல்பு வெல்லுகிறது?**

நமக்குள்ளாகக் குடியிருக்கும் பாவத்தின் அதிகாரத்திலிருந்து விடுதலை தருபவர் பரிசுத்த ஆவியானவரே ஆவார் (கலா. 5:17). மிகப் பெரிய அளவில் தேவ பக்தியுள்ள விசுவாசியும் கூட அந்த அதிகாரத்தைத் தன்னில் பெற்றிருப்பது இல்லை. இருந்தபோதிலும், இதற்குக் கிறிஸ்தவனுடைய கீழ்ப்படிதலும், ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன.

எந்த இயல்பு வெற்றி பெறுகிறது என்பதைத் தீர்மானிக்கிறவன் விசுவாசியே ஆவான். எந்த இயல்புக்கு அவன் உணவூட்டுகிறானோ அதுவே வெல்லும். தொலைக்காட்சி, திரைப்படங்கள், உலகம் சார்ந்த இலக்கியம், களிப்பூட்டும் பொழுதுபோக்குகள் ஆகியவற்றின் மூலமாக மாம்சத்திற்கு உணவளித்துவிட்டு, மிகவுயர்ந்த அளவில் புதிய இயல்பை வெற்றி பெறச் செய்துவிடலாம் என்று எதிர்பார்க்க முடியாது. ஓநாய்க்கு உணவளித்துவிட்டு, ஆட்டுக்குட்டி வெற்றிபெறும் என்று எதிர்பார்க்க முடியாது.

இதன் காரணமாகவே ரோமர் 13:14–இல் *“துர்இச்சைகளுக்கு இட மாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்,”* என்று அவனிடம் கூறப்பட்டுள்ளது. மேலும் 1 பேதுரு 2:11–இல் *“நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகுங்கள்”* என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வுண்மையை ஆக்கபூர்வமாகச் செயல்படுத்துவதற்கு ஒவ்வொரு விசுவாசியும் திருமறை வசனங்களைப் படிப்பதிலும், ஜெபிப்பதிலும், கர்த்தருக்காக ஊழியம் செய்வதிலும் அதிகமான நேரம் செலவிடக் கடமைப்பட்டிருக்கிறான். பரிசுத்த வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துச் செயல்களையும் அவன் செய்ய வேண்டும்,

**சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை**

பாவம் செய்கிற நம்முடைய முந்தின இயல்பே இதற்குக் காரணம் என்று அதன் மேல் பழிபோடுவதற்கு இடமில்லை. வேறொன்றின் மேல் குற்றத்தைத் தள்ளி விடுவது இங்கு செல்லாது. அந்த மனிதனே பொறுப்பாளி என்று தேவன் தீர்க்கிறார். அது முந்தின இயல்பால் உண்டானது என்று தப்பிக்க இயலாது.

சாக்குப்போக்குச் சொல்லும் வழக்கம் பாவம் செய்வதற்கான வழியை எளிமையாக்குகிறது. எதிர்த்து நிற்கும் தன்மையை அது செயலிழக்கச் செய்துவிடும்.


**முடிவுரை:**

நமக்கு இரண்டு வகையான இயல்புகள் உள்ளன என்னும் உண்மையைத் திருமறையும் நம்முடைய அனுபவமும் சொல்லுகின்றன. அவை வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படக்கூடும், ஆனாலும் அந்தப் பெயர்கள் யாவும் வேறொன்றைச் சொல்வதில்லை. இதனை ஒருவிசுவாசி அறிந்துகொள்ளவில்லை என்றால், அவன் தன்னை முரண்பட்டவனாகக் கருதக்கூடும். அல்லது அவன் தன்னுடைய இரட்சிப்பு உண்மையானதுதானா என்று கேள்வி எழுப்பக்கூடும் அல்லது அவன் தோல்வியடைந்த வாழ்க்கை வாழ்கிறவனாக இருப்பான்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் வெற்றி பெறுவதற்கு, முந்தின இயல்பு தூண்டிவிடும் பொல்லாத இச்சைகளுக்குப் பதில் அளிக்காமல், அதற்குத் தான் மரித்தவன் என்று எண்ணியவனாக பதிற்செயல் எதுவும் செய்யாமல் இருக்க வேண்டும். மேலும் அவன் தன்னைப் பரிசுத்த ஆவியானவருடைய கட்டுப்பாட்டுக்கு ஒப்புவிக்க வேண்டும். இவ்வாறு அவன் செய்யும்வரை அவன் மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டான் (கலா.5:16).

# 09

# பரிசுத்தமாக்கப்படுதலின் வகைகள்



*பரிசுத்தமாக்கு* என்னும் சொல் ''பிரித்துவை'' என்று பொருள்படும். பரி சுத்தமாக்கு, பரிசுத்தமாகுதல், பரிசுத்தவான், பரிசுத்தம், பரிசுத்தராயிருங்கள், சுத்திகரி, சுத்திகரித்தல் – ஒரு குடும்பமாக இத்தனை சொற்கள் உள்ளன. இவை யாவும் ஒரே பொருளுடைய வேர்ச்சொல்லிருந்து பிறந்தவை. இழி வானதும் தூய்மையற்றதுமான நிலையிலிருந்து தேவனுக்கென்று பிரித்து வைக்கின்ற செயல்முறையே பெரும்பாலும் பரிசுத்தமாக்கப்படுதல் என்பதன் பொருளாகும். ஆனால் எல்லா நேரங்களிலும் அந்தப் பொருளிலேயே அச்சொல் பயன்படுத்தப்படவில்லை. பரிசுத்தமாக்குவதற்காக என்னும் சொல்லுக்குப் பிரித்து வைப்பதற்காக என்னும் பொருளை நீங்கள் நினைவில் கொண்டிருப்பீர்கள் என்றால், எல்லா இடங்களிலும் பொருந்தக்கூடிய திட்டவட்டமான ஒரு பொருளைப் பெறுவீர்கள்.

பழைய ஏற்பாட்டில் தேவன் ஏழாம் நாளைப் பரிசுத்தப்படுத்தினார் (ஆதி.2:3). மனிதர்களிலும் விலங்குகளிலும் முதல் பிறந்தவை கர்த்தருக்கென்று பரிசுத்தப்படுத்தப்பட்டன (யாத்.13:2). ஆசாரியர்கள் தங்களைக் கர்த்தருக்கென்று பரிசுத்தப்படுத்த வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளை கொடுக்கப்பட்டது (யாத்.19:22). சீயோன் மலை பரிசுத்தப்படுத்தப்பட்டது (யாத்.19:23). ஆசரிப்புக் கூடாரமும் அதன் எல்லாப் பணிமுட்டுகளும் பரிசுத்தப்படுத்தப்பட்டன

(யாத்.40:9). சிலைகளைத் தொழுதுகொள்வதற்கென்று மக்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டார்கள் என்று ஏசாயா 66:17–இல் நாம் படிக்கிறோம்.

புதிய ஏற்பாட்டில், பரிசுத்தமாக்கப்படுதல் என்னும் சொல் முதன்மையாக மனிதர்களோடு தொடர்புபடுத்தியே பயன்படுத்தப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், தேவாலயம் அதிலுள்ள பொன்னைப் பரிசுத்தப்படுத்துகிறது என்றும், பலிபீடம் அதன் மேல் வைக்கப்படும் காணிக்கையைப் பரிசுத்தப்படுத்துகிறது என்றும் இயேசு கூறினார் (மத்.23:17,19). நாம் உண்ணுகிற உணவை தேவ வசனமும் ஜெபமும் பரிசுத்தப்படுத்துகின்றன என்று பவுல் கூறினார் (1 தீமோ. 4:5).

மனிதர்களுடைய பரிசுத்தமாகுதலுக்காக, தேவன் தாமே கிறிஸ்துவைப் பரிசுத்தப்படுத்தி இவ்வுலகிற்கு அனுப்பினார் (யோவான் 10:36). அதாவது நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கும் வேலையைச் செய்வதற்காகப் பிதா தம்முடைய குமாரனைப் பிரித்து வைத்தார். கிறிஸ்து தம்மைத்தாமே பரிசுத்தமாக்கினார் (யோவான் 17:19). தம்முடைய மக்களுக்காகப் பரிந்து பேசும் பொருட்டு கிறிஸ்து தம்மைப் பிரித்துக் கொண்டார்.

சில அவிசுவாசிகள் கூட ஒருபொருளில் பரிசுத்தமாக்கப்பட்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. *“என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள்”* (1 கொரி. 7:14). தம்பதிகளில் ஒருவர் இரட்சிக்கப்பட்டிருக்கிற நிலையில், மற்றவர் இரட்சிப்படைய வேண்டுமென்று இரட்சிக்கப்பட்டவர் ஜெபம் செய்கிறார். இந்தச் சிலாக்கியத்திற்காக அவர் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறார்.

மேலும் எல்லா விசுவாசிகளாலும் கிறிஸ்து ஒரு பொருளில் பரி சுத்தமாக்கப்பட வேண்டும். *“கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்”*(1 பேதுரு 3:15). அவரே நம்முடைய வாழ்க்கையின் மறுக்கமுடியாத ஒப்பற்ற அரசர் என்று நாம் அவரைப் பரிசுத்தப்படுத்த வேண்டும்.

இவை போக மிக முக்கியமான நான்கு வகைப் பரிசுத்தமாக்கப்படுதல் உண்டென்று புதிய ஏற்பாட்டைப் படிக்கிற நாம் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவையாவன: இரட்சிக்கப் படுவதற்கு முன் பரிசுத்தமாக்கப்படுதல், தகுநிலையில் பரிசுத்தமாக்கப்படுதல், நடைமுறை வளர்ச்சியில் பரிசுத்தமாக்கப்படுதல், முழுநிறைவாகப் பரிசுத்தமாக்கப்படுதல்.

**இரட்சிக்கப்படுவதற்கு முன் பரிசுத்தமாக்கப்படுதல்**

ஒருவர் மறுபடியும் பிறப்பதற்கு வெகு காலத்திற்கு முன் பரிசுத்த ஆவியானவர் அவரைப் பிரித்து வைத்து, கிறிஸ்துவினிடமாய்க் கொண்டு வரும்படி அவருடைய வாழ்க்கையில் வேலை செய்யத் தொடங்கியிருப்பார். தனது பிறப்புக்கு முன்னமே பவுல் பிரித்து வைக்கப்பட்டிருந்ததை உணர்ந்தார் (கலா.1:15). தெசலோனிக்கேயருடைய இரட்சிப்பில் மூன்று படிகள் இருந்ததாகப் பவுல் அவர்களுக்கு எழுதிய நூலில் நினைவுபடுத்துகிறார் (2 தெச. 2:13).

1. தேவனுடைய தெரிந்தெடுப்பு
2. ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதல்
3. சத்தியத்தை அவர்கள் விசுவாசித்தல்

இந்தப் பரிசுத்தமாக்கப்படுதல் அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படுவதற்கு முன்னானது என்பதைக் கவனியுங்கள்.

இரட்சிப்பின் தொடர்பில் நடக்கும் நிகழ்வுகளின் காலவரிசை 1 பேதுரு 1:2 கீழ்க்கண்டவாறு இடம் பெற்றுள்ளது.

1. தேவனுடைய முன்னறிவு
2. பரிசுத்த ஆவியால் பரிசுத்தமாக்கப்படுதல்
3. இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல்
4. அவருடைய இரத்தம் தெளிக்கப்படுதல்

நித்தியத்தில் தேவன் நம்மைக் கிறிஸ்துவுக்குள் தெரிந்தெடுத்தார் (எபே. 1:4). குறித்த காலத்தில் பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பிரித்து வைத்தார். பின்னர் நாம் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தோம். அவ்வாறு நாம் செய்தவுடனேயே கிறிஸ்துவின் இரத்தத்தின் மதிப்பு நம்முடைய கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. ஆனால், பவுல் குறிப்பிடுகிற பரிசுத்தமாக்கப்படுதல் ஒரு மனிதன் மறுபடியும் பிறப்பதற்கு முன் நடைபெற்ற நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

**தகுநிலையில் பரிசுத்தமாக்கப்படுதல்**

ஒரு மனிதன் மறுபடியும் பிறந்த அத்தருணத்திலேயே அவன் தகு நிலையில் பரிசுத்தமாக்கப்படுகிறான். தேவனுடைய முன்னிலையில் அவன் பெற்றிருக்கிற தகுநிலையைப் பொறுத்தவரை, இவ்வுலகிலிருந்து அவன் முழுநிறைவாக தேவனுக்கென்று பிரித்து வைக்கப்படுகிறான்; ஏனென்றால்

அவன் "கிறிஸ்துவுக்குள்" இருக்கிறான். உண்மையான பொருளில் கிறிஸ்துவே அவனுடைய பரிசுத்தமாக இருக்கிறார் (1 கொரி. 1:31).

மெய்யான விசுவாசி ஒவ்வொருவனும் பரிசுத்தவானாவான்; அவன் கர்த்தருக்கென்று பிரித்து வைக்கப்பட்டிருக்கிறான். இது அவனுடைய தகுநிலையாகும். இவ்வாறாகவே, கொரிந்துப்பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்கள் யாவரும், *"கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகவும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாகவும்"* இருக்கிறார்கள் என்று 1 கொரிந்தியர் 1:2 கூறுகிறது. கொரிந்திய பரிசுத்தவான்கள் எப்பொழுதும் பரிசுத்தமாக வாழவில்லை! அவர்களுடைய ஐக்கியத்தில் இருந்த ஒழுக்கக்கேட்டை அவர்கள் பொறுத்துக் கொண்டார்கள் (1 கொரி. 5:1–2). ஒருவரோடொருவர் வழக்கைத் தீர்க்க நீதிமன்றம் சென்றார்கள் (1 கொரி. 6:1). அவர்களில் சில போதகர்கள் உயிர்த்தெழுதலை மறுத்தார்கள் (1 கொரி. 15:12–14). இருந்தபோதிலும், அவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாக, தகுநிலையின்படி இன்னும் பரிசுத்தவான்கள் என்னும் நிலையிலேயே இருந்தார்கள்.

தகுநிலையில் பரிசுத்தமாக்கப்படுதலைக் குறித்துப் பேசுகிற சிலவேத பகுதிகளை இப்பொழுது காணலாம். "பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும்" என்னும் சொற்றொடர் எல்லா விசுவாசிகளையும் குறிக்கிறது (அப். 20:32). "என்னைப் பற்றும் விசுவாசத்தாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்" என்று கர்த்தர் தம் மக்களைக் குறித்து அப்போஸ்தலர் 26:18–இல் பேசுகிறார். 1 கொரிந்தியர் 6:11–இல் அந்நகர விசுவாசிகளைக் குறித்து, "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், நீதிமான்களாக்கப்பட்டவர்கள்" என்னும் விவரம் கூறப்பட்டுள்ளது. *"இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே . . . நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்"* என்று எபிரெய நூலாசிரியர் நமக்கு நினைவூட்டுகிறார் (எபி. 10:10). *"பரிசுத்த மாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூர ணப்படுத்தியிருக்கிறார்"* (எபி. 10:14).

*பரிசுத்தர்* என்னும் சொல் சில வேளைகளில் தகுநிலைப் பரி சுத்தமாக்கப்படுதலைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக, கொலோசெயர் 3:12–இல் பவுல் கிறிஸ்தவர்களைப் *பரிசுத்தர்* என்று அழைக்கும்போது, தேவனுடைய முன்னிலையில் அவர்கள் பெற்றிருக்கும் தகுநிலைப் பரிசுத்தத்தையே குறிப்பிடுகிறார்.

**நடைமுறை வளர்ச்சியில் பரிசுத்தமாக்கப்படுதல்**

கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என்று பல வேத வசனங்கள் குறிப்பிட்டாலும், வேறு பல வசனங்கள் அவர்கள் பரிசுத்தமாக்கப்படவேண்டும் என்று கூறுகின்றன. பரிசுத்தமாக்கப்படுதலில் உள்ள வேறுபாடுகளை நாம் பகுத்துப் பார்க்கத் தவறினால், இது மிகவும் குழப்பமடையச் செய்துவிடும். மேலும் அவை ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகத் தோன்றும்.

நடைமுறை வளர்ச்சியில் பரிசுத்தமாக்கப்படுதல் நாம் நம்முடைய அனுதின வாழ்க்கையில் எவ்விதமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதையே குறிக்கிறது. நாம் பாவத்திலிருந்தும் பொல்லாங்கிலிருந்தும் பிரிந்து வாழ வேண்டும். பரிசுத்தவான்கள் எல்லா நேரங்களிலும் அதிகம் அதிகமாகப் பரிசுத்தமடைய வேண்டும்.

யோவான் 17:17–இல் கர்த்தராகிய இயேசு இவ்வகைப் பரிசுத்தமாக் கப்படுதலையே குறிப்பிடுகிறார். *“உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.”*

விசுவாசிகளின் ஒத்துழைப்பு இதற்குத் தேவைப்படுகிறது (2 தீமோ. 2:21), பரிசுத்தமாகுதல் அல்லது பரிசுத்தம் என்பன பற்றி எங்கெல்லாம் புத்திமதி கூறப்பட்டுள்ளதோ, அங்கு நடைமுறை வளர்ச்சியில் பரிசுத்தமாக்கப்படுதல் என்பதே ஆய்வுப்பொருள் என்பதை நீங்கள் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். பவுல் இவ்வாறு கொரிந்தியரை, *“. . . மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, உங்களைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்துங்கள்”* என்று வற்புறுத்துகிறார் (2 கொரி. 7:1). இதே பொருளில் பேதுரு, *“உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்”* என்று எழுதியிருக்கிறார் (1 பேதுரு 1:15).

நடைமுறைப் பரிசுத்தத்தில் ஒரு குறிப்பிட்ட வகை, ஒழுக்கக்கேட்டிலிருந்து பிரிந்து வாழ்வதைப் பற்றியது: *“நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசி மார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல் இருங்கள்”* (1 தெச. 4:3,4).

ஒரு கிறிஸ்தவன் எவ்வாறு கூடுதல் பரிசுத்தமாவான்? எவ்வாறு கூடுதல் கர்த்தராகிய இயேசுவைப் போல மாறுவான்? இதற்கான விடை 2 கொரிந்தியர்

**3:18**–இல் காணப்படுகிறது. *“நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.”*

கர்த்தரோடு இடையறாது ஈடுபாடு கொண்டிருப்பதால் நடைமுறைப்பரிசுத்தம் பெறுகிறோம். நாம் யாரைத் தொழுதுகொள்கிறோமோ, அவரைப் போலவே மாறுவோம் என்பது வாழ்க்கையின் கோட்பாடு ஆகும். நாம் கூடுதலாகக் கிறிஸ்துவைக் குறித்துத் தியானிக்கையில், நாம் கூடுதலாக அவரைப் போலாவோம். பரிசுத்த ஆவியானவர் இந்த வியத்தகு மாற்றத்தை உண்டு பண்ணுகிறார். எல்லாம் உடனடியாக நடைபெறுவதில்லை. அது மகிமையின் மேல் மகிமையடைவதாக விளங்கும்.

**முழுநிறைவாகப் பரிசுத்தமாக்கப்படுதல்**

பரிசுத்தமாக்கப்படுதலின் இந்த அம்சம் ஒரு விசுவாசி எதிர்காலத்தில் பெறக்கூடிய நிலையையே குறிக்கிறது. அவன் இரட்சகரை முகமுகமாகக் காண்கிறபோது, என்றென்றைக்குமாக எல்லாப் பாவத்திலிருந்தும் தீட்டிலிருந்தும் பிரிக்கப்படுகிறான். அவன் நன்னெறி சார்ந்தவற்றில் கர்த்தராகிய இயேசுவைப் போலாகிறான். முழுநிறைவான பரிசுத்தத்தைப் பெறுகிறான்.

இதைப் பற்றி கொலோசெயர் **1:21**–இல் *“. . . உங்களைப் பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்”* என்று நாம் வாசிக்கிறோம்.

அந்த நாளில் திருச்சபையானது முற்றுமுடிய பரிசுத்தத்தை அடைந்திருக்கும். *“கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வார்”* **(எபே. 5:27).**

பரிசுத்தமாக்கப்படுதல் என்னும் சொல் இடம் பெறாமலேயே நம்முடைய முழுநிறைவான பரிசுத்தத்தை விவரிக்கின்ற மற்ற வேதபகுதிகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, *“. . . அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்”* என்று யோவான் கூறுகிறார்


(1யோவான் 3:2). *"தமது மகிமையுள்ள சந்நிதானத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவராய் நிறுத்துவார்"* என்று யூதா கூறுகிறார் (யூதா 24).

**முடிவுரை**

பரிசுத்தமாக்கப்படுதலின் வெவ்வேறு அம்சங்களைப் பகுத்துத் திருமறைப் பாடத்தைப் படிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பரிசுத்தத்தைப் பற்றிய வசனங்களை நீங்கள் காண்கிறபோது, "இது என்னுடைய இரட்சிப்புக்கு முன் நடந்ததா? கிறிஸ்துவுக்குள்ளாக என் நிலை இதுவா? ஒவ்வொரு நாளும் இவ்விதமாக நான் இருக்க வேண்டுமா? அல்லது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையுள்ள முன்னிலைக்குச் செல்லும்போது இந்த நிலையில்தான் நான் இருக்க போகிறேனா?" என்று நீங்கள் உங்களையே கேளுங்கள்.

# 10

# பரிசுத்த ஆவி குடியிருத்தல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்



பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய கோட்பாட்டை நாம் படிக்கின்றபோது பகுத்துப் படிக்க வேண்டிய முக்கியமான பல வேறுபாடுகள் உள்ளன என்பதை நாம் அறிவோம். பரிசுத்த ஆவி குடியிருத்தல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல் ஆகியவற்றிற்குள்ளாக இருக்கக் கூடிய வேறுபாட்டை நாம் காண வேண்டும். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும் அக்கினி ஸ்நானமும் ஒன்றல்ல என் பதை நாம் உணர வேண்டும். தேவனுடைய இறையாண்மையால் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதலுக்கும், நம்முடைய முயற்சியால் நிரப்பப்படுதலுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நாம் அறிய வேண்டும்.

**பரிசுத்த ஆவி குடியிருத்தல் (வாசம் செய்தல்)**

ஒரு மனிதன் மறுபடியும் பிறந்த உடனேயே தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அவனுடைய சரீரத்திற்குள்ளாகக் குடியிருக்கத் தொடங்குகிறார். *“உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?”* (1 கொரி. 6:19). *“கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல”* (ரோமர் 8:9). திரியேக தேவன் ஒரு

மனிதனுக்குள் குடியிருக்கத் தொடங்கியதிலிருந்து, அவர் அவனை விட்டு நீங்குவதில்லை (யோவான் 14:16). அவர் நமக்குள்ளாகக் குடியிருக்கிறார் என்பதை அறிவது எப்படி? தேவ வசனம் அவ்வாறு கூறுவதால் நாம் அதை அறிவோம். காலம் செல்லச் செல்ல அவர் நம்முடைய வாழ்க்கையில் உண்டுபண்ணுகிற மாற்றங்களால் அதை அறிகிறோம். ஆவியானவர் நமக்குள்ளாகக் குடியிருப்பதற்குச் சில உணர்ச்சிபூர்வமான எண்ணங்கள் சம்பந்தப்பட்டுள்ளபோதிலும், உணர்வுகள் முதன்மையானவை அல்ல. நமக்குள் ஆவியானவர் குடியிருப்பதற்காக நாம் ஜெபிக்க வேண்டியதில்லை. அதற்காக நாம் காத்திருக்கவும் வேண்டியதில்லை.

**ஆவியின் ஞானஸ்நானம்**

ஆவியின் ஞானஸ்நானத்தைப் பொறுத்தவரையில், மிகமுக்கியமான வசனம் 1 கொரிந்தியர் 12:13 ஆகும்: *"நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லோரும் ஒரே ஆவிக் குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்."*

ஒவ்வொரு விசுவாசியையும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இடம் பெறச்செய்வதே ஆவியின் ஞானஸ்நானத்தின் ஊழியமாகும். திருச்சபை உருவாக்கப்பட்ட பெந்தெகொஸ்தே நாளில்தான் முதல் ஞானஸ்நானம் நிகழ்ந்தது. அதுமுதல் எந்த ஒரு மனிதனும் இரட்சிக்கப்படுகின்ற தருணத்தில், அவன் ஆவியின் ஞானஸ்நானத்தால் திருச்சபையோடு இணைக்கப்படுகிறான்.

இனம், பண்பாடு ஆகிய வேறுபாடுகளின்றி எல்லா விசுவாசிகளும் இந்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் இதைச் சொல்லலாம். இது புதிய பிறப்பு நிகழ்கின்ற அதே நேரத்தில் நிகழ்கிறது. சற்று காலம் கழித்து இது நிகழ்கிறதில்லை. கிறிஸ்தவ வாழ்வில் அது மீண்டும் மீண்டும் நடைபெறுவதில்லை.

ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறும்படி ஒருவருக்கும் ஒருக்காலும் கட்டளையிடவில்லை. ஒரு பாவி இரட்சகரை ஏற்றுக்கொள்கிறபோது அது தானாகவே நடைபெறுகிறது. அது உணர்ச்சிபூர்வமான அனுபவம் இல்லை. திருமறை அதைக்குறித்து நம்மிடத்தில் பேசுவதாலே மட்டுமே அதை நாம் அறிகிறோம்.

**அக்கினி ஞானஸ்நானம்**

அக்கினி ஞானஸ்நானமும் ஆவியின் ஞானஸ்நானமும் ஒன்றல்ல. அது ஆசீர்வாதத்தையோ சிலாக்கியத்தையோ குறிப்பதில்லை. மாறாக அது நியாயத்தீர்ப்புச் செலுத்தும் நிகழ்வாகும்.

விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் ஆகிய இருவகுப்பாரும் கலந்திருந்த கூட்டத்தாருடன் யோவான் ஸ்நானன் பேசிக்கொண்டிருந்தபோது, *"அவர் (கிறிஸ்து) பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்"* என்று கூறினார் (மத். 3:11; லூக்கா 3:16). அதைத் தொடர்ந்து அக்கினி ஞானஸ்நானம் தெய்வீக நியாயத்தீர்ப்பு என்று விளக்கமளிக்கத் தொடங்கினார். *"தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார்"* (லூக்கா 3:17; காண்க. மத்.3:12).

இந்தப் பின்னணி அக்கினி நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது என்பதை விளக்கிக் கூறுகிறது. அது பரவசமூட்டக்கூடிய அல்லது உற்சாகமூட்டக்கூடிய மனமகிழ்ச்சிக்குரிய அனுபவமல்ல.

ஆனால், யோவான் ஸ்நானன் ஒரு கூட்டத்தாருடன் பேசிக்கொண்டிருந்தபோது அங்கு அவிசுவாசிகள் இருந்ததாக எந்தவிதக் குறிப்பும் இல்லை. அப்போது, *"அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்"* என்று யோவான் கூறினார் (மாற்கு 1:8; யோவான் 1:33). அப்பொழுது அவர் அக்கினியைப் பற்றிப் பேசவே இல்லை.

ஆவியின் ஞானஸ்நானம் விசுவாசிகளைப் பொறுத்தவரை நடந்துமுடிந்த நிகழ்ச்சி. ஆனால் அக்கினி ஞானஸ்நானம் அவிசுவாசிகள் அடையப்போகிற எதிர்கால நிகழ்ச்சியாகும்.

**பரிசுத்த ஆவியின் நிறைவின் இரண்டு அம்சங்கள்**

புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் நிறைவு இரண்டு வழிகளில் நிறைவேறுவதாகக் கூறப்படுகிறது. இதனை நாம் காணத் தவறுவோமெனில், இந்தப் பொருள் பற்றிப் பேசும் வசனங்களைத் தெளிவாக விளக்குவதில் குழப்பமடைவோம்.

இறையாண்மையின் மூலம் நிரப்பப்படுதல் என்று பெயர் சூட்டி முதலாவது வகையை அழைப்போம். எடுத்துக்காட்டாக, யோவான் ஸ்நானன் தன் தாயின் வயிற்றிலிருந்த போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்ததாக நாம் வாசிக்கிறோம் (லூக்கா 1:15). கருவில் இருந்த யோவான் தான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதற்கு ஏதொரு நிபந்தனையையும் நிறைவேற்றியிருக்க முடியாது! மேசியாவின் முன்னோடியென்னும் தனித்துவம் வாய்ந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தப்படும்படி தேவனுடைய இறையாண்மையின் மூலம் யோவான் ஆவியால் நிரப்பப்பட்டார்.

இதற்கு ஒப்பான இரு நிகழ்ச்சிகள் அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் இடம் பெற்றுள்ளன:

யூதருடைய ஆலோசனைச் சங்கத்தின் முன்னிலையில் அச்சமில்லாமல் பேசுவதற்கு ஆயத்தப்படுத்தும்படி பேதுரு தேவனுடைய இறையாண்மையின் மூலம் ஆவியால் நிரப்பப்பட்டார் (அப். 4:8–12).

மாயவித்தைக்காரனாகிய எலிமாவைக் கடுமையான முறையில் கண்டனம் பண்ணுவதற்குத் தேவையான ஆற்றலைப் பெறும்படி பவுலைக் கர்த்தர் ஆவியால் நிரப்பினார் (அப். 13:9–11).

**ஆவியினால் நிறையுங்கள்**

வேறொரு வகை நிறைவு வித்தியாசமானது ஆகும். ஒவ்வொரு விசுவாசிக்கும் அது கட்டளையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது விசுவாசியின் கட்டுப் பாட்டிற்கு அப்பாற்பட்டது அல்ல. இந்தப் பொருள் பற்றிய மிகச் சிறந்த வசனம் எபேசியர் 5:18 ஆகும். *"துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறையுங்கள்."*

"நிறையுங்கள்" என்னும் வினைச் சொல் இங்கு தொடர்ந்து நிறை வேற்றவேண்டிய கட்டளையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இது பரிசுத்த ஆவியால் ஒருமுறை உண்டாகும் திருப்புமுனைக்கட்ட அனுபவம் அல்ல.[1] இது மதுபானத்தால் உண்டாகக்கூடிய வெறிகொள்ளும் நிலைக்கு எதிரானதாகக் கூறப்பட்டுள்ளது.[2] கீழ்கூறப்பட்டுள்ளவற்றைக் காண்க:

| **மதுபான வெறிகொள்ளுதல்** | **ஆவியால் நிரப்படுதல்** |
|---|---|
| குழறுபடியான தெளிவற்ற பேச்சு | கிறிஸ்துவை உயர்த்தி, தூய்மையான வகையில் பேசுதல் |
| தடுமாற்ற நடை | பரிசுத்தத்தோடும் அர்த்தமுள்ள வகையிலும் நடத்தல் |
| மதுபான வெறியின் கட்டுப்பாட்டுக்குள் இருத்தல் | பரிசுத்தஆவியின் கட்டுப்பாட்டுக்குள் இருத்தல் |
| கட்டுப்பாட்டை இழத்தல் | தற்கட்டுப்பாட்டை இழக்காமல் இருத்தல் |
| வெறிகொள்ளுதலால் ஏற்படும் குண வேறுபாடுகள் | வெறிகொள்ளுதல் பற்றிய ஆபத்து இல்லை |
| பாவத்திற்கு எதிரான தடை குறைந்து போகுதல் | பாவத்திற்கு எதிரான தடை உச்ச நிலையை அடைதல் |
| அவமானமும் வெட்கமும் உண்டாகக் கூடிய நிலை | முன்மாதிரியும் உன்னதமுமான நிலை |
| மூளைத்திறனைக் குறைக்கும் | திறனை ஊக்குவிக்கும் |

**ஆவியில் நிறைவது எப்படி**

பரிசுத்த ஆவியில் நிரப்பப்படுவதற்குச் சில நிபந்தனைகள் உள்ளன என்று நாம் ஏற்கனவே கூறினோம். "ஆசீர்வாதத்தின் பாதையில்" நாம் நம்மை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று ஒருவர் இதைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். ஒரு மனிதனால் இதை எவ்வாறு செய்ய முடியும்?

தாமதமின்றி பாவத்தை அறிக்கை செய்து அதைவிட்டுவிட வேண்டும் (1 யோவான் 1:9; நீதி.28:13).

உங்கள் சரீரத்தை இடைவிடாமல் கிறிஸ்துவுக்கு ஜீவபலியாக ஒப்புவிக்க வேண்டும் (ரோமர் 12:1,2).

தேவ வசனத்தால் உங்களை நிரப்பிக்கொள்ளுங்கள் (கொலோ. 3:16).

ஆராதனையிலும் ஜெபத்திலும் மிகுதியான நேரத்தைச் செலவிடுங்கள் (2 கொரி. 3:18; மத்.7:7).

கிறிஸ்தவ ஐக்கியத்தில் நிலைத்திருங்கள் (எபி. 10:25).

தேவனுடைய மகிமைக்கென்று எல்லாவற்றையும் செய்யுங்கள் (1 கொரி. 10:31).

ஆவியின் நிறைவைப் பெற்ற மனிதன், அவ்வுண்மையைப் பிறரிடம் தெரிவிக்க மாட்டான். அவன் தன்னை மறைத்து, கிறிஸ்துவை உயர்த்துவான் (யோவான் 3:30; 16:14). ஆவியில் நிறைந்து அவன் நடக்கும்போது, தனது ஒன்றுமில்லாத தன்மையையும் தகுதியற்ற நிலையையும் அதிகமாக உணருவான்.

ஆவியில் நிறைந்திருப்பது உணர்ச்சிபூர்வமானது அல்ல, மாறாக அது பரிசுத்தத்தோடு தொடர்புடையது என்பதை நினைவுகூருவது நல்லது. உணர்ச்சிகள் ஆவியில் நிறைவதில் தொடர்புடையவை என்பது உண்மையே. கிறிஸ்தவ வாழ்க்கையில் பல கூறுகளிலும் இது உண்மையாயிருக்கிறது. ஆனால் அவையெல்லாம் பிரதானமானவை அல்ல. தெய்வீக நிரப்புதலின் காரணமாக உண்டான துணை விளைவுகளாகவே மனித உணர்ச்சிகள் விளங்குகின்றன.

**ஒரு கடைசி வார்த்தை**

நாம் இதுவரை ஆய்வு செய்த விசயங்களில் ஏதொன்றும் பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசியினிடத்தில் நடப்பிக்கும் திருப்புமுனை அனுபவம் அல்ல. அப்படிப்பட்ட அனுபவம் பின்வாங்கிப்போன விசுவாசி

கர்த்தரோடு மீண்டும் ஐக்கியம் கொள்ளும்படி சீர்பொருந்துகிற போது நடைபெறுகிற நிகழ்வாக இருக்கலாம். அது ஒருவிசுவாசி தன்னைக் கிறிஸ்துவுக்கு மறுபடியும் அர்ப்பணிக்கிற அல்லது புதிய வகையில் முற்றிலுமாக அர்ப்பணிக்கிற அனுபவமாக இருக்கலாம். அப்படிப்பட்ட அனுபவத்தை நாடுவது விரும்பத்தக்கதாகும். அத்தகைய அனுபவத்தில் ஆழமான உணர்ச்சிகள் ஈடுபடக்கூடும். அந்த அனுபவங்களைப் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் நிகழ்வாகவோ பரிசுத்த ஆவியின் ஞானஸ்நான நிகழ்வாகவோ நினைத்துவிடக்கூடாது. அந்த அனுபவமானது ஒரு திருப்புமுனைக் கட்டமாகச் செயல்பட்டு, பரிசுத்த ஆவியின் நிறைவை நோக்கி வழிநடத்தக்கூடிய நிகழ்வாக இருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியின் நிறைவு ஒருமுறை நடைபெற்று முழுமை அடைகிற நிகழ்வு அல்ல. அது தொடர்நிகழ்வாகும். ஆவிக்குரிய வாழ்க்கையில் நிகழக்கூடிய ஆவியானவரின் பல்வேறு ஊழியங்களைத் திருமறை எடுத்துக்காட்டுகளோடு தவறான பெயர் சூட்டிப் பேசுவது வேதாகமக் கோட்பாட்டு விளக்கங்களில் குழப்பங்களை உண்டுபண்ணிவிடும்.


**அடிக்குறிப்புகள்**

1. திருமறையின் மூலமொழியில் கட்டளைகள் இரண்டு வினைகளில் கூறப்பட்டுள்ளன. ஒன்று அந்தச் செயலை அல்லது நிகழ்வை வலியுறுத்துகிறது. இங்கு அது நிகழ்கால வினைச்சொல்லாக இருக்கிறது; அச்செயலை இடைவிடாமல் அல்லது மீண்டும் மீண்டும் செய்ய வேண்டும் என்றே அது கூறுகிறது. “ஆவியில் நிறைந்துகொண்டே இருங்கள்” என்பதே இச்சொல்லின் சரியான மொழி பெயர்ப்பாகும்.

2. “வெறிகொள்ளுதல்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் KJV மொழிபெயர்ப்பில் “உங்களுடைய அளவுக்கு அதிகமான” என்னும் பொருளைத் தரும் சொல் ஆகும். “வெறிகொள்ளுதல்”, மதுபானக் கேட்டால் தொடர்ந்து கட்டுப்பாடின்றி வாழ்கிற வாழ்க்கையைக் குறிக்கிறது.

# 11

# இரட்சிப்பு மற்றும் ஊழியம்



நாம் தேவனுடைய திருமறை வசனங்களைப் படிக்கின்ற வேளைகளில், இரட்சிப்பைக் குறித்து விவரிக்கும் வேத பகுதிகளையும், கிறிஸ்தவ வாழ்க்கையையும் ஊழியத்தையும் குறித்து விவரிக்கும் வேத பகுதிகளையும் பகுத்துக் காண்போமானால் பற்பல தவறுகளிலிருந்தும் குழப்பங்களிலிருந்தும் நம்மைக் காத்துக் கொள்வோம்.

**இரட்சிப்பைக் குறித்த வேத பகுதிகள்**

பொதுவாக, இரட்சிப்பை விவரிக்கும் வேத பகுதிகளைக் கண்டறிவது கடினமல்ல. கீழ்க்காணும் உண்மைகளை அவை இடைவிடாமல் சாட்சியாக அறிவிக்கும்: தேவனுடைய பங்கைப் பொறுத்தவரையில், இரட்சிப்பானது கிருபையால் உண்டாவதாகும். "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" (ரோமர் 3: 24).

கிறிஸ்துவின் பங்கைப் பொறுத்தவரை, அவர் கல்வாரி சிலுவையில் பதிலாள் வேலையின் மூலமாக அது நிறைவேறியிருக்கிறது: *"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்"* (2 கொரி. 5: 21).

மனிதனைப் பொறுத்தவரை இரட்சிப்பு விசுவாசத்தாலேயே உண்டாகிறது. அங்கு நியாயப்பிரமாணக் கிரியைக்கு ஏதொரு பங்குமில்லை: *"இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின் மேல் விசுவாசிகளானோம். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே" (கலா. 2 : 15,16)*

இரட்சிப்பின் உறுதியைப் பொறுத்தவரை, ஒரு விசுவாசி தான் இரட்சிக்கப்பட்டவன் என்னும் உறுதியை தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தாலே அறிந்திருக்கிறான்: *"உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்"* (1யோவான் 5: 13).

இரட்சிப்பின் பாதுகாப்பைப் பொறுத்தவரை, தேவனுடைய பிள்ளை ஒருக்காலும் அழிவடைய மாட்டான், அதாவது, அவன் தன் பாவங்களுக்காக நித்திய ஆக்கினை அடையமாட்டான்: *"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது"* (யோவான் 10:27–29).

**ஊழியத்தைக் குறித்த வேதபகுதிகள்**

இரட்சிப்பைக் குறிப்பிடாமல், கிறிஸ்தவ வாழ்க்கையையும் ஊழியத்தையும் குறிப்பிடும் வேத பகுதிகள் எவையென்று நாம் புரிந்துகொள்ளத் தவறினால், அத்தருணங்களில் பிரச்சினை எழும். எடுத்துக்காட்டாக யோவான் 15:1–11 ஆகிய வசனங்களை எடுத்துக்கொள்வோம்.

*"நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே*

*நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 15:1–11).*

நரகத்திலிருந்து பெறுகிற இரட்சிப்பைக் குறித்து இந்த வேதபகுதி விவரிப்பதில்லை, மாறாக, இது நீடிய பொறுமையைக் கருப்பொருளாகக் கொண்ட பகுதியாகும். அதாவது, கிறிஸ்தவருடைய வாழ்க்கையில் வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய ஆவிக்குரிய கனியாகும் (கலா.5:22–23). ஓர் இரட்சகர் தேவைப்படுகின்ற பாவிகளுக்காக இது எழுதப்படவில்லை. மாறாக, கிறிஸ்துவைப் போலாக வேண்டிய பரிசுத்தவான்களுக்காக எழுதப்பட்டதாகும். இதனை நாம் காணத்தவறினால், கிறிஸ்தவர்களும் கூட நகர ஆக்கினைக்குள்ளாகத் தள்ளப் படுவார்கள் என்னும் முடிவுக்கு வந்துவிடுவீர்கள். இவ்வுலகமானது பின்வாங்கிப்போன விசுவாசியின் பெயரையும் அவனுடைய சாட்சியையும் பயனற்றவை என்று கருதி அக்கினியில் எறிந்துவிடுவதாக 15:6–ஆம் வசனம் உருவக மொழியில் கூறுகிறது என்பதே சரியான விளக்கமாகும். திராட்சை செடியோடு நிலைத்திராத கொடியை (விசுவாசியை) அவிசுவாசிகளாகிய மக்கள் அவமதிப்பதைத் தவிர வேறென்ன செய்வார்கள்.

அவ்வப்போது தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிற வேறொரு பகுதி 1 கொரி. 3:10–15:

*“எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்.”*

இங்கு 11–ஆவது வசனத்தின் பொருள் இரட்சிப்பைப் பற்றியதாகும்; கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே சரியான அடித்தளம் என்று இவ்வசனம் கற்பிக்கிறது. ஆனால் தொடர்ந்து வருகிற வசனங்கள் அதன் மேல் கட்டப்படுகிற கட்டிடத்தைப் பற்றியவை, அதாவது இரட்சிப்பைத் தொடர்ந்து விசுவாசி செய்கிற ஊழியம். விசுவாசி எவரொருவரும் தீயால் சோதிக்கப்படுவதற்கான குறிப்பு எதுவும் இங்கு இல்லை. அவருடைய ஊழியமே சோதிக்கப்படும். விசுவாசி அக்கினியில் சுட்டெரிக்கப்படுவதில்லை, ஆனால் அவருடைய தகுதியற்ற கிரியைகள் சுட்டெரிக்கப்படும். இரட்சிப்பிடமாய் வழிநடத்தும் விசுவாசம் இங்கு வலியுறுத்தப்படவில்லை, மாறாக, பரிசுப் பொருளைப் பெறுவதற்கு அல்லது அதை இழந்து போவதற்கு வழிநடத்தும் கிரியைகளே இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளன.

அல்லது, பவுலின் சொற்களாக விளங்கும் இன்னொரு வேதபகுதியை எடுத்துக்காட்டாகக் கூறுவோம் 1 கொரி. 9:24–27:

*“பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ*

*அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.''*

கடைசி வசனத்தில் பவுல் தான் இறுதியில் ''ஆகாதவனாய்ப்'' போகக்கூடிய ஒரு சூழ்நிலையைக் குறித்துப் பேசுகிறார் (கிரேக்கு aodokimos எழுத்தின்படி ''ஏற்றுக்கொள்ளப்படாத நிலை''). இந்த வேதபகுதியானது இரட்சிப்பைப் பற்றிப் பேசுகிறதில்லை. மாறாக, கிறிஸ்தவ வாழ்க்கையில் காணப்பட வேண்டிய இச்சையடக்கத்தைப் பற்றியே பேசுகிறது. இரட்சிப்பைப் பொறுத்தவரையில் பவுல் நிராகரிக்கப்படுவார் என்பதற்கு இங்கு ஏதொரு வாய்ப்பும் இல்லை. ஏனென்றால் அவர் கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். ஆனால் அவர் இச்சையடக்கத்தோடு வாழத் தவறினால், அவருடைய ஊழியத்தையும் பரிசுகள் பெறக்கூடிய நிலையையும் இழந்து தகுதியற்றவராகப் போய்விடுவார் என்றே கூறுகிறார் (தூக்கி எறியப்பட்டு விடுவேன் "Castaway" என்று KJV மொழிபெயர்ப்பில் 27–ஆவது வசனத்தில் இச்சொல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது சரியான மொழிபெயர்ப்பல்ல. அதிக துக்கத்தை ஏற்படுத்துகிற என்னும் பொருளையே இச்சொல் தருகிறது.

புதிய ஏற்பாட்டில் முரண்பாடு போலத் தோன்றுகிறவற்றிற்குத் தீர்வு காண்பது இரட்சிப்புக்கும் ஊழியத்துக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் கண்டறிவதாலேயே முடியும். மத்தேயு 12:30–இல், *''என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்''* என்று கர்த்தர் கூறினார்.

ஆனால் மாற்கு 9:40–இல் *''நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்''* என்று அவர் கூறினார்.

இந்த வசனங்களை முதல் முறை படிக்கின்றபோது இவை ஒன்றுக்கொன்று முற்றிலும் எதிர்மாறானவைபோலத் தோன்றுகின்றன. ஆனால், மத்தேயு 12:30 இரட்சிப்பைக் குறித்த வசனம் என்றும், மாற்கு 9:40 ஊழியத்தைக் குறித்த வசனம் என்றும் நாம் காண்கிறபோது பிரச்சினை மறைந்துபோகிறது. முதல் வசனம் கர்த்தராகிய இயேசு பரிசேயர்களோடு உரையாடிய நிகழ்ச்சி; அவர்கள் கிறிஸ்துவை தேவகுமாரன் என்று ஏற்றுக்கொள்ளவில்லை; மேலும் அவர் பிசாசின் வல்லமையால் அற்புதங்களைச் செய்கிறார் என்றும்

குற்றஞ்சாட்டினார்கள். கிறிஸ்துவின் ஆள்தன்மையை பொறுத்தவரை, அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவருடைய எதிரிகளாவார்கள்.

இரண்டாவது நிகழ்ச்சி, கிறிஸ்துவின் பெயரில் ஊழியம் செய்த மனிதனைப் பற்றியது. அவன் கர்த்தருடைய திருப்பெயரில் ஊழியம் செய்தபோதிலும் சீடர்களைப் பின் தொடர்ந்து செல்லவில்லை. சீடர்கள் அவனைத் தடை செய்தபோது, *“அவனைத் தடுக்க வேண்டாம். . . நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்”* என்று கர்த்தர் கூறினார்.

இரட்சிப்பைக் குறித்து விவரிக்கும் வேத பகுதிகளுக்கும், கிறிஸ்தவ வாழ்க்கை மற்றும் ஊழியம் ஆகியவை குறித்து விவரிக்கும் வேத பகுதிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் பகுத்துக் காண்பதற்கு இந்த எடுத்துக்காட்டுகள் உதவி புரிகின்றன. நீங்கள் வேதத்தைக் கற்கின்ற வேளைகளில், நீங்கள் வாசிக்கிற திருமறைப் பகுதி என்ன பொருளைக் குறித்தது என்று அறியுங்கள்:


தேவன் நமக்காகச் செய்த செயல் – இரட்சிப்பு

தேவன் நம்மில் செய்கிற செயல் – பரிசுத்தமாக்குதல்

தேவன் நம் மூலமாகச் செய்கிற செயல் – ஊழியம்

# 12

# தனிநபர் மேன்மை மற்றும் தகுநிலை மேன்மை



திருமறையில் சில பகுதிகளில் எழுத்தாளர் ஒரு தனிமனிதனின் பண்புகளைக் குறித்துப் பேசுகிறரா அல்லது அவன் தன் வாழ்க்கையில் வகிக்கும் பதவியைக் குறித்துப் பேசுகிறாரா என்பதை அறிந்துக் கொள்வது அவசியம். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதர் வேறொருவரைக் காட்டிலும் சிறந்தவராக விளங்கக் கூடும். அதற்குக் காரணம் அவருடைய உள்ளார்ந்த இயல்பின் சிறப்பே ஆகும். மற்றொரு புறம், ஒருவர் மிக உயர்ந்த பதவியை வகிப்பவர் என்பதே அந்தச் சிறந்த மேன்மையின் அர்த்தமாக இருக்கக் கூடும்.

**யோவான் ஸ்நானன்**

*“ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை . . . . என்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்”* என்று இயேசு கூறினார் **(மத்.11:11).** நோவா, தானியேல் அல்லது யோபு ஆகியோரைக் காட்டிலும் யோவான் ஸ்நானன் சிறந்த குணநலன்களைக் கொண்டவர் என்பது இதன் பொருளன்று. அவர் கிருபையிலும் தேவ பக்தியிலும், சாந்த குணத்திலும், அன்புகூருவதிலும் மற்றவர்களைக் காட்டிலும் அதிக மேன்மையானவர் என்பதும் இதன் பொருளன்று. மேசியாவின் முன்னோடி என்னும் அவருடைய பதவி அவருக்கு முன்னிருந்தவர்களைக் காட்டிலும் மேலான தகுதியைக் கொடுத்தது என்பதே இதன் பொருள். கர்த்தருடைய

வழியை ஆயத்தப்படுத்துதல், அவருடைய வருகையை அறிவித்தல், அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தல் போன்ற நற்பேறு வேறு ஒருவருக்கும் கிடைக்கவில்லை. இவ்வகையில், யோவான் ஸ்நானன் தனித்துவம் வாய்ந்தவர்.

**பரலோக ராஜ்யத்தில் சிறியவன்**

யோவான் ஸ்நானனின் தகுநிலை மேன்மையைக் குறித்துப் பேசியதைத் தொடர்ந்து *". . . ஆகிலும், பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்"* என்று இயேசு கூறினார் (மத்.11:11). பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருப்பவன் யோவான் ஸ்நானனைக் காட்டிலும் சிறந்த பண்புகள் கொண்டவன் என்றோ ஒழுக்கம் நிறைந்த சிறப்பான வாழ்க்கை முறையைப் பெற்றிருந்தான் என்றோ இதற்குப் பொருள் கூறக்கூடாது. யோவான் ஸ்நானன் இராஜ்யத்தைக் குறித்து அறிவித்தார், இன்றைய நாட்களில் விசுவாசிகள் அந்த ராஜ்யத்தின் குடிமக்களாக விளங்குகிறார்கள்.[1] யோவான் தன்னை "மணவாளனுடைய தோழன்" என்று விவரித்தார் (யோவான் 3:29). ஆனால் இக்காலத்தில் வாழுகின்ற தேவனுடைய மக்கள் மணவாட்டி ஆவார்கள். மணவாளனின் தோழனைக் காட்டிலும் மணவாட்டி மேலான தகுதியைப் பெற்றிருக்கிறாள். இந்நிலையில் இக்கால விசுவாசிகள் மேலானவர்கள் ஆவார்கள்.

**மரியாள்**

*"கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்"* என்று காபிரியேல் என்னும் தேவ தூதன் மரியாளிடம் கூறினான். மரியாள் தேவபக்தி நிறைந்த இளம் பெண். கற்புள்ளவள், குற்றமற்வள் என்பதில் எவ்விதக் கேள்வியும் இல்லை. ஆனால் நம்முடைய கர்த்தருடைய மனித நிலையில் அவருடைய தாயாக விளங்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டவள் என்பதில் அவளுடைய மெய்யான மேன்மை சிறந்து விளங்குகிறது. அவள் தேவனைத் தன்னுடைய "இரட்சகர்" என்று அழைத்தன் மூலம், தான் ஒரு பாவி என்பதை ஒப்புக்கொண்டாள் (லூக்கா 1:47). ரூத், அன்னாள் ஆகியோரைக் காட்டிலும் மரியாளின் குணநலன்கள் சிறந்ததாயிருந்திருக்க வேண்டும் என்பதற்கான அவசியம் இல்லை. ஆனால் அவள் பெற்ற பதவி இணையற்றது.

ஒருநாள் இயேசுவைக் கண்டு வியப்பு மேலிட ஒரு பெண்மணி, *"உம்மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவை"* என்று கூறினாள் (லூக்கா 11:27). இயேசுவோ, *"அப்படியானாலும், தேவனுடைய*

*வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்"* என்று பதிலுரைத்தார் (வச.28). கிறிஸ்துவின் தாயாக இருப்பதைக் காட்டிலும் கீழ்ப்படிதலோடு அவரைப் பின்பற்றுகிறவர் மேலானவர் என்பதே இதன் பொருள். மரியாள் கிறிஸ்துவைப் பெற்றெடுத்ததைக் காட்டிலும் அவரிடத்தில் விசுவாசம் வைத்ததே அவளை மேலான பாக்கியமுள்ளவள் என்னும் நிலைக்கு உயர்த்தியது.

**என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்**

குணப்பண்புகளுக்கும் தகுநிலைக்கும் இடையிலான வேறுபாட்டைப் பகுத்து அறிவதற்கு மிக முக்கியமான வேத பகுதியாக யோவான் 14:28 விளங்குகிறது. *"நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே, நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்."* கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுத்துரைக்கும் கள்ளப் போதகக் குழுவினரும் மற்றவர்களும் இவ்வசனத்தின் கடைசிச் சொற்களாகிய, "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்னும் சொற்றொடரைத் திருகியால் பிடுங்கியெடுத்து, குமாரன் பிதாவினிடத்தில் கொண்டிருக்கிற சமநிலையையும் திரியேக தேவ நிலையையும் மறுத்துரைப்பதற்குப் பயன் படுத்துகிறார்கள்.

அப்படியானால், இந்த வசனத்தின் பொருள் என்ன? கர்த்தர் இந்தச் சொற்களைப் பேசியபோது, அவர் இந்த பூமியில் இருந்தார். அவருடைய படைப்புகளாகிய மனிதர்கள் அவருக்கு எதிரான நிந்தைகளாலும், ஏளனப் பேச்சுகளாலும் தங்கள் பகையை வெளிப்படுத்தினார்கள். மறுபுறம், பிதா பரலோகத்தில் இருந்தார். குமாரனைப் போல அவர் சற்றேனும் இழிவாக நடத்தப்படவில்லை. அந்தப் பொருளில், பிதா குமாரனிலும் பெரியவராயிருந்தார். அவர் தமது ஆள்தன்மையில் அல்ல, தகுநிலையில் பெரியவராக இருந்தார். இயேசு பரலோகத்திற்குத் திரும்பிச் செல்லவிருந்ததைக் குறித்துத் தமது சீடர்களுக்கு அறிவித்தபோது, அவர்கள் அவர் மேல் உண்மையாக அன்புகூருகிறவர்களாயிருந்தால், இப்படிப்பட்ட அவமானங்களுக்கும் இழிவான நடத்துதலுக்கும் இனிமேல் அவர் ஆளாக மாட்டார் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். பரலோகத்தில் அவருடைய தகுநிலை பிதாவுக்குச் சமமான நிலையாக விளங்கும், அதாவது, அவருடைய படைப்புகளால் ஏற்படும் இன்னல்கள் அவரை அணுகா.

இங்கு கூறப்பட்டுள்ள விவரங்களில் தனிப்பட்ட பண்புகளைப் பற்றிய ஏதொரு குறிப்பும் இல்லை. குணப்பண்புகளைப் பொறுத்தவரை, தேவ குமாரன் தம்முடைய பிதாவோடு எல்லா அம்சங்களிலும் சமமானவர். ஆனால் குமாரன் பூமியில் இருந்தவரை, பாவிகளால் அவருக்கு எதிராக ஏற்பட்ட விபரீதங்களின் காரணமாக, பிதா அவரிலும் அவருடைய ஸ்தானத்தில் அதாவது அவருடைய தகுநிலையில் பெரியவராயிருந்தார்.

**(இவர்களைக் காட்டிலும்) இயேசு பெரியவர்**

கர்த்தராகிய இயேசு தேவாலயத்திலும் பெரியவர் (மத்.12:6), யோனாவிலும் பெரியவர் (வச.41), சாலொமோனிலும் பெரியவர் (மத்.12:42) என்று அவர் தம்மைக் குறித்துப் பேசியதை மத்தேயு தனது நற்செய்தி நூலில் பதிவு செய்கிறார்[2] இப்பகுதியில் தகுநிலை அல்லது பதவி என்னும் கேள்விக்கு மேலான பொருளே பேசப்படுகிறது. தேவாலயத்தைக் கட்டமைத்தவரும் அதன் சடங்குகளை நிறுவியவரும் கர்த்தராகிய இயேசுவே ஆவார். அவர் தம் ஆள் தன்மையிலும், அவர் அறிவித்த செய்தியிலும், அதன் விளைவிலும் யோனாவைக் காட்டிலும் பெரியவர். மகிமையிலும் ஞானத்திலும் அவர் சாலொமோனிலும் பெரியவர்; அரசனாகிய சாலொமோனின் மனதில் ஞானத்தை வைத்தவர் அவரே.

**பின்னணியைச் சரிபார்க்கவும்**

ஒருவருடைய தனிமனிதப் பண்புகளா அல்லது தகுநிலை மேன்மைகளா என்பதை அந்த வேத பகுதியின் பின்னணி விளக்கும் என்பது பொதுவான உண்மை. கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய எந்தவொரு குறிப்பிலும், அவருடைய தனிப்பட்ட மேன்மைக்கு எதிராகக் கேள்வி எழுப்ப இயலாது! அவர் எப்பொழுதும், ‘‘பெரியவர்கள் எல்லோரிலும் பெரியவர், மிகச் சிறந்தவரிலும் சிறந்தவர்’’ ஆவார்.


**அடிக்குறிப்புகள்:**

1. ‘‘திருச்சபை மற்றும் இராஜ்யம்’’ என்னும் தலைப்பிலுள்ள அதிகாரத்தைக் காணுங்கள்.

2. ‘‘ஏதோ ஒன்று . . . காட்டிலும் பெரியது (பெரியவர்)’’ என்னும் சொற்றொடர் இராஜ்யத்தையே பெரும்பாலும் குறிக்கக்கூடும். எனினும் கிறிஸ்து அரசராக அவர்களுடைய முன்னிலையில் இருந்ததால், ‘‘ஒருவர் . . . காட்டிலும் பெரியவர்’’ என்று மொழி பெயர்ப்பது சரியானதே.

# 13

# அடிப்படைச் சத்தியங்கள், முக்கியமானவை மற்றும் முக்கியமற்றவை



புதிய ஏற்பாட்டைக் கற்கின்றபோது, அடிப்படைச் சத்தியங்கள், அடிப் படைச் சத்தியங்கள் அல்லவெனினும் முக்கியமானவை மற்றும் முக்கியமற்றவை ஆகியவற்றைப் பகுத்தறிவது இன்றியமையாததாகும். திருமறையின் ஒவ்வொரு சொல்லும் உயிரூட்டம் பெற்றதாக இருந்தபோதிலும், அதன் எல்லாப் பகுதிகளுக்கும் சமமான இன்றியமையாமை அல்லது முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

கர்த்தராகிய இயேசு பரிசேயரோடு பேசிக்கொண்டிருக்கையில், *". . . நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும், சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்"* என்றார் (மத்.23:23). நியாயப்பிரமாணத்தின் ஒரு சில கட்டளைகள் மற்ற கட்டளைகளைக் காட்டிலும் விசேஷித்தவை என்று அவர் ஒப்புக்கொண்டார் என்றும் கூறலாம். என்றாலும் விசேஷித்தவை அல்லாத மற்ற கட்டளைகளும் கீழ்ப்படிய வேண்டியவையே என்று அவர் நினைவூட்டினார்.

கிறிஸ்தவ விசுவாசத்திலும் இது உண்மையாயிருக்கிறது. சில கோட்பாடுகள் முற்றிலும் அடிப்படையானவை. வேறுசில முக்கியமானவை; அவற்றில் சில கர்த்தருடைய கட்டளைகள் என்று குறிப்பிடப்பட்டவை (1 கொரி.14:37). வேறு

சில பகுதிகள் விசுவாசி தனது சொந்த அறிவால் நிதானிக்க வேண்டியவை என்று விடப்பட்டுள்ளன.

**அடிப்படைக் கோட்பாடுகள் எவை?**

அடிப்படைக் கோட்பாடுகள் என்று நாம் கூறுகின்றபோது நாம் கீழ்க்காண் பனவற்றையே குறிப்பிடுகின்றோம்:

- திருமறை வசனங்கள் பரிசுத்த ஆவியின் உயிரூட்டம் பெற்றவை. திருமறை தேவனுடைய வார்த்தை.

- திரியேக தேவன். ஒரே தேவன், நித்திய காலமாய் மூன்று நபர்களில் வாழ்கிறார்.

- கிறிஸ்துவின் தேவத்துவம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவன் ஆவார்.

- கிறிஸ்து மனுவுரு எடுத்து உலகிற்கு வந்தார். இயேசு முழு நிறைவான மனிதரும் ஆவார்.

- கல்வாரி சிலுவையில் இயேசு பதிலாளாக மரணமடைந்த நிகழ்ச்சி.

- அவருடைய அடக்கம், உயிர்த்தெழுதல், மற்றும் அவர் பரலோகத்திற்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்ட நிகழ்வு.

- நற்செய்தி. தேவ கிருபையால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு உண்டாகிறது. அது கிரியையின்றி நடைபெறுகிறது.

- கிறிஸ்துவின் இரண்டாம் வருகை. கிறிஸ்து மீண்டும் வரவிருக்கிறார். அவருடைய வருகையைக் குறித்த விவரங்கள் எல்லாவற்றையும் எல்லோரும் ஒப்புக்கொள்கிறதில்லை. ஆனால் அவர் மீண்டும் வருவார் என்னும் உண்மை விசுவாசத்தின் அடிப்படைச் சத்தியமாகும்.

- இழந்து போனவர்கள் நித்திய தண்டனை அடைவார்கள்.

இந்தக் கோட்பாடுகள் மாறுதலுக்கு உட்பட்டவையல்ல. வாஞ்சையோடு இவற்றிற்காக நாம் வழக்காட வேண்டியவர்களாயிருக்கிறோம். அவை திரு மறையில் மிகத் தெளிவாகக் கற்பிக்கப்பட்டுள்ளன. நற்செய்தி அறிவிக்கும் சபைகளில் காலங்காலமாக இவ்வுண்மைகள் நிலைநாட்டப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு எதிரான கருத்துகள் சத்தியத்திற்கு எதிரானவை என்றே பெயர்

பெற்றுள்ளன. விலை மதிப்புள்ள இந்த உண்மைகளுக்காக விசுவாசிகள் தங்கள் உயிரையும் கொடுக்க ஆயத்தமாய் இருந்துள்ளார்கள். இவற்றில் ஏதொரு சமரசத்திற்கும் வாய்ப்பில்லை. இந்த அடிப்படைக் கோட்பாடுகளில் மாறுபட்ட கருத்துடையவர்களோடு நாம் ஐக்கியம் கொண்டிருக்க முடியாது.

நன்னெறி சார்ந்த தேவ பிரமாணங்களைப் பொறுத்தவரை மேற்கூறிய ஆலோசனைகள் பொருத்தமுடையவை என்பது உண்மையே. விபசாரத்தில் ஈடுபடுவது எப்பொழுதும் தவறான செயலே ஆகும். பொய் கூறுவதும், திருடுவதும் எப்பொழுதும் பாவச் செயல்களே ஆகும். எந்தவொரு வகையிலும் உருவ வழிபாட்டில் ஈடுபடுவது திருமறை எழுத்துகளில் தடை செய்யப் பட்டுள்ளது. இவற்றிலும், இவை போன்ற வேறு பல விசயங்களிலும் கண்டிப்பைத் தளர்த்துவதற்குச் சற்றும் இடமில்லை. இந்தப் பொல்லாங்குகளுக்கு எதிராகத் தெளிவான முறையில் நாம் தேவனோடு அணி சேர வேண்டும்.

### அடிப்படைச் சத்தியங்கள் அல்லவெனினும் முக்கியமானவை

முக்கியமானவை என்று கருதப்படுகிற விசயங்கள் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவை. இவற்றைக் குறித்துத் திருமறை அதிகாரத்துடன் கற்பிப்பதே இதற்கான காரணம். எனினும் இவை விசுவாசத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் என்று ஒருபோதும் கருதப்படவில்லை. இந்தத் தலைப்பில் இடம் பெறும் சில பொருட்கள் கீழே தரப்பட்டுள்ளன:

ஞானஸ்நானம்
திருமண முறிவு மற்றும் மறுமணம்
எதிர்கலால நிகழ்வுகள் குறித்த வடிவமைப்பு
தெரிந்தெடுத்தல் மற்றும் மனிதனின் பொறுப்பு
விசுவாசியின் இரட்சிப்பின் உறுதி
சபையில் பெண்களுக்கான பங்கு
பரிசுத்த ஆவியின் வரங்கள்

மேற்கூறிய பொருட்களில் ஒரே ஒரு விளக்கம் மட்டுமே சரியானதாக இருக்குமெனினும், எல்லா விசுவாசிகளும் ஒரே கருத்துடையவர்களாக இருப்பதில்லை. பக்தி நிறைந்த கிறிஸ்தவர்களும் தலைவர்களும் இந்த வேறுபாடுகளின் காரணமாக, ஒருவரோடொருவர் முகங்கொடுத்துப் பேசுவதில்லை. ஜான் வெஸ்லி, சார்ல்ஸ் ஸ்பர்ஜன் கூறுவதை ஒப்புக்கொள்வதில்லை. இந்த விசயங்களில் ஒவ்வொருவரும் தேவ வசனங்களின் அடிப்படையில் முற்றிலுமாகவும் உறுதியாகவும் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டியது அவசியம்.

**முக்கியமற்றவை அல்லது அறிவாற்றல் முரண்பாடுகள் பற்றிய விசயங்கள்**

முக்கியமற்றவை என்று திருமறை கருதும் சில விசயங்கள் இந்த மூன்றாவது வகுப்பைச் சார்ந்தவையாகும். இவை அறிவாற்றல் முரண்பாடுகள் பற்றிய விசயங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஒருவருடைய நடத்தை மற்வர்களை இடறல் அடையச் செய்யாதிருக்கும் வரை இவ்வித வெவ்வேறு கருத்துகளை விசுவாசிகள் கொண்டிருப்பதற்கு தேவன் அனுமதிக்கிறார் (ரோமர் 14:13). மேலும் இவை சபையின் அமைதியான சூழ்நிலையைக் குலைக்கக்கூடாது (ரோமர் 14:19). மேலும் ஒருவர் தனது சொந்த மனச்சாட்சிக்கு எதிராகத் தானே மீறக்கூடாது (ரோமர் 14:23).

**சிலைகளுக்கு படைக்கப்பட்ட உணவுப்பொருட்கள்**

சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவுப்பொருட்களைப் பொறுத்தவரை முதன்மையான வேதபகுதிகள் 1 கொரி. 8:1–13 மற்றும் 1 கொரிந்தியர் 10:14–30 ஆகியவையேயாகும். சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்ணுவது குறித்துத் திருமறை கற்பிக்கும் பாடத்தின் சுருக்கமாவது: அவ்வாறு படைக்கப்பட்ட உணவுகளைக் கொண்டு விருந்து கொண்டாடும்போது விசுவாசிகள் அதில் கலந்துகொள்ளக்கூடாது. அதை உண்கிறவர் மனதில் ஏதொரு குற்ற உணர்ச்சியும் ஏற்படக்கூடாது. பிறர் இடறுதலுக்கு அது இடங்கொடுக்கக்கூடாது. எனினும், *"எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு"* என்று அவர் கூறுகிறபோது, விதிவிலக்கு இல்லாமல் எல்லாவற்றையும் என்று அவர் கூறவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொருள் பற்றியே அவ்வாறு அவர் கூறுகிறார். அதாவது அறிவாற்றல் முரண்பாடுகள் பற்றியே பேசுகிறார். இதை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றால், பவுல் ஒழுக்கக்கேட்டைப் பொறுத்துக்கொள்கிறதாகத் தவறான விளக்கத்திற்கு ஆளாவோம்.

**நாட்களை அனுசரித்தல்**

நாட்களை அனுசரித்தல், புலால் உண்ணுதல் (மரக்கறி உண்ணுவதற்கு மாற்று), மது அருந்துதல் ஆகியவை குறித்த பொருள் பற்றிய விவரங்கள் ரோமர் 14–ஆம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. பல வழிகாட்டுதல்களைக் கூறும் பவுல் அவற்றில் ஒன்றாக, *"அவனவன் தன் தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன்"* என்கிறார் (ரோமர் 14:5). இதனுடைய பின்னணியிலிருந்து இச்சொற்றொடரைத் தனியே பிரித்து, திருமறை பரிசுத்த ஆவியின் உயிரூட்டத்தால் எழுதப்பட்டது அல்லது கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிப்பு அருளப்படுகிறது என்ற கோட்பாடுகளோடு

பொருத்திக் காண்பீர்களானால், நீங்கள் ஒரு தீவிரமான சிக்கலுக்குள்ளாக அகப்பட்டுக்கொள்வீர்கள். ரோமர் 14–ஆவது அதிகாரம் எது சரி எது தவறு என்று வெளிப்படுத்தப்படாத சில பொருள்கள் பற்றியே பேசுகிறது; அப்படிப்பட்ட விசயங்களுக்கே இங்கு சொல்லப்பட்டிருக்கிற ஆலோசனை பொருந்தும்.

**உணவுகளில் தூய்மையானவை, தூய்மையற்றவை**

மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குள் கிறிஸ்தவ விசுவாசிகளை அடிமைப்படுத்த முயற்சி செய்யும் கள்ளப்போதகர்களைக் குறித்துப் பவுல், தீத்து 1–ஆம் அதிகாரத்தில் தனது கவனத்தை அதிகமாகச் செலுத்துகிறார். *"சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்"* என்று அப்போஸ்தலன் 15–ஆவது வசனத்தில் கூறுகிறார்.

*"சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்"* என்று பவுல் கூறுகிறபோது, அவர் ஓர் உலகளாவிய உண்மையைக் கூறவில்லை என்பது இப்பொழுது நமக்குத் தெளிவாகப் புரிகிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்தில் சுத்தமற்றவை என்று குறிப்பிடப்பட்டுள்ள விசயங்களைப் பற்றியே பவுல் இங்கு பேசுகிறார். கிருபையின் காலக்கட்டத்தில் வாழுகின்ற கிறிஸ்தவர்களுக்கு மனிதன் உட்கொள்ளும்படி தந்தருளின அனைத்து உணவுப் பொருட்களும் தூய்மையானவையே ஆகும். "உண்ணத்தக்கவை," "உண்ணத்தகாதவை" என்னும் வேறுபாடு இப்பொழுது நடைமுறையில் இல்லை.

ரோமர் 14–ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒரு வசனத்தை இவ்வாறுதான் புரிந்துகொள்ள வேண்டும். அங்கு 14–ஆவது வசனம், *"ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்கிறேன் . . . "* என்று கூறுகிறது. சில விசயங்கள் தூய்மையானவை அல்ல என்பதைப் பவுல் அறிந்திருந்தார், நாமும் அறிவோம். ஆனால் அவர் இங்கு பன்றியிறைச்சி, இரால், முயல் போன்றவற்றைப் பற்றியே விவாதிக்கிறார். இவை யாவும் பழைய ஏற்பாட்டுக் காலக்கட்டத்தில் அசுத்தமானவை என்று அறியப்பட்டிருந்தன.

**இன்றைய நாட்களில் முக்கியமற்றவை**

கீழ்க்காணும் பொருட்கள் பற்றிச் சில விசுவாசிகள் குறிப்பிடத்தக்க அளவு முக்கியத்துவம் அளிக்கிறார்கள். இவற்றில் ஏதொன்றைப் பற்றியும் வெளியரங்கமான முக்கியத்துவம் வேதத்தில் கொடுக்கப்படவில்லை.

இப்படிப்பட்ட முக்கியமற்ற விசயங்கள் என்று இன்றைய நாட்களில் பகுத்துக் கூறப்படுபவை எவையெனில்:

கர்த்தருடைய பந்தியில் திராட்சைப் பழத்திலிருந்து செய்யப்பட்ட மது அல்லது புதிய திராட்சைப் பிழிவு எதைப் பயன்படுத்த வேண்டும்.

புளித்த அப்பமா அல்லது புளிப்பில்லாத அப்பமா.
சபை கூடுதலுக்கான நேரங்கள்.
தேவனை நீங்கள் அல்லது நீர் என்று அழைக்கும் முறை.
கிறிஸ்தவ ஊழிய முறைகள்.

இந்தப் பட்டியலில் கடைசியாகக் குறிப்பிடப்பட்டிருப்பது கிறிஸ்தவ ஊழியத்தில் காணப்படும் முறைகள். ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் நாகரீகம் மற்றும் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிற்கு ஊழிய முறைகளில் சிறிது இடங்கொடுக்க வேண்டியது அவசியம். பவுல் தன்னைக் கேட்கிற மக்களோடு தன்னை இணைத்துக் கொண்டதாக 1 கொரிந்தியர் **9:19–23** ஆகிய வசனங்களில் குறிப்பிடுகிறார். ஆயினும் அடிப்படைச் சத்தியங்களில் மற்றும் கிறிஸ்துவின் மேல் கொண்டிருந்த பற்றுறுதியில் அவர் எதையும் விட்டுக் கொடுக்கவில்லை:

*“நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப் பட்டவனைப் போலவுமானேன். நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்குமுன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன். பலவீனரை ஆதாயப் படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன். சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தமே இப்படிச் செய்கிறேன்” **(1 கொரிந்தியர் 9:19–23).***

இங்கு பவுல், *“எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லோருக்கும் எல்லாமுமானேன்,”* என்று கூறுகிறபோது, நற்செய்தியின்

உண்மையில் எதையேனும் விட்டுக் கொடுத்திருப்பார் என்பதற்கு ஏதொரு குறிப்பும் இல்லை. சத்தியத்தை விட்டுக்கொடுக்காமல், சில காரியங்களில் அவர் தனது பிரசங்கத்தை அதிகமான பேர் கேட்க வேண்டும் என்பதற்காக சில நடைமுறைகளில் சமரசம் செய்துகொண்டார், (தீமோத்தேயு விருத்த சேதனம் செய்யப்பட்டது போன்ற செயல்கள், அப். 16:3). நியாயப்பிரமாணமின்றி கிருபையால் இரட்சிப்பு அருளப்படும் என்னும் கோட்பாட்டுக்கு ஆபத்து நேரிட்டபோது (தீத்து விருத்தசேதனம் செய்யப்படாதது குறித்த சர்ச்சை, கலா.2:1–5), பவுல் சிறிதளவும் விட்டுக்கொடுக்கவில்லை.

**முடிவுரை**

நாம் இதுவரை கற்ற பாடங்களைச் சுருங்கக் கூறுவோம்.

அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் மாற்றுவதற்கு இயலாத தேவனுடைய ஒழுக்க நெறிச் சட்டங்கள் ஆகியவை பற்றிய கருத்துகளில் முழு ஒருமைப்பாடும் கீழ்ப்படிதலும் அவசியம்.

அடிப்படைக் கோட்பாடுகள் அல்லாதவை, ஆயினும் திருமறை வசனங்களில் காணப்படும் முக்கியமான விசயங்களில் ஒவ்வொரு விசுவாசியும் தேவ வசனத்தில் சொல்லப்பட்டதற்கு முடிந்த மட்டும் மிக நெருக்கமான முறையில் தனது தீர்மானத்தையும் நடைமுறை வழக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

முக்கியமற்ற விசயங்களில் மாறுபட்ட கருத்துகளுக்குச் சற்று சாய்ந்து கொடுக்க வேண்டும். ஒருமைப்பாட்டையும் சமாதானத்தையும் வேண்டி விசுவாசிகள் ஒருவருக்காக ஒருவர் விட்டுக் கொடுக்க வேண்டும் (எபே. 4:1–6). எனினும் இந்த விசயத்திலும் கூட எல்லாவிதப் பொல்லாங்குக்கும் கிறிஸ்தவன் விலகித் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும். மற்ற விசுவாசிக்கு இடறலாகச் செயல்படக்கூடாது அல்லது தனது சொந்த மனச்சாட்சிக்கு எதிராக நடந்துகொள்ளக்கூடாது.

அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் முக்கியமான விசயங்களில் நாம் ஈடுபடுகிறபோது, சில அடிப்படை விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். மாறாக, அறிவாற்றல் சம்பந்தப்பட்ட விசயங்களில் ஏற்படுகிற முரண்பாடுகளில் ஈடுபடுகிறபோது, முற்றிலும் வேறுபட்ட விதிகளைக் கைக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் தேவ நிலையைக் குறித்துப் பேசுகிறபோது பவுல், *“அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாய் இருக்கக்கடவன்”* என்று கூறி மாறுபட்ட கருத்து எதற்கும்


இடங்கொடுக்க மாட்டார் (ரோமர் 14:5). அதுபோலவே ஒழுக்கக்கேட்டைக் குறித்துப் பேசிறபோது, *"ஒருபொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்கிறேன்"* (ரோமர் 14:14) என்று கூறமாட்டார், எந்தத் தவறையும் சரியென்று ஒப்புக்கொள்ளமாட்டார். ஆகவே, அவர் அடிப்படைக் கோட்பாடுகளைக் குறித்துப் பேசுகிறாரா, முக்கியமான உண்மைகள் அல்லது மேலோட்டமானவை குறித்துப் பேசுகிறாரா என்பதை அறிந்திருப்பது அவசியம்.

# பகுதி மூன்று

# தேவனுடைய செயல் முறைகளிலுள்ள வேறுபாடுகள்

# 14

# காலப்பாகுபாடுகள்



“காலங்களை வேறுபடுத்திக் காணுங்கள், அப்பொழுது திருமறை வசனங்கள் ஒத்திசைவுடன் விளங்கும்” என்று ஒருமுறை அகஸ்டின் கூறினார். தேவன் தாமே மனுக்குலத்தின் வரலாற்றை வெவ்வேறு காலங்களாகப் பகுத்தார். *“இவரைக் கொண்டு உலகங்களையும் (காலங்களையும்) உண்டாக்கினார்”* **(எபி. 1:2)**. காலங்கள் சில நீண்டிருக்கும், சில குறுகியதாக இருக்கும். அவற்றின் கால அளவைப் பொருத்து அவை பிரிக்கப்படுவதில்லை, மாறாக, தேவன் எவ்வாறு மனுக்குலத்தோடு ஈடுபடுகிறாரோ அதைப் பொருத்தே அவை பிரிக்கப்பட்டுள்ளன.

### காலப்பாகுபாடுகள் என்பதன் பொருள் வரையறை

தேவன் தம்மில் ஒருக்காலும் மாற்றம் அடைவதில்லை, ஆனால் அவருடைய செயல்முறைகள் மாற்றம் அடைகின்றன. தேவன் மனிதனிடத்தில் ஈடுபடுகிறபோது அவர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட செயல்முறையைக் கைக்கொள்கிறார். இவ்வாறு வெவ்வேறு செயல்முறைகளின் அடிப்படையில் காலப்பாகுபாடு அல்லது காலக்கட்டம் பகுக்கப்படுகிறது. காலப்பாகுபாடு என்று நாம் கூறுகிறபோது, அது ஒரு காலத்தைக் குறிக்கிறது என்னும் பொருளில் கூறாமல், அது ஒரு நிருவாகம் அல்லது செயல்முறை ஒழுங்கு அல்லது ஆட்சிமுறை என்னும் பொருளிலேயே பேசுகிறோம். ஆனாலும், ஒரு

குறிப்பிட்ட காலத்தைக் குறித்துச் சிந்திக்காமல், காலப்பாகுபாட்டைக் குறித்துச் சிந்திப்பது இயலாத செயல். எடுத்துக்காட்டாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கத்தின் வரலாறு வெவ்வேறு நிருவாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நாம் அதை ரூஸ்வெல்ட் நிருவாகம், ஐசன்ஹோவர் நிருவாகம் அல்லது ரீகன் நிருவாகம் என்று கூறுகிறோம். அந்தக் குடியரசுத் தலைவர்கள் ஆட்சி செய்த காலங்களில் அரசாங்கம் எவ்விதமாகச் செயல்பட்டது என்பதைக் குறிக்கும்படி அவ்வாறு கூறுகிறோம். என்னென்ன கொள்கைகள் பின்பற்றப்பட்டன என்பதே முக்கியமான குறிப்பாகும். ஆனால் அவரவர் ஆட்சி செய்த காலத்தில்தான் அந்தக் கொள்கைகள் பின்பற்றப்பட்டன என்பதை நாம் தொடர்புபடுத்துகிறோம்.

**காலப்பாகுபாடுகள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறப்படுகின்றன**

வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தேவன் மக்களோடு செயல்படுகிற விதத்தை நாம் காலப்பாகுபாடு என்று எண்ணுவதை நாம் இந்த அதிகாரத்தில் விளக்கிக் கூறுவோம். தேவனுடைய காலப்பாகுபாட்டுச் செயல்முறையை ஒரு வீட்டின் நிருவாகத்திற்கு ஒப்பிடலாம். ஒரு வீட்டில் கணவனும் மனைவியும் மட்டும் இருக்கிறபோது ஒரு குறிப்பிட்ட திட்டத்தின்படி அவ்வீடு நிருவகிக்கப்படும். ஆனால் அங்கு நிறைய இளம் பிள்ளைகள் இருப்பார்கள் எனில், முற்றிலும் புதிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படும். பிள்ளை வளர்ச்சி அடைந்த பிறகு அவ்வீட்டின் செயல்பாடு வேறுவிதமாக மாற்றம் பெருகிறது. மனுக்குலத்தோடு தேவன் ஈடுபடுகிறபோது இவ்விதமான மாதிரியே அங்கும் பின்பற்றப்படும் (கலா. 4:1–5).

எடுத்துக்காட்டாக, காயீன் தன் சகோதரனாகிய ஆபேலைக் கொன்றபோது, தேவன் ஓர் அடையாளத்தைப் போட்டார். அவனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்று போடாதபடி அந்த அடையாளம் போடப்பட்டது (ஆதி. 4:15). பெருவெள்ளம் நிகழ்ந்ததற்குப் பிறகு, தேவன் மரண தண்டனையை நிறுவினார். *"மனிதனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனிதனாலே சிந்தப்படும்"* என்று அவர் ஆணையிட்டார் (ஆதி.9:6), ஏன் இந்த வேறுபாடு? காலப்பாகுபாட்டின் மாற்றமே இதற்குக் காரணம்.

வேறொரு எடுத்துக்காட்டு. சங்கீதம் 137:8,9– ஆகிய வசனங்களில் ஆசிரியன் பாபிலோன் மேல் கடுமையான நியாயத்தீர்ப்புச் செலுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறான்: *"பாபிலோன் குமாரத்தியே, பாழாய்ப் போகிறவளே, நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப் பதில்செய்கிறவன் பாக்கியவான். உன் குழந்தைகளைப் பிடித்து, கல்லின் மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான்."*

ஆனால் நம்முடைய கர்த்தர் தம் மக்களுக்குப் பின்னர் கற்பிக்கிறார்: *"உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்"* (மத். 5:44).

நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் வாழ்ந்த சங்கீத ஆசிரியனுக்குத் தகுதியாக இருந்த சொற்கள், கிருபைக்குக் கீழ் வாழும் கிறிஸ்தவனுக்குப் பொருத்தமாக இல்லை என்பது வெளிப்படை.

நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் வாழ்ந்த இஸ்ரவேலர் தங்களுடைய புறவின மனைவிகளையும் பிள்ளைகளையும் புறந்தள்ளும்படி கற்பிக்கப்பட்டார்கள் (எஸ்றா 10:3). கிருபைக்குக் கீழ் அவிசுவாசியான கணவனையோ மனைவியையோ தள்ளிவிடக்கூடாது என்று விசுவாசிகள் கற்பிக்கப்பட்டுள்ளார்கள் (1 கொரி. 7:12–16).

**காலப்பாகுபாட்டு முறை மெய்ப்பிக்கப்படுகிறது**

எத்தனை காலக்கட்டங்கள் உள்ளன என்பது பற்றி எல்லாக் கிறிஸ்தவர் களிடமும் ஒருமித்த கருத்து இல்லை. அவற்றிற்கு என்ன பெயர் கொடுக்க வேண்டும் என்பதிலும் கருத்து வேறுபாடு உள்ளது. உண்மையில் சில கிறிஸ்தவர்கள் காலப்பாகுபாட்டு முறையை ஒப்புக்கொள்கிறதில்லை.

ஆனால், காலப்பாகுபாட்டு முறை உள்ளது என்பதை நாம் கீழ்க்கண்டவாறு மெய்பிப்போம். முதலாவது இருவகைக் காலக்கட்டங்கள் உள்ளன. நியாயப்பிரமாணம் மற்றும் கிருபை: *"எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின"* (யோவான் 1:17). நமது திருமறை பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருப்பதே நிருவாகத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கிறது. தற்காலத்தில் வாழும் விசுவாசிகள் விலங்குகளை பலியாகச் செலுத்த வேண்டியதில்லை என்பதிலிருந்து இது மேலும் மெய்ப்பிக்கப்படுகிறது. ஒரு புதிய ஒழுங்கை தேவன் அறிமுகப்படுத்தியிருக்கிறார் என்பதை இது காட்டுகிறது.

இரண்டு காலக்கட்டங்கள் உள்ளன என்று நாம் ஒப்புக்கொள்வோமானால் மூன்று காலக் கட்டங்கள் உள்ளன என்று நம்பும்படி கட்டாயப்படுத்தப்படுவோம்; ஏனெனில் யாத்திராகமம் 19 வரையிலும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படவில்லை. அதற்குள் பல நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. ஆகவே நியாயப்பிரமாணத்திற்கு

முன் ஒரு காலக்கட்டமாவது இருந்திருக்க வேண்டும் (ரோமர் 5:14–ஐக் காண்க). மூன்று காலக்கட்டங்கள் என்று இது கூறுகிறது.

மேலும் நாம் நான்காவது காலக்கட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனெனில் திருமறை *"இனிவரும் உலகம் (காலம்)"* என்று கூறுகிறது (எபி. 6:5). இந்த நேரத்தில் தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் ஆட்சி புரிவதற்கென்று வருவார். இது ஆயிரமாண்டு ஆட்சிக் காலம் என்றும் பெயர் பெற்றுள்ளது.

அப்போஸ்தலனாகிய பவுல் தற்போதையே காலம் என்றும் இனிவரும் காலம் என்றும் பிரித்துப் பேசுகிறார். முதலாவது அவர் தனக்கு ஒப்புவிக்கப்பட்ட காலக்கட்டத்தை, நற்செய்திச் சத்தியத்தையும் திருச்சபையையும் தொடர்புபடுத்திப் பேசுகிறார் (1 கொரி. 9:17; எபே. 3:12; கொலோ.1:25). இதுவே தற்போதைய காலம். ஆனால் அவர் இனிவரும் காலத்தையும் சுட்டிக் காட்டுகிறார். அதனை, *"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமம்"* என்று குறிப்பிடுகிறார் (எபே. 1:9). இந்த விவரத்திலிருந்து அந்தக் காலம் இன்னும் வரவில்லை என்பது தெளிவாகிறது.

ஆகவே நாம் உலக வரலாற்றின் கடைசிக் காலத்தில் வாழவில்லை என்பதை அறிகிறோம்.

**காலப்பாகுபாடுகள் எவையென்று குறிப்பிடப்படுகின்றன**

முனைவர் C.I. ஸ்கோஃபீல்டு ஏழு காலப்பாகுபாடுகளைக் கீழ்க்காணும் வண்ணம் பட்டியலிடுகிறார். இவர் ஸ்கோஃபீல்டு ஒப்புநோக்குத் திருமறையின் ஆசிரியர் ஆவார்:

1. அறியாமையின் காலம் (ஆதி.1:28). ஆதாம் படைக்கப்பட்டது முதல் அவனது வீழ்ச்சி வரை.

2. மனச்சாட்சி அல்லது அறிவாற்றல் சார்ந்த பொறுப்பு (ஆதி. 3:7,22). வீழ்ச்சியிலிருந்து பெருவெள்ளம் வரை.

3. மனிதனின் அரசாங்கம் (ஆதி.9:5,6). பெருவெள்ளம் முடிவடைந்தது முதல் ஆபிரகாம் அழைக்கப்பட்டது வரை.

4. வாக்குத்தத்த காலம் (ஆதி.12:1–3). ஆபிரகாம் அழைக்கப்பட்டது முதல் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட நாள் வரை.

**5.** நியாயப்பிரமாணக் காலம் (யாத்.19,20). நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது முதல் பெந்தெகொஸ்தே நாள் வரை.

**6.** திருச்சபைக் காலம் (அப். 2). பெந்தெகொஸ்தே நாள் முதல் சபை எடுத்துக்கொள்ளப்படுவது வரை.

**7.** இராஜ்யத்தின் காலம் (வெளி. 20:4). கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சி.

இந்தக் காலப்பாகுபாடுகள் கொண்ட வரைபடத்தை *"நித்தியம் தொடங்கி நித்தியத்தின் காலம் முழுவதும் தொடருகிறது"* என்று பெயர் சொல்லி அழைக்கிற A.E. பூத் மனித வரலாற்றின் ஏழு காலக் கட்டங்களைப் படைப்பின் முதல் ஏழு நாட்கள் நிழலாக உள்ளன என்கிறார்.

முதல் நாள் – படைப்பின் ஒளியிலும் வாக்குத்தத்தத்திலும் காணப்படும் வெளிச்சத்தில் மனிதன் இளைப்பாறினான்.

இரண்டாம் நாள் – அரசாங்கம் (பெருவெள்ளம் முதல் இனங்கள் பிரிக்கப்படும் வரை)

மூன்றாம் நாள் – இஸ்ரவேல் (ஆபிரகாம் தொடங்கி நற்செய்தி நூல்கள் வரை).

நான்காம் நாள் – கிருபையின் காலம் (இடைப்பிறவரல் காலம்).

ஐந்தாம் நாள் – உபத்திரவ காலம்.

ஆறாம் நாள் – ஆயிரமாண்டு ஆட்சி.

ஏழாம் நாள் – நித்திய காலம்.

### காலப்பாகுபாட்டு முறையின் முக்கியத்துவம்

காலக்கட்டங்களின் துல்லியமான காலப்பகுப்புகளை நாம் ஒப்புக்கொள்வது முக்கியமற்றதாயினும் வெவ்வேறு காலப்பாடுகள் உள்ளன என்பதை அறிவது மிகவும் இன்றியமையாததாகும் (நியாயப்பிரமாணம் மற்றும் கிருபை ஆகியவற்றின் வேறுபாடு மிகவும் முக்கியமானது). இல்லையெனில், மற்ற காலங்களுக்கென்று கொடுக்கப்பட்ட திருமறைப் பகுதிகளை நமக்குரியதாக்கிக் குழப்பமடைவோம். வேத வாக்கியங்களெல்லாம் பயனுள்ளவை (2 தீமோ. 3:16,17) என்றாலும், எல்லாம் நமக்கு நேரடியாக எழுதப்படவில்லை. மற்ற காலங்களைக் குறித்துப் பேசும் பகுதிகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை உள்ளன. ஆனால் எந்தக் காலத்திற்கென்று அவை எழுதப்பட்டனவோ அவற்றிற்கே முதன்மையான பொருளில் அவை பொருத்தமுடையவை. எடுத்துக்காட்டாக, நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த யூதர்கள் எந்தவொரு

தூய்மையற்ற விலங்கின் இறைச்சியையும் உண்ணக்கூடாது. அதாவது, விரிகுளம்பு இல்லாததும் அசைபோடாததுமான விலங்கின் இறைச்சியை உண்ணக்கூடாது (லேவி. 11:3). இந்தத் தடை இன்று வாழும் கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்துவதில்லை (மாற்கு 7:18,19). எனினும் அதன் அடிப்படைக் கொள்கையில் மாற்றமில்லை. நன்னெறி சார்ந்த மற்றும் ஆவிக்குரிய தீட்டு களிலிருந்து நாம் நம்மை விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டும்.

இஸ்ரவேலர் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவார்களானால், அவர் களை அவர் பொருட்செல்வம் மிகுந்தவர்களாக்குவதாக வாக்குரைத்தார் (உபா.28:1–6). அக்காலத்தில் உலகத்தில் அனுபவிக்கத்தக்க பொருட் செல்வம் முக்கியப்படுத்தப்பட்டது. ஆனால் இன்று அது உண்மையல்ல. பொருளாதார வளத்தைக் கீழ்ப்படிதலுக்கானப் பரிசாக தேவன் நமக்கு வாக்களிக்கவில்லை. இதற்கு மாறாக, தற்போதைய காலக்கட்டத்தில் உன்னதங்களிலுள்ள ஆவிக் குரிய ஆசீர்வாதங்களையே வாக்களித்திருக்கிறார்.

**எல்லாக் காலக்கட்டங்களுக்கும் ஒரே நற்செய்தி**

பல்வேறு காலக்கட்டங்களுக்கிடையே பல வேறுபாடுகள் இருந்தபோதிலும் ஒன்று மட்டும் ஒருபோதும் மாறுவதில்லை, அதுவே நற்செய்தி. கர்த்தரிடத்தில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக இரட்சிப்பு கிடைக்கிறது என்னும் உண்மை முந்தின எல்லாக் காலத்திலும் இருந்து வந்திருக்கிறது. இப்பொழுதும் அதுவே உண்மையாயிருக்கிறது, இனி எக்காலத்திலும் அது உண்மையாயிருக்கும். கல்வாரி சிலுவையில் கிறிஸ்து செய்து முடித்த கிரியையே எல்லாக் காலத்திலும் இரட்சிப்புக்கான அடிப்படைக் காரணமாக விளங்குகிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கர்த்தர் மக்களுக்கு அளித்த வெளிப்பாட்டை விசுவாசித்ததாலே இரட்சிக்கப்பட்டார்கள். எடுத்துக்காட்டாக, ஆதித் தகப்பனுடைய சந்ததி எண்ணக்கூடாத அளவு நட்சத்திரங்களைப் போலப் பெருகும் என்று தேவன் கூறியபோது அதை அவன் விசுவாசித்ததால் இரட்சிக்கப்பட்டான் (ஆதி. 15:5,6). பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு கல்வாரியில் என்ன நிகழும் என்று என்பதை ஆபிரகாம் அறிந்திருக்கமாட்டான் என்றே நாம் தீர்மானிக்கிறோம். ஆனால் தேவன் அறிந்திருந்தார். ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தபோது, கிறிஸ்து கல்வாரியில் எதிர்காலத்தில் செய்யவிருந்த கிரியையின் மதிப்பு முழுவதையும் ஆபிரகாமின் கணக்கில் வரவு வைத்தார்.

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் யாவரும் “கடன் கணக்கில்” இரட்சிக்கப்பட்டார்கள் என்று யாரோ ஒருவர் கூறினார். பல ஆண்டுகளுக்குப்

பிறகு கர்த்தராகிய இயேசு செலுத்தவிருந்த விலையின் அடிப்படையில் அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்றும் இதனைச் சொல்லலாம் (ரோமர் 3:25–ஆம் வசனத்தின் பொருள் இதுவே). ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசு நிறைவேற்றி முடித்த செயலின் அடிப்படையிலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம். ஆனால் இரண்டு காலங்களிலும் கர்த்தரிடத்தில் வைக்கும் விசுவாசத்தினாலேயே இரட்சிப்பு உண்டாகிறது.

நியாயப்பிரமாணக் காலத்து மனிதர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு அல்லது மிருகங்களைப் பலியிட்டு இரட்சிக்கப்பட்டதாக நாம் முடிவு செய்யாதபடி நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். நியாயப்பிரமாணம் குற்றஞ்சாட்டுதலையே செய்கிறது; அது இரட்சிப்பதில்லை (ரோமர் 3:20). காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தம் ஏதொரு பாவத்தையும் நிவிர்த்தி செய்வதில்லை (எபி. 10:4). இரட்சிப்புக்கான தேவனுடைய வழி விசுவாசம், விசுவாசம் மட்டுமே. அதைத் தவிர வேறொன்றும் இல்லை (ரோமர் 5:1– ஐக் காண்க).

இன்னுமொரு முக்கியமான குறிப்பை நாம் நினைவிற்கொள்வது நல்லது. தற்காலத்தை நாம் கிருபையின் காலம் என்று குறிப்பிடுகையில் முந்தின காலக்கட்டங்களில் தேவன் கிருபையாயிருக்கவில்லை என்னும் பொருளில் பேசுவதில்லை. தேவன் மனிதனைத் தற்காலத்தில் கிருபைக்குக் கீழாகவே பரீட்சிக்கிறார் என்று மட்டுமே கூறுகிறோம், நியாயப் பிரமாணத்துக்குக் கீழாக அவர் பரீட்சிக்கிறதில்லை. இந்த வேறுபாட்டை நாம் பின்வரும் ஓர் அதிகாரத்தில் முழுவதுமாக விளக்கிக் கூறுவோம்.


காலக்கட்டங்கள் ஒரு கணப்பொழுதில் துல்லியமாக முடிவுக்கு வருவதில்லை என்பதை நாம் அறிவது முக்கியமாகும். காலங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றை நோக்கிச் செல்கிறபோது ஒன்றோடொன்று மேற்கவிந்து சிறிது காலம் செயல்படக்கூடும் அல்லது முழு மாற்றம் அடைவதற்குச் சிறிது காலம் தேவைப்படும். இதனை நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, முந்தைய காலக்கட்டத்தின் சில பொறிகளில் சிக்கிக்கொள்ளாமல் புதிய சபை அவற்றை தூக்கி எறிவதற்கு சில ஆண்டுகள் தேவைப்பட்டன. மேலும், சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சிக்கும் உபத்திரவ காலத்திற்கும் இடையே ஒரு குறிப்பிட்ட கால அளவு இடைவெளி காணப்படும். அக்காலத்தில் பாவமனிதன் வெளிப்படுதல், எருசலேமில் ஆலயம் கட்டி எழுப்பப்படுதல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும்.

**காலப்பாகுபாட்டு முறையைத் தவறாகப் பயன்படுத்துதல்**

ஓர் இறுதி வார்த்தை. நல்ல செயல்களைத் தவறாகப் பயன்படுத்துவது போலவே, காலப்பாகுபாட்டு முறையும் தவறாகப் பயன்படுத்தப்படக்கூடும். பவுல் சிறையிலிருந்தபோது எழுதிய மடல்கள் மட்டுமே சபையின் காலத்திற்குப் பொருந்துபவை என்று ஒப்புகொள்ளும் அளவுக்குச் சில கிறிஸ்தவர்கள் காலப்பாகுபாட்டு முறையின் ஓர் எல்லையின் விளிம்பு வரை சென்று விடுகிறார்கள்! அதன் காரணமாக அவர்கள் ஞானஸ்நானத்தையும் கர்த்தருடைய பந்தியையும் ஏற்றுக்கொள்வதில்லை. ஏனென்றால் அவற்றைப் பற்றிய எந்தக் குறிப்பும் சிறை மடல்களில் இடம் பெறவில்லை என்பதே அவர்களுடைய வாதம். மேலும் அவர்கள் பேதுருவின் நற்செய்தியும் பவுலின் நற்செய்தியும் ஒன்றல்ல என்கிறார்கள் (இது தவறு என்பதை கலா.1:8,9 வசனங்கள் மறுத்துரைப்பதைக் காணுங்கள்). இவர்கள் சில வேளைகளில் தீவிர காலப்பாகுபாட்டாளர்கள் என்றோ புல்லிங்கர் பின்பற்றாளர்கள் என்றோ அழைக்கப்படுகிறார்கள் (E.W.புல்லிங்கர் என்னும் வேத ஆசிரியரைப் பின்பற்றுபவர்கள்). இவ்விதத் தீவிர காலப்பாகுபாட்டு முறைகளை நிராகரிக்க வேண்டும்.

# 15

# திருமறையில் காணப்படும் முக்கிய உடன்படிக்கைகள்



மனித வரலாற்றில் வெவ்வேறு கால இடைவெளிகளில் தேவன் மனுக்குலத்தோடு ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகள் செய்து கொண்டார். நியாயப்பிரமாணத்தைப் போல, அவற்றில் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டவை. மனிதர்கள் அவ்வித உடன்படிக்கைகளில் தங்களது பங்கைக் கைக்கொள்வார்கள் எனில் தேவன் தமது பங்கை நிறைவேற்றுபவராக இருந்தார். நிபந்தனைக்கு உட்பட்ட உடன்படிக்கைகள் "மாம்சத்தினாலே பல வீனமாயிருந்தன." நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் பெரும்பாலும் மனிதன் தோற்றுப் போனான்.

தெய்வீக உடன்படிக்கைகளில் பெரும்பாலானவை நிபந்தனையற்றவையாகவே இருந்தன. இதனை நற்பேறு என்றே சொல்ல வேண்டும். அவற்றில் ஒவ்வொரு அம்சமும் தேவனையே சார்ந்திருந்தது. அவை யாவும் அந்த உடன்படிக்கைகள் நிறைவேறும் என்பதற்கான உத்திரவாதங்கள் ஆகும்.

உடன்படிக்கைகளில் பெரும்பாலானவை ஆபிரகாமுடன் அல்லது அவனுடைய குடிவழியில் பிறந்தவர்களோடு செய்யப்பட்டவை. அவற்றில் சிலவற்றோடு திருச்சபை தொடர்புகொண்டிருந்த போதிலும், திருச்சபையோடு ஏதொரு உடன்படிக்கையும் செய்யப்படவில்லை. அவற்றை நாம் காணப்போகிறோம்.

**ஏதேன் உடன்படிக்கை (ஆதி.1:28–30; 2:16,17)**

மனிதன் அறியாமையில் இருந்த காலத்தில் செய்யப்பட்ட உடன்படிக்கை, அவன் பலுகிப் பெருகி பூமியை நிரப்ப வேண்டும், அதைக் கீழ்ப்படுத்த வேண்டும் என்னும் பொறுப்புகளைத் தந்தது. எல்லா மிருகங்களின் மேலும் அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவன் தோட்டத்தில் பயிரிட வேண்டும். அதன் விளைபொருட்களில், நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைத் தவிர மற்ற யாவற்றையும் உண்ணலாம். கடைசியாகச் சொல்லப்பட்டுள்ள கட்டளைக்குக் கீழ்ப்படியாவிடில் மரணமே தண்டனையாகக் கொடுக்கப்படும். எனவே இது நிபந்தனைக்கு உட்பட்ட உடன்படிக்கை.

**ஆதாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை (ஆதி.3:14–19)**

மனிதன் வீழ்ச்சியடைந்த பிறகு, தேவன் சர்ப்பத்தைச் சபித்தார். மேலும் சர்ப்பத்திற்கும் பெண்ணிற்கும் இடையே மற்றும் சாத்தானுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே பகை உண்டாகும் என்று முன்னுரைத்தார். சாத்தான் கிறிஸ்துவைத் காயப்படுத்துவான், கிறிஸ்துவோ அவனை அழிப்பார். பிள்ளை பெற்றெடுக்கும் போது பெண் வேதனைப்படுவாள். மேலும் அவள் தன் கணவனின் அதிகாரத் துக்குட்பட்டிருப்பாள். பூமி சபிக்கப்பட்டது. மனிதன் பூமியில் பயிரிடுகையில் அது முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும். இதன் காரணமாக அவன் வியர்வை சிந்தி களைப்படைவான். அவனுடைய சரீரம் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டது போல முடிவில் மண்ணுக்கே போகும்.

**நோவாவுடன் தேவன் செய்த உடன்படிக்கை (ஆதி.8:20–9:27)**

தாம் இனிமேல் பூமியைச் சபிப்பதில்லை, அதைப் பெருவெள்ளத்தால் அழிப்பதில்லை என்று தேவன் நோவாவிடம் வாக்குரைத்தார். அதற்கு அடையாளமாக வானவில்லைக் கொடுத்தார். கொலை செய்தவர்கள் மரண தண்டனை அடையவேண்டும் என்று அந்த உடன்படிக்கையில் ஆணை பிறப் பிக்கப்பட்டது. அதாவது வழக்குகள் விசாரிக்கப்படுவதற்கென்று அரசாங்கம் செயல்பட வேண்டும், தண்டனைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பன அதில் குறிப்பாய்த் தெளிவாகின்றன. ஆகவே உண்மையான பொருளில், நோவாவுடன் தேவன் செய்த உடன்படிக்கையின்படி மனித அரசாங்கம் நிறுவப்பட்டது. முறைப்படியான காலங்களையும் நேரங்களையும் தேவன் வாக்குரைத்தார். மனிதர்கள் பூமியில் பலுகிப் பெருக வேண்டும், பிற உயிரினங்களைக் கட்டுப்படுத்தி ஆள வேண்டும் என்று அவர் மனிதனுக்கு அதிகாரமளித்தார். மரக்கறி மட்டுமே உண்டு வந்த மனிதனுக்கு இறைச்சியை

ஆகாரமாகக் கொடுத்தார். நோவாவின் சந்ததியைப் பொறுத்தவரை காமின் மகனாகிய கானானைச் சபித்தார்.[1] அவனை சேம் யாப்பேத்து ஆகியோருக்கு அடிமையாக்கினார். அவர் சேமுக்குச் சிறப்பான ஓரிடத்தைக் கொடுத்தார்; அவனுடைய வழியில் மேசியா தோன்றும்படி செய்தது அந்த நற்பேற்றில் ஒன்று என்பதை நாம் அறிவோம். யாப்பேத்து பெருமளவில் விருத்தியடைந்து சேமின் கூடாரங்களில் குடியிருப்பான் என்று வாக்களிக்கப்பட்டான். தேவன் நோவாவுடன் செய்த உடன்படிக்கை நிபந்தனை அற்றது. அதை தேவன் திரும்பப் பெறவில்லை. அது "நித்திய தலைமுறைக்கும்" செய்யப்பட்ட உடன் படிக்கையாகும் (ஆதி.9:12).

**ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கை (ஆதி.12:1–3; 13:14–17; 15:1–5; 17:1–8).**

தேவன் ஆபிராமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் அளித்த கீழ்க்காணும் வாக்குறுதிகள் இந்த உடன்படிக்கையில் இடம் பெற்றுள்ளன. ஆபிராம் பின்னர் ஆபிரகாம் என்னும் பெயர் பெற்றான். மிகப்பெரிய இனம் (இஸ்ரவேல்); ஆபிரகாமுக்குத் தனிப்பட்ட ஆசீர்வாதம்; புகழ்ச்சிக்குரிய பெயர்; பிறருடைய ஆசீர்வாதத்திற்கான ஆதாரம் (12:2). அவனுடைய நண்பர்களுக்குத் தெய்வீக நற்பேறு, அவனுடைய எதிரிகள் மேல் சாபம்; எல்லா இனங்களுக்கும் ஆசீர்வாதம் (இது கிறிஸ்துவின் மூலம் நிறைவேறியது 12:3). கானான் என்று முதலில் அழைக்கப்பட்ட தேசம் பின்னர் இஸ்ரவேல் என்றும் பாலஸ்தீனம் என்றும் பெயர் பெற்றது. அந்நாடு அவர்களுக்கு என்றென்றுக்குமான உரிமையாக அளிக்கப்பட்டது (15:18). எண்ணிலடங்கா சந்ததிகள், அது சரீரப் பிரகாரமானதும் ஆவிக்குரியதும் ஆகும் (13:16; 15:5). பல தேசங்களுக்கும் ராஜாக்களுக்கும் அவன் தகப்பனாக விளங்குவான் (இஸ்மவேல் மற்றும் ஈசாக்கு ஆகியோரின் மூலமாக இது நிறைவேறியது. 17:4–6). தனிப்பட்ட வகையில் தேவனோடு ஓர் உறவு (17:7).

**தேவன் மோசேயுடன் செய்த உடன்படிக்கை என்றும் அழைக்கப்படும் நியாயப்பிரமாணம் (யாத்.19:5; 20–31).**

இதனுடைய மிகப்பரந்த பொருளில் மோசேயின் நியாயப்பிரமாணம்: இதில் ஒருவன் தேவனுக்கும் தன் அயலானுக்கும் செய்ய வேண்டிய கடமைகள் அடங்கிய பத்துக்கட்டளைகள் (யாத்.20); இஸ்ரவேலின் சமுதாய வாழ்க்கைக்கான விதிமுறைகள் (யாத்.21:1–24:11); சமய வாழ்க்கைக்கான விரிவான சட்டங்கள் (யாத்.24:12–31:18) யாவும் அடங்கும். இது இஸ்ரவேல் இனத்தாருக்கு

வழங்கப்பட்டதாகும்; புறவினத்தாருக்கு இது கொடுக்கப்படவில்லை; மேலும் இது இரத்தத்தால் உறுதி பண்ணப்பட்டது (யாத்.24:8; எபி.9:19,20). இது மனிதனுடைய கீழ்ப்படிதலைக் கோரியது. எனவே இது நிபந்தனைக்கு உட்பட்டது. ஆகவே இது ''மாம்சத்தினால் பலவீனமாயிருந்தது'' (ரோமர் 8:3). இரட்சிப்பு தருவதற்கென்று பத்துக்கட்டளைகள் கொடுக்கப்படவில்லை, மாறாக பாவத்தையும் தோல்வியையும் குறித்து குற்றந்தீர்க்கும்படியே இது கொடுக்கப்பட்டது (ரோமர் 3:20). பத்துக் கட்டளைகளில் (ஓய்வு நாள் நீங்கலாக) ஒன்பது புதிய ஏற்பாட்டில் மறுபடியும் சொல்லப்பட்டுள்ளன. தண்டனையோடு கூடிய நியாயப்பிரமாணமாக அவை கொடுக்கப்படவில்லை, கிருபையால் இரட்சிக்கப்பட்டவர்களுடைய நடத்தைக்கு ஏற்றவிதமான குணப்பண்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவன் நியாயப்பிரமாணத்திற்கு அல்ல, கிருபைக்கே கீழ்ப்பட்டிருக்கிறான்; ஆனால் அவன் கிறிஸ்துவுக்கென்று கட்டப்பட்டிருக்கிறான் (1 கொரி. 9:21). இது மிகப்பெரிய கட்டுப்பாடு ஆகும். ஆபிரகாமோடு செய்யப்பட்ட உடன்படிக்கையை நியாயப்பிரமாணம் செல்லுபடியற்றதாக மாற்றவில்லை (கலா.3:17,18).

**பாலஸ்தீன உடன்படிக்கை (உபா.28:1; 29:1–30:20)**

இந்த உடன்படிக்கை விதை வடிவில் ஆதியாகமம் 15:18–இல் இடம் பெற்றுள்ளது. தேவன் ஆபிரகாமிடம் *''தேசமானது எகிப்தின் நீர் ஊற்றிலிருந்து (இது நைல் நதி அல்ல) ஐபிராத்து நதி போலப் பெருகும்''* என்று வாக்குரைத்தார். இஸ்ரவேல் இனத்தாரின் கீழ்ப்படியாமையாலும், உண்மையற்ற தன்மையாலும் அவர்கள் பல தேசங்களுக்கிடையே சிதறடிக்கப்படுவார்கள் என்பதையும், கர்த்தருடைய இரண்டாம் வருகையில் தங்களுடைய மனவருத்தம் மற்றும் மனந்திரும்புதல் ஆகியவற்றால் அவர்கள் அவருடன் ஒன்று சேர்க்கப்படுவார்கள் என்பதையும் இவ்வுடன்படிக்கை முன்னறிந்திருந்தது. மேலும் அவ்வாறு நிகழும்போது அவர்களுடைய எதிரிகள் தண்டிக்கப்படுவார்கள் என்றும், இஸ்ரவேலரோ மேசியாவின் ஆட்சியின் கீழ் பாதுகாப்புடன் தங்களுடைய தேசத்தில் குடியிருப்பார்கள் என்றும் அவ்வுடன்படிக்கை கூறுகிறது.

இஸ்ரவேல் இதுவரை அந்த நாட்டை முழுமையாகக் கைப்பற்றவில்லை. சாலொமோன் அரசனின் ஆட்சியின் கீழ், கிழக்கில் இருந்த நாடுகள் அவனுக்குக் கப்பம் செலுத்தினார்கள் (1 இராஜா. 4:21,24). ஆனால் முழு தேசத்தையும் அவர்கள் தங்களுடைய உடைமையாக ஆக்கிக் கொண்டார்கள் என்றோ, அந்த இடங்களிலெல்லாம் அவர்கள் குடியிருந்தார்கள் என்றோ

அதனைக் கணக்கிட முடியாது. பாலஸ்தீன உடன்படிக்கை எதிர்காலத்தில் நிகழப்போகிற ஒன்றாகவே இன்னும் இருக்கிறது.

**தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கை (2 சாமு.7:1–17)**

தாவீதினுடைய அரசு என்றென்றும் நிலைத்திருக்கும் என்று வாக்குறுதி கொடுத்த தேவன், அவனுடைய வழியில் தோன்றியவர்கள் அவனுடைய சிங்காசனத்தில் அமர்ந்திருப்பார்கள் என்றும் வாக்குத்தத்தம் பண்ணினார் (2 சாமு. 7:12–16). இந்த உடன்படிக்கை தாவீதின் கீழ்ப்படிதலையோ நீதியையோ எவ்விதத்திலும் சார்ந்திருக்கவில்லை. இது முற்றிலும் நிபந்தனையற்றது. மத்தேயு முதல் அதிகாரத்தில் காண்கிறபடி சாலொமோனின் குடிவழியின் மூலம் கிறிஸ்து அந்தச் சிங்காசனத்துக்குச் சட்டப்படி உரிமையாளர் ஆவார். யோசேப்பு இயேசுவைத் தம் மகனாக ஏற்றுக்கொண்டார். லூக்கா 3–ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளபடி நாத்தானின் மூலமாகக் கிறிஸ்து தாவீதின் குடிவழியில் தோன்றியவர் ஆவார். இது கிறிஸ்து சரீரப் பிரகாரமாகப் பெற்ற உரிமை. அவர் என்றென்றும் உயிரோடிருக்கிறவர் ஆகையால் வேறு எவரும் அந்தச் சிங்காசனத்திற்கு உரிமை கோர முடியாது. அவருடைய அரசு என்றென்றும் நிலைத்திருக்கும். அவருடைய ஆயிரமாண்டு ஆட்சி நித்திய அரசுடன் இணையும்.

**சாலொமோனுடன் தேவன் செய்த உடன்படிக்கை (2 சாமு. 7:12–15; 1 இராஜா. 9; 2 நாளா.7).**

நித்திய அரசைப் பொறுத்தவரையில் தேவன் சாலொமோனுடன் செய்த உடன்படிக்கை நிபந்தனையற்றது, ஆனால் அவனுடைய குடிவழியில் வந்தவர்கள் சிங்காசனத்தில் அமர்வது நிபந்தனைக்கு உட்பட்டது (1 இராஜா. 9:4,5; 2 நாளா. 7:17,18). சாலொமோனின் வழிவந்தவர்களில் கோனியா என்பவனின் (இவன் எக்கோனியா என்றும் யோயாக்கீன் என்றும் அழைக்கப்பட்டான்) வழியில் பிறந்தவன் எவனும் தாவீதின் சிங்காசனத்தில் அமர்வதற்கான உரிமை அவனிடத்திலிருந்து நீக்கப்பட்டு விட்டது (எரே.22:30). இயேசு சாலொமோனின் வழியில் தோன்றவில்லை. இதனை முந்தின பகுதியில் விவரித்தோம். இல்லையெனில், அவர் கோனியாவின் சாபத்துக்குட்பட்டிருப்பார்.

**புதிய உடன்படிக்கை (எரே.7.31:31–34; எபி.8:7–12; லூக்கா 22:20)**

புதிய உடன்படிக்கையானது இஸ்ரவேலின் குடும்பத்தாரோடும் யூதாவின் குடும்பத்தாரோடும் செய்யப்பட்டது என்பது மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது

(எரே.31:31). மேலும் அது பழைய உடன்படிக்கையை அதாவது மோசேயுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையைச் செல்லாமற் போகும்படி செய்துவிட்டது. புதிய உடன்படிக்கை விசேஷித்த ஆசாரிய முறையையும், விசேஷித்த பிரதான ஆசாரியரையும், விசேஷித்த பலியையும், விசேஷித்த பலிபீடத்தையும் கொண்டிருப்பதோடு விசேஷித்த வாக்குத்தத்தங்களைச் சார்ந்திருக்கிறது (எபி. 7–9; 13:10). எரேமியா எழுதியபோது, இது எதிர்காலத்துக்கு உரியதாயிருந்தது (எரே.31:31). இது நிபந்தனை இல்லாத உடன்படிக்கை. நிபந்தனையோடு கூடிய மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் போன்றதல்ல; இஸ்ரவேல் அந்த உடன்படிக்கையை மீறியது (எரே.31:32). இந்த உடன்படிக்கையில் நிபந்தனையற்ற வாக்குறுதிகளை தேவன் கொடுத்துள்ளார் (மீண்டும் மீண்டும் நான் செய்வேன் என்று அவர் கூறுகிறார்). அவையாவன: எதிர்காலத்தில் இஸ்ரவேல் மறுபடியும் பிறத்தல் (எசே. 36:27); தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கான இருதயம் (எரே.31:33); இஸ்ரவேலில் நியாயப்பிரமாணத்தைக் குறித்த உலகளாவிய அறிவு (எரே.31:34); பாவமன்னிப்பும், பாவங்கள் மறக்கப்படுதலும் (எரே.31:34) மற்றும் இஸ்ரவேல் தேசம் என்றென்றும் நிலைத்திருப்பது (எரே.31:35–37).

புதிய உடன்படிக்கையின் நன்மைகளை இஸ்ரவேல் ஓர் இனமாக இன்னும் பெறவில்லை. ஆனால் கர்த்தருடைய இரண்டாம் வெளிப்பாட்டில் அவர்கள் அந்த நன்மைகளைப் பெறுவார்கள். அதற்கிடையே, அந்த உடன்படிக்கையின் சில ஆசீர்வாதங்களை மெய்யான விசுவாசிகள் பகிர்ந்துகொள்கிறார்கள். பாவங்கள் மன்னிக்கப்படுதலையும் அவை மறக்கப்படுதலையும் அவர்கள் அனுபவிக்கிறார்கள் (எபி.10:16,17). மேலும் நியாயப்பிரமாணத்தின் நீதியான கோரிக்கைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதைச் சாத்தியமாக்கியிருக்கிறது (ரோமர் 8:4). புதிய உடன் படிக்கையோடு திருச்சபையானது தொடர்புகொண்டிருக்கிறது என்னும் உண்மை. கர்த்தருடைய பந்தியில் காணப்படுகிறது. அதில் நாம் பங்கு பெறுகிற பாத்திரம் உடன்படிக்கையையும் அந்த உடன்படிக்கையை உறுதிப்படுத்தும் இரத்தத்தையும் பிரதிபலிக்கிறது (லூக்கா 22:20; 1 கொரி. 11:25).[2] மேலும் பவுல் தன்னைக் குறித்தும் மற்ற அப்போஸ்தலரைக் குறித்தும் "புது உடன்படிக்கையின் ஊழியக்காரர்" என்று குறிப்பிட்டார் (2 கொரி. 3:6). தேவனுடைய கிருபையின் நற்செய்தி என்பதே இதன் பொருள்.


**அடிக்குறிப்புகள்:**

**1.** பொதுவாக ஒரு மனிதன் மீது இடப்பட்ட சாபம் அவனுடைய தகப்பனை நோக்கித் திரும்பும். தனது மகனை வளர்க்கும் பொறுப்பு தகப்பனையே சாரும் என்பதை இது காட்டுகிறது. ‘‘எந்தவித தீர்ப்பையும் நோவா தன் மகனாகிய காம் மேல் கூறமுடியவில்லை. அவனே உண்மையில் குற்றம் செய்தவன். காமின் நடத்தைக்குப் பொறுப்பு அவனுடைய தகப்பனாகிய நோவாவே ஆவான் என்று சமுதாயம் தீர்க்கும் என்பதால், அவனால் தன்மீது தீர்ப்புச் செலுத்த முடியவில்லை’’ என்று ஆர்தர் கஸ்டன்ஸ் எழுதுகிறார் (Noah’s Three sons, பக்கம் 195). ‘‘காம் தன்னுடைய தகப்பனைக் கனம்பண்ணத் தவறியதே அவனுடைய பாவம் . . . அவன் விதைத்ததை அவனே அறுவடை செய்தான். இதுவே அவன் செய்த செயலின் விளைவு . . . மகன் என்னும் நிலையில் காம் பாவம் செய்தான், அவனுடைய மகனில் தண்டனை பெற்றான்’’ என்று A.W. பிங்க் குறிப்பிடுகிறார் (Gleanings in Genesis, பக்கம் 124).

**2.** ‘‘புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரைத் திருச்சபை தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கிறது. அந்த உடன்படிக்கையின் முதன்மையான குடிமக்களாக இருப்பதைக் காட்டிலும் இது மேன்மையானது’’ என்று J.N. டார்பி குறிப்பிட்டு இருக்கிறார்.

# 16

# இஸ்ரவேல், புறவினத்தார் மற்றும் திருச்சபை



புதிய ஏற்பாடு மனுக்குலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கிறது: இஸ்ரவேல், புறவினத்தார் மற்றும் திருச்சபை. எடுத்துக்காட்டாக, *"நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்"* என்று 1 கொரிந்தியர் 10:33 – ஆம் வசனத்தில் பவுல் கூறுகிறார். இங்கு கிரேக்கர் என்னும் சொல் புறவினத்தார் என்னும் சொல்லுக்கு இணையானது.

அப்போஸ்தலர் 15:14–17 ஆகிய வசனங்களில் மனித இனத்தின் மூன்று பிரிவுகளும் மறுபடியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**திருச்சபை**

*"...தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தை..."* (வச. 14)

**இஸ்ரவேல்**

*"நான் இதற்குப் பின்பு திரும்பி வந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன்"* (வச. 17).

**புறவினமக்கள்**

*"எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு"* (வச. 16).

அப்போஸ்தலனாகிய பவுலும் இதனை வேறுபடுத்திக் காட்டுகிறார்:

. யூதர்கள் – மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதன முடையவர்கள் (எபே. 2:11).

. புறவினத்தார் – விருத்தசேதனமில்லாதவர்கள் (எபே. 2:11).

. திருச்சபை – கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள் (கொலோ. 2:11).

பொதுவாகக் கூறுவோமானால், வேத மாணாக்கர் புறவினத்தாரை இஸ்ரவேலோடு அல்லது திருச்சபையோடு இணைத்து ஒன்றென நினைத்துக் குழப்பமடைவதில்லை; அவர்களுக்கு அது பிரச்சினையே அல்ல. ஆகவே, நாம் இஸ்ரவேலுக்கும் திருச்சபைக்கும் உள்ள வேறுபாட்டை மட்டும் கற்றுக்கொள்ள முற்படுவோம். இது மிகவும் முக்கியமானது. இவ்விரண்டு வகுப்பாரும் வெவ்வேறானவர்கள், தனித்துவமானவர்கள் என்பதை நாம் காணத் தவறினால், திருமறையை விளக்கிக் கூறுவதில் சிக்கல்களைச் சந்திப்போம். குறிப்பாகத் திருச்சபைச் சத்தியங்களிலும் தீர்க்கதரிசனங்களிலும் அந்தச் சிக்கல்கள் ஏற்படும்.

திருச்சபையானது வெறுமனே இஸ்ரவேலின் விரிவாக்கம் அல்லது அதனுடைய வளர்ச்சி என்று சிலர் கற்பிப்பதே, நாம் இந்தப் பொருள்பற்றி படிப்பதற்கான மிகவும் இன்றியமையாத காரணமாகும். "தேவன் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து தமது சபையைக் கொண்டிருக்கிறார். இஸ்ரவேலே பழைய ஏற்பாட்டுத் திருச்சபை, ஆனால் மேசியாவை அந்த மக்கள் நிராகரித்தபோது, தேவன் அவர்களை நிரந்தரமாக நிராகரித்தார். இஸ்ரவேல் ஓர் இனம் என்னும் நிலையில் அவர்களுக்கு எதிர்காலம் இல்லை. புதிய ஏற்பாட்டுத் திருச்சபை, தேவனுடைய இஸ்ரவேலாக இப்பொழுது மாறிவிட்டது. மேலும் இஸ்ரவேல் இனத்தாருக்கு தேவன் கொடுத்த வாக்குறுதிகள் யாவும் இப்பொழுது ஆவிக்குரிய வகையில் திருச்சபைக்காக நிறைவேறி வருகின்றன" என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் திருமறை வசனங்கள் வேறுவிதமாகக் கற்பிப்பதாகவே நாம் நம்புகிறோம் – இஸ்ரவேலும் திருச்சபையும் தொடக்கத்திலும், பண்பிலும், பொறுப்பிலும், சேருமிடத்திலும் வெவ்வேறானவை.

கர்த்தராகிய இயேசுவைத் தங்களுடைய மேசியா என்று இஸ்ரவேல் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்தபோது, சிறிது காலத்திற்கு தேவன் அந்த இனத்தைத் தள்ளிவைத்தார். பின்னர் முற்றிலும் புதிய திருச்சபையை அவர் அறிமுகப்படுத்தினார். இந்தப் புவியில் திருச்சபையைக் குறித்த திட்டம் முடிவடையும்போது, இஸ்ரவேல் இனத்தோடு தமது தொடர்பைப் புதுப்பிப்பார். ஆகவே தேவனுடைய பழங்காலத்து மக்களாகிய இஸ்ரவேலுடன் அவர் கொண்டிருக்கும் உறவில் ஏற்பட்ட தடையில், ஒருவகை இடைப்பிறவரலாகவே திருச்சபை கொண்டுவரப்பட்டது.

திருச்சபைக்கும் இஸ்ரவேலுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைக் கீழ்க் கண்ட முரண்பாடுகளால் தெளிவாகக் கண்டறியலாம்:

| **திருச்சபை** | **இஸ்ரவேல்** |
|---|---|
| 1. *“இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படாத”* இரகசியம் என்று பவுல் திருச்சபையைக் குறித்துப் பேசுகிறார் (எபே. 3:6). இந்த இரகசியம் *“தேவனுக்குள்ளே ஆதி காலங்கள் முதல் மறைந்திருந்தது”* (எபே. 3:11). உலகத் தோற்ற முதல் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரகசியம் தீர்க்கதரிசன வசனங்களின் மூலமாக இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ளது (ரோமர் 16:25,26; மேலும் காண்க. கொலோ. 1:25,26). | 1. இஸ்ரவேல் ஒருபோதும் இரகசியம் என்று சொல்லப்படவில்லை. எதிர் வரிசையில் சொல்லப்பட்டுள்ள எதுவும் இஸ்ரவேக்குப் பொருந்தாது. |

| | |
|---|---|
| **2.** பரிசுத்த ஆவியானவர் தந்தருளப்பட்ட பெந்தெகொஸ்தே நாளில் திருச்சபை தொடங்கியது (அப். 2). கீழ்க்காணும் உண்மைகளால் அதனை உய்த்துணர்கிறோம்:<br><br>அ. கிறிஸ்து புவியில் வாழ்ந்த காலத்தில் திருச்சபை எதிர்காலத்துக்கு உரியதாயிருந்தது. *"நான் ... என் சபையைக் கட்டுவேன்"* (மத். 16:18) என்று எதிர்கால வினைச் சொல்லையே அவர் பயன்படுத்தினார்.<br><br>ஆ. கொரிந்து சபைக்கான முதல் மடலைப் பவுல் எழுதிய போது, ஏற்கனவே சபை தொடங்கிவிட்டது என்னும் உண்மை தெளிவாகிறது. கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக விசுவாசிகள் யாவரும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் என்பதைக் குறித்தும் அவர் பேசுகிறார் (1 கொரி. 12:13).<br><br>இ. வாக்குறுதி செய்யப்பட்டதும், ஆவியினாலே பண்ணப்பட்டதுமான ஞானஸ்நானம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது. எனவே, அதுவே திருச்சபை பிறந்த நாளாகும். | **2.** ஆபிரகாமின் அழைப்போடு இஸ்ரவேல் இனம் தொடக்கம் பெற்றது (ஆதி. 12). |
| **3.** கிறிஸ்து திருச்சபையின் தலையாவார். | **3.** இஸ்ரவேலின் தலைவன் ஆபிரகாம். |
| **4.** ஆவிக்குரிய பிறப்பின் மூலமே திருச்சபையின் அங்கத்தினராக முடியும். | **4.** இஸ்ரவேல் இனத்தில் உறுப்பினராவதற்கு சரீரப்பிறப்பே காரணமாகும். |

| | |
|---|---|
| **5.** தேவனுடைய பரலோக மக்களே திருச்சபை ஆகும். திருச்சபையின் ஆசீர்வாதங்கள் யாவும் பரலோகத் திற்குரியவை.<br><br>கிறிஸ்தவர்களின் குடியிருப்பு பரலோகத்திற்குரியது. | **5.** இஸ்ரவேல் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள். இஸ்ரவேலின் ஆசீர்வாதங்கள் யாவும் பெரும்பாலும் முதன்மையாக பொருட்செல்வங்களாகிய உலகத்திற்குரியவை.<br><br>இஸ்ரவேலின் குடியிருப்பு பூமிக்குரியது.<br><br>இஸ்ரவேல் நாட்டின் மேல் மேசியா ஆட்சி செய்வார் என்பதே அது கொண்டிருந்த நம்பிக்கையாகும் (விசுவாசித்த இஸ்ரவேலர்கள் மரணமடைந்தபோது பரலோகத்திற்குச் சென்றார்கள் என்பதை இங்கு சொல்லப்பட்டுள்ள உண்மை மறுத்துரைப்பதில்லை. அல்லது அவர்கள் பரலோகம் செல்வதற்கான நம்பிக்கை இல்லாதவர்கள் என்றும் நாம் மறுக்கவில்லை. ஆனால் அத்தகைய உண்மை இங்கு வலியுறுத்தப்படவில்லை). |
| **6.** திருச்சபையில்கிறிஸ்துவுக்குள்ளாக விசுவாசிக்கிற யூதரும் விசுவாசிக்கிற புறவினத்தாரும் ஒரே புதிய மனிதனாக மாற்றமடைந்திருக்கிறார்கள். அவர்கள் உடன் பங்காளிகளாக, அதாவது சரீரத்தின் உடன் உறுப்பினர்களாகவும், நற்செய்தியின் மூலமாகக் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வாதத்தின் உடன் பங்காளர்களாகவும் மாறியிருக்கிறார்கள். யூதருக்கும் புறவினத்தாருக்கும் இடையிலான பிரிவினையின் நடுச்சுவர் உடைக்கப்பட்டு விட்டது. அவ்விரு வகுப்பாரும் ஒன்றாக்கப்பட்டுள்ளார்கள் (எபே. 2:13–17; எபே. 3:3). | **6.** எதிர் வரிசையில் சொல்லப்பட்டுள்ள எதுவும் இஸ்ரவேலுக்குப் பொருந்தாது. அதைப் பொறுத்தவரை புறவினத்தார், “*கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாவார்கள்*” (எபே. 2:12). |

| | |
|---|---|
| 7. திருச்சபையில் எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆசாரியரும், இராஜரீக ஆசாரியருமாவார்கள். அதனால் அவர்களால் தேவனுடைய சமுகத்திற்குள் விசுவாசத்தோடு எப்பொழுது வேண்டுமானாலும் பிரவேசிக்கலாம் (1 பேதுரு 2:1–9; எபி. 10:19–22). | 7. லேவி கோத்திரத்தைச் சேர்ந்த ஆரோன் குடும்பத்தார் மட்டுமே இஸ்ரவேலில் ஆசாரியராகத் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். ஓர் ஆண்டில் ஒருமுறை மட்டுமே, பிரதான ஆசாரியன் ஒருவன் மட்டுமே தேவ சமுகத்திற்குச் செல்ல முடியும் (எபி. 7:5,11; 9:7) |
| 8. திருச்சபை விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்படும். பின்னர் அது கிறிஸ்துவோடு பூமிக்குத் திரும்பும். விசுவாசிகள் ஆயிரமாண்டு ஆட்சியின் போது கிறிஸ்துவோடு அரசாளுவார்கள். | 8. மீட்கப்பட்ட இஸ்ரவேலர், கிறிஸ்து ஆளுகை செய்கிறபோது அவருடைய பூமிக்குரிய குடிமக்களாக விளங்குவார்கள். |

திருச்சபைக்கும் இஸ்ரவேலுக்கும் இடையேயுள்ள மேலும் பல முரண்பாடுகளைப் பட்டியலிடக்கூடும். திருவாளர் லூயிஸ் ஸ்பெர்ரி சாஃபர் தனது முறையான இறையியல் என்னும் நூலின் நான்காவது தொகுப்பில் (47–53 பக்கங்கள்) சரியான 24 வேறுபாடுகளைப் பட்டியலிட்டுள்ளார். ஆனால் தேவனுடைய திட்டங்களிலும் நோக்கங்களிலும் திருச்சபை தனித்துவமுள்ள இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை அறிவதற்கு நாம் கொடுத்திருக்கும் வேறுபாடுகள் போதுமானவை. திருச்சபையும் இஸ்ரவேலும் ஒன்று என்று எண்ணி நாம் ஒருபோதும் குழப்பமடையக்கூடாது.

இஸ்ரவேலும் திருச்சபையும் ஒன்றுதான் என்று அவ்வப்போது குழப்பமடைவதற்குக் காரணமாக விளங்கக்கூடிய வசன பகுதிகளில் ஒன்று ஒலிவமலைப் பிரசங்கத்தில் காணப்படுகிறது (மத். 23:37–25:6). இந்தப் பகுதி இஸ்ரவேலைக் குறித்ததேயொழிய சபையைப் பற்றியது அல்ல. கிறிஸ்து அரசராக இப்புவிக்கு வருவதற்கு முன்னும், அவர் வருகிறபோதும் இருக்கக்கூடிய சூழ்நிலைகளை விவரிக்கிறது. 24:16 –ஆம் வசனம், *“யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்”* என்று கூறுகிறது. இந்த நிகழ்ச்சி நடைபெறும் இடம் யூத நாடு என்பது தெளிவாகத் தெரிகிறது. 20 –ஆவது வசனத்தில், *“நீங்கள் ஓடிப்போவது... ஓய்வுநாளிலாவது சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்”* என்று நாம் படிக்கிறோம். ஓய்வுநாள் இஸ்ரவேலுக்குத்தான் கொடுக்கப்பட்டது, திருச்சபைக்கு அது ஒருபோதும் கொடுக்கப்படவில்லை. 22 – ஆவது வசனத்தில் தேவன் தெரிந்துகொண்ட யூதர்களே, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்னும்

சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். கிறிஸ்துவின் வருகை 30 –ஆவது வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. அது திருச்சபைக்காக வானத்தில் தோன்றுகிற நிகழ்ச்சி அல்ல, மாறாக அவர் இஸ்ரவேலின் அரசராக பூமிக்கு வருகிற நிகழ்ச்சியேயாகும்.

ஆகவே வேதத்தில் எந்தவொரு பகுதியும் இஸ்ரவேலைக் குறித்ததா அல்லது திருச்சபையைக் குறித்ததா என்று ஒவ்வொரு வேத மாணாக்கனும் பகுத்து அறிய வேண்டும். கர்த்தருடைய நாளைக் குறித்து நீங்கள் படிப்பீர்களென்றால், அது முதன்மையாக இஸ்ரவேலைக் குறித்த பகுதி என்று நிச்சயமாக அறிவீர்கள். மாறாக, நீங்கள் கிறிஸ்துவின் நாளைக் குறித்துப் படிப்பீர்களென்றால், சபையைக் குறித்த பகுதியே அது என்று உறுதியாக அறிந்துகொள்ளலாம். வெளிப்படுத்தின விசேஷம் 11 –ஆவது அதிகாரத்தில் ஏழாவது எக்காளம் இஸ்ரவேலோடு தொடர்புடையது, ஏனென்றால் அது கர்த்தருடைய நாளின் ஒரு பகுதியாகும். ஆனால் 1 கொரிந்தியர் 15:52 –இல் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘கடைசி எக்காளம்’’ திருச்சபையோடு தொடர்புடையது. ஏனென்றால் அங்கு கிறிஸ்துவின் நாளோடு தொடர்புடைய திருச்சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியே ஆய்வுப்பொருளாக விளங்குகிறது.

முடிவாக, திருச்சபையானது இஸ்ரவேலிலிருந்து வேறுபட்டது அல்ல என்று மெய்ப்பிக்கும் பொருட்டு, பொதுவாகப் பயன்படுத்தப்படும் இரண்டு வாதங்களை நாம் கவனிக்க வேண்டும்.


1. அப்போஸ்தலர் 7:38 –இல் இஸ்ரவேல் ‘‘வனாந்தரத்தில் இருந்த சபை’’ என்று அழைக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு சபை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எக்லீசியா என்னும் சொல் மக்களின் கூட்டம் என்றே பொருள்படும். இதனை இலகு தமிழ் மொழிபெயர்ப்பு ‘‘கூடியிருந்த மக்கள்’’ (Congregation) என்றே கூறுகிறது. இதுவே சிறந்த மொழிபெயர்ப்பு என்று இன்றைய நாள் யூதர்களும் இதனை ஆதரிக்கிறார்கள். அப்போஸ்தலர் 19:32 –இல் எபேசுப் பட்டணத்தில் குழுமிய மக்களை ‘‘கூடியிருந்தவர்கள்’’ என்றே இலகு தமிழ் குறிப்பிடுகிறது. திருச்சபை பிதாவாகிய தேவனோடும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடும் உறவு கொண்டதாகவே புதிய ஏற்பாடு அடையாளப்படுத்துகிறது.

2. கலாத்தியர் 6:16 –இல் பவுல், ‘‘இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக’’ என்கிறார். இன்றைய

நாளில் இருக்கிற எல்லா விசுவாசிகளும் ஒன்று சேர்ந்து ‘‘தேவனுடைய இஸ்ரவேலராக’’ விளங்குகிறார்கள் என்று கூறப்பட்டிருப்பதாகச் சிலர் இதற்கும் பொருள் கூறுகிறார்கள். ஆனால் இது தவறாகப் புரிந்துகொள் ளப்பட்டிருப்பதாக நாம் கருதுகிறோம். சமாதானமும் இரக்கமும் எல்லா விசுவாசிகளுக்கும் உண்டாயிருப்பதாக என்று கூறும் பவுல், தேவனுடைய இஸ்ரவேலர் என்று யூத விசுவாசிகளைத் தனிப்படுத்தி, அவர்கள் புது சிருஷ்டிப்புக்குரிய (கலா.6:15) சட்டங்களின்படி நடந்து வருகிறவர்கள் என்று விளக்கிக் கூறுகிறார். இது பண்டைய நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிற யூதர்களைக் குறிப்பதில்லை. இந்த வசனம் ‘‘இந்தப் பிரமாணத்தின்படி நடந்துவருகிறவர்கள் எவர்களோ அவர்களுக்கு, அதாவது தேவனுடைய இஸ்ரவேலருக்கு சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக என்று சில மொழிபெயர்ப்புகளில் காணப்படுகிறது. இலக்கணத்தின்படி இந்த மொழிபெயர்ப்பு சரியாயிருந்தாலும், இது ஆயிரமாண்டு ஆட்சி இல்லை என்று வாதாடுகிறவர்கள் தங்களுடைய கருத்துக்கு ஏற்ப மாற்றியமைத்ததாகவே விளங்குகிறது. மேலும், அவர்கள் இஸ்ரவேலருக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி கள் யாவும் புதிய இஸ்ரவேலாகிய சபைக்கே உரியது என்று தவறாகப் பொருள் கூறவும் செய்கிறார்கள்.

# 17

# நியாயப்பிரமாணமும் கிருபையும்



நியாயப்பிரமாணம் மற்றும் கிருபை ஆகிய இரண்டும், தேவன் மனிதனுடன் ஈடுபடுவதற்கான, ஒன்றுக்கொன்று எதிரான வழிகளாகும். தேவன் மனிதனைப் பரீட்சை பார்ப்பதற்கு தெரிந்துகொண்ட ஒன்றுக்கொன்று இணையற்ற கொள்கைகள் என்று நாம் இவற்றை விவரித்துக் கூறலாம். அல்லது அவர் தமது மக்களுடன் செய்துகொண்ட இரண்டு உடன்படிக்கைகள் என்றும் இவற்றை எண்ணிப்பார்க்கலாம்: *"எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின"* (யோவான் 1:17).

நியாயப்பிரமாணம் என்னும் கொள்கையின் கீழ், ஒருவன் எதைச் சம்பாதிக்கிறானோ அல்லது எதை அடைய வேண்டுமோ அதைப் பெறுகிறான். கிருபையின் கீழ் அவன் எதை அடைய வேண்டுமோ அதிலிருந்து தப்புவிக்கப்படுகிறான். மேலும் அவன் அளவிடமுடியாதபடி வளப்படுத்தப்படுகிறான். இவை யாவும் இலவச ஈவாகக் கொடுக்கப்படுகின்றன. இவ்விரண்டு கொள்கைகளும் ரோமர் **4:4,5 –** ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளன: *"கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும். ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்"*.

கிருபையும் நியாயப்பிரமாணமும் ஒன்றிலிருந்து மற்றொன்று முழுவதும் வேறுபட்டவை. அதாவது இரண்டையும் ஒன்றாகக் சேர்க்க முடியாது. *"அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபையல்லவே"* (ரோமர் 11:6).

நியாயப்பிரமாணம் நிபந்தனைக்கு உட்பட்ட உடன்படிக்கை: "நீ கீழ்ப்படிவாய் என்றால், நான் அதற்கான பலன் அளிப்பேன். ஆனால் நீ கீழ்ப்படியவில்லை என்றால், நான் உன்னைத் தண்டிக்க வேண்டும்" என்று தேவன் கூறுகிறார். கிருபை நிபந்தனையற்ற உடன்படிக்கை: "நான் இலவசமாக உன்னை ஆசீர் வதிப்பேன்."

"செய்" என்று நியாயப்பிரமாணம் கூறுகிறது, மாறாக, "விசுவாசி" என்று கிருபை கூறுகிறது. ஆனால் விசுவாசிப்பது நிபந்தனையல்ல; படைப்பாளருக்கு ஒரு படைப்பு செய்ய வேண்டிய நியாயமான பதிற்செயல் ஆகும். அது மெச்சத்தக்கதும் அல்ல; 'கர்த்தரிடத்தில் நான் விசுவாசம் கொண்டிருக்கிறேன்' என்று ஒருவராலும் பெருமைப்பட முடியாது. இப்பிரபஞ்சத்தில் முழுவதுமாகச் சார்ந்துகொள்ளத்தக்க ஒருவரிடத்தில் நம்பிக்கைகொள்ளாதிருப்பதே மதி யீனம்.

நியாயப்பிரமாணத்தின் கீழ், பரிசுத்தம் எதிர்பார்க்கப்படுகிறது; ஆனால் பரி சுத்த வாழ்க்கை வாழ்வதற்கான ஆற்றல் கொடுக்கப்படவில்லை. கிருபையின் கீழ் பரிசுத்தம் கற்றுக்கொடுக்கப்படுகிறது (தீத்து 2:11,12), மேலும் அதற்குத் தேவையான ஆற்றல் கொடுக்கப்படுகிறது. ஒருவர் இதனை இவ்வித மாகக் கூறுகிறார்: "நியாயப்பிரமாணமானது ஒருவரிடத்தில் பலத்தை எதிர் பார்க்கிறது, ஆனால் அவர் அதை வெளிப்படுத்தாதபோது அது அவரைச் சபிக்கிறது. பலமில்லாத ஒருவருக்குக் கிருபை பலத்தைத் தருகிறது, அவர் அதை வெளிப்படுத்துகிறபோது அது அவரை ஆசீர்வதிக்கிறது."

நியாயப்பிரமாணம் சாபத்தைக் கொண்டுவருகிறது: *"நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவை களில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன்"* (கலா. 3:10). கிருபை ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறது. *"இலவசமாய் அவரு டைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதி மான்களாக்கப்படுகிறார்கள்"* (ரோமர் 3:24).

நியாயப்பிரமாணத்தின் கீழ் தற்பெருமை ஊக்குவிக்கப்படுகிறது, ஆனால் கிருபையின் கீழ் அது மறுக்கப்படுகிறது. *"இப்படியிருக்க, மேன்மை*

*பாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்தினாலே?" கிரியாப்பிரமாணத்தினாலேயா? அல்ல; விசுவாசப் பிரமாணத்தினாலே"* (ரோமர் 3:27).

நியாயப்பிரமாணத்தின் கீழ் இரட்சிப்பை உறுதிசெய்ய முடியாது; நீங்கள் போதுமான அளவு அல்லது சரியான நற்செயல்களைச் செய்திருக்கிறீர்களா என்பதை ஒருபோதும் அறிய முடியாது. கிருபையின்கீழ் இரட்சிப்பு இலவசமாகத் தரப்படுவதால், அதை நீங்கள் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதில் முழு உறுதியைப் பெற முடியும். மேலும் நீங்கள் அதை எப்பொழுது பெற்றீர்கள் என்பதையும் அறிய முடியும்.

நியாயப்பிரமாணத்தின் கீழ் இருக்கிற ஒருவர், எல்லாக் கிரியைகளையும் தொடர்ந்து செய்ய முடியுமா என்பதை அறிவதற்கு இயலாததால் அவரால் இரட்சிப்பின் மெய்யான உறுதியைப் பெறமுடியாது. கிருபையின் கீழ், ஒருவருடைய இரட்சிப்பு கிறிஸ்துவின் முழுநிறைவான செயலைச் சார்ந்திருப்பதால் அந்த விசுவாசியால் நித்திய இரட்சிப்பின் உறுதியைப் பெற முடியும் (யோவான் 10:27–29).

நியாயப்பிரமாணத்தின் மூலமாக இரட்சிப்பு இல்லை. அந்தக் கொள்கையின் அடிப்படையில் எவரொருவரும் இரட்சிப்படைய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கவில்லை. மனிதன் தான் பாவி என்பதை அவனுக்கு அறியச் செய்வதே நியாயப்பிரமாணத்தின் நோக்கமாகும். *"பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது"* (ரோமர் 3:20). அதன் மூலமாக இரட்சிப்பைக் குறித்த அறிவு வருகிறதில்லை.

கிருபையின் மூலமாகவே இரட்சிப்பு உண்டாகிறது (எபே. 2:8,9). அது இலவசமாகத் தரப்படுகிறது; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை எவரொருவர் பரலோகத்திற்கான ஒரே நம்பிக்கையாக ஏற்றுக்கொள்கிறாரோ, தகுதியில்லாத அவருக்கு தேவன் ஈவாக இரட்சிப்பைத் தருகிறார்.

நியாயப்பிரமாணத்தின் கீழ் பாவம் தூண்டிவிடப்படுகிறது (ரோமர் 7:8–13). கிருபையின் கீழ் அது அருவருப்பானது என்று வெறுப்படையச் செய்கிறது. நியாயப்பிரமாணத்திற்குப் பாவியான ஒருவரைக் கீழாக்கும்போது, தடை செய்யப்பட்ட செயலை அவர் உடனடியாகச் செய்ய விரும்புகிறார். அது நியாயப்பிரமாணத்தின் தவறு அல்ல, மனிதனுடைய இயல்பே அவரைப் பாவம் செய்யத் தூண்டுகிறது. கிருபையின் கீழ், பாவம் வெறுக்கப்படுகிறது. நம்முடைய பாவங்களுக்காக இரட்சகர் எவ்வளவு பெரிய விலையைச்

செலுத்தினார் என்னும் நினைவு நம்மை பாவத்திலிருந்து விலகி ஓடச் செய்கிறது.

நியாயப்பிரமாணத்தின் கீழ் இரட்சிப்புக்கான கிரியை ஒருபோதும் முடிவடைகிறதில்லை. ஒரு வார கடின உழைப்புக்குப் பிறகு, ஏழாவது நாளாக ஓய்வுநாள் வருவதற்கு அதுவே காரணமாகும். கிருபை முடிவடைந்த கிரியையை நம்மிடம் சுட்டிக்காட்டுகிறது. ஆகவே அதன் மூலம் நம்முடைய இளைப்பாறுதலின் நாளாகிய கர்த்தருடைய நாளில் நாம் நமது வார நாட்களைத் தொடங்குகிறோம்.

மனிதன் என்ன செய்ய வேண்டுமென்று நியாயப்பிரமாணம் கூறுகிறது. கிறிஸ்துவின் மூலமாக தேவன் ஏற்கனவே என்ன செய்து முடித்திருக்கிறார் என்பதைக் கிருபை வெளிப்படுத்துகிறது.

நியாயப்பிரமாணம் அடிமைத்தன அமைப்பு ஆகும் (கலா. 4:1–3). கிருபை விடுதலை அமைப்பு ஆகும் (கலா. 5:1). நியாயப்பிரமாணத்தின் கீழ் மனிதர்கள் அடிமைகளாக இருக்கிறார்கள். கிருபையின் கீழ் உள்ள மக்கள் குமாரரும் குமாரத்திகளுமாக இருக்கிறார்கள்.

“நீங்கள் அன்புகூருங்கள்” என்று நியாயப்பிரமாணம் கூறுகிறது. “தேவன் இவ்வளவாய் உங்களிடத்தில் அன்புகூர்ந்தார்” என்று கிருபை கூறுகிறது.

“செய், அப்பொழுது வாழ்வடைவாய்” என்று நியாயப்பிரமாணம் கூறுகிறது. “நம்பிக்கை வை, கீழ்ப்படிவாய்” என்று கிருபை கூறுகிறது.

நியாயப்பிரமாணம் கோரிக்கைகளை முன்வைக்கிறது. கிருபை தயவு பாராட்டுகிறது.

மிகச் சிறந்ததை நியாயப்பிரமாணம் குற்றப்படுத்துகிறது. மிகவும் கீழானதை கிருபை நியாயப்படுத்துகிறது.

நாம் கைக்கொண்டு காத்துக்கொள்ள வேண்டியது நியாயப்பிரமாணம். ஆனால் நம்மைக் காத்துக்கொள்வது கிருபை.

நியாயப்பிரமாணம் எவரொருவரையும் மன்னிக்கிறதில்லை. கிருபை பரிந்து பேசுகிறவரைத் தருகிறது.

நிமாயப்பிரமாணம் அடங்காத மகனை நகரத்துக்கு வெளியே கொண்டு போய்க் கல்லெறிந்து கொல்கிறது (உபா. 21:18–21). கிருபையின் கீழ் கெட்ட குமாரன் தனது பாவத்தை அறிக்கை செய்து, மீண்டு தன்னுடைய தகப்பனுடைய வீட்டிற்கு வந்து ஐக்கியம் பெற முடியும் (லூக்கா 15:21–24).


நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆடு மேய்ப்பனுக்காகச் சாகிறது. கிருபையின் கீழ் ஆடுகளுக்காக மேய்ப்பர் சாகிறார் (யோவான் 10:11).

கிருபையின் உயர்வு கீழ்க்காணும் வகையில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது: அங்கிகரிப்பதற்குக் கிருபை நல்ல மனிதர்களைத் தேடுகிறதில்லை, ஏனெனில் நல்லதை ஒப்புக்கொள்வது கிருபை அல்ல, மாறாக அது நியாயமானது. மேலும் கிருபை குற்றஞ்சாட்டப்பட்டவர்களும், குற்றவுணர்வு உள்ளவர்களும், பேச்சற்றவர்களும், உதவியற்றவர்களுமாகிய மனிதர்களையே தேடுகிறது. அவர்களையே அது இரட்சித்து, பரிசுத்தப்படுத்தி, மகிமைப்படுத்தமுடியும்.

"நியாயப்பிரமாணத்தையும் கிருபையையும் சரியாகப் பகுத்து அறிய வேண்டுமென்றால், நீங்கள் உங்களுடைய திறமைக்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். அந்த வேறுபாட்டைக் கண்டுபிடிக்கக் கூடிய இறையியல் அறிஞராக உங்களை எண்ணிக்கொள்ளுங்கள்" என்று மார்டின் லுத்தர் கூறினார்.

18

# திருச்சபையும் அரசும்




திருச்சபையும், தேவனுடைய அரசு அல்லது பரலோக அரசு ஆகியவையும் ஒரே மாதிரியானவை அல்ல என்று கற்கும்போது, அதைப் படிக்கிறவர்களில் அநேகர் வியப்படைவது திண்ணம். கிறிஸ்தவ உலகில் பெரும்பாலும் திருச் சபையும் அரசும் ஒன்றுதான் என்னும் கருத்து நிலவுகிறது. ஆனால் அவற்றை நாம் வேறுபடுத்திக் காணத் தவறினால் நாம் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் பெருஞ் சிக்கலுக்குள்ளாவோம்.

பதினாறாவது அதிகாரத்தில் நாம் திருச்சபையைக் குறித்து ஓரளவு சிந்தித்தோம். எனவே அந்தப் பாடத்தை நாம் மீண்டும் படிக்க வேண்டிய தேவையில்லை. தேவன் மனுக்குலத்தோடு ஈடுபட்ட பல அமைப்புகளிலிருந்து, திருச்சபை தனித்துவம் வாய்ந்த சமுதாயம் என்பதை மட்டும் நாம் நினைவு படுத்திக்கொண்டால் போதும். திருச்சபையில் கிறிஸ்து தலையாகவும், எல்லா விசுவாசிகளும் அதன் அங்கங்களாகவும் இருக்கிறார்கள். இன வேறுபாடு, சமுதாய வேறுபாடு, பால் வேறுபாடு யாவற்றையும் கிறிஸ்து அழித்துவிட்டார். எல்லாம் அவருக்குள் ஒன்றாக இருக்கிறார்கள். திருச்சபை பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கியது. அது சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியில் முடிவடைகிறது. அது கிறிஸ்துவின் சரீரம் என்றும் மணவாட்டி என்றும் வரு ணிக்கப்பட்டுள்ளது. மேலும் அது அவருடைய அரசாட்சியின்போது அவருடன் சேர்ந்து ஆளுகை புரியும், நித்திய காலமெல்லாம் அவருடைய மகிமையில் பங்குபெறும்.

அவ்வாறெனில், பரலோக அரசு என்பது என்ன?

பரலோக அரசு என்னும் ஆட்சி எல்லையில் தேவனுடைய ஆளுகை ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. பரலோகம் என்னும் சொல் உருவக மொழியில் தேவனையே குறிக்கிறது; இதனை தானியேல் 4:25,26 – ஆகிய வசனங்கள் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. *"உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்கிறார்"* என்று தானியேல் 4:25 கூறுகிறது. அடுத்த வசனம் "பரம அதிகாரம்", அதாவது "பரலோகம் ஆளுகிறது" என்று கூறுகிறது. ஆகவே பரலோக அரசு தேவனுடைய ஆளுகையை அறி விக்கிறது. மனிதர்கள் எங்கெல்லாம் அந்த ஆளுகைக்குத் தங்களை ஒப்பு விக்கிறார்களோ அங்கெல்லாம் அவ்வரசு ஆளுகை செய்யும்.

பரலோக அரசில் இரண்டு நிலைகள் உள்ளன. அதனுடைய விரிவான நிலையில், தேவனை அறிக்கை செய்து அவரே எல்லோருக்கும் மேலான அரசர் என்று அறிக்கை செய்கிற யாவரும் அந்த அரசில் இடம் பெறுவார்கள். அது வெற்றறிக்கையாகவும் கூட இருக்கலாம். ஆனால் அதனுடைய உள்ளான நிலையில், மெய்யாக மனமாற்றம் பெற்றவர்கள் மட்டுமே இடம் பெறுவார்கள். இதனை, ஒரே மையப் புள்ளியைக் கொண்ட இரண்டு வட்டங்களாக உரு வகிக்கலாம். சிறிய வட்டம் பெரிய வட்டத்திற்குள் உள்ளது.




பெரிய வட்டம் அறிக்கை செய்கிறவர்கள் அடங்கிய விரிவான பரப்பு எல்லையைக் கொண்டது. அதில் மெய் அறிக்கை செய்கிறவர்களும் பொய் அறிக்கை செய்கிறவர்களும் இருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து மறுபடியும் பிறந்தவர்கள் மட்டுமே சிறிய வட்டத்திற்குள் இடம்பெறுவார்கள்.

திருமறையில் அரசைக் குறித்த எல்லா வசனங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போமென்றால், அது வெவ்வேறான ஐந்து கட்டங்களில் வரலாற்று வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதை அறிய முடியும்.

**முன்னுரைக்கப்பட்ட அரசு**

முதலாவது, பழைய ஏற்பாட்டில் அரசு முன்னுரைக்கப்பட்டுள்ளது. ஒருபோதும் அழிக்க முடியாததும், அதனுடைய அரசுரிமையை வேறு மக்களுக்குத் தருவதற்கு இடங்கொடாததுமான அரசு தேவனால் நிறுவப்படும் என்று தானியேல் முன்னுரைத்தார் (தானி. 2:44). கிறிஸ்துவின் வருகையையும் அண்டசராசரத்தின் அரசராக அவர் ஆளுகை செய்வதையும் முன்னறிவித்தார் (தானி. 7:13–14; மேலும் காண்க எரே. 23:5,6).

**மிக அருகில் இருந்த அரசு**

இரண்டாவதாக, அரசு மிக அருகில் இருந்ததாகவும், அதன் அரசர் அங்கு இருந்ததாகவும் அரசைக் குறித்த செய்தி அறிவிக்கப்பட்டது. முதலாவது யோவான் ஸ்நானன், பின்னர் இயேசு, அதன் பிறகு சீடர்கள் அரசு மிக அருகில் இருந்ததாக அறிவித்தார்கள் (மத். 3:2; 4:17; 10:7). அரசர் தாமே இஸ்ரவேல் இனத்தாரிடம் வருகைபுரிந்து அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தினார். *“நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே”* என்று இயேசு கூறினார் (மத். 12:28). மற்றோர் இடத்தில், *“.... தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே”* என்று அவர் கூறினார் (லூக்கா 17:21). அரசர் அரங்கத்திற்குள் நுழைந்துவிட்டதால் அப்பொழுது அரசு அங்கு இருந்தது (கடைசி இரண்டு குறிப்புகளும் பரலோக ராஜ்யம் என்று கூறாமல் தேவனுடைய ராஜ்யம் என்றே கூறுகிறது.) புதிய ஏற்பாட்டில் இவ்விரண்டு சொற்றொடர்களும் ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்று இடம்மாற்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைக் கீழே விளக்கிக் கூற முற்படுவோம்.

**இடைக்கால அரசு**

மூன்றாவதாக, அரசின் இடைக்கால நிலை விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இஸ்ரவேல் இனத்தாரால் அரசர் நிராகரிக்கப்பட்ட பிறகு, அவர் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றுவிட்டார். அரசர் இங்கு இல்லையென்றாலும், அவருடைய அரசாட்சியை ஒப்புக்கொண்டவர் எல்லோருடைய உள்ளங்களிலும் அந்த அரசு ஆளுகை புரிகிறது. அந்த அரசின் ஒழுக்கம் மற்றும் நெறிமுறை சார்ந்த

விதிகள் இன்றைய நாட்களில் நமக்குரியதாக இருக்கின்றன. மத்தேயு 13 –ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள உவமைகள் இந்த இடைக்கால அரசைக் குறித்த விசயங்களை விவரிக்கின்றன.

**அரசின் வெளிப்பாடு**

நான்காவது கட்டமாக, அரசு வெளிப்படும். அவ்வப்போது ஆயிரமாண்டு ஆட்சி என்று குறிப்பிடப்படும், கிறிஸ்துவின் புவி ஆட்சியே இது. இது எழுத்தின்படி உண்மையாகவே இவ்வுலகில் நிகழும். மறுரூப மலையில் இது முன்னறிவிக்கப்பட்டது. அப்பொழுது அவருடைய ஆட்சியில் மகிமையோடு தோன்றவிருக்கிற காட்சி காணப்பட்டது (மத். 16:28). *"அநேகர் கிழக்கிலும், மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் யாக்கோபு ஈசாக்கு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்"* என்று இதைக் குறித்து இயேசு குறிப்பிட்டார் (மத். 8:11).

**நித்திய அரசு**

அரசின் ஐந்தாவதும் இறுதியுமான நிலை நித்தியமானது. *"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நித்திய ராஜ்யம்"* என்று அது 2 பேதுரு 1:11 –இல் விவரிக்கப்பட்டுள்ளது.

**பரலோக அரசும் தேவனுடைய அரசும்**

"பரலோக ராஜ்யம்" என்னும் சொற்றொடர் மத்தேயு நற்செய்தி நூலில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. "தேவனுடைய ராஜ்யம்" என்னும் சொற்றொடர் நான்கு நற்செய்தி நூல்களிலும் காணப்படுகிறது. இவ்விரண்டையும் குறித்து ஒரே விசயம் கூறப்பட்டுள்ளது. இவற்றைக் குறித்த நடைமுறை நோக்கங்களில் வேறுபாடு எதுவுமில்லை. எடுத்துக்காட்டாக, மத்தேயு 19:23 –இல் பரலோக அரசுக்குள்ளாக ஒரு செல்வந்தன் நுழைவது அரிது என்று இயேசு கூறினார். மாற்கு 10:23 மற்றும் லூக்கா 18:24 – ஆகிய வசனங்களில் தேவனுடைய அரசைக் குறித்து இயேசு இதே விதமாகப் பேசியதைக் காணலாம். மத்தேயு 19:24 –ஆம் வசனத்தில் 19:23 –இல் கூறியதைப் போலவே தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும் இயேசு பேசினதாகக் காணவியலும்.

தேவனுடைய ராஜ்யம் மற்றும் பரலோக ராஜ்யம் ஆகிய இரண்டு சொற்றொடர்களும் ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்று மாற்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கீழ்க்காணும் பகுதிகளில் காணலாம்.

மத்தேயு 4:17; மாற்கு 1:15 –ஆகிய வசனங்களை ஒப்பிடுக.

மத்தேயு 8:11; லூக்கா 13:29 – ஆகிய வசனங்களை ஒப்பிடுக.

மத்தேயு 10:7; லூக்கா 9:2 – ஆகிய வசனங்களை ஒப்பிடுக.

மத்தேயு 11:11; லூக்கா 7:28 – ஆகிய வசனங்களை ஒப்பிடுக.

மத்தேயு 13:11; மாற்கு 4:11 – ஆகிய வசனங்களை ஒப்பிடுக.

மத்தேயு 13:31 –ஆம் வசனத்தை மாற்கு 4:30,31 மற்றும் லூக்கா 13:18 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

மத்தேயு 13:33; லூக்கா 13:20,21 –ஆகிய வசனங்களை ஒப்பிடுக.

மத்தேயு 19:14 –ஆம் வசனத்தை மாற்கு 10:14 மற்றும் லூக்கா 18:16 – ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

பரலோக அரசு, அரசின் வெளிப்புறத் தோற்றத்தையும், உள்ளான மெய் நிலையையும் கொண்டுள்ளது என்று நாம் கூறினோம். தேவனுடைய அரசுக்கும் இவ்வுண்மை பொருந்தும். இதனை நாம் கீழ்க்கண்டவாறு விளக்கிக் கூறலாம்.

| பரலோக அரசு | தேவனுடைய அரசு |
|---|---|
| இதனுடைய விரிவான நிலையில், அதாவது வெளியரங்கமான தோற்றத்தின்படி அரசருடைய மெய்யான குடி மக்கள் இதில் பங்குவகிக்கிறார்கள்; மேலும் அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறோம் என்று வெற்றறிக்கை செய்கிறவர்களும் இதில் இடம் பெற்றிருக்கிறார்கள். இவ்வுண்மையை நாம் விதைக்கிறவருடைய உவமையிலும் (மத். 13:3–11), கடுகு விதை உவமையிலும் (மத். 13:31,32), புளித்த மா உவமையிலும் (மத். 13:33) காணலாம். | இதிலும்கூட மெய்யான விசுவாசிகளும் விசுவாசமற்றவர்களும் இடம் பெறுகிறார்கள். இதனை விதைக்கிறவர் உவமையில் காண்கிறோம் (லூக்கா 8:4–10). மேலும் கடுகு விதை உவமையிலும் (லூக்கா 13:18,19) புளித்த மா உவமையிலும் (லூக்கா 13:20,21) இதனைக் காணலாம். |
| இதனுடைய உள்ளார்ந்த மெய்ம்மையில், உண்மையாக மனந்திரும்பியவர்கள் மட்டுமே பரலோக அரசிற்குள் நுழைவார்கள் (மத். 18:3). | இதனுடைய உள்ளார்ந்த மெய்ம்மையில் உண்மையாக மறுபடியும் பிறந்தவர்கள் மட்டுமே உட்செல்ல முடியும் (யோவான் 3:3,5). |

உள்ளார்ந்த மெய்ம்மையைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிட்டபோது, *“தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது”* என்று கூறினார் (ரோமர் 14:17). *“தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பலத்திலே உண்டாயிருக்கிறது”* என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார் (1 கொரி. 4:20).

**அரசும் திருச்சபையும்**


கீழ்க்காண்பனவற்றில் அரசிற்கும் திருச்சபைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் காணவியலும்: கிறிஸ்து தமது வெளியரங்கமான ஊழியத்தைத் தொடங்கியபோது அரசு தொடக்கம் பெற்றது. திருச்சபையானது பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கியது (அப். 2). பூமியின் அழிவு உண்டாகும்வரை அரசு தொடர்ந்து இருக்கும். திருச்சபையோ அது எடுத்துக்கொள்ளப்படும் வரை இவ்வுலகில் தொடரும்; மீண்டும் கிறிஸ்து தமது ஆட்சியை இவ்வுலகில் நிறுவ வரும்போது, அதாவது அவருடைய இரண்டாம் வெளிப்பாட்டின்போது சபையானது அவருடன் அவருடைய மணவாட்டியாக வருகைபுரியும். இப்பொழுது உள்ளார்ந்த மெய்யான நிலையில் திருச்சபையின் அங்கங்களாக இருப்பவர்கள் அந்த அரசிலும் இடம்பெற்றிருக்கிறார்கள்; அரசும் திருச்சபையும் ஒன்றோடொன்று இணைந்திருக்கும் நிலையை இந்த ஒரு விசயத்தில் மட்டுமே காணமுடியும்.

# பகுதி நான்கு

# எதிர்கால நிகழ்ச்சிகளிலுள்ள வேறுபாடுகள்

# 19

# கிறிஸ்துவின் இரண்டு வருகைகள்



திருமறை வசனங்களை நன்கு புரிந்துகொள்வதற்கும், மகிழ்வுடன் அனுபவிக்கிறதற்கும், கிறிஸ்துவின் முதல் மற்றும் இரண்டாம் வருகைகளை வேறுபடுத்திக் காணவேண்டியது அவசியம். அவருடைய முதலாம் வருகை பெத்லகேம் தொழுவத்தின் முன்னணையில் அவர் குழந்தையாகப் பிறந்ததைக் குறிப்பிடுகிறது என்பதில் ஐயமில்லை. அவர் மீண்டும் வரப்போவதையே இரண்டாம் வருகை சுட்டிக்காட்டுகிறது. முதலாம் வருகை கிறிஸ்துவின் பாடுகளோடு தொடர்புடையது, அதைத் தொடர்ந்து வருகிற மகிமையோடு தொடர்புடையது அவரது இரண்டாம் வருகை (1 பேதுரு 1:11).

இந்த அதிகாரத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்துப் பொதுவான வகையில் நாம் சிந்திக்க முற்படுவோம். அதாவது, இரட்சகர் மீண்டும் வரப்போகிறார் என்பதைக் குறித்த எளிய உண்மைகளைக் கூறுவோம். அடுத்த அதிகாரத்தில், அவருடைய இரண்டாம் வருகையிலுள்ள வெவ்வேறு கட்டங்களைக் காண்போம்.

மேசியாவின் வருகையைப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள், ஆனால் நடந்த நிகழ்ச்சிகளைக் கண்டபோது அவர்கள் குழப்பமடைந்தார்கள். கிறிஸ்து (மேசியா என்பதன் கிரேக்கச் சொல்) நிந்திக்கப்பட்டவராகவும் மகிமையடைந்தவராகவும் வருவார் என்று தேவ ஆவி

யானவர் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர் பாடுகளடைந்து, இரத்தம் சிந்தி, மரணமடைவார் என்பதும் அவருடைய எதிரிகளின்மேல் வெற்றிவாகை சூடுவார் என்பதும் முன்னுரைக்கப்பட்டன. இவையிரண்டையும் அவர்களால் ஒருங்கிணைத்து அறியமுடியவில்லை. மேசியாவின் இரண்டு வருகைகளைக் குறித்துத் தாங்கள் எழுதுவதையும், அவற்றிற்கிடையே 2000 ஆண்டுகளுக்கு மேல் இடைவெளி இருக்கும் என்பதையும் அவர்கள் அறியவில்லை.

இவ்விரண்டு வருகைகளுக்கும் இடையே கால இடைவெளி உண்டென்பதைப் பற்றிய ஏதொரு குறிப்பும் இல்லாமல் இவற்றைத் திருமறை பல இடங்களில் இணைத்துக் கூறுகிறது. இவ்விதமாக அடுத்தடுத்து இவ்விரு நிகழ்வுகளும் கூறப்பட்டிருப்பதைப் பகுத்தறிவதற்குக் கற்றுக் கொள்வோமானால், அது நமக்கு மகிழ்ச்சியையும் பயனையும் அதிக அளவு தரும். சில எடுத்துக்காட்டுகளை இங்கு காண்போம்.

**கிறிஸ்துவின் இரண்டு வருகைகளையும் பற்றிக் கூறும் மாதிரி வசன பகுதிகள்**

22 –ஆம் சங்கீதத்தின் முதல் இருபத்தோரு வசனங்கள் கிறிஸ்துவின் முதல் வருகையைக் குறித்தவை. இரட்சகர் தமது சிலுவையில் அடைந்த பாடுகளை அவை சித்திரிக்கின்றன. ஆனால் 21 மற்றும் 22 –ஆகிய வசனங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க இடைநிறுத்தம் உள்ளது. கடைசிப் பத்து வசனங்களும் அவரது வெற்றியும் மகிமையும் நிறைந்த இரண்டாவது வருகையைச் சுட்டிக்காட்டுகின்றன.

கிறிஸ்துவின் இரண்டு வருகைகளைக் குறித்து ஏசாயா 9:6–7 ஆகிய வசனங்களிலும் நாம் காண்கிறோம்: *“நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்”* (ஏசாயா 9:6,7).

பெத்லகேமில் நடந்த கிறிஸ்துவின் வருகையைக் குறித்து, *“நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்....”*

என்னும் சொற்கள் கூறுகின்றன. அந்த வசனங்களின் எஞ்சிய பகுதி அவர் ஆட்சிபுரிவதற்கென்று வல்லமையோடும் மிகப்பெரிய மகத்துவத்தோடும் வருவதைப் பற்றியது.

கிறிஸ்துவின் இரண்டு வருகைகளும் ஏசாயா **49:7** –ஆம் வசனத்திலும் கூறப்பட்டுள்ளன: *“இஸ்ரவேலின் மீட்பரும் அதின் பரிசுத்தருமாகிய கர்த்தர், மனுஷரால் அசட்டைபண்ணப்பட்டவரும், ஜாதியாரால் அருவருக்கப்பட்டவரும், அதிகாரிகளுக்கு ஊழியக்காரனுமாயிருக்கிறவரை நோக்கி: உண்மையுள்ள கர்த்தர் நிமித்தமும், உம்மைத் தெரிந்துகொண்ட இஸ்ரவேலின் பரிசுத்தர் நிமித்தமும், ராஜாக்கள் கண்டு எழுந்திருந்து, பிரபுக்கள் பணிந்துகொள்வார்கள் என்று சொல்லுகிறார்.”*

இவ்வசனத்தில், *“மனுஷரால் அசட்டை பண்ணப்பட்டவரும், ஜாதியாரால் அருவருக்கப்பட்டவரும், அதிகாரிகளுக்கு ஊழியக்காரனுமாயிருக்கிறவரை”* என்னும் சொற்கள் கிறிஸ்துவின் முதல் வருகையைக் குறித்தவை என்பது வெளிப்படை. ஆனால் எஞ்சிய பகுதி மிகத் தெளிவாக அவருடைய இரண்டாம் வருகையைப் பற்றியே பேசுகிறது.

இப்பொழுது ஏசாயா **52:14,15** –ஆகிய வசனங்களைக் கவனியுங்கள்: *“மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள். அந்தப்படியே, அவர் அநேகம் ஜாதிகள்மேல் தெளிப்பார்; அவர் நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில் தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்து கொள்வார்கள்.”*

சிலுவையில் தொங்கிய இரட்சகர் பற்றிய விவரங்களை **14**–ஆவது வசனம் தருகிறது என்பது கண்கூடு; அவர் சிலுவையில் அறையப்பட்டதைக் கண்டவர்கள், அவரது பாடுகளின் ஆழத்தை எண்ணி ஆச்சரியப்பட்டார்கள். அவர் ஒரு மனிதர் என்பதையும் கண்டுணர முடியாதபடி அவருடைய உருவம் சிதைந்து போயிருந்தது. ஆனால் **15** –ஆவது வசனத்தில் பெரியதொரு மாற்றம் காணப்படுகிறது. இரட்சகர் திரும்பவும் வருகிறபோது, அவருடைய மகிமையின் பிரகாசத்தைக் கண்டு மனிதர்கள் திகிலடைவார்கள். கலிலேயாவில் மிகவும் தாழ்ந்த அந்நியராகக் காணப்பட்டவர் அரசர்களுக்கெல்லாம் அரசராகவும், கர்த்தர்களுக்கெல்லாம் கர்த்தராக வருகிறதைக் காணும் புறவின மக்கள் திடுக்கிடுவார்கள்.

கிறிஸ்துவின் இரண்டு வருகைகளையும் ஒரு சேரக்கூறும் திருமறைப் பகுதிகளில் மிகவும் அறியப்பட்ட பகுதி ஏசாயா **61:1,2** ஆகிய இரண்டு வசனங்களே ஆகும்: *“கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும்...”*

கிறிஸ்து நாசரேத்தூர் ஜெபாலயத்தில் இருந்தபோது இந்த வசனங்களிலிருந்து ஒரு பகுதியை மேற்கோள் காட்டினார் **(லூக்கா 4:18,19).** ஆனால் *“கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும்”* என்னும் சொற்களோடு அவர் தமது உரையை முடித்துக்கொண்டார். *“நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும்”* என்னும் சொற்களைக் கூறுவதற்குத் தமது பேச்சைத் தொடரவில்லை. ஏன்**?** தமது முதல் வருகையில் மக்களைக் கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்திற்குள்ளாக வழிநடத்துவதே அவருடைய நோக்கமாயிருந்தது. அவரது இரண்டாம் வருகை *“நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளில்”* தொடங்கும்.

இதற்கு இணையாகக் கிறிஸ்துவின் இரண்டு வருகைகளையும் கூறும் எடுத்துக்காட்டை சங்கீதம் **34:15,16 –** இல் காண்கிறோம்: “கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. *“தீமைசெய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.”*

இவ்வசனங்களை தனது மடலில் மேற்கோளாகப் பயன்படுத்தும் பேதுரு **(1 பேதுரு 3:12)** *“தீமை செய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண”* என்னும் சொற்களை எழுதவில்லை. பேதுருவின் மேற்கோளில் காணப்படும் சொற்கள் யாவும் நாம் வாழ்கிற இக்காலத்திற்குப் பொருந்தும். ஆனால், விடுபட்ட பகுதி கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கியதாகும்.

மீகா தீர்க்கதரிசி, மேசியா பெத்லகேமில் பிறப்பார் என்று முன்னுரைத்தார். *“எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்

*குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்தி லிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது"* (மீகா 5:2).

ஆனால் அதன் பிறகு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நோக்கி விரைந்து சென்றார்; அப்பொழுது மேசியா பூமியில் எல்லைகள் வரை பெரியவராயிருப்பார் என்று கூறினார் (மீகா 5:4). *"அவர் நின்றுகொண்டு, கர்த்தருடைய பலத்தோடும் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் மகத்துவத்தோடும் மேய்ப்பார்; ஆகையால் அவர்கள் நிலைத்திருப்பார்கள்; அவர் இனி பூமியின் எல்லைகள் பரியந்தமும் மகிமைப்படுவார்."*

சகரியா 9:9 –இல், கிறிஸ்து வெற்றி பவனியாக எருசலேமுக்குள் நுழைவார் என்னும் தீர்க்கதரிசனம் மிகத் தெளிவாக முன்னுரைப்பட்டது: *"சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்"* (சக. 9:9).

ஆனால் அதற்கு அடுத்த வசனம் நம்மை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நோக்கி நடத்திச் செல்கிறது. அப்பொழுது அவர் ஒரு சமுத்திரத் தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும் அரசாளுவார் என்னும் செய்தி கூறப்பட்டுள்ளது. *"எப்பிராயீமினின்று இரதங்களையும் எருசலேமினின்று குதிரைகளையும் அற்றுப்போகப்பண்ணுவேன், யுத்த வில்லும் இல்லாமற் போகும்; அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்; அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும், நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும்"* (சக. 9:10).

பழைய ஏற்பாட்டைப் போலவே கிறிஸ்துவின் இரண்டு வருகைகளையும் ஒன்றிணைத்துக் கூறும் பகுதிகளைப் புதிய ஏற்பாட்டிலும் காணமுடியும். எடுத்துக்காட்டாக லூக்கா 1:31–33 வசனங்களை எடுத்துக்கொள்வோம்: *"இதோ, நீ கர்ப்பதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்."*

இதில் முதல் வசனம் இயேசு பிறந்தபோது நிறைவேறியது (காண்க. மத். 1:25). ஆனால், 32 மற்றும் 33 –ஆகிய வசனங்கள் தற்போதைய திருச்சபைக் காலத்தைக் கடந்து, கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து இப்புவியில் தமது ஆட்சியைச் செலுத்துகிற காலத்தை நோக்கிச் செல்கின்றன.

கிறிஸ்துவின் இரண்டு வருகைகளையும் லூக்கா 20:18 மறைமுகமாகக் கூறுகிறது: *"அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான், அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும்."*


இந்த வசனத்தின் முதல் பகுதியில், அந்தக் கல் (கிறிஸ்து) பூமியில் இருக்கிறது. அவர் மனுவுருவில் இருந்தபோது மனிதர்கள் அவர்மேல் விழுந் தார்கள், உடைந்து போனார்கள். வசனத்தின் பிந்தின பகுதியில் அது மேலே இருந்து கீழே வருகிறது. அதாவது கிறிஸ்து மீண்டும் வருகிறபோது, அவருக்குக் கீழ்ப்படியாதவர்களைத் தூசியைப் போல நொறுக்கிப் போடுவார்.

கிறிஸ்துவின் இரண்டு வருகைகளையும் மிகத் தெளிவான வகையில் சேர்த்துக் கூறும் பகுதியை எபிரெயர் 9:26,28 ஆகிய வசனங்களில் காண்கிறோம்: *"அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபட வேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம் மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்."*

கிறிஸ்து பாவத்தை நீக்கும் பலியாகத் தம்மை ஒப்புக்கொடுக்கும் பொருட்டு ஒருமுறை உலகத்தில் பிரவேசித்தார். இது அவருடைய முதலாம் வருகை. அவர் இரண்டாம் முறை வருகைபுரிவார்; ஆனால் பாவத்தைச் சுமக்கும்படியாக அல்ல, அவருக்காகக் காத்திருப்போருக்கு இரட்சிப்பைக் கொண்டு வருவதற்காகவே அவர் வருவார் (இலகு தமிழ்).

# 20

# கிறிஸ்துவின் வருகையின் வளர்ச்சிப் படிவங்கள்



கிறிஸ்துவின் முதல் மற்றும் இரண்டாம் வருகைகளுக்கு இடையிலான வேறுபாட்டை அறிவது அவசியம் என்று முந்தின அதிகாரத்தில் கண்டோம். முதலாவது வருகை வரலாறு 2000 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற நிகழ்வு. இரண்டாவது வருகை தீர்க்கதரிசனம்; இன்னமும் அது எதிர்காலத்திற்கு உரியதாகவே விளங்குகிறது.

எனினும் அந்த இரண்டாம் வருகை ஒரே நிகழ்ச்சி அல்ல என்பதை நாம் அறிய வேண்டியது அவசியம். மாறாக, அது நான்கு கட்டங்களைக் கொண்ட நீண்டதொரு காலமாகும். ஆகவே இந்த அதிகாரத்தில் அந்த வளர்ச்சிப் படிவங்களைப் பகுத்துக் காண்போம்.

புதிய ஏற்பாட்டு மூலமொழியில் “வருகை” என்னும் பொதுவான சொல் “முன்னிலை” அல்லது “பக்கத்தில் வருதல்” என்று பொருள்படும் (parousia). ஒரு வருகையையும் பின்னர் தொடர்ந்து அந்த இடத்தில் இருப்பதையும் இச்சொல் குறிப்பிடுகிறது. பெரும்பாலும், பேரரசர் வருகைபுரிவதையும் அந்த இடத்தைச் சுற்றிப் பார்க்கிறதையும் குறிப்பிடும்படியே இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

ஆங்கில மொழியிலும் வருகை என்னும் சொல் இவ்வாறாகவே பயன் படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கலிலேயாவுக்குக் கிறிஸ்து வருகை

புரிந்த செயல், அங்கிருந்த மக்களுக்கு உடல்நலத்தைக் கொடுத்தது. இங்கு, அவர் கலிலேயாவுக்கு வருகை தந்த நாளை மட்டும் நாம் குறிப்பிடாமல், அந் தப் பகுதியில் அவர் செலவிட்ட நாட்கள் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் குறிப்பிடுகிறோம்.

ஆகவே நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்துச் சிந்திக் கிறபோது, நாம் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைக் குறித்துச் சிந்திக்காமல், ஒரு குறிப்பிட்ட நீண்ட காலத்தைப் பற்றியே சிந்திக்கிறோம். அந்த நீண்ட காலத் தில் நான்கு வளர்ச்சிப் படிகள் உள்ளன:

1. ஒரு தொடக்கம்.

2. ஒரு தொடர் நிகழ்ச்சி.

3. ஒரு வெளிப்பாடு.

4. ஓர் உச்ச கட்டம்.

**1. கிறிஸ்துவின் வருகையின் தொடக்கம் (Rapture)**

கிறிஸ்துவின் வருகையின் தொடக்கம் திருச்சபை எடுத்துக்கொள்ளப் படுதல், அதாவது கிறிஸ்து தமது பரிசுத்தவான்களுக்காக வருகிற நிகழ்ச்சி ஆகும். இந்நிகழ்ச்சி Rapture என்னும் சொல்லால் குறிப்பிடப்படுகிறது.

லத்தீன் மொழியில் இந்த வினைச் சொல் "பறித்துக்கொள்ளப்படுதல்" என்று பொருள்படும். லத்தீன் வல்கேட் திருமறையில் 1 தெசலோனிக்கேயர் 4:17 –இல் பறித்துக்கொள்ளப்படுதல் என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்து வானத்திற்கு வருகைபுரிவார். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிருடன் எழுப்பப்படுவார்கள், உயிருடன் இருக்கும் விசுவாசிகள் யாவரும் மறுரூபமடைவார்கள். யாவரும் திருத்தந்தையின் வீட்டிற்குச் செல்வார்கள். இந்நிகழ்ச்சிகள் எப்பொழுது வேண்டுமானாலும் நிகழலாம், இவையாவும் ஒரு கணப்பொழுதில் நடைபெறும்.

*"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லா ரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப் பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவ ருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்"* (1 கொரி. 15:22,23).

*"அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங் கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து,*

*அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிற தாவது: கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரை யடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத் தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்த ருடனேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்''* **(1 தெச. 4:13–18).**

*''அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும் நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால்....''* **(2 தெச. 2:1)**

*''இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமை யாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டு மென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங் களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே''* **(யாக். 5:7,8).**

*''இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரிய முள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்''* **(1 யோவான் 2:28).**

திருச்சபை எடுத்துக்கொள்ளப்படுவதைப் பற்றிய குறிப்புகளைக் கொண்ட மற்ற வேத பகுதிகளாவன: யோவான் **14:1–4; 1** கொரிந்தியர் **15:51–54;** பிலிப்பியர் **3:20,21; 1** தெசலோனிக்கேயர் **1:10;** எபிரெயர் **9:28; 1** யோவான் **3:2;** வெளிப்படுத்தின விசேஷம் **22:7,20**

### 2. கிறிஸ்துவின் வருகையின் தொடர் நிகழ்ச்சி

கிறிஸ்துவின் வருகையின் இரண்டாவது கட்டமாகிய தொடர் நிகழ்ச்சியில் கிறிஸ்துவின் நியாயாசனமும் அடங்கும். அப்பொழுது விசுவாசிகளின்

உண்மையான ஊழியத்திற்கான வெகுமதிகள் வழங்கப்படும். *“எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்”* (1 தெச. 2:19).

*“சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக”* (1 தெச. 5:23).

மேலும் காண்க. ரோமர் 14:10–12; 1 கொரிந்தியர் 3:11–15; 2 கொரிந்தியர் 5:10; 2 தீமோத்தேயு 4:7,8

கிறிஸ்துவின் வருகையின் தொடர் நிகழ்வில் இன்னுமொரு நிகழ்ச்சியைக் குறிப்பிட வேண்டும். ஆட்டுக்குட்டியானவருடைய திருமண விருந்தே அது. அந்நிகழ்ச்சி எங்கு நிகழப்போகிறது என்பதை வெளிப்படுத்தின விசேஷத்தில் காணும்போது, கிறிஸ்துவின் மகிமைநிறைந்த ஆட்சியை நிறுவுவதற்கு முன் அது நடைபெறும் என்று கண்டறிகிறோம். அங்கு வருகை என்னும் சொல் இடம்பெறவில்லையெனினும் அந்நிகழ்ச்சியை தொடர்நிகழ்ச்சியில் சேர்த்துக் கூறுகிறோம்:

*“அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெரு வெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்த முண்டாகி: அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்ய பாரம்பண்ணுகிறார். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின் கலி யாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்”* (வெளி. 19:6–9).

இந்த நிகழ்வுகள் பரலோகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற அதே நேரத்தில் பூமியில் உபத்திரவ கால நிகழ்வுகள் நடைபெறும். இது ஏறத்தாழ ஏழு ஆண்டுக் கால அளவாகும். அக்காலத்தில் பூமியில் மிகவும் தீவிரமான

அளவு தேவன் தமது தண்டனைகளை ஊற்றுவார் (தானி. 9:27; மத். 24:4–28; வெளி. 6–19). அக்காலத்தின் பிந்தைய பாதி மகா உபத்திரவ காலம் எனப்படும். இதுவரை நடந்திராத அளவு தீவிரமாகத் துன்பமும், பேரழிவும் உலகத்தில் உண்டாகும்.

**3. கிறிஸ்துவின் வருகையில் அவருடைய வெளிப்பாடு**

கிறிஸ்துவின் வருகையில் மூன்றாவது கட்டம் கிறிஸ்துவின் வெளிப்பாடு ஆகும். அதாவது, அவர் தமது அதிகாரத்தோடும் பெரிதான மகிமையோடும் இந்த பூமிக்குத் திரும்பிவருவார். அப்பொழுது அவர் அரசர்களுக்கெல்லாம் அரசராகவும் கர்த்தர்களுக்கெல்லாம் கர்த்தராகவும் வருவார். திருச்சபையை எடுத்துக்கொள்ளும்படி அவர் வருகிற நிகழ்ச்சியை இந்த உலகம் காணாது; அது ஒரு நொடிப்பொழுதில் நடந்துமுடிந்துவிடும். ஆனால் கிறிஸ்து இப் புவியை ஆளுகை செய்யும்படி வருகிற நிகழ்ச்சியை ஒவ்வொரு கண்ணும் காணும். எனவேதான் இந்நிகழ்ச்சி அவருடைய வருகையின் வெளிப்பாடு என்று அழைக்கப்படுகிறது.

*“பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்”* (மத். 24:3)

*“மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்”* (மத். 24:27)

*“நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்”* (மத். 24:37).

*“ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்”* (மத். 24:39).

*“இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்த வான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக”* (1 தெச. 3:13).

*“நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்”* (2 தெச. 2:8)

*"நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்"* (2 பேதுரு 1:16).

கிறிஸ்துவின் வருகையின் மூன்றாவது கட்டத்தைக் குறிப்பிடும் வேறு பகுதிகள்: சகரியா 14:4; மல்கியா 4:1–3; அப்போஸ்தலர் 1:11; 2 தெசலோனிக்கேயர் 1:7–9; யூதா 14; வெளிப்படுத்தின விசேஷம் 1:7; 19:11–16

கிறிஸ்துவின் வருகையில் மூன்றாவது கட்டத்தைக் குறிப்பிட மனுஷகுமாரன் என்னும் சொற்றொடரே எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**4. கிறிஸ்துவின் வருகையின் உச்சகட்டம்**

கிறிஸ்துவின் வருகையின் உச்சகட்டம் இறுதியானது. அது வானங்களும் பூமியும் அக்கினியால் அழிக்கப்படும் நிகழ்ச்சியே ஆகும். இந்நிகழ்ச்சி கிறிஸ்து இப்பூமியை ஆயிரமாண்டுகள் ஆட்சி செலுத்தும் காலத்திற்கு பிறகு நடைபெறும். இது 2 பேதுரு 3:4, 7–13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளது:

*"அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்"* (2 பேதுரு 3:4).

*"இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம்போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து*

*உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்"* (2 பேதுரு 3:7–13).

கிறிஸ்துவின் வருகையை மறுத்துரைக்கும் பரியாசக்காரர்கள் கடைசி நாட்களில் எழுவார்கள் என்பது பற்றிய செய்தியை நாம் இந்த அதிகாரத்தில் படிக்கிறோம். அவருடைய வருகையின் எந்தக் கட்டத்தை அவர்கள் குறிப் பிடுகிறார்கள்?

அவர்கள் திருச்சபை எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறிப்பிடுகிறார்களா? அவர்களுக்கு அதைக் குறித்து எதுவும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. கிறிஸ்து ஆட்சிபுரியும்படி வருகிறதை அவர்கள் குறிப்பிடுகிறார்களா? அவர்கள் அதைக் குறித்துப் பேசவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் எதை ஏளனமாகப் பேசுகிறார்கள் என்பதை இந்த வேத பகுதியின் பின்னணி தெளிவுபடுத்துகிறது. தீய செயல்களைச் செய்கிறவர்களைக் கர்த்தர் இறுதியாகத் தண்டிக்கப்போகிற நிகழ்ச்சியையே அவர்கள் ஏளனம் செய்கிறார்கள். தேவனுடைய தண்டனையின் உச்சகட்டத்தையே அவர்கள் குறிப்பிடுகிறார்கள். "உலகத்தின் முடிவு" என்றும் இது பெயரிட்டு அழைக் கப்படுகிறது. அவர்கள் எதைக் குறித்தும் கவலைகொள்ளத் தேவையில்லை என்கிறார்கள். உலகத்தின் வரலாற்றில் தேவன் குறுக்கிடவில்லை என்றும், அவர் இனிமேலும் குறிக்கிட மாட்டார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே அவர்கள் தொடர்ந்து தீய சொற்களைப் பேசவும் தீய செயல்களைச் செய்யவும் முற்படுகிறார்கள்.


அவர்கள் செய்கிற ஏளனச் செயல்களுக்குப் பேதுரு இங்கு விடை கூறுகிறார். இது கால வரிசையில் வெகு தொலைவில் நிகழப்போகிறது என்றும், கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சிக்காலத்திற்குப் பிறகு இது நிகழும் என்றும், இப்பொழுது நாம் அறிந்திருக்கிற வானங்களும் பூமியும் முழுவதும் அழிக்கப்படும் என்றும் கூறுகிறார். கிறிஸ்துவின் வருகையின் உச்சகட்டம் ஆயிரமாண்டு ஆட்சிக்காலத்திற்குப் பிந்தையது. நித்திய நிலையின் தொடக் கத்தில் அது நிகழும்.

"ஆனால், முதல் கட்டம், மூன்றாவது கட்டம் அதாவது, திருச்சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியும், கர்த்தருடைய வெளிப்பாடும் வெவ் வேறு காலத்தவை என்பது உங்களுக்கு எவ்வாறு தெரியும்?" என்று ஒருவர் உங்களிடம் வினவலாம். திருமறையில் அவ்விரு நிகழ்ச்சிகளும் வெவ் வேறானவை என்பது கீழ்க்காணும் வழிகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது:

| திருச்சபை விசுவாசிகள் வானிற்கு எடுத்துக் கொள்ளப்படுதல் | கிறிஸ்து வெளிப்படுதல் |
|---|---|
| 1. கிறிஸ்து ஆகாயத்தில் இறங்கிவருகிறார் (1 தெச. 4:17). | 1. அவர் பூமிக்கு வருகிறார் (சக. 14:4). |
| 2. அவர் தம்முடைய பரிசுத்தவான் களுக்காக வருகிறார் (1 தெச. 4:16,17). | 2. அவர் தம்முடைய பரிசுத்தவான்களோடு வருகிறார் (1 தெச. 3:13; யூதா 14). |
| 3. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி ஓர் இரகசியம். அதாவது, பழைய ஏற் பாட்டுக் காலத்தில் அது அறியப்படவில்லை (1 கொரி. 15:51). | 3. கிறிஸ்து வெளிப்படுதல் இரகசியமல்ல, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் இது குறிப்பிடப்பட்டுள்ளது (சங். 72; ஏசாயா 11; சக. 14). |
| 4. கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான் களுக்காக வரும் நிகழ்ச்சி, வானத்தில் சில அறிகுறிகள் ஏற்பட்ட பின்னரே நிகழும் என்று சொல்லப்படவில்லை. | 4. கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான் களுடன் வரும் நிகழ்ச்சி, வானத்தில் உண்டாகும் சில அறிகுறிகளால் முன்னறி விக்கப்படும் (மத். 24:29,30). |
| 5. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி கிறிஸ்துவின் நாளோடு இணைத்துச் சொல்லப்படுகிறது (1 கொரி. 1:8; 2 கொரி. 1:4; பிலி. 1:6,10). | 5. கிறிஸ்து வெளிப்படுதல் கர்த்தருடைய நாளுடன் இணைத்துப் பேசப்படுகிறது (2 தெச. 2:1–12 – நடு நிலைப் பிரதி). |
| 6.விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி ஆசிர்வாத வேளையாக விளங்கும் (1 தெச. 4:18). | 6. கிறிஸ்து வெளிப்படுதலில் முக்கியமாக ஆக்கினை வலியுறுத்தப்படுகிறது (2 தெச. 2:8–12). |
| 7. ஒரு கண் இமைக்கும் பொழுதில் விசு வாசிகள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் (1 கொரி. 15:51). உலகம் இதனைக் காணாது என்பதை இது உறுதிப்படுத்துகிறது. | 7. கிறிஸ்து வெளிப்படும் நிகழ்ச்சியை இவ்வுலகம் முழுவதும் காணும் (மத். 24:27; வெளி. 1:7). |
| 8. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப் படும் நிகழ்ச்சி முதன்மையாக சபையோடு தொடர்புடையது (யோவான் 14:1–4; 1 கொரி.15:51–58; 1 தெச. 4:13–18). | 8. கிறிஸ்துவின் வெளிப்பாடு முதன்மையாக இஸ்ரவேலுடன் தொடர்புடையது; பின்னரே புற வின நாடுகளுடனும் தொடர்புடையதாக விளங் கும் (மத். 24:1–25:46). |
| 9. கிறிஸ்து பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாக வெளிப்படுவார் (வெளி. 22:16). | 9. கிறிஸ்து வெளிப்படும்போது, தமது செட்டை களின் கீழ் ஆரோக்கியத்தைக் கொண்டிருப்பவராக, நீதியின் சூரியனாக உதிப்பார் (மல். 4:2). |

# 21

# கர்த்தருடைய நாள், கிறிஸ்துவின் நாள், தேவனுடைய நாள்



புனிதத் திருமறை வசனங்களைக் கற்றுக்கொள்கிற நாம், அவற்றை முறையாகப் பகுத்து அறிவதன் முக்கியத்துவத்தை மதித்துப் பாராட்டக் கூடிய நிலைக்கு இப்பொழுது வளர்ந்திருக்க வேண்டும். கர்த்தருடைய நாள், கிறிஸ்துவின் நாள், தேவனுடைய நாள் ஆகியவற்றை நம்மால் பகுத்து அறிய முடியுமென்றால், எதிர்கால நிகழ்வுகளைக் கற்க வந்திருக்கிற நாம், அவற்றைப் புரிந்துகொள்வதற்கான சிறப்பான தொடக்கத்தைப் பெற்றுவிட்டோம் எனலாம்.

**கர்த்தருடைய நாள்**

நிச்சயமாக இது 24 மணி நேரம் கொண்ட நாள் அல்ல. மாறாக, சில தனித்துவமான பண்புகளைக் கொண்ட காலமாகும்.

பழைய ஏற்பாட்டில், தண்டனைகள் வழங்கக்கூடிய எந்தவொரு நேரத்தையோ, பாழ்படுத்துதல், இருண்ட நிலை ஆகியவற்றையோ குறிப்பிட "கர்த்தருடைய நாள்" என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது (ஏசாயா 2:12; யோவேல் 2:1,2). தேவன்தாமே இஸ்ரவேலின் பகைவர்களுக்கு எதிராகச் சென்று, அவர்களைத் தீர்க்கமாகத் தண்டித்த நேரத்தையும் இது குறித்தது (செப். 3:8–12; யோவேல் 3:14–16; சக. 12:8,9). தம்முடைய

சொந்த மக்கள் சிலை வணக்கம் செய்தபோதும், பின்வாங்கிப் போன காலத்திலும், தேவன் அவர்களைத் தண்டித்த சந்தர்ப்பங்களையும் குறிப்பிட இச்சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது (யோவேல் 1:15–20; ஆமோஸ் 5:18; செப். 1:7–18). பாவத்திற்கான தண்டனை மற்றும் கர்த்தர் தமது நோக்கத்தை நிறைவேற்றி வெற்றி பெறுதல் ஆகியவற்றையே பொதுவாகக் கர்த்தருடைய நாள் குறிக்கிறது (யோவேல் 2:31,32).

புதிய ஏற்பாட்டில், ஏறத்தாழ "காலங்களும் சமயங்களும்" என்று குறிப்பிடப்பட்டுள்ள அதே காலத்தைக் குறிப்பிடும்படி கர்த்தருடைய நாள் என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது (அப். 1:7; 1 தெச. 5:1). திருச்சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு இது தொடங்குகிறது, கீழ்க்காணும் நிகழ்ச்சிகளை உட்கொண்டது:

1. உபத்திரவ காலம், இது யாக்கோபின் இக்கட்டுக் காலம் என்றும் அழைக்கப்படுகிறது (தானி. 9:27; மத். 24:4–28; 1 தெச. 5:1–11; 2 தெச. 2:2; வெளி. 6:1–19:16). இது கர்த்தருடைய நாளின் முதல் கட்டம். எதிர்பாராதபடி இது சடிதியில் நிகழக்கூடியது; இரவில் திருடன் வருகிற விதமாக நிகழும். அந்நிகழ்ச்சி நடைபெறாது என்று எண்ணிக்கொண்டிருக்கிற வேளையில், சடிதியில், தவிர்க்க முடியாதபடி, தப்பிக்க இயலாதபடி நிகழும். அந்தக் காலம் ஏறத்தாழ ஏழாண்டுகளாகும். அக்காலத்தில் தேவன் விசுவாச மறுதலிப்புச் செய்யும் யூத மார்க்கத்தின் மேலும், கிறிஸ்தவ உலகத்தின் மேலும், புறவினத்தார் மேலும் தமது தண்டனையை ஊற்றுவார். இந்தக் கடுமையான மற்றும் தொடர்ந்து தீவிரமாக அதிகரிக்கக் கூடிய தண்டனைகள் வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள், ஏழு கலசங்கள் ஆகிய அடையாளங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. உபத்திரவ காலத்தின் பிந்தைய பாதி மகா உபத்திரவ காலம் எனப்படும். உலகம் இது வரை அனுபவித்திராததும், இனிமேல் அனுபவிக்கக் கூடாததுமான மிகக் கடுமையான உபத்திரவங்கள் நிறைந்த கேடான காலமாக விளங்கும்.

2. கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு வருகைபுரிதல் (மல். 4:1–3; 2 தெச. 1:7–9). உபத்திரவ காலத்தின் முடிவில் கர்த்தராகிய இயேசு தம்முடைய வல்லமைமிக்க தூதர்களோடு பூமிக்குத் திரும்புவார். *"தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு... ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படுவார்" (2 தெச. 1:7,8).* அவர் தமது அரசை இப்புவியில் நிறுவுவதற்கு முன், தம்முடைய எதிரிகள் யாவரையும் அழிப்பார்.

3. கிறிஸ்துவின் ஆயிரமாண்டு அரசாட்சி. இந்தக் காலமும் கர்த்தருடைய நாளில் இடம் பெறும் (யோவேல் 3:18; ஒப்பிடுக. வச. 14; சக. 14:8,9). கர்த்தருக்கு எதிராகக் கலகம் செய்யும் எவரொருவரும் தண்டனை அடையக்கூடிய காலம் இது (ஏசாயா 65:11–12). அரசர் தமது இருப்புக்கோலோடு அரசாளுவார் (வெளி. 19:15).

4. வானங்களும் பூமியும் இறுதியாக அக்கினியால் அழிக்கப்படுதல் (2 பேதுரு 3:7,10). கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சி நிறைவுபெறும்போது, பெருந்தொனியோடு வானங்களும் பூமியும் விலகிப் போகும். அதன் மூலங்கள் யாவும் தீவிரமான அக்கினியால் உருகிப்போகும். இதுவே கர்த்தருடைய நாளின் இறுதிக் கட்டமாகும்.

**கிறிஸ்துவின் நாள்**

தேவனுடைய குமாரனை நிராகரித்த உலகத்தின் மீது நியாயத்தீர்ப்பைச் செலுத்தும் காலமே கர்த்தருடைய நாள் ஆகும். கிறிஸ்துவின் நாளோ அவரிடத்தில் விசுவாசம் வைத்துத் திருச்சபையின் அங்கங்களாக ஆனவர்கள் ஆசீர்வாதங்களைப் பெறுகின்ற காலமாகும். கர்த்தராகிய இயேசுவின் நாள், இயேசு கிறிஸ்துவின் நாள், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவை யாவும் கிறிஸ்துவின் நாளே ஆகும். இந்த நாளின் முதன்மையான இரண்டு அம்சங்கள் யாதெனில்:

1. விசுவாசிகள் வானிற்கு எடுத்துக் கொள்ளப்படுதல் (2 கொரி. 5:5; பிலி. 1:6,10). கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். உயிருடன் இருக்கும் விசுவாசிகள் மறுரூபமடைவார்கள். இரு கூட்டத்தாரும் கர்த்தரைச் சந்திக்கும்படி ஆகாயத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். தொடர்ந்து அவரோடு சேர்ந்து பரலோகத்திலுள்ள பிதாவின் வீட்டிற்குச் செல்வார்கள்.

2. கிறிஸ்துவின் நியாயாசனம் (1 கொரி. 1:8; 2 கொரி. 1:14; பிலி. 2:16). விசுவாசிகள் யாவரும் மதிப்பாய்வு செய்யப்பட்டு வெகுமதிகள் வழங் கப்படுவதற்கென்று "பேமா" (Bema) என்றழைக்கப்படும் நியாயாசனத் தின் முன்னிலைக்குச் செல்லவேண்டும். இது அவர்களுடைய இரட்சிப்பைக் குறித்த விசாரணை அல்ல, அவர்களுடைய கிரியைகளே விசாரிக்கப்படும். கிறிஸ்துவின் ஒப்புதலைப் பெற்ற எல்லா ஊழியங்களுக்கும் வெகுமதிகள் தரப்படும். தங்கள் வாழ்க்கையை வீணாக்கியவர்கள் இழப்பை அடைவார்கள். ஆனால் அவர்களோ இரட்சிக்கப்படுவார்கள். "அதுவும் அக்கினியில் அகப் பட்டுத் தப்பினது போல் இருக்கும்" (1 கொரி. 3:15). 2 தெசலோனிக்யேர் 2:2

–ஆம் வசனத்தில் ‘‘கிறிஸ்துவினுடைய நாள்’’ என்னும் சொற்றொடர் இடம் பெற்றிருப்பது, இந்த மொழிபெயர்ப்பு நமக்கு ஓர் ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். அதன் காரணமாகப் பெரும்பாலான திருமறை அறிஞர்கள் இங்கு, ‘‘கர்த்தருடைய நாள்’’ என்னும் சொற்றொடரே இடம் பெற்றிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். தெசலோனிக்கேய விசுவாசிகள் தாங்கள் அனுபவித்த கடும் உபத்திரவங்களின் காரணமாக, கர்த்தருடைய நாளின் தண்டனைகள் தொடங்கிவிட்டன என்று எண்ணினார்கள். கர்த்தருடைய நாள் தொடங்குவதற்கு முன்னர் இரண்டு நிகழ்வுகள் நிறைவேற வேண்டுமென்று பவுல் அவர்களிடம் உறுதிகூறுகிறார்: முதலாவது உலகத்தின் பெரும்பகுதியில் விசுவாச மறுதலிப்பு நிகழும், இரண்டாவது பாவ மனிதனாகிய அந்திக் கிறிஸ்து வெளிப்படுதல்.


கிறிஸ்துவினுடைய நாள் வரப்போவது குறித்து தெசலோனிக்கேயர் அச்சமடைந்திருக்க வேண்டியதில்லை. உண்மையில், கிறிஸ்துவின் நாள் வந்திருக்குமென்றால், அவர்கள் அனுபவித்த எல்லாச் சோதனைகளிலிருந்தும் என்றென்றைக்குமாக விடுதலை கிடைத்திருக்கும்.

**தேவனுடைய நாள்**

தேவனுடைய நாளும் கர்த்தருடைய நாளும் ஒன்று என்றோ அல்லது தேவனுடைய நாளும் கிறிஸ்துவின் நாளும் ஒன்று என்றோ நாம் குழப்பமடையக் கூடாது. தேவனுடைய நாள் இறுதி வெற்றியையே குறிக்கிறது. தீயவை யாவும் என்றென்றைக்குமாக இல்லாமற் போகும். வானங்களும் பூமியும் அக்கினியால் அழிக்கப்படும். அதனைத் தொடர்ந்து தேவனுடைய நாள் தொடங்கும் (2 பேதுரு 3:12). தேவனுடைய நாளும் நித்திய நிலையும் ஒன்றுதான்.

22

# இரட்டை நிறைவேறுதல்கள்



தீர்க்கதரிசன வசனங்களை நாம் கற்க முற்படுகையில், சில தீர்க்க தரிசனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவேறுதல்களைக் கொண்டுள்ளது என்பதை அறிவது, மிகுந்த பயன் தரும் வழிகளில் ஒன்றாகும். சில தீர்க்க தரிசனங்கள் தொடக்க நிலை மற்றும் ஒரு பகுதி நிறைவேறுதலையும் கொண்டிருப்பது வழக்கத்திற்கு மாறானதல்ல. இது ''இரட்டைப் பொருள்தரும் குறிப்புகளுக்கான விதி'' என்று அழைக்கப்படுகிறது.

**ஆவியானவர் ஊற்றப்படுதல்**

தேவ ஆவியானவர் ஊற்றப்படுதல் குறித்த தீர்க்கதரிசனம் இதற்கோர் உன்னதமான எடுத்துக்காட்டாகும்: *''அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகை ஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்'' (யோவேல் 2:28–32 முற்பகுதி).*

பெந்தெகொஸ்தே நாளில் இந்தப் பகுதியை மேற்கோள் காட்டிய பேதுரு (அப். 2:4–21), *"தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" (அப். 2:16)* என்று கூறினார். ஆனால் யோவேலின் தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறிவிட்டது என்று அவரால் கூற முடிய வில்லை. ஏனெனில் யோவேல் கூறிய அனைத்தும் பெந்தெகொஸ்தே நாளில் நடைபெறவில்லை.

ஆவியானவர் மாம்சமான யாவர்மேலும் அன்று ஊற்றப்படவில்லை, மாறாக மூவாயிரம் யூதர்கள் மேல் மட்டுமே அவர் ஊற்றப்பட்டார். வானத்தில் ஏதொரு அற்புதமும் நிகழவில்லை – சூரியன் இருளாகவில்லை, சந்திரன் இரத்தமாக மாறவில்லை. பூமியில் அதிசயங்கள் நிகழவில்லை – இரத்தம், அக்கினி, புகைக்காடு போன்ற எதுவும் காணப்படவில்லை.

யோவேலின் தீர்க்கதரிசனத்தின் ஒரு பங்கு நிறைவேறுதலே பெந்தெ கொஸ்தே நளில் நடைபெற்றது என்பதே இதன் பொருள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போதுதான் இதனுடைய முழுமையான நிறைவேறுதல் நடைபெறும். முன்னுரைக்கப்பட்ட அடையாளங்களும் அற்புதங்களும் அவரு டைய வருகைக்கு முன் நிகழும். அதனைத் தொடர்ந்து ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தில் பூமியில் வாழும் மனுமக்கள் யாவர் மேலும் ஆவியானவர் ஊற்றப்படுவார்.

**குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்த பிறப்புகள்**

"இரட்டைப் பொருள்தரும் குறிப்புகளுக்கான விதியை" அடிப்படையாகக் கொண்ட மற்றோர் எடுத்துக்காட்டு கன்னியைப் பற்றிய புகழ்வாய்ந்த வச னத்தில் இடம்பெற்றுள்ளது (ஏசாயா 7:14): *"ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்."* இவ்வசனத்தில் கன்னிகை என்னும் சொல்லைச் சில புதிய மொழிபெயர்ப்புகள் "இளம் பெண்" என்று மொழிபெயர்த்துள்ளன.

ஆகாஸ் என்னும் அரசனைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்க்க தரிசனத்திற்கு உடனடியாக நிகழக் கூடிய ஒரு பொருள் இருந்தது. அதாவது ஒரு குழந்தை பிறக்கும், அதற்கு "கர்த்தர் நம்மோடிருக்கிறார்" என்று பெயர் சூட்டப்படும். யூதாவுக்கு வெற்றி மிக அருகில் இருக்கிறது என்பதே இதன் பொருள் என்று ஆகாஸ் அறிந்துகொண்டான். நன்மை எது, தீமை எது என்று பிரித்து அறியக்கூடிய வளர்ச்சியை அந்தக் குழந்தை அடைவதற்கு முன்

சீரியரும் இஸ்ரவேலரும் செய்திருந்த கூட்டணி முறியடிக்கப்படும். மேலும் அந்த நாட்டின் வளத்தை அக்குழந்தை உண்டு வாழக்கூடிய நிலையை ஒரு சில ஆண்டுகளில் அடையும் (வச. 15).

ஆனால் இந்த வசனத்தின் **முழுமையான நிறைவேறுதல்** கிறிஸ்துவின் பிறப்பில் வெளிப்பட்டது: *"தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக் கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது; அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானு வேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்" (மத். 1:22,23).*

ஏசாயாவால் பயன்படுத்தப்பட்ட Almah என்னும் எபிரெயச் சொல் இரண்டு நிறைவேறுதல்களுக்கு அனுமதி தருகிறது. அது ஓர் இளம்பெண் என்றோ கன்னிகை என்றோ பொருள்படும். ஆனால் மத்தேயு நூலில் இடம்பெற்றுள்ள parthenos என்னும் கிரேக்கச் சொல் கன்னிகை என்ற பொருளை மட்டுமே கொண்டது.

### வெற்றிகரமான நுழைவுகள்

இரண்டு நிறைவேறுதல்களுக்கான மூன்றாவது எடுத்துக்காட்டு சங்கீதம் 118:26 – இல் காணப்படுகிறது. *"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்."*

முதல் குருத்தோலை ஞாயிற்றுக்கிழமை அன்று இயேசு எருசலேமுக்குள் நுழைந்த போது மக்கள் திரள் கூட்டம், *"தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" (மத். 21:9).*

இத்துடன் இத்தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறவில்லை. எரு சலேமுக்காக இயேசு பின்னர் வருத்தமுற்றவராகப் பேசிய சொற்களால் இதை அறியலாம்: *"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 23:39).*

இரட்சகர் பூமிக்கு வல்லமையோடும் மகிமையோடும் வருகிறபோது தம்மை மேசியாகவும் அரசராகவும் வரவேற்கிற மக்களிடம் இந்தத் தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறும்.

## எருசலேமின் அழிவு

எருசலேமின் அழிவைக் குறித்த தீர்க்கதரிசனம் இரண்டு நிறைவேறுதல்களுக்கு இன்னுமோர் எடுத்துக்காட்டாகும். லூக்கா **21:20–24** –இல் அந்த நகரம் பாழாய்ப் போகுமென்று இயேசு முன்னறிவித்தார். தீத்துவும் ரோமப் போர் வீரர்களும் கி. பி. **70** அந்நகரத்தின் மேல் படையெடுத்து வந்தபோது, அதைக் கொள்ளையிட்டு, தேவாலயத்தைத் தரைமட்டமாக்கியதில் அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவுக்கு வந்தது. ஆனால் எருசலேமின் அழிவு முடிவடையவில்லை. அந்த நகரமானது உபத்திரவ காலத்தில் மீண்டும் நாற்பத்திரண்டு மாதங்கள் புறவினத்தாரின் கால்களுக்குக் கீழாக மிதிக்கப்படும் என்னும் வருத்தத்திற்குரிய செய்தியை வெளிப்படுத்தின விசேஷம் **11:2** தெளிவுபடுத்துகிறது.

### கிறிஸ்துவுக்கு எதிரான கிளர்ச்சி

சங்கீதம் **2:1–2** அப்போஸ்தலர் **4:25,26** –இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது: *“புறஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்... கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனை பண்ணி...”*

இந்தச் சொற்கள் அப்போஸ்தலர் **4:28** –இல் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நிகழ்ச்சியோடு பொருத்திக் காட்டப்பட்டுள்ளது. *“ஏரோதும், பொந்தியு பிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம் பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங்கூடினார்கள்.”*

சங்கீத ஆசிரியனின் சொற்கள் அப்பொழுது தொடக்கநிலை மற்றும் ஒரு பங்கு நிறைவேறுதலை அடைந்தன. இதனுடைய முழுமையான நிறைவேறுதல் உபத்திரவ காலத்தின் முடிவில் நிறைவேறும். அப்பொழுது உலகளாவிய ஆட்சியைக் கிறிஸ்து எடுத்துக்கொள்ளக் கூடாது என்று உலக ஆட்சியாளர்கள் யாவரும் ஒன்றுகூடி வீண் முயற்சி செய்வார்கள்.

## இஸ்ரவேல் கூட்டிச்சேர்க்கப்படுதல்

இஸ்ரவேல் கூட்டிச் சேர்க்கப்படும் நிகழ்ச்சியைக் குறித்துப் பேசுகிற தீர்க்கதரிசனங்களில் இரட்டைப் பொருள் தரும் குறிப்புகளுக்கான விதிக்கான கடைசி எடுத்துக்காட்டைக் காணலாம் (ஏசாயா **43:5–7**; எரே. **16:14,15**; எசே.

36:8–11; 37:21). யூதர்களில் மீதியானவர்கள் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேலுக்குத் திரும்பி வந்தபோது இந்தத் தீர்க்கதரிசனங்களில் ஒரு பங்கு நிறைவேறியது.


எஸ்றா மற்றும் நெகேமியா ஆகிய நூல்களில் இது விவரித்துக் கூறப் பட்டுள்ளது. ஆனால் இதன் பெரும்பகுதி நிறைவேறுதல் எதிர்காலத்திற்குரியது. இதுவரை யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்ட நிகழ்வுகள் யாவும் சிறிதளவே ஆகும். யாக்கோபின் இக்கட்டுக் காலத்தில், தேவன் தாமே உலகின் அனைத் துப் பகுதிகளிலிருந்தும் இஸ்ரவேல் நாட்டிற்கு, தமது பூமிக்குரிய மக்க ளைச் கூட்டிச் சேர்ப்பார் (மத். 24:31; உபா. 30:3,4; எசே. 36:24–32; 37:11–14). அப்பொழுதுதான் இந்தத் தீர்க்கதரிசனங்கள் முழுமையும் முடிவுமான நிறைவேறுதல் அடையும்.

# பகுதி ஐந்து

# திருமறையில் காணப்படும் மற்ற வேறுபாடுகள்

# 23

# ஏழு நியாயத்தீர்ப்புகள்



திருமறையில், வெவ்வேறான பல நியாயத்தீர்ப்புகள் கூறப்பட்டிருப்பதை அறிவது முக்கியமானது. இந்த நியாயத்தீர்ப்புகள் எந்த மக்களோடு தொடர்புடையவை, எந்தக் காலத்தைச் சேர்ந்தவை, எந்த இடங்களில் நிகழ்பவை, எதை அடிப்படையாகக் கொண்டு இவை நடைபெறும், இவற்றால் என்ன விளைவுகள் நேரிடும் என்றெல்லாம் பகுத்து அறிவது மிகவும் முக்கியமானதாகும். புறவினத்தார் நியாயந்தீர்க்கப்படுதலும், மகாபெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பும் ஒன்று என்று பலர் எண்ணுகிறார்கள். கவனத்தோடு சோதித்துப் பார்த்தால் இவையிரண்டும் வெவ்வேறு என்பது வெளிப்படும்.

விசுவாசிகளும் அவிசுவாசிகளும் தேவனுக்கு முன்பாக நின்று, தங்களுக்கு கிடைக்கக்கூடிய தீர்ப்பைப் பெறத்தக்கதாக ஒரு "பொதுவான நியாயத்தீர்ப்பு" என்பது போன்று எதுவும் இல்லையென்று பகுத்தறியும் மாணாக்கர் அறிவார் என்பது நிச்சயம்.

தேவனுடைய வசனத்தில் காணக்கூடிய முக்கியமான ஏழு நியாயத்தீர்ப்புகளைக் குறித்து இங்கு நாம் சிந்திப்போம்.

**மனிதனுடைய பாவத்திற்கான நியாயத்தீர்ப்பு**

பாவத்திற்கான தண்டனையைக் கர்த்தராகிய இயேசு தமது சரீரத்தில் ஏற்றுக்கொண்டவராகக் கல்வாரி சிலுவையில் தொங்கியபோது, தேவன்

பாவத்திற்கான நியாயத்தீர்ப்பைச் செலுத்தினார். உலகத்தின் பாவங் களுக்காக இரட்சகர் மரணமடைந்தார்:

*“கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங் களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லா ருக்காகவும் மரித்தாரென்று நிதானிக்கிறோம்”* (2கொரி. 5:14,15).

*“நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்”* (1 யோவான் 2:2).

அவர் மரணமடைந்தபோது பாவத்திற்கான தண்டனையை வெற்றி கரமாகச் செலுத்தித் தீர்த்தார். பாவத்திற்கு எதிராக தேவனுடைய நீதியின் உரிமைகோரல்கள் யாவற்றையும் அவர் சிந்திய இரத்தம் நிறைவேற்றிவிட்டது. பாவத்தைப் பொறுத்துக்கொள்ளாமலும் அல்லது தம்முடைய பரிசுத்தத்தை விட்டுக்கொடுக்காமலும் தேவன்தாமே பக்தியற்ற பாவிகளை இரட்சிப்பதற் கான வழியை அவர் அங்கு உண்டுபண்ணினார். அவருடைய மீட்பின் செயல் பாவத்தைப் போக்குவதற்கான அளவிடமுடியாத ஆற்றலைப் பெற்றிருக்கிறது.

எனினும், சிலுவையில் கிறிஸ்து செய்துமுடித்த செயல் எல்லா மனிதர்களையும் தானாகவே இரட்சிப்பதில்லை. அவருடைய பதிலாள் மரணம் உலகத்தின் பாவங்கள் அனைத்துக்கும் **போதுமானது**. ஆனால் யாரெல்லாம் மனம்வருந்தி, கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் மட்டுமே அந்தச் செயலின் பயனைப் பெற்றுக் கொள்வார்கள்.

ஒரு மனிதன் கிறிஸ்துவைத் தனது கர்த்தரும் இரட்சகருமாக ஏற் றுக்கொள்கிறபோது, அவன் என்றென்றைக்குமாகப் பாவத்தின் குற்ற வுணர்விலிருந்தும், தண்டனையிலிருந்தும் விடுதலை பெறுகிறான். அவன் தன்னுடைய பாவங்களுக்கான நித்திய தண்டனையை ஒருக்காலும் அடைய மாட்டான், ஏனென்றால் இயேசு அந்தத் தண்டனையை ஏற்கனவே ஏற்றுக்கொண்டார். தேவன் இரண்டு முறை தண்டனையைச் செலுத்த வேண்டுமென்று கோரமாட்டார். விசுவாசி தனது விசுவாசத்தின் மூலம் என் றென்றைக்குமான முடிவான சட்டப்படியான பாவமன்னிப்பைப் பெறுகிறான்.

**விசுவாசி தன்னைத்தானே நியாயந்தீர்த்தல்**

ஒரு மனிதன் இரட்சிப்படைந்த பிறகு, அவன் தனது சொந்த வாழ்க்கையில் தொடர்ந்து தன்னைத்தான் நியாயந்தீர்க்க வேண்டியவனாக இருக்கிறான். அவன் வாழ்க்கையில் பாவம் நிகழ்ந்துவிட்டது என்பதை உணர்ந்தவுடனே அவன் அந்தப் பாவத்தை அறிக்கை செய்து, அதை விட்டுவிட வேண்டும் என்பதே இதன் பொருள். இதனைப் பவுல் 1 கொரிந்தியர் 11:27 – 32 ஆகிய வசனங்களில் குறிப்பிடுகிறார்:

*"இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந் தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்"* (1 கொரி. 11:27–32).

நம்முடைய வாழ்க்கையில் பாவம் இருக்கிறது என்று ஒப்புக்கொள்கிறபோது அதை நியாயந்தீர்க்கிறோம்; பின்னர் அதை அறிக்கை செய்து விட்டு விடுகிறோம். இவ்விதமாக தன்னைத்தான் நியாயந்தீர்க்கிற செயல் நம்முடைய வாழ்நாள் முழுவதும் தொடரவேண்டும். இல்லையெனில் நாம் பிதாவின் சிட்சையைச் சந்திக்க நேரிடும். அது எபிரெயர் 12:3–15 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

தன்னுடைய வாழ்க்கையில் இருக்கிற பாவத்தைத் தானே நியாயந் தீர்க்காவிட்டால் கிறிஸ்தவ ஊழியத்திற்கான தகுதியை இழக்க நேரிடும் என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் உணர்ந்தார்: *"மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்"* (1 கொரி. 9:27).

**கிறிஸ்துவின் நியாயாசனம்**

கிறிஸ்துவின் நியாயாசனத்தைக் குறித்துச் சிந்திக்கையில், அதனைக் குற்றவாளிகளுக்கான விசாரணை என்று நினைக்கக்கூடாது, மாறாக அதனை மலர்க் கண்காட்சி என்றோ, விளையாட்டு நிகழ்ச்சி என்றோ எண்ண வேண்டும். அத்தருணத்தில், கர்த்தர் குற்றஞ் செய்தவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்த்து, அவர்களுக்கு தண்டனை வழங்கப் போவதில்லை. அங்கு அவர் **பரிசுப்பொருட்களை** வழங்கப் போகிறார்! அது நீதிமன்றக் காட்சி அல்ல, மாறாக மதிப்பீடு செய்து, வெகுமதிகள் வழங்கும் காலமாக இருக்கும்.

இந்த நியாயாசனத்தின் முன்னிலையில் ஒவ்வொரு விசுவாசியும் நிற்க வேண்டும். *கிரேக்க மொழியில் இது "பேமா (Bema)" என்று அழைக் கப்படுகிறது: "நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே" (ரோமர் 14:10).*

இந்தப் பெரிய நிகழ்ச்சி பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பரலோகத்தில் நடைபெறும் என்பது தெளிவாகத் தெரிகிறது. அந்த நேரத்தில் விசுவாசிகள் மகிமையடைந்த சரீரங்களோடு இருப்பார்கள்.

இறை மக்களுடைய ஊழியம் அங்கு மதிப்பிடப்படும்: *"ஏனென்றால், சரீ ரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2 கொரி. 5:10).*

சிலர் வெகுமதிகளைப் பெறுவார்கள், சிலர் நஷ்டமடைவார்கள்: *"அவனவ னுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின் மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்" (1 கொரி. 3:13–15 முதல் பகுதி).*

அந்த நியாயத்தீர்ப்பின் போது அந்த மனிதனின் இரட்சிப்பு எவ்வகையிலும் பாதிப்பு அடைவதில்லை என்பது 15 –ஆவது வசனத்தின் பின்பகுதியின் மூலம் தெளிவாகத் தெரிகிறது: *"அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்."*

## இஸ்ரவேல் நியாயந்தீர்க்கப்படுதல்

யூத மக்கள் சகித்த வெறுப்பு, மோசமாக நடத்தப்பட்ட விதம், அடைந்த உபத்திரவங்கள் மற்றும் படுகொலைகள் போன்று இதுவரை வேறு எந்த இனமும் சகித்ததில்லை. ஜெர்மனியில் நடந்த இனப்படுகொலை நெஞ்சைப் பிளக்கக்கூடிய துயரம் நிறைந்த ஓர் அத்தியாயமாகும். இணையற்ற வகையில் சஞ்சலமும், பாடுகளும், மரணமும் நிகழ்ந்தன.

இருந்தபோதிலும், வருத்தத்திற்குரிய விசயம் என்னவெனில் முடிவு இனிமேல்தான் நிகழப்போகிறது. திருச்சபை வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு இஸ்ரவேலும் மற்ற நாடுகளும் ஏழாண்டு உபத்திர வத்துக்குள்ளாகச் செல்லும். அதனுடைய பின்பகுதி இதுவரை நிகழ்ந்திராத கடும் உபத்திரவமாக இருக்கும். இதனை *"யாக்கோபுக்கு இக்கட்டுக் காலம்"* என்று எரேமியா அழைக்கிறார். கர்த்தர் தாமே "மிகுந்த உபத்திரவம்" என்று இதைக் குறிப்பிடுகிறார்: *"ஏனெனில், உலகம் உண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்"* (மத். 24:21).

இந்த நாட்களின் முடிவில், மேசியா தோன்றுவார். இஸ்ரவேல் இனத்தார் யாவரும் ஒன்றுகூட்டப்படுவார்கள். கர்த்தர் தாமே அவர்களோடு முகமுகமாய் வழக்காடுவார். அந்த நிகழ்ச்சி நடக்கும் இடத்தைக் கர்த்தர் "ஜனசதளங்களின் வனாந்தரம்" என்று குறிப்பிடுகிறார் (எசே. 20:33–44).

உபத்திரவ காலத்தில் தண்டனை அடைவதற்கான மிகப்பெரிய குற்றங் களில் பிரதானமானது அந்திக்கிறிஸ்துவைத் தொழுதுகொள்ளுவதாக இருக் கும். இந்தக் கீழ்த்தரமான சிலை வணக்கம் செய்யும் பாவத்திற்குள் பெரும் பாலான யூதர்கள் சிக்கிக்கொள்வார்கள் என்று கர்த்தராகிய இயேசு முன் னுரைத்தார்: *"நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை, வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந் தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்"* (யோவான் 5:43).

பாவங்களின் மிக நீண்ட பட்டியலை மல்கியா தந்திருக்கிறார். அரசர் அதற் கான தண்டனையை வழங்குவார் (மல். 2:1– 3:5).

மேசியாவாகிய அரசர் தமது ஆட்சியை நிறுவுவதற்கு முன் தம்மை எதிர்த் துக் கிளர்ச்சி செய்கிற யாவரையும் அழிப்பார். அவருடைய ஆட்சிக்குக் கீழ்ப் படிகிற யாவரும் அவருடைய மகிமை நிறைந்த ராஜ்யத்திற்குள் நுழைந்து

ஆயிரமாண்டுகள் சமாதானத்தையும் வளத்தையும் அனுபவிப்பார்கள். *"இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவார் என்றும், நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது"* (ரோமர் 11:26,27).

**புறவினத்தார் நியாயந்தீர்க்கப்படுதல்**

புறவின மக்கள் நியாயந்தீர்க்கப்படுவதைக் குறித்த முதன்மையான வேத பகுதி மத்தேயு 25:31–46 ஆகும். இந்த நீதிமன்றம் கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது நிறுவப்பட்டு விசாரணை நடத்தும். மனித குமாரனே அதாவது இயேசுதாமே நீதி அரசராகச் செயல்படுவார்: *"அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்றிருப்பார்"* (வச. 31).

புறவினத்தார் எவ்விதமாக இஸ்ரவேலை நடத்துகிறார்களோ, அதுவே இந்த நியாயத்தீர்ப்புக்கான முக்கியமான அம்சமாக விளங்கும் என்று யோவேல் தீர்க்கதரிசி தெளிவுபடுத்துகிறார் (யோவேல் 3:2). உபத்திரவ காலத்தில் எந்தப் புறவின மக்கள் கிறிஸ்துவின் யூத சகோதரர்களிடம் நட்பு பாராட்டி, பாதுகாத்து வருவார்களோ அந்த இனத்தார் செம்மறியாடுகள் என்று மத்தேயு 25 –இல் அழைக்கப்படுகிறார்கள். இதற்கு மாறாக அவர்களுக்கு உணவையும், பானத்தையும், உடையையும் கொடுத்துப் பராமரிக்காமலும் நோய்வாய்ப்படுபவர்களோடும் சிறையில் இருப்பவர்களோடும் எவ்வித சமுதாய உறவு கொள்ளாமலும் இருப்பவர்கள் வெள்ளாட்டு இனங்கள் ஆவார்கள்.

செம்மறியாட்டு இனத்தார், *"உலகம் உண்டானது முதல்... ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரிப்பார்கள்"* (வச. 34). வெள்ளாட்டு இனத்தார், *"'சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்' என்னும் தீர்ப்பைக் கேட்பார்கள்" (வச. 41). "அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்"* (வச. 46).

சில இனங்கள் இரட்சிக்கப்படுவார்கள், சில இனங்கள் இரட்சிக்கப் படமாட்டார்கள் என்று கூறுவது பற்றி சிலர் குழப்பமடையலாம். இரட்சிப்பு

பிரத்யேகமாக தனி மனிதனைக் குறித்தது என்று அவர்கள் சிந்திக்கிறார்கள். இது ஒரு பிரச்சினை அல்ல. வரலாற்று நிகழ்ச்சிகளைக் காணும்போது, தேவன் பற்பல இனத்தாருடனும், தனி மனிதர்களோடும் ஈடுபட்டு வந்ததை அறியமுடியும். ஒரு குறிப்பிட்ட நாட்டில் அல்லது மாகாணத்தில் பெரும்பாலான மனிதர்கள் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தவர்களானால், முதலில் அங்கிருந்து அவர் தம்முடைய மக்களை விடுவிக்கிறார்; பின்னர் அந்த நாட்டின் திரளான மக்கள்மேல் தமது கோபத்தை ஊற்றுகிறார். சோதோம் இதற்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இதற்கு மிகப் பெரிய அளவிலான எடுத்துக்காட்டு, நோவா காலத்துப் பெருவெள்ளம்.

**தேவதூதர்கள் நியாயந்தீர்க்கப்படுதல்**

வீழ்ந்துபோன சில தூதர்கள் இறுதி நியாயத்தீர்ப்புக்கென்று கட்டி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று திருமறை கூறுகிறது. இதைக் குறித்த நமது ஆர்வம் மனநிறைவு அடையும் வகையில் விளக்கிக் கூறப்படவில்லை: *“பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து”* (2 பேதுரு 2:4). *“தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்”* (யூதா 6).

வேறு சில பொல்லாத தூதர்களும் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம் (பொதுவாக, இவை பேய்கள் என்று அழைக்கப்படுகின்றன). இவர்கள் சுதந்தரமாகத் திரிகிறார்கள். வீழ்ந்துபோன தூதர்கள் எப்பொழுது நியாயந்தீர்க்கப்படுவார்கள்?

மேசியாவாகிய அரசர் தமது புவியாட்சியின்போது, *“சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரிப்பார்.”* மேலும் அவர் *“எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடுவார்”* (1 கொரி. 15:24,25). ஆகாயத்தில் அலைந்து திரிகிற அதிகாரங்கள், வல்லமைகள் பொல்லாத ஆவிகள் யாவும் வீழ்ந்துபோன தூதர்கள் என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

விசுவாசிகள் கர்த்தரோடு ஆளுகை செய்வார்கள். எனவே அவர்களும் தூதர்களை நியாயந்தீர்ப்பதில் பங்கு வகிப்பார்கள். 1 கொரிந்தியர் 6:3

–இல் பவுல் புதிரான கேள்வியை எழுப்பியிருப்பதற்கான காரணத்தை இது தெரிவிக்கிறது: “தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா?”

ஆயிரமாண்டு ஆட்சியின் முடிவில், வெள்ளைச்சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு முன் சாத்தானுக்கு இறுதித் தீர்ப்பு வழங்கப்படும்: *“மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள், இரவும், பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்”* (வெளி. 20:10).

வீழ்ந்து போன தூதர்கள் யாவரும் தங்களுடைய தலைவனாக சாத்தானை ஏற்றுக்கொண்டிருப்பதால், தேவனுக்கு எதிரான கிளர்ச்சியில் அவர்களும் பங்குபெற்றிருப்பார்கள். அதற்காக அவர்கள் தண்டனை அடைவார்கள் (ஏசாயா 14:12–17; எசே. 28:12–19). மேலும் அவர்கள் அக்கினிக் கடலில் அழிவை அடைவார்கள்.

**பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு**

*“பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதன்மேல் வீற்றிருக்கிறவரையும்”* யோவான் கண்டார், *“அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின”* (வெளி. 20:11). அந்தச் சிங்காசனம் பெரிதாயிருக்கிறது, அதற்கான காரணம் அதில் அமர்ந்திருக்கிறவர்தான். மேலும் மிகப்பெரிய விஷயம் நடக்கப்போகிறது. அவருடைய நியாயத்தீர்ப்பின் தூய்மையை வெள்ளை நிறம் குறிப்பிடுகிறது. நியாயத்தீர்ப்பு நித்தியத்தில் நிகழ்கிறது. நாம் அறிந்திருக்கிறபடி உலகம் முழுவதும் அதற்கு முன்னமே தீவிரமான வெப்பத்தால் உருகிப் போயிருக்கும் (2 பேதுரு 3:10).

*“மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்”* (வெளி. 20:12). எல்லாக் காலத்திலும் வாழ்ந்த பொல்லாத மனிதர்களே அவர்கள். அவர்கள் அங்கு நிற்பதற்கான காரணம், அவர்கள் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைக்கவில்லை என்பதுதான். அவிசுவாசம் பெரும் பழிக்கு ஆளாக்குகிற மிகப்பெரிய பாவமாகும்.

*“.... விசுவாசியாதவனோ, தேவனுடைய குமாரனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று”* (யோவான் 3:18).

*“.... குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்”* (யோவான் 3:36).

அவர்களுடைய தண்டனை இன்னதென்று முடிவு செய்வதற்கு இரண்டு புத்தகங்கள் இப்பொழுது திறக்கப்படுகின்றன: *“அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்”* (வெளி. 20:12).

ஜீவ புஸ்தகத்தில் அவர்களுடைய பெயர்கள் இல்லாத காரணத்தால் அவர்களுடைய அழிவு முடிவுசெய்யப்பட்டுவிட்டது, அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனம்வருந்தவில்லை, கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளவுமில்லை. பரலோகத்தில் விசுவாசிகள் பெறவிருக்கிற வெகுமதிகளில் வெவ்வேறு படிநிலைகள் இருப்பதுபோல, நரகத்தில் அவிசுவாசிகள் அடையப்போகிற தண்டனைகளிலும் வெவ்வேறு படிநிலைகள் இருக்கும். அவர்களுடைய கிரியைகள் அவர்களுடைய குற்றத்தின் அளவை நிர்ணயிக்கும். தொடர்ந்து பல பெண்களை பலாத்காரம் செய்தவன், சமுதாயத்தில் நற்பண்புடன் வாழ்ந்த மனிதர்களைக் காட்டிலும் பெரும் தண்டனையடைவான் (உலகத்தில் ஓரளவு ஒழுக்கத்துடன் வாழ்கிறவர்களும் இரட்சிக்கப்படாதவர்களே என்பது வருத்தத்திற்குரியது).

மரணம் சரீரத்தையும், பாதாளம் ஆவியையும் ஆத்துமாவையும் இங்கு அடையாளப்படுத்துகின்றன. இதனை வேறுவகையாகக் கூறுவோமானால் முழு மனிதன் அக்கினிக் கடலுக்குள் தள்ளப்படுகிறான்.

*“அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்”* (வெளி. 20:14).


விசுவாசி எவனொருவனும் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு முன் நிற்க மாட்டான். தேவனுடைய இரக்கத்தைப் புறக்கணித்தவர்கள் மட்டுமே வெள்ளைச் சிங்காசனத்தின் முன்னிலைக்கு வரவேண்டும். அவர்கள் இரக்கத்தைப் புறக்கணித்ததால் அவர்களுடைய பெயர்கள் ஆட்டுக் குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் இடம்பெறவில்லை.

**அடிக்குறிப்பு**

1. இனங்கள் (ethne) என்னும் சொல் புறஜாதிகள், புறவினத்தார், தேசங்கள் என்றும் மொழிபெயர்க்கப்படும்.

# 24

# பாதாளம் மற்றும் நரகம்



பாதாளத்திற்கும் நரகத்திற்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் மூல மொழியில் இவ்விரண்டு சொற்களும் வெவ்வேறானவை, அவை வெவ்வேறு பொருளுடையவை. ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை மாற்றிப் பயன்படுத்த முடியாது.[1] பாதாளம் தற்காலிகமானது, நரகமோ நிரந்தரமானது. சீயோல் (sheol) என்னும் பழைய ஏற்பாட்டுச் சொல்லும் ஹேடிஸ் (hades) என்னும் புதிய ஏற்பாட்டுச் சொல்லும் பாதாளத்தையே குறிக்கின்றன. அக்கினிக் கடல் நரகத்தையே குறிக்கிறது. நரகம் (Hell) மற்றும் Gehenna என்னும் சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதாளம் பெரியதொரு சிறைச்சாலைப் பட்டணம் போன்றது. அங்கு இறந்துபோன மனிதர்கள் விசாரணைக்கென்று கைது செய்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அது பெரிய கொள்கலம் போன்றது. நரகம் தண்டனை நிறைவேற்றப்படும் சிறைக்கூடமாகும்.

**பாதாளம்**

முதலாவது, நாம் பாதாளத்தைக் குறித்துக் காணலாம். சில நேரங்களில் அது பாடுகளுக்குட்படுத்தப்படும் இடத்தைக் குறிக்கிறது. சில நேரங்களில் அது கல்லறையையும், வேறு சில நேரங்களில் உடல் இல்லாத நிலையையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது ஓர் இடம் என்றால், அது எங்

கிருக்கிறது என்பதற்கான குறிப்பு எதுவும் இல்லை. பாதாளத்தைப் பற்றிய முழுமையான விவரம் லூக்கா 16:19–31 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. அவிசுவாசியான செல்வந்தன் பாதாளத்தில் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறான். அந்த மனிதனுடைய உடல் கல்லறையில் இருந்தது என்பதைத் தெளிவாக உணர முடிகிறது. அவனுடைய ஆத்துமாவோ பாதாளத்தில் இருந்தது. எனினும் அது தன்நினைவு உடையதாயிருந்தது. அவனுக்கு புத்தியும், நினைவாற்றலும், பெரும் பிளவுக்கு அப்பாற் காணக்கூடிய ஆற்றலும், பரலோகம் அல்லது பரதீசைக் காணக்கூடிய சக்தியும் இருந்தன. பெருஞ்சூட்டிலும் தாகத்திலும் அவன் கடுந்துன்பத்திற்குள் பாடுபட்டான். அவனுக்கு சுவிசேஷ ஊழிய வாஞ்சை இருந்தது. யாராவது ஒருவர் அவனுடைய ஐந்து சகோதரர்களிடத்தில் சென்று நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்றும், அவர்கள் தான் இருக்கும் இடத்திற்கு வந்துவிடக் கூடாது என்றும் விரும்பினான். இந்தப் பகுதியில் பாதாளம் வேதனை தரக்கூடிய இடம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து தப்புவதற்கு வழி இல்லை.

ஆனால் அப்போஸ்தலர் 2:27 –இல், அது ஒரு நிலை அல்லது தன்மை என்பது போல் கூறப்பட்டுள்ளது; அங்கு அது இடமாகக் கூறப்படவில்லை. சங்கீதம் 16:10 –ஆம் வசனத்தை மேற்கோள் காட்டும் பேதுரு, அதன் மூலம் கிறிஸ்துவின் உயிர்தெழுதலைக் குறிப்பிடுகிறார்: *“என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்.”*

இங்கு பாதாளம் என்னும் சொல் ஓரிடத்தைக் குறிப்பதாகக் கருதுவதற்கு இடமில்லை; ஏனென்றால் கர்த்தராகிய இயேசு மரணம் அடைந்தபோது, அவருடைய ஆவியும் ஆத்துமாவும் பரதீசுக்குச் சென்றுவிட்டன.[2] பரதீசு என்பதும் மூன்றாம் வானம்[3] என்பதும் ஒன்றுதான். அதுவே தேவனுடைய குடியிருப்பு. எனவே பாதாளம் என்பது உடலற்ற நிலையைக் குறிக்கக் கூடும். கிறிஸ்துவின் ஆத்துமா அந்நிலையில் இருப்பதற்கு அதாவது, இரட்சகருடைய சரீரம் அழிந்துபோவதற்கு தேவன் அனுமதிக்க மாட்டார். *“உம்முடைய பரிசுத்தர்”* என்னும் சொற்றொடர் கிறிஸ்துவின் சரீரத்தையே குறிக்க வேண்டும், ஏனெனில் மனிதனுடைய அந்தப் பாகம் மட்டுமே மரணம் அடைகிறபோது அழியக்கூடியதாக இருக்கிறது. கர்த்தருடைய ஆத்துமா பாதாளத்தில் விட்டுவிடப்படவில்லை என்பதைப் பேதுரு துணிவுடன் அறிவித்தார் (அப். 2:31). அவருடைய ஆவியும் ஆத்துமாவும் அவருடைய மகிமையுள்ள சரீரத்துடன் மீண்டும் ஒன்றிணைந்தன.

பாதாளம் உடலற்ற நிலை என்பதைச் சித்திரிக்கும் இன்னொரு பகுதி வெளிப்படுத்தின விசேஷம் **20:13,14:** *"சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்."*

துன்மார்க்கர் இறுதியாக நியாயந்தீர்க்கப்படுகிற நிகழ்ச்சியே இது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே நியாயாதிபதி, அவரே மரணம் மற்றும் பாதாளம் ஆகியவற்றின் திறவுகோலை வைத்திருக்கிறார் (வெளி. **1:18**). மரணம் அவர்களுடைய சரீரங்களைக் குறிக்கிறது. பாதாளம் அவர்களுடைய ஆவிகளையும் ஆத்துமாக்களையும் குறிக்கிறது. அவிசுவாசிகள் எல்லோருடைய ஆவிகளும் ஆத்துமாக்களும் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின்போது அவர்களுடைய சரீரங்களோடு ஒன்றிணைக்கப்படும். முழுமையடைந்த மனிதர்கள் அக்கினிக் கடலுக்குள் தள்ளப்படுவார்கள்.

பாதாளம் உடலற்ற நிலை என்பதைக் குறிப்பதாகத் தோன்றும் மற்றொரு பகுதி **1** கொரிந்தியர் **15:55:** *"மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?"*

கிறிஸ்துவின் வருகையில் விசுவாசிகள் பாடுகிற ஏளனப் பாடலே இது. அவர்களுடைய சரீரங்கள் கல்லறைகளிலிருந்து எழுகின்றன. மரணம் சிறிது காலம் அவர்களைத் தனது கட்டுக்குள் வைத்திருந்தது என்பதை அவர்கள் நினைவுகூருகிறார்கள். ஆனால் அவர்களைத் தொடர்ந்து கட்டுப்படுத்த முடியவில்லை! அவர்களுடைய சரீரங்களிலிருந்து அவர்களுடைய ஆவிகளையும் ஆத்துமாக்களையும் பாதாளம் பிரித்து வைத்திருந்த போதிலும் அதனுடைய வெற்றி சிறிது காலத்திற்கே உரியது.

வெளிப்படுத்தின விசேஷம் **6:8** –இல் மரணம் என்னும் பெயருடைய ஒருவன் மங்கின நிறமுள்ள குதிரைமேல் ஏறியிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பாதாளம் அவனைப் பின்தொடர்ந்தது. அந்த வசனத்தின் எஞ்சிய பகுதி மரணமும் பாதாளமும் பூமியின் மக்கள்தொகையில் நாலில் ஒரு பங்கைக் கொலை செய்வதற்கு அதிகாரத்தைப் பெற்றிருந்தன என்னும் செய்தியை விவரிக்கிறது. மீண்டுமாக இங்கு மரணமும் பாதாளமும் ஆவி ஆத்துமா ஆகிய இரண்டும் சரீரத்திலிருந்தன என்பதை உருவக மொழியில் விவரித்துக் கூறுகின்றன. இவ்விதமாக ஆவியும் ஆத்துமாவும் சரீரத்திலிருந்து பிரிந்த நிலையே மரணமாகும்.

சில நேரங்களில் இழிவுபடுத்துவதன் ஆழத்தைச் சித்திரிக்கும் உவமை யாகப் பாதாளம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, கப்பர்நகூம் என்னும் நகரம் பல நன்மைகளைப் பெற்று வானபரியந்தம் உயர்த்தப்பட்டது. ஆனால் தேவகுமாரன் அங்கிருந்தார் என்பதைக் குறித்து அந்நகரம் மேன்மைபாராட்டவில்லை. எனவே அது அவமானத்திலும் அழிவிலும் பாதாளபரியந்தம் இறுதியில் தாழ்த்தப்படும் (மத். 11:23; லூக்கா 10:15).

மத்தேயு நூலில் பாதாளத்தைப் பற்றிய இன்னும் ஒரே குறிப்பு 16:18 –இல் உள்ளது. அங்கு பாதாளத்தின் வாசல்கள், தாம் நிறுவவிருந்த சபையைத் தோற்கடிக்க முடியாது என்று இயேசு உறுதி கூறுகிறார். திருச்சபையின் மேல் நடத்தப்படும் தாக்குதல் எதுவும் வெற்றிபெறாது. ஆனால் பாதாளத்தின் மீது சபை வெற்றிபெறும் என்னும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

**நரகம்**

புதிய ஏற்பாட்டில், நரகம் என்னும் சொல் பன்னிரண்டு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் பதினொன்று எல்லோரிலும் மிகுந்த இரக்க குணமுடைய கர்த்தராகிய இயேசுவின் உதடுகளிலிருந்து வந்தவை. பன்னிரண்டாவது தடவை கர்த்தரின் ஒன்றுவிட்ட சகோதரர் யாக்கோபு அச் சொல்லைப் பயன்படுத்தினார்.

இந்தப் பயங்கரமான இடத்தைக் குறித்து நாம் என்னவெல்லாம் அறியமுடியும்? அது மனிதனுக்காக ஆயத்தப்படுத்தப்பட்ட இடம் அல்ல. மாறாக, பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டது (மத். 25:41). எவனொருவனையும் நரகத்திற்கென்று தேவன் தெரிந் தெடுக்கவில்லை. மனிதர்கள் தேவனுடைய கிருபையை நிராகரித்து, தாங்களாகவே நரகத்தைத் தெரிந்துகொள்கிறார்கள். அங்கே அழுகையும் ஓலமிடுதலும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத். 8:12; 22:13; 24:51; 25:30; லூக்கா 13:28). நரகத்திலிருப்பவர்களுடைய புழு சாவாமலும் (வேதனை ஒழியாது) அக்கினி அவியாமலும் இருக்கும் (மாற்கு 9:46). அங்கிருந்து வாதையின் புகை சதா காலமும் எழும் (வெளி. 14:11).

உடலுறுப்புகளில் சிலவற்றை இழந்து, நித்திய வாழ்வுக்குள் செல்வது, உடல் முழுமையாக நரகத்திற்குள் செல்வதைக் காட்டிலும் நல்லது என்று இயேசு அவ்வப்போது வலியுறுத்திக் கூறினார் (மத். 5:29,30; 18:9; மாற்கு 9:43,45,47). கை கால்கள் போன்று உடலுறுப்புகளை இழந்தவர்கள் பலர் பரலோகத்தில்

இருப்பார்கள் என்பது இதன் பொருள் அல்ல. மாறாக, சரீரத்தின் இச்சைகளை இவ்வுலக வாழ்வின்போது கண்டிப்பான முறையில் அடக்கி வாழவேண்டும்; அவற்றிற்கு இடம் கொடுத்து நித்திய அழிவை நோக்கிச் சென்று விடக்கூடாது என்பதே அறிவுரை.

சரீரத்தை அழிக்கக் கூடியவர்களுக்காக விசுவாசிகள் பயப்படக்கூடாது. மாறாக ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே அவர் பயப்பட வேண்டும் (மத். 10:28; லூக்கா 12:5).

தன் சகோதரனைத் தீர்மானத்துடன் பகைத்து, அவனை மூடன் என்று அழைக்கிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருக்கிறான் (மத். 5:22), பொல்லாத பேச்சு நரகத்தின் பண்புடையது (யாக். 3:6). பரிசேயரின் பாவங்கள் அவர்களை நரகத்தின் குடிமக்கள் என்னும் நிலைக்குத் தகுதியாக்கின (மத். 23:15,33).

**இருண்ட ஆழமான குழி (Tartaros)**

Tartaros [5] என்னும் கிரேக்கச் சொல் 2 பேதுரு 2:4 –இல் நரகம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது பாவம் செய்து வீழ்ந்து போன தூதர் களுக்கென்று தனிப்பட்ட வகையில் வைக்கப்பட்டுள்ள இடம். அவர்கள் அந்தகாரச் சங்கிலிகளுக்கு ஒப்புவிக்கப்பட்டு நியாயத்தீர்ப்புக்கென்று வைக் கப்பட்டிருக்கிறார்கள்.

**இறந்தவர்களைப் புனிதப்படுத்துவதற்கான இடம் (Purgatory)**

ரோமக் கத்தோலிக்க சபையின் தவறான கருத்தின்படி, ‘‘இறந்தவர்களைப் புனிதப்படுத்தும் இடம் என்பது ஒரு நிலையோ அல்லது இடமாகவோ இருக்கலாம். மரணமடைந்த மனிதர் இறந்தவுடன் அங்கு போகிறார்கள். அவர்களுடைய பாவத்தின் காரணமாக அவர்கள் சிறிது காலம் தற்காலிக தண்டனை அடைந்து பின்னர் பரலோகத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள். புனிதப்படுத்தும் இடத்தின் அக்கினி ஆத்துமாவைத் தூய்மைப்படுத்தும் ஆற்றல் உள்ளது. இறந்தவர்களுக்காக உயிருடன் இருப்பவர்கள் ஏறெடுக்கும் மன்றாட்டு, மேலும் அவர்கள் நிமித்தம் நடத்தப்படும் வழிபாட்டுக் கூட்டங்கள் புனிதப்படுத்தக்கூடிய இடத்தில் அவர்கள் இருக்க வேண்டிய கால அளவைக் குறைக்கும்.’’ ஆனால் திருமறை புனிதப்படுத்தும் இடம் என்று ஒரு நிலையோ இடமோ இருப்பதாக எங்கும் கூறவில்லை. இந்தச் சொற்றொடர் திருமறையில் எங்கும் சொல்லப்படவுமில்லை. கிருபையினாலே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

வின் மேல் வைக்கும் விசுவாசத்தாலே முழு இரட்சிப்பு உண்டாகிறது என்னும் உண்மைக்கு இது முற்றிலும் முரணானது.

**அடிக்குறிப்புகள்**

1. திருமறை மொழிபெயர்ப்புகளில் சில நரகத்திற்கும் பாதாளத்திற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை தெளிவுபடுத்தவில்லை. எடுத்துக்காட்டாக, KJV பாதாளம் என்னும் சொல்லுக்குப் பதிலாக நரகம் என்னும் சொல்லையே பயன்படுத்தியுள்ளது. 1 கொரிந்தியர் 15:55 –இல் அச்சொல் கல்லறை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Hades என்னும் சொல் கிரேக்க மொழியில் காணவியலாத உலகம் அல்லது இடம் என்று பொருள் தரும் சொல்லின் மொழியாக்கம் ஆகும். நரகம் (hell) என்பதன் ஆங்கிலச் சொல் கேஹன்னா (Gehenna) என்னும் எபிரெயச் சொல்லின் மொழிபெயர்ப்பு. நித்திய ஆக்கினையில் கடும் வேதனையை மனிதர்கள் அறிய வேண்டும் என்பதற்காக இயேசு அந்த இடத்தை இடைவிடாமல் குப்பை எரிகிற இடம் என்று கூறுகிறார்.

2. லூக்கா 23:43


3. 2 கொரிந்தியர் 12:2; ஒப்பிடுக 4 –ஆம் வசனம்.

4. அழிவு என்னும் சொல் ஒன்றும் இல்லாதபடி முழுவதுமாக அழிந்து போவதைக் குறிப்பதில்லை. மாறாக, நன்னலத்தை இழந்து போவதை, அதாவது ஒரு மனிதன் அல்லது பொருள் படைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறாமல் போவதையே அது குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, மத்தேயு 9:17 –இல் குறிப்பிடப்பட்டுள்ள திராட்சை ரசத்துருத்திகள் கிழிந்துபோனாலும் முழுவதும் இல்லாமல் போவதில்லை. மாறாக அவை என்ன நோக்கத்திற்காகச் செய்யப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போகும்.

5. இலத்தீன் மொழி உச்சரிப்பின்படி Tartarus என்றும் இச்சொல்லை எழுதலாம்.

# 25

# திருமறை இரகசியங்கள்



புதிய ஏற்பாடு பல இரகசியங்களை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. அவற்றைப் புரிந்து கொள்ளாதிருப்பது அதிக சிக்கலை உண்டுபண்ணும். ஆகவே வெவ்வேறு இரகசியங்களின் அர்த்தங்கள் என்ன என்பது பற்றிய சுருக்கமான விளக்கம் அளிப்பதற்கான முயற்சியாக இந்தப் பாடத்திற்கான நேரத்தை ஒதுக்குவோம்.

**வரையறை**

முன்னர் ஒருபோதும் வெளிப்படுத்தப்படாதிருந்த ஓர் உண்மை, மனிதனால் அவனது சொந்தப் புத்தியால் அது என்னவென்பதைப் புரிந்து கொள்ள முடியாதது, அதை தேவன் இப்பொழுது மனிதர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார், இதுவே இரகசியம் ஆகும். மிஸ்டீரியன் (Mysterion) என்னும் மூல கிரேக்கச் சொல்லை ஆங்கிலப்படுத்தி இச்சொல் உருவாக்கப்பட்டது.

**பரலோக ராஜ்யத்தின் இரகசியங்கள் (மத்தேயு 13:3–50)**

*"பரலோக ராஜ்யத்தின் ரகசியங்கள்"* என்னும் சொற்றொடரை மத்தேயு 13:11 –இல் படிக்கிறோம். அந்த ரகசியங்கள் ஏழு உவமைகளாக இந்த அதிகாரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தாமே இஸ்ரவேலின் மேசியாவாகிய அரசர் என்று கர்த்தர் மத்தேயு நூலின் முதல் சில அதிகாரங்களில் அறிமுகப்படுத்தினார். ஆனால் 12 –ஆவது அதிகாரத்தில், யூதமார்க்கத் தலைவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாமல் நிரா கரித்தார்கள். அவர் பிசாசாகிய பெயல்செபூலால் அற்புதங்களை நடப்பித்தார் என்று குற்றஞ்சாட்டினார்கள். ஆகவே அரசர் இப்பொழுது நிராகரிக்கப்பட்ட நிலையில், ராஜ்யம் புதியதொரு வடிவத்தை எடுத்துக்கொண்டது. அதனையே நாம் 13 –ஆவது அதிகாரத்தில் காண்கிறோம். இங்கு இடம்பெற்றுள்ள ஏழு உவமைகளும் அந்த இடைக்கால அரசின் தன்மையை விவரிக்கின்றன. இவ்வரசு, அரசர் நிராகரிக்கப்பட்டது முதல், அவர் பூமியில் தமது ஆட்சியை நிறுவுவதற்காக வரும்வரை தொடரும். இப்பொழுது அரசர் இங்கு இல்லை, ஆனால் அவரை மக்கள் எங்கெல்லாம் அறிக்கை செய்கிறார்களோ அங்கெல்லாம் அரசு காணப்படும். மெய்யான அறிக்கை செய்கிறவர்களும் வெற்றறிக்கை செய்கிறவர்களும் அதில் இடம்பெறுவார்கள். நாம் வாழ்கிற நாட்களே இடைக்கால அரசின் காலமாகும்.

இடைக்கால அரசு முடிவடைகிறபோது, பதரிலிருந்து கோதுமை பிரிக்கப் படுவதுபோல மெய்யான விசுவாசிகள் வெற்றறிக்கை செய்பவர்களிடமிருந்து பிரிக்கப்படுவார்கள். அரசரின் குடிமக்கள் ஆயிரமாண்டு ஆட்சியின் ஆசீர் வாதங்களைஅனுபவிப்பார்கள். அவிசுவாசிகள் அழிக்கப்படுவார்கள்.

## இஸ்ரவேலின் பார்வையற்ற தன்மை என்னும் இரகசியம் (ரோமர் 11:25)

இஸ்ரவேல் அரசரை நிராகரித்ததால், தேவன் யூத இனத்தார்மேல் பார்வை யற்றுப் போகும்படியான தண்டனையை வழங்கினார். இதன் காரணமாகவே யூத இனத்தார் இயேசுவைத் தங்களுடைய மேசியாவாக ஏற்றுக்கொள்வதற்கு மிகக் கடின இருதயத்தோடு இருக்கிறார்கள். மேலும் அவர்களில் வெகு சிலரே இரட்சிப்பு அடைகிறார்கள். ஆனால் இந்தப் பார்வையற்ற நிலை முழுமையானதல்ல, முடிவானதுமல்ல. யூதர்கள் நல்லமுறையில் நடத்தப்படுகிற நாடுகளில், தங்களுடைய தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த மேசியா, இயேசுவே என்று கண்டு அவ்வினத்தாரில் பலர் இப்பொழுது இரட்சிப்படைகிறார்கள். எனினும் இந்தப் பார்வையற்ற நிலை *"புறஜாதியாரின் நிறைவு"* உண்டாகும் வரை தொடரும். அதாவது, பெரும்பாலும் புறவினத்தாரைக் கொண்ட மண வாட்டியைக் கர்த்தர் தமது இல்லத்திற்குக் கூட்டிச் செல்ல வரும்வரை அது தொடரும். இஸ்ரவேலில் மீதியானவர்கள் கிறிஸ்துவினிடமாய்த் திரும்பு வார்கள்.

**திருச்சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியாகிய இரகசியம் (1 கொரிந்தியர் 15:51,52)**

மனித வரலாற்றில் ஒவ்வொருவரும் சிறிது காலத்திலோ நீண்ட வாழ்க்கைக்குப் பிறகோ மரணமடைவார் என்னும் கருத்தே இதுவரை நிலை நிற்கிறது. ஆனால் வியத்தகு அறிவிப்பை அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். எல்லா விசுவாசிகளும் மரணமடையப் போவதில்லை. திருச்சபை எடுத்துக்கொள்ளப்படும்போது உயிரோடிருக்கிற விசுவாசிகள் மரணமடையாமலே பரலோகத்திற்குச் செல்வார்கள். அவர்கள் மாற்றம் அடைவார்கள், அதாவது அவர்கள் மகிமையான சரீரங்களைப் பெறுவார்கள். அவர்கள் ஒருக்காலும் மரணத்தை அனுபவிக்க மாட்டார்கள். கிறிஸ்துவுக்குள் மரணமடைந்தவர்கள் உயிருடன் எழுப்பப்பட்டு, உயிருடன் இருக்கிற பரிசுத்தவான்களுடன் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். மேலும் விவரங்கள் 1 தெசலோனிக்கேயர் 4:13–18 பகுதியில் இடம்பெற்றுள்ளன.

**திருச்சபை என்னும் இரகசியம் (ரோமர் 16:25; எபேசியர் 3:5,6)**

உலகம் தோன்றியது முதல் திருச்சபையைப் பற்றிய இரகசியம் மறைபொருளாக வைக்கப்பட்டிருந்தது (ரோமர் 16:25), ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் அது வெளிப்படுத்தப்பட்டது (எபே. 3:5,6). இந்த இரகசியமானது கீழ்க்காணும் அம்சங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது:

1. கிறிஸ்துவின் தலைமைத்துவம் (கொலோ. 1:18).

2. விசுவாசிகள் யாவரும் சபையின் அங்கங்கள் ஆவார்கள் (1 கொரி. 12:13).

3. விசுவாசிக்கிற புறவினத்தார், விசுவாசிக்கிற யூதர்களுக்கு இணையாக ஆசீர்வாதங்களில் பங்குவகிக்கிறார்கள் என்னும் உண்மையின்படி, அவர்களுக்கும் கிறிஸ்துவே மகிமையின் நம்பிக்கையாக விளங்குகிறார். யூதர்களுக்கும் புறவினத்தாருக்குமிடையே இருந்த பண்டைய கால பகைமை கிறிஸ்துவில் நீக்கப்பட்டது (எபே. 3:6; கொலோ. 1:26,27; எபே. 2:14,15).

4. திருச்சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது (1 கொரி. 12:12,13).

5. திருச்சபை கிறிஸ்துவின் மணவாட்டி (எபே. 5:25–27; 31,32).

6. திருச்சபையே உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் தேவனுடைய அநந்த ஞானத்தை வெளிப்படுத்துகிறது (எபே. 3:10).

7. மீட்கப்பட்ட பிரபஞ்சத்தின் தலையாகக் கிறிஸ்துவை ஆக்கவேண்டும் என்பதே தேவனுடைய நோக்கம் (எபே. 1:9,10); அப்பொழுது திருச்சபை அவருடைய மணவாட்டியாக விளங்கி அவருடைய மகிமையில் என்றென்றும் பங்கு வகிக்கும்.

*"கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே, புறஜாதிகளுக்குள்ளே விளங்கும் இரகசியம்"* (கொலோ. 1:27). இங்கு சொல் லப்பட்டிருக்கிற நம்பிக்கையும் திருச்சபை இரகசியமும் ஒன்றுதான். இங்கு விசுவாசிக்கிற யூதருக்கு எவ்வாறோ அதுபோலவே விசுவாசிக்கிற புற வினத்தாருக்குக் கிறிஸ்துவே மகிமையின் நம்பிக்கையாக விளங்குகிறார் என்னும் உண்மை வலியுறுத்தப்பட்டுள்ளது. எல்லோரும் தேவனுடைய முன்னிலையில் கிறிஸ்துவுக்குள்ளாக ஒரேவிதமான நடுநிலையைப் பெற் றிருக்கிறார்கள்.

கொலோசெயர் 2:2 – இல் தேவனுடைய இரகசியம் என்னும் சொற்றொடர் கிறிஸ்துவின் இரகசியமே ஆகும். இது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமான சபை கிறிஸ்துவோடு இணைந்திருப்பதைக் குறிக்கிறது. கிறிஸ்துவே எல்லா விசுவாசிகளையும் அங்கங்களாகக் கொண்டிருக்கும் திருச்சபைக்குத் தலை யாக இருக்கிறார்.

திருச்சபை இரகசியத்தைக் குறிக்கக்கூடிய மற்ற பகுதிகள் எபேசியர் 6:19,20 மற்றும் கொலோசெயர் 4:3. திருச்சபை பற்றிய இரகசியம் ஆவிக்குரிய வெளிப் பாடுகளின் சிகரமாக விளங்குகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இந்த உண்மையைத் தெரியப்படுத்தி தேவனுடைய வார்த்தையை நிறைவேற்றுகிறார் (கொலோசெயர் 1:25). காலவரிசையின்படி இந்தப் பகுதியானது எழுதப்பட்ட வேத நூல்களில் கடைசி அல்ல, ஆனால் வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான சத்தியங்களில் இது உச்சநிலையிலானது.

**அக்கிரமத்தின் இரகசியம் (2 தெசலோனிக்கேயர் 2:7,8)**

அக்கிரமத்தின் இரகசியத்தைக் குறித்த ஒரே குறிப்பு 2 தெசலோனிக்கேயர் 2:7,8 ஆகும். *"அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப் படாது. நீக்கப்படும்போது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்..."* சபையின் தொடக்க காலத்திலேயே அக்கிரமத்தின் ஆவி கிரியை செய்துகொண்டிருந்தது. அநேக அந்திக்கிறிஸ்துகள் இருந்தார்கள். ஆனால் பெயர் சொல்லப்படாத ஒருவரால் (பரிசுத்த ஆவியானவரே அவர்

என்று நாம் நம்புகிறோம்) அதனுடைய முழுவளர்ச்சி தடை செய்யப்பட்டது. தடைசெய்கிறவர் நீக்கப்பட்ட பிறகு (திருச்சபை எடுத்துக்கொள்ளப்படும் போது உலகில் தாம் நிரந்தரமாகக் குடியிருக்கும் நிலையிலிருந்து பரிசுத்த ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்படுவார்), அக்கிரமக்காரன் அதாவது, அந்திக் கிறிஸ்துவின் ஆட்டம் தொடங்கும். பாவம் மற்றும் அக்கிரமம் ஆகியவற்றின் உருவமாக அவன் காணப்படுவான். மனித வரலாற்றில் எந்த ஒரு மனிதனிடமும் இந்த அளவுக்குப் பொல்லாப்புகளின் ஒருங்கிணைந்த நிலை இருந்திருக்காது.

**விசுவாசத்தின் இரகசியம் (1 தீமோ. 3:9)**

கிறிஸ்தவக் கோட்பாட்டின் அம்சங்கள் யாவும் ஒன்று சேர்ந்ததே விசுவாசத்தின் இரகசியமாகும். அல்லது கிறிஸ்தவ விசுவாசம் என்று இதனை அழைக்கிறோம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இதனுடைய பெரும்பாலான உண்மைகள் முழுவதுமாக அறியப்படாத நிலையில் இருந்ததால் இது இரகசியம் என்று அழைக்கப்படுகிறது.

**தேவபக்தியின் இரகசியம் (1 தீமோ. 3:16)**

*“அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்”* என்று 1 தீமோத்தேயு 3:16 கூறுகிறது.

இங்கு கூறப்பட்டுள்ள விவரங்கள் யாவும் தேவ தலைமையில் ஒரே ஒரு நபருக்கு மட்டுமே பொருந்தும். அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஆவார். கிறிஸ்து இவ்வுலகிற்கு வருகை புரிந்ததற்கு முன், ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் முழுமையான தேவ பக்தியை ஒருவரும் கண்டதில்லை. ஆனால் கர்த்தராகிய இயேசு இவ்வுலகிற்கு வந்து, முழுமையான தேவபக்தி உடைய மனிதர் எவ்வாறு இருப்பார் என்பதை நடைமுறையில் வெளிப்படுத்திக் காட்டினார்.

தேவபக்தியின் இரகசியம் மகா மேன்மையானது என்று கூறுகிறபோது, அவர் அதைப் புரியாத புதிர் என்று சொல்லவில்லை. மாறாக, கிறிஸ்துவின் ஆளுமை அற்புதமானதும் அதிசயமானதுமாகும் என்கிறார்.

தேவபக்தியின் இரகசியம் அக்கிரமத்தின் இரகசியத்திற்கு முற்றிலும் எதிரானது. பரிவின் உருவாய் வந்தவராக கிறிஸ்துவை முதலாவது அறி முகப்படுத்துகிறது. பாவத்தின் உருவாய் அந்திக்கிறிஸ்துவை இரண்டாவது அறிமுகப்படுத்துகிறது. கிறிஸ்துவும் அந்திக் கிறிஸ்துவும் ஒருவருக்கொருவர் நேர் எதிரானவர்கள்.

**ஏழு நட்சத்திரத்தின் இரகசியம் (வெளி. 1:20)**

இந்த இரகசியம் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. யோவானின் தரிசனத்தில் ஏழு நட்சத்திரங்களும் ஆசியாவில் இருந்த ஏழு சபைகளின் தூதர்கள் ஆவார்கள் (தூதர்கள் என்னும் சொல் தேவதூதர்கள் என்றோ செய்தியை எடுத்துக் செல்பவர்கள் என்றோ மொழிபெயர்க்கப்படும்). ஏழு பொன் குத்துவிளக்குகளும் ஏழு சபைகள். அடுத்த இரண்டு அதிகாரங்களில், கர்த்தர்தாமே அந்த ஏழு சபைகளின் தூதர்களுக்குத் தமது கடிதங்களை எழுதுகிறார். இந்தக் கடிதங்கள் மூன்று வகையாகப் புரிந்துகொள்ளப்படும்:

1. யோவான் வாழ்ந்த நாட்களில் இயங்கி வந்த மெய்யான ஏழு சபைகளுக்கு உண்மையாக எழுதப்பட்ட ஏழு மடல்களே இவை. இது உண்மை என்று கிட்டத் தட்ட யாவரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

2. உலக வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட தருணத்தில் உலகம் முழுவதும் இயங்கி வரும் சபையின் தன்மைகளையே இந்தக் கடிதங்கள் விவரிக்கின்றன. வேத மாணாக்கர் பெரும்பாலோர் இந்த விளக்கத்தைச் சரியானது என்று கருதுகிறார்கள்.

3. அப்போஸ்தலர் காலம் தொடங்கி, திருச்சபையின் கடைசிக்காலம் வரைக் கும் கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற சபையின் நிலையை இந்த மடல்கள் காலவரிசையில் தீர்க்கதரிசனமாகக் கண்டு விவரிக்கின்றன. எல்லோரும் இக்கருத்தை ஒப்புக்கொள்கிறதில்லை. எனினும் இந்த விளக்கம் உலக வர லாற்றில் பொருத்தமாக விளங்குவது குறிப்பிடத்தக்க உண்மையாகும்.

**தேவரகசியம் (வெளி. 10:6)**

வெளிப்படுத்தின விசேஷம் 10 –ஆம் அதிகாரத்தில், ஏழாம் எக்காளம் ஒலிக்கையில் தேவரகசியம் நிறைவேறும். ஏழாம் எக்காளம் ஒலிக்கும்போது வானத்தில் பெருஞ்சத்தம் முழங்கி, *"உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார்"* என்று கூறின (வெளி. 11:15).

ஏழாம் எக்காளம் தொனிக்கையில் உபத்திரவ காலம் முடிவடைந்து, பூமியை ஆளும்படி கிறிஸ்து பூமிக்குத் திரும்புவார் என்றும் இதிலிருந்து அறிகிறோம் (வெளி. 11:17). அப்பொழுது, உபத்திரவ காலத்தில் வாழும் உண்மையுள்ள பரிசுத்தவான்கள் வெகுமதிகளைப் பெறுவார்கள், அவருடைய பகைஞர் அழிவார்கள் (வச. 18).

தேவரகசியம் அப்பொழுது நிறைவேறும். விடாப்பிடியாக தொடர்ந்து வருகிறதும், வெற்றி அடைந்தாற்போல தோற்றமளிப்பதுமான தீமை வீழ்த்தப் படும். மனிதனுடைய அக்கிரமத்தை தேவன் கண்டும் காணாததுபோலிருந்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தோன்றுகிற நிலை முற்றிலும் மாறும். ‘‘நம்முடைய கர்த்தர் அரசைத் தமக்கு உரியதாக்கி ஆட்சியை நிறுவி நீதியை நிலைநாட்டுவதற்கு எடுத்துக்கொண்ட நீண்ட காலதாமதம் முடிவுக்கு வரும்‘‘ என்று திருவாளர் W. A. கிரிஸ்வெல் கூறுகிறார். ‘‘தேவரகசியம் என்றென்றைக்குமாக முடிவுக்கு வருகிறது; தேவனுடைய மகிமை சூரியனைப் போலப் பிரகாசிக்கிறது; நீதி நிலைநாட்டப்படுகிறது, ஐயத்தின் முறுமுறுப்பு வாயடைக்கப்படுகிறது’’ என்று திருவாளர் F. W. கிராண்ட் இதனை விவரிக்கிறார்.

**பாபிலோனின் இரகசியம் (வெளி. 17:5–7)**

வெளிப்படுத்தின விசேஷம் 17 –ஆவது அதிகாரத்தில் மகா பாபிலோன் ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளுமுடைய மிருகத்தின்மேல் அமர்ந்திருக்கும் வேசியாகச் சித்திரிக்கப்பட்டள்ளது. அவள், *‘‘மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்’’* என்று அழைக்கப்படுகிறாள். அந்த இரகசியத்தின் விளக்கம் 8 – 18 வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பெண் ஒரு பெரிய நகரம், அது உலகத்தின் அரசர்களையெல்லாம் ஆளுகிறது (வச. 18). அந்த மிருகமோ ஒரு காலத்தில் இருந்த பேரரசு, அது இல்லாமற் போயிற்று, மீண்டும் புதுப்பிக்கப்படும், பின்னர் அழிக்கப்படும் (வச. 8). ஏழு தலைகளும் அந்தப் பேரரசின் ஏழு அரசர்கள் (வச. 9). பத்துக் கொம்புகள் அந்தப் பேரரசுடன் கூட்டணி வைத்துக்கொண்ட பத்து அரசர்களாவார்கள் (வச. 12). வேசி சிறிது காலம் அந்த மிருகத்தின் முதுகில் ஏறியிருக்கிறது. பின்னர் அந்த மிருகத்தாலேயே அழிக்கப்படுகிறது (வச. 16). அந்தப் பேரரசு கடைசியில் கர்த்தரால் அழிக்கப்படும் (வச. 14).

நாம் இதற்குத் தரும் விளக்கம் கீழ்வருமாறு: அந்தப் பெண் ரோமாபுரியைத் தலைமையிடமாகக் கொண்ட மிகப்பெரிய சமய மற்றும் பொருளாதார அமைப்பு;

அது உலகம் முழுவதும் பரவி, செல்வச் செழிப்புடன் இயங்கும் சபையாகும். பத்து அரசர்கள் கொண்ட ரோமப் பேரரசு புத்துயிர் பெறும், அதுவே மிருகம். ஐரோப்பிய சமுதாய நாடுகளை எல்லையாகக் கொண்டிருக்கிற அமைப்பை அது குறிப்பதாகத் தோன்றுகிறது.

அந்த உலகம் முழுவதும் விரிந்து விளங்கும் சபையைச் சிறிது காலம் ஆதரித்துப் பின்னர், புதுப்பிக்கப்பட்ட ரோம பேரரசை ஆளுகிறவனும் பத்து அரசர்களும், அதற்கு எதிராகச் செயல்பட்டு, அதை அழிப்பார்கள் (வெளி 18 ஆவது அதிகாரத்தில் இதன் மற்ற விவரங்களும் அழிவும் விவரிக்கப் பட்டுள்ளன).

**முடிவுரை**

இரகசியங்கள் பற்றிய மேலும் நான்கு குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன:

1 கொரிந்தியர் 2:7 –இல், *"இரகசியமான தேவ ஞானத்தைக்"* குறித்துத் தானும் மற்ற அப்போஸ்தலர்களும் பேசியதாகப் பவுல் கூறுகிறார். முந்தின தலைமுறையினருக்கு மறைபொருளாயிருந்த சத்தியங்கள் பரிசுத்த ஆவியான வர் மூலமாக இப்பொழுது வெளிப்படத்தப்பட்டதாக அவர் அங்கே கூறுகிறார்.


பவுலும் மற்ற அப்போஸ்தலரும் *"தேவனுடைய இரகசியங்களின் உக்கி ராணக்காரர்"* என்றும் அவர் கூறுகிறார் (1 கொரி. 4:1). இங்கு மறுபடியும், கிறிஸ்தவக் காலக்கட்டத்தின் புதிய சத்தியங்கள் யாவற்றையும் குறிக்கும்படி இரகசியம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் நாம் எல்லா இரகசியங்களையும் எல்லா அறிவையும் பெற்றிருந் தாலும், அன்பு நம்மிடத்தில் இல்லாவிட்டால் நாம் ஒன்றுமில்லை என்று பவுல் 1 கொரிந்தியர் 13:2 –இல் நினைவுபடுத்துகிறார்.

இறுதியாக, 1 கொரிந்தியர் 14:2 –இல், ஒருவர் வேற்றுமொழியில் ஆழமான தேவ இரகசியங்களைப் பேசினாலும், அங்கு அதை மொழிபெயர்க்கக் கூடியவர் இல்லாவிட்டால் அது ஒருவருக்கும் பயன் அளிக்காது என்று அவர் கூறுகிறார்.

# 26

# கிறிஸ்துவின் மகிமைகளின் பண்புக்கூறுகள்



கிறிஸ்துவின் மகிமைகளைக் குறித்து நாம் பேசுகிறபோது, அவருடைய ஆள்தன்மை, அவர் யார் என்னும் நிலை அல்லது அவருடைய செயல்கள் ஆகியவற்றின் மேன்மைகளையே குறிப்பிடுகிறோம். அது அவருடைய நன்னெறி மற்றும் ஆவிக்குரிய பரிபூரண நிலையாக இருக்கக் கூடும். அவற்றை நாம் தேவனுடைய வசனங்களில் விசுவாசக் கண்களால் கண்டறிகிறோம். அல்லது அவர் தற்போது பரலோகத்தில் சரீரப்பிரகாரமான அற்புதத்தோடும் பிரகாசத்தோடும் இருக்கிற காட்சியாக இருக்கக்கூடும். அல்லது அது அவர் ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் திரும்பவும் பூமிக்கு வருகிற காட்சியாக இருக்கக்கூடும்.

கர்த்தராகிய இயேசுவின் மகிமைகளை எண்ணிப்பார்ப்பது இயலாத செயல். மனிதர்களுடைய சொல்லாட்சியால் அவற்றைச் சொல்லி முடியாது. நாம் இந்த அதிகாரத்தில் அவருடைய மகிமையின் ஏழு அம்சங்களை மட்டும் புனித வேதத்தில் காண்கிறபடி காணமுற்படுவோம்.

**தேவகுமாரன் என்னும் நிலையில் அவருடைய உள்ளார்ந்ததும் தனிப்பட்டதுமான மகிமை.**

கிறிஸ்துவின் தேவ நிலையின் அனைத்து மேன்மைகளையும் முழு நிறைவுகளையும் இது குறிக்கிறது. இந்த மகிமையானது நித்தியமானதும் அவருடைய உள்ளார்ந்த இயல்பைக் குறிப்பதுமாயிருக்கிறது. தேவ மகிமையின் பிரகாசத்தில் எவ்வளவேனும் அது குறைந்ததில்லை (எபி. 1:3). கர்த்தராகிய இயேசுவால் இந்த மகிமையைத் தம்மிடமிருந்து விலக்கி வைக்கவோ வெறுமையாக்கவோ முடியாது. கிறிஸ்து யாராக இருக்கிறார் என்பதன் உள்ளியல்பின் ஒரு பங்காக இது இருக்கிறது. இது அவருடைய எல்லா வியத்தகு இயல்புகளையும் பண்புகளையும் உள்ளடக்கியது. அவர் உலகிற்கு வருகைபுரிந்தபோது, தமது மாம்ச சரீரத்திலே இந்த மகிமையைத் திரையிட்டு மறைத்துக்கொண்டார். எனினும் இந்த மகிமை அவரிடத்திலேயே எப்போதும் இருந்தது. மறுரூபமலை நிகழ்ச்சியின்போது அவர் தமது மகிமையை வெளிப்படுத்தியது போல, அவ்வப்போது அதை வெளிப்படுத்தினார் (மத். 17:1–8; மாற்கு 9:1–8; லூக்கா 9:28–36).

**பரலோகத்தில் அவருடைய தகுநிலை மகிமை**

நித்தியம் முதல், விவரிக்க இயலாத கனத்தையும் ஒளிப்பிரகாசத்தையும் கர்த்தராகிய இயேசு தம்மகத்தே கொண்டிருந்தார். அவர் ஒவ்வொரு நாளும் தமது பிதாவின் பிரியமும், தேவ தூதர்களின் ஆராதனையின் கருப்பொருளுமாயிருந்தார். ஆனால் மனிதர்களின் மீட்பு பிரச்சினைக்குரியதாயிருந்தபோது, அவர் தமது நிலையை விட்டுக் கொடுக்காதிருக்க விரும்பவில்லை. அதற்குப் பதிலாக, ‘‘*அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்*’’ (பிலி. 2:7). ‘‘அவர் தமது மகிமையைச் சற்று அப்புறம் வைத்து, மனிதன் இனி மரிக்காமலிருப்பதற்காகப் பிறந்தார்’’ என்று சார்ல்ஸ் வெஸ்லி எழுதியபோது, கிறிஸ்து தமது பரலோகத் தகுதிலையையே சற்று அப்புறம் வைத்தார் என்னும் பொருளிலேயே எழுதினார் என்பதில் ஐயமில்லை.[1]

இரட்சகர் தம்மைத்தாமே வெறுமையாக்கினார் என்கிற போது, அவர் தமது பரலோகத் தகுநிலையை மட்டுமே விட்டுவந்தார், அவர் தமது தனி ஆளுமையை விட்டுவரவில்லை என்றும் நாம் அறிவது மிகவும் இன்றியமையாதது. ஓர் இளவரசர் அரண்மனையை விட்டு வெளியேறி ஒரு காட்டில் குடியிருக்கலாம். ஆனால் அவர் தமது தனி ஆளுமையை விட்டுவிடவில்லை.

*“பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்”* என்று யோவான் 17:5 –இல் இரட்சகர் ஜெபித்தார். அவர் இவ்வுலகிற்கு வருமுன்னர் பரலோகத்தில் பிதாவின் சமுகத்தில் கொண்டிருந்து விட்டுவந்த தகுநிலை மகிமையைத் தமக்குத் திரும்பக் கொடுக்கும்படி மன்றாடுகிறார் என்றும் கூறலாம்.

**அவர் பூமியில் வாழ்ந்தபோது மனிதகுமாரன் என்னும் நிலையில் கொண்டிருந்த மகிமை.**

கர்த்தராகிய இயேசு மனிதராக இப்புவியில் இருந்தபோது அவர் செய்த அற்புதங்களில் மகிமையுடன் விளங்கினார் யோவான் 2:11 –இல் இவ்வாறு படிக்கிறோம், *“இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப் படுத்தினார்.”* அவருடைய பண்புகளின் நிறைவுகளில் அவர் மகிமை யோடிருந்தார். அவர் பாவம் அறியாதவர், அவர் பாவம் செய்யவில்லை, அவரிடத்தில் பாவமில்லை (2 கொரி. 5:21; 1 பேதுரு 2:22; 1 யோவான் 3:5). அவர் தமது சுயசித்தத்தின்படி ஏதொன்றையும் செய்யக்கூடாதபடி அவர் தமது நன்னெறி ஒழுக்கத்தில் முழு நிறைவானவர். அவர் தாம் செய்யும்படி பிதா என்னவெல்லாம் அவருக்குக் கொடுத்தாரோ அவற்றை மட்டுமே அவரால் செய்ய முடிந்தது (யோவான் 5:19).[2] மேலும் பிதா அவர் பேசும்படி அவருக்குக் கொடுத்த வார்த்தையை மட்டுமே பேசினார் (யோவான் 3:34; 7:16; 17:8). அவரிடத்தில் ஒரு குற்றத்தையும் தன்னால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று பிலாத்து ஒப்புக்கொண்டான் (லூக்கா 23:14,22; யோவான் 18:38; 19:4,6). அவர் மரணத்துக்கு ஏதுவானதொன்றையும் செய்யவில்லை என்று பிலாத்து தீர்மானம் செய்தான் (லூக்கா 23:15). இயேசு தகாததொன்றும் நடப்பிக்கவில்லை என்று கள்ளன் மரணத் தறுவாயில் சான்று கூறினான் (லூக்கா 23:41). யூதாசும் கூட *“குற்றமில்லாத இரத்தத்தைத்”* தான் காட்டிக்கொடுத்ததாக அறிக்கை செய்தான் (மத். 27:4).

இரட்சகர் தமது பாவமற்றதன்மையில் மகிமை உடையவர் என்பது மட்டுமின்றி, அவர் தமது பேச்சிலும் மகிமையுடையவர். அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து நாசரேத் ஊர் மக்கள் ஆச்சரியப்பட்டார்கள் (லூக்கா 4:22). அவரைக் கைது செய்யும்படி சென்ற அதிகாரிகள், *“அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் பேசவில்லை”* என்று அறிவித்தார்கள் (யோவான் 7:46). அவர் தமது மனித

நிலையில் முழுநிறைவான மகிமையோடிருந்தார். இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நன்னெறி ஒழுக்க மகிமை என்று அறியப்படும்.

**அவர் பெற்றுக்கொண்ட மகிமை**

நம்முடைய கர்த்தர் பரலோகத்திலேயே இருந்திருந்தால், அவரால் நம்முடைய இரட்சகராக ஆகியிருக்க முடியாது. ஆனால் அவர் சிலுவைக்குச் சென்று, மரணமடைந்து, கல்லறையிலிருந்து எழுந்ததால் அவர் இரட்சகரானார். *"ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது"* என்று நாம் எபிரெயர் 2:10 –ஆம் வசனத்திலும், *"தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி"* என்று எபிரெயர் 5:9 –ஆம் வசனத்திலும் படிக்கிறோம்.

அவருடைய ஆளுமையில் அவர் முழுநிறைவு அடைய வேண்டியது எதுவுமில்லை. அந்நிலையில் அவர் எப்பொழுதும் நிறைவானவர். ஆனால் அவர் இரட்சகர் என்னும் நிலையில் முழு நிறைவைப் பெறவேண்டியவராக இருந்து, அதைப் பெற்றார்.

கல்வாரியை எதிர்நோக்கிய நிலையில் கர்த்தர் இவ்வாறு பெறவிருந்த மகிமையைக் குறித்து, *"மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது"* என்று மறைமுகமாய்க் கூறினார் (யோவான் 12:23).

முழுநிறைவான இரட்சகராக அவர் பெற்றுக்கொண்ட மகிமை மட்டுமின்றி, கர்த்தராகிய இயேசு தமது பிறப்பு மற்றும் தம்மையே பலியாகச் செலுத்திய செயல் ஆகியவற்றின் மூலமாக வேறுபல மகிமைகளைப் பெற்றார். அவர் மனுவுருவில் வராதிருந்தால் அவரால் மேசியா என்னும் நிலையைப் பெற்றிருக்க முடியாது, ஏனென்றால் கிறிஸ்து தாவீதின் வழியில் தோன்ற வேண்டும். கல்வாரி மரணமின்றி, அவரால் பிரதான ஆசாரியராகவோ, பரிந்துபேசுகிறவராகவோ, நமக்காக வழக்காடுகிறவராகவோ, வேண்டுதல் செய்கிறவராகவோ, மீட்பராகவோ, நல்ல மேய்ப்பராகவோ, எல்லாவற்றிற்கும் சுதந்தரராகவோ, நியாயாதிபதியாகவோ, சபையின் சிரசாகவோ மாறியிருக்க முடியாது. எல்லா நாமத்திற்கும் மேலான நாமம், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர் என்னும் பெயர்களை அவரால் பெற்றிருக்க முடியாது.

அவர் உலகிற்கு மனிதராக வருகைபுரிந்து, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு உயிர்தெழுந்த நிகழ்வுகள் யாவுமே அவர் பெற்றுக்கொண்ட மகிமைகளாகும்.

அவர் பெற்றுக்கொண்டதாகக் கூறிய மற்றுமொரு மகிமை, *"என்னுடையவகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன்"* என்பதாகும் (யோவான் 17:10).

தமது பரிசுத்தவான்களில் அவர் மகிமை பெறுவதென்பது, அவருடைய கல்வாரிச் செயலின் மூலமாக மட்டுமே உண்டாகக்கூடியது.

2 தெசலோனிக்கேயர் 1:9 –இல் கர்த்தருடைய இரண்டாம் வருகையோடு பரிசுத்தவான்களில் அவர் பெறுகிற மகிமையைப் பவுல் இணைத்துப் பேசுகிறார், *"அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், ... விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும் அவர் வரும்போது..."*

**அவருடைய உயிர்த்தெழுதல் மற்றும் விண்ணகம் ஏகுதல் ஆகியவற்றின் மகிமை**

கல்வாரி நிகழ்வு ஏற்கனவே முடிந்தது போலக் கர்த்தர் மீண்டும் யோவான் 17:1 –இல் பேசுகிறார். பிதா தம்மை மகிமைப்படுத்த வேண்டும் என்று விண்ணப்பிக்கிறார், அதாவது, அவரை மரித்தோரிலிருந்து எழுப்புவதாலும், குமாரன் அதன் மூலம் பிதாவை மகிமைப்படுத்துவதாலும் அது நிகழும் என்கிறார்.

யோவான் 13:31,32 –ஆகிய வசனங்கள் இதற்கொப்பான பகுதியாகும்; *"அவன் (யூதாஸ்) புறப்பட்டுப் போன பின்பு இயேசு: இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார். தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்."*

இயேசு தமது மரணத்தைத் தாம் மகிமையடைவதற்கான வழியாகக் கூறுகிறார். அதன் மூலமாக அவர் பெரிதான மகிமையைப் பிதாவுக்குக் கொண்டுவந்தார். "கிறிஸ்து சிலுவையில் செய்த செயலின் மூலமாக தேவன் மகிமை அடைகிறார். ஆகவே தேவன் அவரை மகிமைப்படுத்துவார். அதாவது, அவரை மரித்தோரிலிருந்து எழுப்புவார். அதனை அவர் உடனடியாகச் செய்வார்" என்று 32 –ஆவது வசனத்தைப் பொழிப்புரையாகக் கூறலாம். அவ்விதமாகவே நிகழ்ந்தது. மூன்றாம் நாளில் பிதா அவரை உயிருடன் எழுப்பினார்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் விண்ணகம் ஏகுதல் ஆகிய நிகழ்வுகளில் அவருடைய மகிமை வெளிப்பட்டது பற்றிய வேறு வசனங்களாவன:

*"கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?"* (லூக்கா 24:26).

*"தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை"* (யோவான் 7:39).

*"இவைகளை அவருடைய சீஷர்கள் துவக்கத்திலே அறியவில்லை. இயேசு மகிமையடைந்தபின்பு, இப்படி அவரைக் குறித்து எழுதியிருக்கிறதையும், தாங்கள் இப்படி அவருக்குச் செய்ததையும் நினைவுகூர்ந்தார்கள்"* (யோவான் 12:16).

*"ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்; அவரை நீங்கள் ஒப்புக்கொடுத்தீர்கள்; பிலாத்து அவரை விடுதலையாக்கத் தீர்மானித்தபோது, அவனுக்கு முன்பாக அவரை மறுதலித்தீர்கள்"* (அப். 3:13).

*"அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்"* (1 தீமோ. 3:16).

*"உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்"* (1 பேதுரு 1:21).

அவருடைய உயிர்த்தெழுதல் மற்றும் விண்ணகம் ஏகுதல் ஆகியவற்றில் அவர் பெற்ற மகிமை, அவருடைய பரலோக நித்திய மகிமையோடு இணைந்தன. அவற்றைப் பிரிக்க இயலாது.

**அவருடைய இரண்டாம் வருகை மற்றும் அவருடைய அரசு ஆகியவற்றின் மகிமை**

மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் இந்த மகிமையைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் கூடுதல் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. மனித குமாரன் மிகுந்த

வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருவார் (மத். 24:30). அந்நாளிலே, தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராகவும் ஆச்சரியப்படத்தக்கவராகவும் அவர் வருவார் (2 தெச. 1:9). அவர் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, அவர் தம்முடைய அப்போஸ்தலருக்கும், தம்மைப் பின்பற்றுபவர்களுக்கும் வெகுமதிகளை வழங்குவார் (மத். 19:28), தேசங்களையோ நியாயந்தீர்ப்பார் (மத். 25:31–33). கிறிஸ்து தம்முடைய மகிமையில் வருகிறபோது அவரைக் குறித்து வெட்கப்படுகிறவர்களைக் குறித்து வெட்கப்படுவார் (லூக்கா 9:26). கிறிஸ்துவின் மகிமையின் அரசில், அவருடைய வலப்புறத்தில் ஒருவனும் இடப்புறத்தில் மற்றொருவனும் அமர வேண்டுமென்று யாக்கோபும் யோவானும் ஞானமில்லாமல் அவரிடத்தில் விண்ணப்பம் செய்தார்கள் (மாற்கு 10:37). கிறிஸ்துவின் பாடுகளில் பங்குபெறுகிறவர்கள், ஆயிரமாண்டு ஆட்சியில் அவருடைய மகிமை வெளிப்படும் போது, களிகூர்ந்து மகிழுவார்கள் (1 பேதுரு 4:13).

மறுரூபக் காட்சி, கிறிஸ்து ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் வரப்போவதன் வருமுன்காட்சியாகும். அந்தப் பரிசுத்த மலையில் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் அவருடைய மகிமையைக் கண்டார்கள்.

*“அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது”* (யோவான் 1:14).

*“பேதுருவும் அவனோடிருந்தவர்களும்... விழித்து அவருடைய மகிமையையும் அவரோடே நின்ற அவ்விரண்டு பேரையும் கண்டார்கள்”* (லூக்கா 9:32).

பின்னர் பேதுரு மறுரூபக் காட்சியைக் குறிப்பிட்டு, அவருடைய வல்லமையையும் வருகையையும் குறித்ததே அது என்று விளக்கினார், அதாவது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு வருகிற நிகழ்வு என்றுரைத்தார் (2 பேதுரு 1:16).

யோவான் 17:22 –இல் கிறிஸ்துவின் அரசின் மகிமையைக் குறித்துக் காணலாம். அங்கு நம்முடைய மகாபிரதான ஆசாரியர் கூறுகிறார்: *“நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.”*

ஒரு பொருளில் நாம் தேவனுடைய புத்திரர்கள், கிறிஸ்துவின் சகோதரர்கள், அவருடைய சரீரத்தின் அங்கங்கள் மற்றும் அவருடைய உடன் சுதந்தரர்கள் என்னும் நிலைகளில் அவருடைய மகிமைகளில் சிலவற்றில் பங்குபெறுகிறோம்.

ஆனால், அவர் இந்தப் பகுதியில் அவருடைய அரசாட்சியைக் குறித்துப் பேசுகிறார். அதுவும் இப்பொழுதே அது நிகழ்வதைப் போன்று பேசுகிறார். ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தில், நாம் அவருடைய மகிமையில் பங்கு பெறுவதோடு அவரோடு சேர்ந்து ஆளுகையும் செய்வோம் (வெளி. 20:4). அவர் தமது மகிமையில் வெளிப்படும்போது, நாமும் மகிமையில் காணப்படுவோம்.

தற்காலத்தில், தேவனுடைய மக்கள் யார் என்பதை இந்த உலகம் அறியவும் இல்லை, அவர்களை அறிந்து போற்றுவதுமில்லை. *"உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை"* (1 யோவான் 3:1).

ஆனால் அவர் மகிமையில் வெளிப்படும்போது, விசுவாசிகளும் மகிமையோடு காணப்படுவார்கள்.

*"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்"* (கொலோ. 3:4).

*"பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்"* (1 யோவான் 3:2).

அப்பொழுது கர்த்தராகிய இயேசுவுக்கும் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் இடையேயுள்ள ஒருமைப்பாட்டை உலகம் காணும். மேலும் குமாரனைப் பிதா அனுப்பினார் என்பதையும், தேவன் தமது குமாரனிடத்தில் அன்புகூருவது போலப் பரிசுத்தவான்கள் மேலும் அவர் அன்புகூருகிறார் என்பதையும் அது அறியும்.

**அவருடைய தற்போதைய பரலோக மகிமை**

கர்த்தராகிய இயேசுவின் விருப்பம் யோவான் 17:24 –இல் கூறப்பட்டுள்ளபடி அவரிடத்தில் அன்புகூருகிறவர்கள், அவருடைய மகிமையைக் காணும்படி, அவரோடு பரலோகத்தில் இருப்பார்கள். நாம் நம்முடைய விசுவாசத்தில், அவர் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டவராக அங்கு இருப்பதை இப்பொழுது காண்கிறோம்: *"என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்*

*வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்"* (எபி. 2:9).

அவருடைய தற்போதைய பரலோக மகிமையும் அவருடைய நித்திய மகிமையும் ஒன்றுதான் என்று பேதுரு கூறுகிறார்: *"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக"* (1 பேதுரு 5:10).

ஆயினும், ஒரு பொருளில் அது அவர் இவ்வுலகிற்கு வருவதற்கு முன் கொண்டிருந்த அவருடைய தனிப்பட்ட மகிமையிலிருந்து சற்று வேறுபட்டது. இப்பொழுது அவர் பரலோகத்தில் மகிமைப்படுத்தப்பட்ட மனிதராக இருக்கிறார். அது அவருடைய தேவ நிலையின் மகிமையுடன் கூடுதலாகச் சேர்ந்திருக்கிறது.

அவருடைய தற்போதைய மகிமை, அவருடைய எல்லா மகிமைகளும் ஒன்று சேர்ந்ததாகும். அவருடைய உள்ளார்ந்த மற்றும் அவர் பெற்றுக்கொண்ட மகிமையாவும் இப்பொழுது ஒன்றிணைந்துள்ளன. அது அவருடைய தேவ நிலை, மனித நிலை, அவருடைய பண்பியல்புகள், அவருடைய பணிகள், குணங்கள் ஆகிய எல்லா மகிமையையும் உட்கொண்டதாகும். அவற்றில் நாம் பங்குபெறும்படி அழைக்கப்படவில்லை, அவற்றில் களிகூரவும் அவற்றிற்காக அவரை என்றென்றும் புகழவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

**அடிக்குறிப்புகள்**


1. சார்லஸ் வெஸ்லி இயற்றிய "Hark the Herald Angels sing" என்னும் பாடலிலிருந்து.

2. "இயேசுவால் பாவம் செய்ய முடியுமா?" என்னும் கேள்விக்கு இது பதிலளிக்கிறது. பிதா செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ அதை மட்டுமே அவரால் செய்ய முடியும். பிதாவுக்குப் பிரியமானவைகளையே அவர் எப்பொழுதும் செய்கிறார் (யோவான் 8:29). அவரால் பாவம் செய்ய முடியாது என்பதை இவ்வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

3. இந்த பூமியில் மனிதர் என்னும் நிலையில் அவர் கொண்டிருந்த மகிமையையும் இது குறிப்பிடக் கூடும். ஆனால் இதன் முதன்மையான கருத்து அவருடைய மறுரூபக் காட்சியேயாகும்.

# 27

# நற்செய்தி நூல்களில் காணப்படும் வேறுபாடுகள்



நற்செய்தி நூல்களைக் கற்ற எவரொருவரும், அங்கு கூறப்பட்டுள்ள செய்திகளில் பல, குறிப்பாக மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய நூல்களில், மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டுள்ளதாகக் காண்பார். அதே அற்புதங்கள், அதே உவமைகள், கர்த்தர் கூறிய தகவல்கள் போன்றவற்றை நீங்கள் படிக்கிறீர்கள். ஆயினும், தேவையற்றபடி அவை மீண்டும் மீண்டும் சொல்லப் படவில்லை. எவ்விதக் காரணமுமின்றி பரிசுத்த ஆவியானவர் மீண்டும் மீண் டும் தம்மைத் தெரியப்படுத்த மாட்டார்.

ஊன்றிப் படிக்கின்ற வேளைகளில் அங்கு காணப்படும் ஒற்றுமைகள் அல்ல, மாறாக வேறுபாடுகளே முக்கியமானவை என்பதை அறிய முடியும். ஒரேவிதமாகத் தோன்றுகிற தகவல்களில் காணப்படும் மிகச் சிறிய மாற்றம் மிகவும் முக்கியமானதாக இருக்கும்.

நற்செய்தி நூல்களில் காணப்படும் இணக்கங்கள் பற்றி பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் அவை ஒன்றைத் தவறவிட்டுவிட்டன. இணக்கங் கள் முக்கியமல்ல, மாறாக ஒரே தகவலைத் தருகிற பகுதிகளில் காணப்படும் வேறுபாடுகள் பல வெவ்வேறு உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. இணை யான பகுதிகளை நாம் ஒப்பிட்டு இவ்வுண்மையை வெளிப்படுத்துவோம்.

நான்கு நற்செய்தி நூல்களிலும் யோவான் ஸ்நானன் தன்னைக் கேட்கிற வர்களிடத்தில், அவர்களுக்குக் கர்த்தர் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று கூறினார். அவர் விசுவாசிகளாகக் கூடியிருந்தவர்களிடம் பேசியபோது, *“அவரோ (இயேசு) பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப் பார்”* என்று கூறினார் (மாற்கு 1:8; யோவான் 1:33). ஆனால் கூட்டத்தில் அவிசுவாசிகளும் உடனிருந்தபோது, *“அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினி யாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்”* என்று அறிவித்தார் (மத். 3:11; லூக்கா 3:16). அவர் இரண்டு வகையான ஞானஸ்நானங்களைக் குறித் துப் பேசினார். முதலாவது ஆசீர்வாத ஞானஸ்நானம், இரண்டாவது தண் டனையின் ஞானஸ்நானம்.

**இரண்டு பிரசங்கங்கள், ஒன்றல்ல**

மலைப்பிரசங்கம் மத்தேயு 5–7 அதிகாரங்களில் இடம்பெற்றுள்ளது. அதில் ஒரு பகுதி லூக்கா 6:17 –ஆம் வசனத்திலிருந்து தொடங்குகிற வேதபகுதியில் திரும்பவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அவையிரண்டும் வெவ்வேறு நேரத்தில் வெவ்வேறு இடங்களில் பிரசங்கிக்கப்பட்டவை. மத்தேயுவில் அது மலையில் கொடுக்கப்பட்டது. லூக்காவில் அது சமவெளியில் கொடுக் கப்பட்டது. இறையரசின் மிகச் சிறந்த குடிமகனைப் பற்றி மத்தேயு விவ ரிக்கிறார். ஆனால் லூக்கா நற்செய்தியை ஏந்திச் செல்லும் சீடனுடைய நடைமுறை வாழ்க்கைப் பாங்கை விவரிக்கிறார். ஆவியில் எளிமையுள்ளவன் பாக்கியவான் என்று மத்தேயு நூல் ஆசீர்வாதத்தைக் கூறுகிறது (5:3); ஆனால் லூக்கா நூலில் கர்த்தர் தரித்திரரை ஆசீர்வதிக்கிறார் (6:20). ஐயோ என்னும் சாபங்கள் மத்தேயு நூலில் கூறப்படவில்லை. லூக்கா நூலில் நான்கு சாபங்கள் கூறப்பட்டுள்ளன (லூக்கா 6:4–26). இந்த வேறுபாடுகளைக் குறித்துச் சிந்திக்காமல், சட்டென விட்டுவிட்டு அடுத்த பகுதிக்குச் செல்லமுடியாது.

மத்தேயு, லூக்கா ஆகிய இருவரும், *“கண்ணானது சரீரத்தின் விளக்கா யிருக்கிறது”* என்னும் சொற்றொடரை மேற்கோள் காட்டுகிறார்கள். இதன் பின்னணியாக, பணம் ஆவிக்குரிய ஞானத்திற்குத் தடையாக விளங்குகிறது என்று மத்தேயு நூல் கூறுகிறது (6:22). லூக்கா நூலில் அந்தப் பகுதியில் பணத்தைப் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை (11:33–36). இயேசு கற்பித்த பாடங்களை ஏற்றுக்கொண்டு மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதன் மூலம் ஆசீர்வாதத்தைப் பெறலாம் என்று அந்தப் பகுதி கூறுகிறது.

நற்செய்தி நூல்களில், *“நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்”* என்னும் சொற்கள் மூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளன. மற்றவர்களை நியாயந்தீர்க்கிற மனநிலைக்கு எதிரான எச்சரிப்பாக மத்தேயு **7:2** –இல் இச்சொற்கள் காணப்படுகின்றன. இதே சொற்களை மாற்கு நாம் தேவனுடைய வார்த்தையை எவ்வளவாக நமக் குரியதாக்கிக்கொள்ள வேண்டும் என்பதை ஊக்குவிக்கும்பொருட்டு மேற் கோளாகப் பயன்படுத்துகிறார் **(4:24)**. தேவனுடைய மக்களுக்குள்ளாகத் தாராளமாகக் கொடுப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு லூக்கா இந்தச் சொற் களைக் கூறுகிறார் **(6:38)**.

மத்தேயு **10:24** –இல், *“சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல,”* என்று இயேசு கூறினார். லூக்கா **6:40** –இல், *“சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல; தேறினவன் எவனும் தன் குருவைப் போலிருப்பான்,”* என்று அவர் கூறினார். அவர்கள் ஒரே விசயத்தைக் கூறுவதுபோலத் தோன்றுகிறது, ஆனால் இரண்டும் முற்றிலும் வேறுபட்டவை, தன்னுடைய குருவைக் காட்டிலும் உபத்திரவம் அடையாமல் சுதந்தரமாக வாழமுடியும் என்று சீஷன் எதிர்பார்க்கக் கூடாது என்று மத்தேயுவில் சொல் லப்பட்டுள்ளது. ஆனால் ஒரு குருவால் தன் சீஷனை ஆவிக்குரிய தரத்தில் தன்னைக் காட்டிலும் உயர்வான நிலையை அடையும்படி வழிநடத்த முடியாது என்பதே லூக்கா கூறும் உண்மை.

### தொண்ணூற்று ஒன்பது

தொண்ணூற்றொன்பது ஆடுகளைக் குறித்த கதை நன்கு அறியப்பட்ட ஒன்று. மத்தேயு **18:12,13** –ஆகிய வசனங்களில் அந்தக் கதை கர்த்தர் சிறு பிள்ளைகளிடம் கொண்டிருக்கிற அன்பைச் சித்திரிக்கும்படி கூறப்பட்டுள்ளது (வச. **14** ஐக் காண்க). ஆனால் லூக்காவில் (லூக்கா **15:4–7**) பரிசேயரும் சதுசேயரும் தாங்கள் மனந்திரும்ப வேண்டிய அவசியமுள்ளவர்கள் என்பதை ஒப்புக்கொள்ள விருப்பமற்றவர்களாக இருந்தார்கள் என்பதைச் சொல்லும் பொருட்டு அந்தக் கதை கூறப்பட்டுள்ளது (வச. **2,7** –ஆகியவற்றைக் காண்க).

தாலந்துகளைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ள உவமையையும் (மத். **25:1–30**), ராத்தல் பற்றிய உவமையையும் (லூக்கா **19:12–27**) ஒன்றென நினைத்து குழப்பமடையக் கூடாது. தாலந்து உவமையால், மூன்று மனிதர்களுக்கு, அவரவர் தகுதிக்கேற்ப பணம் கொடுக்கப்பட்டது. முதல் இருவரும் வெவ்வேறு அளவு திறமையுள்ளவர்களாக இருந்தபோதிலும் ஒரேவிதமான நற்சான்றைப்

பெற்றார்கள். ஏனென்றால் அவர்கள் இருவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அலுவல்களில் உண்மையோடு செயல்பட்டார்கள். மூன்றாவது மனிதன் தனக்குக் கொடுக்கப்பட்டதைக் கொண்டு ஏதொன்றும் செய்யாததால் நியா யத்தீர்ப்படைந்தான்.

இராத்தலைக் குறித்த உவமையில், மூன்று மனிதர்கள் ஒரே அளவு பணம் பெற்றார்கள். அவர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான வாய்ப்பு கிடைத்தது. ஒருவன் பத்து மடங்காகவும், அடுத்தவன் ஐந்து மடங்காகவும் பெருக்கினார்கள். மூன்றாவது மனிதனோ அந்தப் பணத்தைக் கொண்டு ஒன்றும் செய்யவில்லை. முதலிரண்டு மனிதர்களுக்கும் வெவ்வேறு அளவு வெகுமதி வழங்கப்பட்டது. அது அவர்களுடைய உண்மைத் தன்மைக்கு ஏற்ற படி இருந்தது. மூன்றாவது மனிதனுக்குக் கொடுக்கப்பட்டதையும் இழந்து போனான்.

**எத்தனை மறுதலிப்புகள்**

பேதுரு ஒருவேளை கர்த்தரை ஆறு முறை மறுதலித்திருக்கக் கூடும். நாம் நற்செய்தி நூல்களை உன்னிப்பாகப் படிப்போமென்றால், அவர் கிறிஸ்துவை கீழ்க்கண்டவர்களுக்கு முன்பாக மறுதலித்தார்: 1) ஒரு வேலைக்காரி (மத். 26:69,70; மாற்கு 14:66–68). 2. வேறொருத்தி (மத். 26:71,72; மாற்கு 14:69,70). 3. அங்கு கூடியிருந்தவர்கள் (மத். 26:73,74; மாற்கு 14:70,71). 4. ஒரு ஆண் (லூக்கா 22:58). 5. வேறொருவன் (லூக்கா 22:59,60). 6. பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரன் (யோவான் 18:26,27). இந்தக் கடைசி மனிதன், *“நான் உன்னை அவனுடனேகூடத் தோட்டத்திலே காணவில்லையா”* என்று மற்றவர்கள் சொல்லாததைக் கூறினான்.

நற்செய்தி நூல்களின் இறுதியில், கர்த்தராகிய இயேசு தமது சீடர் களுக்குக் கட்டளையிட்டார். ஆனால் அங்கு வலியுறுத்தப்பட்ட விசயங்கள் வெவ்வேறானவை என்பதைக் கவனியுங்கள்:

மத்தேயு – சீஷராக்குங்கள், பிரசங்கித்து உபதேசம் பண்ணவேண்டும் (28:19).

மாற்கு – சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (16:15).

லூக்கா – சாட்சிகளாயிருங்கள் (24:48).

யோவான் – பின்பற்றுங்கள் (21:19–22)

நற்செய்தி நூல்களில் காணப்படும் இந்தப் பகுதிகள் ஒரே நிகழ்ச்சியாகத் தோன்றினாலும் வெவ்வேறானவை, மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டவை அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. நாம் மிகுந்த கவனத்துடன் ஆராய்ந்து பார்த்தோமென்றால், ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களைக் காண்போம். முரண்பாடாகத் தோன்றுகிறவற்றிற்கு நம்மால் தீர்வு காண முடியும். அவை ஆவியின் ஏவுதலைப் பெற்று எழுதப்பட்ட திருமறை வசனங்கள் என்று உணர்ந்து புதிய வகையில் வியந்து போற்றுவோம்.

**அடிக்குறிப்பு**

1. பேதுருவிடம் இது பேசப்பட்டது, ஆனால் எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும்.